# SATHI PATHIGAL
# MATHANA LEELA
# INBA THATHUVAM.

## சதிபதிகள் மதனலீலா இன்பதத்துவம்.

*Composed by*



**Native Physician, Tirukalukundrum.**

அ

ஓம்.

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்
சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்
பித்தன் காணேடீ,
பெண்பா லுகந்திலனேற் பேதாய்
இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி
வீடுவர்காண் சாழலோ."

— ஸ்ரீ மாணிக்க வாசகர்.

"நேரிழையைக் கலந்திருந்தே
புலன்களைந்தும் வென்றானை."

— ஸ்ரீ அப்பர் சுவாமிகள்.

" பெண்ணினல்லாளோடு பெருந்தகை யிருந்தே "

ஓம்

மதனவேள் துணை.

# சதிபதிகள் மதனலீலா

## —: இன்பதத்துவம் :—

பண்டிட் - S. R. நமசிவாய ராஜயோகி
சுதேச வைத்தியம் - திருக்கழுக்குன்றம்
அவர்களால் பல சாஸ்திரங்களை ஆதாரமாகக்
கொண்டு தொகுக்கப்பட்டது.

---

பதிப்பாளர்:—

சை. ர. நமசிவாய செட்டி & சன்,
ஸ்ரீ இராம கிருஷ்ண நிலயம்;
நெ. 47, நைனியப்ப நாயக்கன் வீதி,
பார்க் டவுன் P. O. மதராஸ்.

காபிரைட்டு] [விலை ரூபா —: —0

" சதிபதிகள் வாழ்க்கையே பேரின்ப சாதனம் "

ஓம்ஃ

“ விந்துவும் நாதமும் மேவும் இலிங்கமாம்
விந்துவதே பீடம் நாதம் இலிங்கமாம்
அந்த இரண்டையும் ஆதார தெய்வமாய்
வந்தகரு வைந்துஞ்செய்யும் அவைஐந்தே”

— திருமூலர்.

COPY RIGHTS & ALL RIGHTS TRNSLATION, IN ANY LANGUAGE, IS RESERVED BY S. N. BALASUNDARAM.

*Proprietor.*

**SRI SADHU RATHA SARGURU BOOK DEPOT.**

PARK TOWN (POST) MADRAS.

" பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு "
— திருக்குறள்.

ஓம்.

சித் சக்தி சஹாயம்.

# புனிதந்துரை.

" சக்தியும் சிவமு மாய
தன்மை யிவ்வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும்
உணர் குண குணியுமாகி
வைத்தனன் அவளால் வந்த
ஆக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட
லிங்கத்தின் இயல்பு மோரார். "
— சிவஞான சித்தியார். உ. ம். சூத்ரம்.

" எவனிடம் வெட்க உணர்ச்சி இல்லையோ, அவனை இறந்தவனாகவே மதிக்கவேண்டும் "
— ப்ளாட்டஸ்.

எல்லாம் வல்ல இறைவனது சிருஷ்டிக்குள்ளடங்கிய, எண்பத்து நான்கு நூறாயிரம் ஜீவராசிகளும், ஆண் - பெண் என்னும் இருபாலாக ஆக்கப்பட்டுள்ளன. ஆண் பெண் இரண்டும் ஒன்றுசேர்ந்ததே உலகம் என்னப்படும். இவை ஒன்றை விட்டு ஒன்று பிரியுமேல், உலக இயக்கம் நடைபெறாது. அண்ட பிண்டங்கள் யாவும், ஆண் பெண் வடிவமாயிருத்தல் போல, அவற்றை இயக்கும் முழுமுதற் பொருளாகிய எம்பெருமான் அர்த்த நாரீஸ்வர மூர்த்தமாயிருக்கிறார்

---

ஆண் பெண் குறியின் சேர்க்கையினாலேயே இன்பமும், ஜீவர்களின் தோற்றமும் உண்டாவதாலும், ஆண் பெண் குறிச் சேர்க்கையே (இன்பம் பேரின்பமாக விளங்கும்) சிவலிங்க வடிவமாக வைத்து, பூஜிக்கலாயிற்று என்பது சாஸ்திர சம்மதம். நீண்டு குவிந்த அக்கல் வடிவமானது, ஆண் குறியின் அடையாளமாகவும், அக்கல்லைச் சூழ்ந்த ரவுண்டுக் கல் வடிவம், பெண் குறியின் அடையாளமாகவும், ஆன்றோர்களாற் கருதப்பட்டதென்பதற்குப் பிரமாணம், சத்தியுஞ் சிவமும் என்ப.

என்பதே, போந்த சாக்ஷியாகும். நமது சரீர சாஸ்திரத்தை ஆராயும் போது, ஒவ்வொரு சரீரத்திலும் ஆண் தன்மை வலது பக்கத்துள்ளதென்றும், பெண் தன்மை இடது பக்கத்துள்ளதென்றும், இவ்விரு தன்மைகளும் சமமாக இயங்கும் பக்ஷத்தில், சரீரத்தில் வியாதி ஒன்றும் கிடையாதென்றும், மாறுபடும் பக்ஷத்தில், பல வித உபாதிகள் உண்டென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனை, யோகிகள் சூரியகலை - சந்திரகலை யென்றும், இடைகலை - பிங்கலை யென்றும் சொல்லுவார்கள்.

> " மாறு மதியும் ஆதித்தனும் மாறின்றித்
> தாறு படாமல் தண்டோடே தலைப் பாடில்
> ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
> பாறுபடா இன்பம் பார்மிசைப் பொங்குமே."
>
> — திருமந்திரம்.

---

" மண்குடம் கல்மீது பட்டாலும், கல் மண்குடத்தின் மீது பட்டாலும், குடமே உடையும். துஷ்டர்களோடு சேர்ந்தால் உனக்கே ஆபத்து, உன் மானமே கெடும். ஆதலால், துஷ்டரைக்கண்டால் தூர விலகு "

" சத்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலக மெல்லாம், ஒத் தொவ்வா ஆணும் பெண்ணும் உணர் குணகுணியுமாக வைத்தனன், அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை யெல்லாம்."

என்று, சிவஞான சித்தியார் கூறியபடி, இவ்வுலக வாழ்க்கைக்கு, ஆண் - பெண் இரண்டும் அவசியம் வேண்டற்பாலன.

" மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கும் யாதுமோர் குறைவிலை
கண்ணிலங்குதுறுங் கழுமல வள நகர்ப்
பெண்ணினல்லாளோடும் பெருந்தகை யிருந்ததே."

— திருஞான சம்பந்தர்.

அண்டத்திலுள்ள படி பிண்டத்திலும், ஆண்பெண் இருவரும் ஈருடலும் ஓருயிருமாய் வாழ்தலே, இல்

---

" பலவீனத்தின் அளவே பொம்மையின் அளவும். பலம் நேரிய வழியில் செல்லும். குழிகள் அல்லது துளைகளிருக்கும் ஒவ்வொரு பீரங்கிக்குண்டும் கோணியே செல்லும். பலமற்றவர், பொய் சொல்லியே தீரவேண்டும் " — ரிக்டர்.

வாழ்க்கைத் தருமமாகும். அந்த தருமத்தை சாஸ்திர விதிப்படி சதி - பதி (கணவன்-மனைவி) இருவரும் அநுஷ்டிக்கும் பக்ஷத்தில், இம்மையில் அஷ்டயிஸ்வரி சம்பத்தோடு,புத்திர சந்தானமும்பெற்று, மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் அடையலாம் என்பது சாஸ்திர சம்மதம். இம்மையில் அடைய வேண்டிய சுகத்துக்குச் சிற்றின்ப சுக மென்றும், மறுமையில் அடைய வேண்டிய சுகத்துக்குப் பேரின்ப சுக மென்றும் சொல்லப் பட்டிருப்பதுடன், சிற்றின்ப மார்க்க மாகவே பேரின்பம் அடையலாம்.

இத் தருமத்தை சிவ ரகசியத்தில் உலகுக்குக்
காட்டுவதற்காகவே, சத்தியும் சிவமும்
இறைவனும் இறைவியும் (சதிபதி
களாக) காமேஸ்வர-காமேஸ்
வரியாய் மதன லீலா
இன்ப தத்துவத்
தில் கிரீடித்தல்.

---

" ஒருவன் நூல் செய்வதில், கடைசியாய் அறிந்துகொள்வது, முதலில் எழுதவேண்டியது எதை என்பதை யோசிக்கவேண்டும் " — பாஸ்கல்.

ஈஸ்வரர் தேவியைப் பார்த்துக் கூறியதாவது:— ஓ! தேவி! இதோ ஓர் மகாமஞ்சம் விளங்குகின்றதே, அதனைச் சற்றுப்பார். ஆயிரங்கோடி மாற்றுடைய சுவர்ண தந்துவால் விளங்கும் வஸ்திரத்தோடும், பரிமள மலர்களோடுங் கூடி விலங்குகின்றது. அதற்கு மேற் சிகரத்தில் விளங்கும் துவஜத்தில், அநேக கோடி சந்திரமண்டலங்கள் வரிசைவரிசையாய் விளங்குவதையும் பார். இதன் சுற்றுப் புறம் நான்கு பக்கங்களிலும், முத்து ஜாலங்களோடுகூடிய திவ்ய வஸ்திரவுறைகளாலும், ரத்ன ஜாலங்களின் காந்தியோடுங் கூடிய திவ்ய பரிமள மலர்களாலுங் கூடியது. சிந்தாமணியால் உன்னதமாய் விளங்கப்பெற்றது மாயிருக்கிறது. இதன் மேல் விதானத்தினின்றிருந்து, முத்து ஜாலங்களும் ரத்ன ஜாலங்களும் தொங்கிக்கொண்டு, மெதுவாய்ச் சலிக்கும் அழகினைப் பார். அமுர்த ரசத்தால் நிரம்பப்பெற்ற ரத்னமய கெண்டிகளும் களப கற்பூரசார கஸ்தூரி முதலியவையுடன் கூடிய சந்தனத்தை

---

“ மனிதர் தம் குறைகளுக்குக் கூசுவதுபோல், தம் குற்றங்களுக்கும் கூசுவதில்லை ” — லர்புருபர்.

வைத்திருக்கும் மணிப்பாத்திரங்களும் சுகாதாரத்துடன கூடிய கல்பவிருக்ஷக் கனிவரிசைகளும், தீபங்களுடன் கூடிய ரத்ன பாத்திரங்களும், வைத்து விளங்கும் உட்பிரதேசத்தையும் பாரென்று கூறித் தேவியுடன் அதனருகிற் சென்று, ஈஸ்வரன் தேவியை நோக்கி, ஓ! தேவி! இங்கு ஓராச்சரியத்தைப் பார். அற்புதமாகிய இம் மஞ்சத்திற்கு பிரம விஷ்னு ருத்திரர் மஹேஸ்வரர்களாகிய நால்வர்களும், நான்கு கால்களாயிருக்கின்றனர். சதாசிவனே பஞ்சணையாயிருக்கின்றனர். இவ்வற்புதத்தை எவ்வாறு கூறுவது! மகாபரிமள மலர்களால் சூழப் பெற்ற இம்மஞ்சத்திலிருந்து சற்று சுகிப்போமாக. ஓ! மஹாதேவி ! இச்சிந்தாமணி கிருகத்தில்சற்றிருவென்று கூறித்தேவியை ஆலிங்கனஞ்செய்து காம நாசகராகிய இறைவன், உடனே கோடி கந்தர்ப்ப சுந்தரராய் காமேஸ்வர உருவத்துடன் கூடியவராயினர். ஜ்வலிக்கும் சந்திர கலா மௌளியும், ஜ்வலிக்கும் த்ரிநேத்ரமுடையவரும், தமாலம் போல் நீல நிறமு

---

" ஆராய்ச்சி" என்பது மரத்திலிருந்து அடிக்கடி பூக்களோடு புழுக்களையும் எடுத்துச்செல்கிறது "

— ரிக்டர்.

பெற்ற கண்டமுடையோரும், செம்மஞ்சூட்டியதூ போன்று செந்தாமரை மலர் போல் விளங்கும் பாணித்தல முடையோரும், சிவந்த தாமரை மலர் போன்ற பத்மராகமணி பூஷணமணிந்தோரும், சிவந்த வஸ்திரமணிந்தோரும், சிவந்தவஸ்திரமணிந்து, அதன் காந்திகள் திக்குகளெல்லாம் பரவ, ரத்னாபரணங்களால் விளங்கும் விசாலமும் உன்னதமுமாகிய மார்பினையுந் தோள்களையு முடையோரும் கைகளில் மான்மழு வரம் அபயமென்னும் நான்கு முத்திரைகளைத் தரிப்போரும் ஆகிய, திவ்யரூபம் பெற்றுத்தேவியின் திருமுகத்தைப் பார்த்துக்கொண்டு, அம்மஞ்சத்தை யடைந்தனர். சூரியோதயகாலத்தில் மலர்ந்த தாமரைமலர்போன்றமுகத்தினையுடையவளும், அரவிந்தம்போன்ற கண்களுடையவளும், முக்கண்ணையும் சந்திரனும் திவ்ய ரத்ன ஜாலங்களும் ஜ்வலிக்குங் கிரீடந் தரித்தவளும், கோவைக் கனியைப் பழிக்கும் அதரமுடையவளும், திலகத்தால்

---

" தன்னைச்சரிப்படுத்திக் கொள்பவன், உலகைச் சரிப்படுத்திக் கொள்வன். (தானடங்கத் தன்குலம் விளங்கும்) " — விவேகாநந்தர்.

விளங்கும் நெற்றியினையுடையவளும், திவ்ய தாடங்கத்தினது ரத்னங்களின் காந்திகளால் ஜகத்ஜோதியாய் ஜொலிப்பவளும், மகடுபிளப்புவரியால் அழகியகூந்தலையுடையவளும், மணி மாணிக்கங்களோடு கூடிய அற்புதமாகிய முத்து மாலைகளால் ஜ்வலிப்பவளும், உதித்தவுடன் விளங்குஞ் சுக்ரனுக்குச் சமானமாகிய நாகலாபரணத்தோடு விளங்கியவளும், கண்டத்தில் ஜ்வலிக்கும் இரத்ன ஹாரமுடையவளும் சிந்தாமணியுடன் தொடுக்கப் பட்டிருக்கும் திவ்ய முத்தாரங்களால் பிரகாசிக்கின்றவளும், திவ்யரத்னவைடூரிய கோமேதகபுஷ்பராக மாணிக்கங்களாலியற்றப்பட்ட அற்புத ஹாரங்களைத் தரித்திருக்கிறவளும், அழகிய மாணிக்கங்களிழைத்ததும் திவ்ய நாதஞ் செய்யும் மணிகளுடன் கூடியதும் ஆகிய ஒட்டியாணத்தைத்தரித்து விளங்குஞ் சிற்றிடையுடையவளும், நாகம்போல் வளைவாய் திவ்ய சொர்ணத்தாலமைத்து, அதில் அற்புதமான

---

"கூறியது யார் என்று தேடவேண்டாம். கூறியதை மட்டுமே ஆராய்ச்சி செய்யவேண்டும்"

— ஆக்கம் பீஸ்.

மாணிக்கங்களிழைத்து விளங்கும் கையாபரண முடையவளும், ஜ்வலிக்கும், காந்திப் பிரவாகங்களுடன் கூடிய ரத்னக்குச்சுகள் தொடுக்கப் பெற்றதும் திவ்ய ரத்னங்களா லிழைக்கப் பெற்றதுமாகிய வங்கியைத் தரித்தவளும், கேசபாரத்தில் வைத்தலங்கரிக்கப்பட்ட திவ்ய ரத்னுபரணத்தின் காந்தியால் ஜ்வலிப்பவளும், மல்லிகை முதலிய பரிமள மலரால் திவ்ய கந்தத்துடன்கூடிய கூந்தலுடையவளும், எங்கும் ஜோதிமயமாய்ச் ஜொலிக்கச் செய்யும் திவ்ய ரத்னங்க ளிழைக்கப் பெற்ற மோதிரங்களுடையவளும், பற்பல ரத்னங்களிழைத்த ரவிக்கை யணிந்தவளும், ரத்னமயமாகிய வஸ்திரந் தரித்தவளும், கஸ்தூரி முதலிய பரிமளத்திரவியங்கலந்த சந்தனரசத்தால் விளங்கும் அங்கத்தையுடையவளும்; குமுகுமுவென ப்பரிமளிக்கும் திவ்ய வாசனையைப் பத்துத்திக்கும் பரவச் செய்ய வல்ல வஸ்திரந்தரித்தவளும், திவ்ய மஞ்சிர மென்னும் சலங்கையினது கலகல எனுந் தொனியாலும் அழகிய செம்பஞ் சூட்டியிருப்பதாலும்

---

"பிறர் வாசித்த அளவு, தானும்வாசித்திருந்தால், அவர்களைப் போலவே நானும் அறிவில்லாதவனயிருப்பேன்"

— பேஹாப்ஸ்.

விளங்கும்பாதாரவிந்தமுடையவளும், இட்சுகோதண்ட பாசாங்குசங்களால் விளங்கும் நான்கு கைகளையுடையவளும், செளந்தர்ய சாரூபையாகிய தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டு, அத்திவ்ய மஞ்சத்தில் சிங்கார கேளிக்குரிய சகல சாதனத் திரவியங்களும் விளங்க, அவைகளை உபயோகிக்குமுறையுடன் உபயோகித்து, அம்மஞ்சத்திலேயே வெகு காலம் காமேஸ்வரன், காமேஸ்வரியோடு கூடி ரமித்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு பலகாலம் காமேஸ்வரனும் காமேஸ்வரியும் லோகானுக்ரஹ நிமித்தம் ரமித்திருந்து, கிருபாரச பூரணர்களாய், சர்வலோகங்களையும் ரக்ஷித்து, அவரவர் வேண்டும் பொருளைப் பெற்று மகிழ்வதற்கு நிமித்தமாய், அந்நகரத்திலிருந்தனர். மணித்வீபத்தில் நீபவிருக்ஷங்களடர்ந்த திவ்யோத்யானவனத்தில் சிந்தாமணிபாலியற்றப்பட்டதும் ஸ்ரீபுரமென்னும் பெயருடையதுமாகிய அந்நகரத்தைக் காமேஸ்வரன் காமேஸ்வரிக்குக் காட்டி; ஓ! காமேஸ்வரி! சிந்தித்தவை

---

" நண்பர் தொகையில் குறைவில்லை. ஆனால், நட்பைத்தான் காணேம் " — ஸெனிக்கா.

களை யெல்லாம் தானஞ்செய்யும் மணியாகிய சிந்தா மணியால் விளங்கும் இவ்விடத்தை உன்னிமித்த மாகவே சிருட்டித்திருக்கின்றேன். நித்ய பூதிகளுடன் கூடிய இந்நகரம் உன்னுலனுபவிக்கதக்கது என்று பிரமன் விஷ்ணு ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவனெனும் ஐவர்களால் விளங்கும் மஞ்சத்தினில் ஆநந்தமாய் விளங்கும் தேவியைப்பார்த்து, காமேஸ்வரர் இவ்வாறு கூறினர். ஸ்ரீபுரத்தில் மஹா மஹிமை பொருந்திய மஞ்சத்தில் பரமேஸ்வரனோடு பரம சந்தோஷத்துடன் விளங்குபவளும் நித்யைகளால் சேவிக்கப் பட்டவளுமாகிய ஸ்ரீகாமேஸ்வரியாகிய அகிலாண்ட கோடி பிரமாண்டங்களுக்கும் அன்னையாய் விளங்கும் ஸ்ரீராஜ ராஜேஸ்வரியானவள், உலகத்தை, எப்போதும் காப்பாற்றுகிருள்.

— சிவரகசியம்.

---

"முகஸ்துதி கள்ள நாணயம், தற்பெருமை மட்டும் இல்லாதிருந்தால், அது செல்லுபடியாயிராது"

— லாரோஷிமோக்கல்டு.

மனுஷ்ய கோடிகள், ஆண் பெண் இருபாலாரும், பேரின்ப சுகம் அடையவேண்டு மென்னும் பெருங் கருணையால், இல்லற தர்மத்தில் சிற்றின்ப சுகத்தை அநுபவித்து, அதன் வழியே பேரின்பமாகிய மோக்ஷ பதவி அடையும் பொருட்டு, சிவபெருமான் உமா தேவியாருக்கு இரதி சாஸ்திரத்தை உபதேசிக்க, அம்மையார் நந்திதேவருக்கும், நந்திதேவர் பல முனிவர்களுக்கும் உபதேசித்தார். அம் முனிவர்களுள் கொக்கோக முனிவரால் செய்யப் பெற்றது கொக்கோகம் என்னும் ரதி சாஸ்திரம். உலக குருவாய் அவதரித்த ஆதி சங்கர பகவத்பாதாசாரிய ஸ்வாமிகள் * ஓர் காரணார்த்தமாக, தான் அநுபவித்த மதன லீலைகளை மதன சாஸ்திர மூலமாக வெளியிட்டார், இவ்விரு நூல்களையும் தழுவி, நாங்கள் "கொக்கோக வைபவம்" என்னும் மன்மதன் திருவிளையாடல் என்னும் புத்தகத்தையும், அதற்கு இரண்டாம் பாகமாக, கணவன் மனைவி

* காரணம், கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் என்னும் புத்தகத்தின் 3-ம் பதிப்பு 38-வது பக்கத்தில் காணலாம்"

காம கலா ரகஸ்யம் என்னும் புத்தகத்தையும் வெளி யிட்டோம். அவ்விரு புத்தகங்களும் அறிவாளிகள் பலரால் வாசிக்கப் பெற்றுப் புகழ்ந்துரைக்கப்பட்டன. மற்றும் பல ரகஸ்ய விஷயங்களை இம் மூன்றும் பாக மாகிய சதிபதிகள் மதன லீலா இன்ப தத்துவம் என் னும் நூலில் வெளியிட்டுள்ளோம். இம் மூன்றாக பாகத்திலுள்ள அரிய பெரிய விஷயங்களை அறிவாளிக ளாகிய சதி பதிகள் வாசித்து, ஆநந்த மடைவார்க ளென்பது எங்கள் பிரார்த்தனை. நிற்க, இல்வாழ்க்கை யிலிருந்தபடியே, பேரின்பத்தை அடையலாம் என்கிற விஷயம், நமது சகோதர சகோதரிகளுக்கு ஆச்சரிய மாக இருக்கலாம். அது விஷயத்தை இப் புத்தகம் பத்தொன்பது — இருபதாம் அத்தியாயங்களிலும், இருபத்தி மூன்றும் அத்தியாயத்திலும் காண்க. சர் வமும் நானே என்பது பேரின்பம் என்கிற விஷயம், விசேஷமாகக் கூறப்பட்டுள்ளது.

---

"நூல் கற்றவன் எந்தத்தேசத்திலு மிருப்பான். எல்லாக்காலங்களிலும் வாழ்வான். அவனுக்காகவே உலகமும் ஆக்கப்பட்டுள்ளது" — ஹொர்ஷல்.

"அன்பே சிவம்" என்றும், "எல்லோரிடத்தும் அன்பாயிரு" என்றும் சொல்லப் பட்டிருக்கிறது, அதனுல், தம் மனைவி மக்களிடத்தும் அன்பு செலுத்துதல் அவசியம். அதாவது, அவர்களையும் சிவமாகப்பாவிக்க வேண்டும். சிவமாகப் பாவிக்கும்போது, சர்வமும் சிவமாகிறது. அப்போது, எல்லாம் நாமே – நம்மைத் தவிர வேறு வஸ்துவில்லை என்பதனுல், இல்லறத்திருந்தும், துறவு நிலையை அடையலாம். இதை சுவாமி இராம தீர்த்தர் மிக அழகாகக் கூறியிருக்கிறுர். இந்நிலையை அநுசரித்தே, ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்ஸரும், திருவள்ளுவ நாயனுரும் இல்லறத்திலிருந்தபடியே, பேரின்பத்தினை அடைந்தார்கள். துறவு என்பது மொட்டை அடித்துக் காஷாயந்தரித்து, தண்டு கமண்டலம் எடுத்து, வீட்டைவிட்டுச் செல்லுவதல்ல. எங்கு சென்ருலும் மனமானது பரிசுத்தமாயிருத்தல் வேண்டும். மனுஷ்யர்களுக்கு மனத்தின் விரிவே பந்தமென்றும், மனம் குவிதலே மோக்ஷமென்றும் அறிய

"முற்றத்துறந்த ஞானிகளும் சாதி சமயாசார அநுஷ்டானங்களை வெறுக்க மாட்டார்கள்"

வேண்டும். மனம் பரிசுத்தமில்லாதவன் காசிக்குப் போனாலும், அவன் கர்மம் தொலையாது. பரிசுத்தமனதோடு, எல்லாம் சிவமாகப் பாவித்து, இல்லறத்தில் மனைவி மக்களோடு வாழ்ந்திருந்தாலும், அவன் பேரின்ப சுகத்திலாழ்ந்தவனாவான். ["அன்புமறனு முடைத்தாயினில் வாழ்க்கை பண்பும் பயனுமது"

— திருக்குறள்.

சர்வமும் தானாயிருந்து அனுபவிக்கும் இல்லற சுகம் பேரின்பமாகவே முடியும். இத்தகைய அரிய பெரிய நீதிகளைக் கற்பிக்கும் இந்த "சத்திபதிகள் மதன லீலா இன்ப தத்துவத்தில், இல்லறத்தார் அநுஷ்டிக்க வேண்டிய பல வேறு விஷயங்களும், அறிஞர் பலரது அபிப்பிராயங்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

நமது சஹோதர சஹோதரிகள் இவ்வரிய புத்தகத்தை அன்போடு வாங்கி வாசித்து, அதிலுள்ள உண்

" தாய் தந்தையர்களது சொல்லைக் கேட்காதவன், குருவை அலக்ஷியம் செய்பவன், பண்டைக்காலத்தர்களது தர்ம சாஸ்திரங்களை இகழ்பவன், இவர்கள் நரகத்துக்குச்சுதந்தர கர்த்தாக்கள் "

மைப் பொருளை உணருவார்கள் என்பது எமது பிரார்த்தனை.

நமது இந்து தர்ம சாஸ்திரங்கள், கணவனும் மனைவியும் சேர்ந்து நடாத்தும் இல் வாழ்க்கையானது ஆண்ம லாபத்தைக் கருதியே யென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லுகின்றன. அவ்வுண்மை தெரியாதவர்கள் பெண்களைக் காமயந்திரமாகவும், பிள்ளைகளைப் பன்றிக் குட்டிகள்போல் பெறுவதற்கு மென்றும் தீர்மானித்து, இல்வாழ்க்கையை நடத்தினால், அவ்வாழ்க்கை துன்பத்தையே கொடுக்கும் என்பதில் ஆக்ஷேபனையில்லை.

தற்காலத்தில் புராதனமான தர்ம சாஸ்திரங்களும், ஆசார அனுஷ்டானங்களும், தலைகீழாக மாறிவரு

" முப்பது நாளில் வயித்தியராக விரும்பினால் "ஆயுர்வேத ஆசான்" வசனம் ரூபா 2—0—0 புத்தகம் வாங்கி வாசியுங்கள். அறுபது நாளில் ஜோசியராக விரும்பினால் "ஜோதிட ஆசிரியன்" வசனம் ரூபா 4—0—0 புத்தகம் வாங்கி வாசியுங்கள். ஆனால், ஒன்று பண்டிட் - எஸ். ஆர். நமசிவாயராஜயோகி எழுதியதும் அவர் போட்டோ இருக்கிறதாகவும் பார்த்து வாங்குங்கள் "

கின்றன. இந்த சமயத்தில் நாம் சொல்லுவது செவிடன் காதில் சங்கு ஊதுவது போலாகும். ஆயினும், கடவுளது அநுக்கிரகமும் பெரியோர்களது ஆசிர்வாதமும் நம் பாரத தேசத்துக்கு எந்நாளும் உண்டு. அதனால், நாம் சொல்லவேண்டியதைச் சொல்லும் பக்ஷத்தில், அறிஞர்களாகிய நமது சகோதர சகோதரிகள் தீர்க்கமாய் ஆராய்ந்து, உண்மை இன்னதென அறிந்து, சிரேயஸ் அடைவார்களென்பது எமது நோக்கம். ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாள் அநுக்கிரகம் உண்டாகும். அறிஞர்கள். இச்சிறு நூலில் பிழையுளதேல் பொறுத்துக் குணங்கொண்டு, அடியேனை ஆதரிக்க வேண்டுகின்றேன். நமது சகோதர சகோதரிகள் எல்லோர்க்கும் பயன்படி, இந்நூல் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது.

ஓம் ஶாந்தி! ஶாந்தி!! ஶாந்தி!!!

பக்ஷி தீர்த்தமென வழங்கும்
திருக்கழுக்குன்றம்.
4—7—1938

ஓம்:

சர்வம் சித் சக்தி மயம்

# சதிபதிகள் மதனலீலா

## —: இன்பதத்துவம் :—

# விஷய அட்டவணை


| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| | புனைந்துரை ... | 5 |
| | காமேஸ்வர காமேஸ்வரியாகப் மதனலீலா இன்பதத்துவத்தில் கிரீடித்தல் ... | 9 |
| | விநாயகர் வணக்கம் ... | 1 |
| முதலாவது:— | மதனவேள் வணக்கம் ... | 2 |
| | சதானந்த பிரஹ்மம் வரலாறு விந்து ஜெயம் யோகமார்க்கம் ... | 22 |
| | வஜ்ரோலியின் சாதனப் பிரக்கிரியை ... | 25 |


"பிறருடைய மனைவியை விரும்புகிறதினால் உயிர்ச்சேதங்கள் பல உண்டாகும்"

| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| | ஸ்திரீ வஜ்ரோலி ... | 28 |
| இரண்டாம்:— | சதிபதிகள் வசிகரமார்க்கம்... | 32 |
| | சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தது சிவஸ்வரோதயத்திலுள்ளதின் சருக்க வரலாறு ... | 32 |
| மூன்றும்:— | ஆலிங்கனத்தால் தழுவிவசிகரம் செய்யும் மார்க்கம் ... | 36 |
| | சதிபதிகள் புணர்ச்சியில் இறங்கும்போது முதலில் சொல்லப் பட்ட மந்திரம் ... | 39 |
| | மதனலீலா இன்ப அநுபவம் ... | 41 |
| நான்காவது:— | ஆண்மக்கள் பெண்களது மோகவலையில் சிக்குவதேன் ... | 46 |
| ஐந்தாவது:— | சதிபதிகள் மதனலீலா இன்ப தத்துவம் ... | 61 |


கருப்பத்தடை சிகிச்சைகள் வியபிசாரத்துக்கு ஊக்கம் தருவதோடு, சரீரத்துக்கும் கெடுதியை விளைவிக்கும்.

| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| ஆறுவது:— | (சதி) ஸ்திரீ புருஷர் (பதி) களுக்கு புணர்ச்சிக்குரிய லக்ஷணங்கள் சுப நாள்கள் ... | 67 |
| ஏழாவது:— | நற்குணப் பெண்டீர் கிருஹ லக்ஷிமியாவள் ... | 76 |
| எட்டாவது:— | பெண்ணுலகு ... | 83 |
| ஒன்பதாவது:— | சதிபதிகள் கற்பொழுக்கம் ... | 88 |
| பத்தாவது:— | கற்புடைமாதர்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ... | 120 |
| | (1) நாணம். (2) மடம். (3) அச்சம். (4) பயிற்ப்பு. அறம் வளர்க்கும் அணங்கு ... | 121 |
| பதினோராவது:- | பெண்கள் தனித்திருத்தல் கூடாது ... | 123 |
| பன்னிரண்டாவது:— | தாய்வீடேகும்பெண்களின் தவிப்பு ... | 130 |
| பதிமூன்றுவது:- | மாமி மருமகள் வாழ்க்கை ... | 137 |


" அடிமையை யொழித்து சுதந்தரமடைவதே மனித வாழ்வின் லக்ஷியமாகும் "

| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| பதினான்காவது:- | நற்குணப் பெண்டீர் விதவாநோன்பையும் வெறுப்பர் ... | 145 |
| பதினைந்தாவது:- | விதந்துக்கள் அநுஷ்டிக்க வேண்டிய முறைகள் ... | 149 |
| பதினாறாவது:— | ஸூரிய நமஸ்காரம் ... | 158 |
| | சூரியபகவான் திருவுருவம் ... | 159 |
| | சூரிய நமஸ்கார தத்துவம் ... | 161 |
| | சூரிய நமஸ்காரம் செய்யும் விதம் ... | 163 |
| | சூரிய ஸ்தோத்ரம் ... | 166 |
| | ஆதித்ய ஹிருதய மந்திரம் ... | 167 |
| | சூரிய தரிசனத்தில் அறியும் பலாபலன்கள் ... | 172 |
| | சூரிய நமஸ்காரத்தின் மகிமை ... | 174 |
| | சூரிய வெளிச்சத்தை எப்படி புட்டியில் அடைப்பது ... | 179 |


" சூதுக்கும் அறிவுக்குமுள்ள வித்தியாசம் குரங்குக்கும் மனிதனுக்கு முள்ள வேறுபோலாகும் "

| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| பதினைந்தாவது:— | சூரிய ஸ்நானம்செய்வதெப்படி ... | 180 |
| | சூரியனே இயற்கை மருந்து வெயிலில் திரிபவரே பலமுடையார் நாகரீக மற்றவர் நலமாயிருப்பதேன்? சூரிய ஸ்நானத்தைப் பற்றிய குறிப்புகள் ... | 182 |
| | சூரிய ஸ்நானம் அல்லது சூரிய நமஸ்காரத்தின் இரகசியம் ... | 188 |
| | சூரிய ஸ்நானமுறை (அதன் பயனும் அபிவிருத்தியும் ... | 195 |
| | கண் கொடுக்கும் கதிரவன் ... | 204 |
| | 16-ம் அத்தியாய தொடர்ச்சி வனப்பும் வாலிபமும் பெறும் பெரும் வழி (சூரிய நமஸ்கார பலன் 203 - பக்கம் தொடர்ச்சி ... | 204 |


" ஆயிரமுடையான் அமர்ந்திருப்பான். அரைப் பணமுடையான் ஆடி விழுவான் "

| அத்தியாயம்:— | விஷயம் | பக்கம் நெம்பர் |
|---|---|---|
| | பாரதியார் வாக்கு ... | 204 |
| | சந்திர தரிசனத்தின் பலாபலன் ... | 206 |
| | கருட தரிசனம் ... | 208 |
| பதினேழாவது:- | ஜீவ மின்சாரம் ... | 209 |
| பதினேட்டாவது | இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ? ... | 223 |
| பத்தோன்பதாவது:- | சதிபதிகள் இல்வாழ்க்கையும், வேதாந்தமும் ... | 243 |
| இருபதாம்:— | சதிபதிகள் இல்லற வாழ்க்கையில்பேரின்பம் அடையும் மார்க்கங்கள் ... | 252 |
| இருபத்தி ஒன்றும்:- | இல்லற வாழ்க்கையில் சதியானவள் (மனைவி) அநுசரிக்க வேண்டிய விதிகள் ... | 267 |
| இருபத்தி இரண்டாம்:— | ஆத்ம(பேரின்ப) ஞானமும் சதிபதிகள் இல்லறவாழ்க்கையும் ... | 270 |
| இருபத்தி மூன்றும்:— | சர்வமும் நானே என்பது பேரின்பமாகும் ... | 277 |


அரும்பிரயாசைகளிலேயே அற்புதங்கள் பிறக்கின்றன.

ஓம்.

மதனவேள் துணை.

# சதிபதிகள் மதனலீலா

## —: இன்பதத்துவம் :—

இந்நூலுக்குப் பின் வரும் சாஸ்திரங்களினின்றும் மேற்கோளாக (உதாரணம்) ஆங்காங்கு விசேஷமாகக் காட்டப்பட்ட சாஸ்திரங்களின் பெயர்கள்.

ஸ்ரீ மாணிக்க வாசகர்
ஸ்ரீ அப்பர் சுவாமிகள்
திருமூலர்
திருமந்திரம்
சிவரகசியம்
1 கொக்கோகம் (மதனநூல்)
2 விவேக சிந்தாமணி
3 திருக்குறள்
4 பட்டினத்தடிகள்
5 திருவருட்பா
6 உபநிடதம்
7 தாயுமானவர்
8 கைவல்யம்
9 திருத்தக்கதேவர்
10 ஔவையார்
11 அஷ்டாங்க ஹ்ருதயம்
12 திருவிளையாடற் புராணம்
13 சிவஞான சித்தியார்
14 சௌந்தர்யலஹரி
15 திருவாசகம்

"ஏட்டிலுந் தொட்டிலும் கொள்ளும் ஓட்டா விட்டால் கட்டிலும் கொள்ளாது"

16 திருத்தொண்டத் [தொகை
17 திருக்களிற்றுப் படியார்
18 பெரிய புராணம்
19 தொல் காப்பியம்
20 மூதுரை
21 ஸ்ரீ பர்த்ருஹரி சிங்கார [சதகம்
22 சி. சு. பாரதியார்
23 ஜீவோற்பத்தி சிந்தாம [மணி தத்துவதீபிகை
24 நள வெண்பா
25 வளையாபதி
26 ஆசாரக்கோவை
27 ஆன்றோர்வாக்கு
28 பாகவதம்
29 சிந்தாமணி
30 இறையனார் அகப் [பொருள்
31 காசிகாண்டம்
32 சிறுபஞ்சமூலம்
33 குமாரகுருபரசுவாமிகள்
34 நீதிசாரம்
35 நாண்மணி கடிகை
36 நாலடியார்
37 அறநெறிச் சாரம்
38 திருஞானசம்பந்தர்
39 ஸ்ரீ திரு. வி. கல்யாண [சுந்தர முதலியார்
40 ஸ்ரீ வில்லிபுத்தூராழ் [வார்
41 கம்பர்
42 சுக்ரநீதி
43 Hanelock Ellis
44 மணிமேகலை
45 ஹிந்து
46 ஞானபோதினி.
47 ஊழியன்
48 ஹிந்துஸ்தான்
49 நவசக்தி

"அளவு கடவாத் தன்மை அறிவின் அரைக் கச்சை—ஆசையின் கடிவாளம்"

50 இ. சா. (லோகோபகாரி)
51 பிரஹதாரணஉபநிஷத்
52 சிவ தருமோத்தரம்
53 திருக்குறள் உரை [(கோ. வ. பதிப்பு)
54 குறுந்தொகை
55 திருவுந்தியார்

ஓம்ஃ

# சதிபதிகள் மதனலீலா

## —: இன்பதத்துவம் :—

ஒவ்வொரு பக்கத்தில் கீழ் உள்ள
ஆன்றோர் அநுபவ மொழிகள். (புட்நோட்)

1 நூலாசிரியர் பண்டிட் S. R. நமசிவாய ராஜ [யோகியார்
2 ஸ்ரீ ராமகிருஷ்ண பரம [ஹம்ஸர்
3 ஸ்ரீ ராமகிருஷ்ண குரு [மூர்த்தி தோதாபுரி ஞானியார்
4 நெப்போலியன்
5 அழுகணிசித்தர்
6 வால்டர்ராலீ
7 விளம்பரங்கள்
8 சுவாமி விவேகானந்தர்
9 லாங் பெல்லோ
10 ஷேக் ஸ்ப்பியர்
11 ஏசுகிறிஸ்து நாதர்

"வறுமையிலும் மனமகிழ்ச்சி அடைபவனைப் போல், உலகில் பொறாமை அடையத்தக்கவன் ஒருவனுமிரான்"

12 பர்த்ருஹரி
13 பிருநாளினி
14 ஸ்ரீ மதி காசல்
15 ஸ்ரீ மதிசரோசனிதேவி
16 ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாள்
17 டென்னிஸன்
18 ஜெஷெர்வி
19 ஹொன்னு மோர்
20 கம்பர்
21 ஹொனறிவா ஹரன்
22 பழ மொழி
23 சர் ஆரியத் ரெட்லேன்
24 எடித் ஷாக்கில்டான்
25 டி எல்லிஸ் பேக்கர்
26 கொஸ்டாடன்
27 அறிஞர் எ. எம். லோ
28 நாரிஷன்
29 அக்கம்பிஸ்
30 ஆர்.ஜே. அண்டர்சன்ஸ்
31 பிளேர்
32 எமர்ஸன்
33 செனிக்க
34 ஜீன்பால்
35 லிட்டன்
36 போப்
37 டாவிட்டஸ்
38 ஸ்பென்ஸர்
39 ஹாஜிவுட்
40 யங்
41 கதே
42 ஹாரிக்
43 பிராங்க்லீன்
44 எயிச் டெட்டல்
45 கௌதம புத்தர்
46 போமண்ட் பிளெச்சர்
47 கோல்டன்
48 ஜான்ஸன்
49 ஸ்விட்
50 ஜார்ஜ் எலியிட்
51 மாண்டேயன்

☞ இன்னும்பல உள்ளன.

"அநுபவம்" கப்பலின் பின்புறமுள்ள விளக்கு போலும். அது கடந்தவழியையே காட்டும்.

சர்வம் சக்திமயம் ஜகத் !

ஓம்:

மதனவேள் துணை.

# சதிபதிகள்

## மதனலீலா இன்ப தத்துவம்.

விநாயகர் வணக்கம்.

" திருவாக் குஞ்செய் கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கு
மாதலால் வானோடு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தங் கை "

" காதலின் சக்தி அளவிடக் கூடியதல்ல. (உண்மைக்காதலென்பது தெய்வீகமா யுண்டாவது.)"

## முதலாவது அத்தியாயம்.

### மதனவேள் வணக்கம்.

" மூவகைக் கடவுள் தேவர் முத்தொழில்
 அதற்கு முன்ன
ராவது படைப்பே என்ப அப்படைப்
 புதிக்கப் பண்ணும்
தேவனைத் தொழில் மூன்றிற்கு
 மூலமாய் சித்தத்துள்ளே
பாவையர் மயமாய்த் தோன்றும்
 கடவுளை பணிதல் செய்வாம். "

---

ஒரு காலத்தில் மாயபுரி என்னும் கிராமத்திலுள்ள புரி அட்டக பூஷணகோவிலில் நிஷ்டாபராகவிருந்த சதானந்த பிரஹ்மம் என்னும் பிரஹ்மநிஷ்டர் ஒருவர், இல்லறத்தின் உயர்வை அறியாதவராய்,

" கணவனும் மனைவியும் உண்மையான காதலை அடைந்திருக்கும் பக்ஷத்தில் அவர்களுக்கு சுக துக்கங்கள் சமமாய்த் தோன்றும். "

“ கிட்டையிலே இருந்து மனத்
துறவடைந்த பெரியோர்கள்
நிமலன்றனை கிட்டையிலே தொடுத்து
முத்திபெறு மளவும் பெரியசுகம்
கிடைக்கும் காம வெட்டையிலே
மதி மயங்கும் சிறுவருக்கும் மணம்பேசி
விரும்பித் தாலி கட்டையிலே
தொடுத்து நடுக்கட்டையிலே
கிடத்து மட்டும் கவலை தானே. ”

“ செய்கொண்டாருங் கமலச்
செம்மலுடனே யரவப்
பாய்கொண்டாலும் பரவும் பட்டீச்
சுரத்தானே
நோய்கொண்டாலுங் கொளலாம்
நூறுவயதா மளவும்
பேய் கொண்டாலுங் கொளலாம்
பெண்கொள்ள லாகாதே ”

---

“ பெண்களுக்கு வாழ்க்கையி லிருக்கிற தன்னம்பிக்கை, ஆண்மக்களுக்கு வாராது. ”

என்னும் உபதேசமொழியைப் பின்பற்றி, சிறுவயதிலே யேதுறவற ஆஸ்ரமத்தை அநுசரித்துச்சற்குருவருளால் மகாவாக்ய உபதேசம் பெற்று, பிரஹ்மநிஷ்டபராய் தவஞ்செய்து, ஏகாந்தமாயிருந்தபோது, திருவள்ளுவ நாயனார் என்னும் இல்லற ஞானியைப் பார்க்க மனம் நாடியதும், உடனே சதானந்த பிரஹ்மநிஷ்டர் திரு வள்ளுவ நாயனார் வாசஞ்செய்திருந்த கிருகத்தினருகே வந்தார். அப்போது, நாயனார், தான் இயற்றிய திருக்குறள் விஷயமாகத் தன் மனைவி வாசுகி தேவியாரிடம் சம்பாஷணை புரிந்து கொண்டிருந்தனர். பிரஹ்மநிஷ்டர் பெரியார் கிருகத்தில் நடக்கும் வார்த்தைகள் ஆத்ம சம்பந்தமான விஷயமாக இருக்குமென்று மதித்து அவ்வீட்டின் வாசற்படி யண்டை நின்று, நடக்கிற விஷயத்தை உற்றுக் கவனித்தார். அந்தச் சமயத்தில் நாயனார், தன்மனைவி வாசுகி தேவிக்கு,

---

"தெய்வீகமாகக் காதல் கொண்ட ஒரு பெண், தான் காதலித்த புருஷனை மன்மதனாகவே நினைப்பாள். அவனையே உலகப் பொருள்கள் யாவும் என்று நினைப்பாள்."

* "பாலோடு தேன் கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்." — திருக்குறள்.

(பரிமேலழகர்) அஃதாவது தலைமகன் தன்காதன் மிகுதி கூறலும், தலைமகள் தன் காதன் மிகுதி கூறலு மாம்.

* பரிமேலழகர் (இ-ள்) இம்மெல்லிய மொழியினை யுடையாளது வாலிய வெயிறூறிய நீர் பாலுடனே தேனைக் கலந்த கலவை போலும். (எ-று)

தெளிபொருள் விளக்கம் [இயற்கைப் புணர்ச்சி யின் முடிவில் தலைமகன் தன் காதலை அறிவித்தது]

(இ - ள்) பணிமொழி - மெல்லிய சொல்லினை யுடையவளது, வாலெயிறு - தூய்மையான பல்லில், ஊறியநீர்-ஊறிய நீரானது, பாலொடு தேன் கலந்தற்று- பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும், (எ - று).

(க - து) தலைமகளது அதர பானஞ்செய்த தலை மகன் அதனது சிறப்பைப் "பாலோடு தேன் கலந் தற்றே" என்று [திருக்குறள் - காமத்துப்பால் 5-ஆம் அதிகாரம் - காதற் சிறப்புரைத்தல்-அதிகாரம் உவமை, வாயிலாக வியந்து கூறினன் என்பது.

— கோ. வ. உரை - திருக்குறள்.

என்னும் திருக்குறட்பாசுரம் சொல்லி, அதற்கு வியாக்கியானமாகக் குளிர்ந்த மொழிகள் பயிலும் பத்மினி சாதி மாதர்களின் ஈறுகளினின்றும் சுரக்கும் நீர், (அதரபாணம்) பாலும் தேனும் கலந்தாற்போல் உருசியுள்ளதாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இதனைக் கேட்ட பிர்ம்ம நிஷ்டர் ஆச்சரிய முற்றாராயினும், பெரியாராகிய வள்ளுவர் வாயினின்று வரும் வார்த்தைகள், சத்தியமாக இருக்குமென நம்பி, தான் போகும் மார்க்கத்தில், காட்டில் விறகு வெட்டி, அலுப்புற்று, மெய்ம்மறந்து தூங்கும் ஓர் வேடப் பெண் மணியைப் பார்த்து, நாயனார் சொல்லிய குறள் வாக்கியத்தைப் பரிசோதிப்பான் வேண்டி, அவள் வாயினின்றும் இருபாலொழுகும் எச்சிலைச் சுவைத்தார். அது, புகையிலை நாற்றமாக இருக்கவே! சீ! சீ !!

---

" பிரஸவ வேதனையில் பெண்கள் படும் கஷ்டம் எத்தகைய வீரனுக்கும் சகிக்க முடியாது. "

என்று துப்பினர். தம்பலமும் புகையிலையும் சேர்த்து மென்று ஒழுகும் இந்த ஆபாசத்துக்கா பாலும் தேனும் கலந்த ருசி யென்று நாயனர் வருணித்தா ரென்று மனம் வருந்தி, திரும்பி நேரே வள்ளுவர் கிரு கத்துக்கு வந்து, வள்ளுவரே! நீர் செய்த நூல் அநு பவத்து ஒவ்வாததும்; சுத்த பொய் நிறைந்ததென்று கூறினர். இதைக் கேட்ட நாயனர் திடுக்கிட்டு, வெளி யே வந்து, பிரமநிஷ்டரை விதிப்படி வணங்கி நமஸ் கரித்து, தன் குடிசைக்குள் அழைத்துப்போய், சோட சோபசாரத்துடன் வந்தன வழிபாடுகள் செய்து, சுவாமீ! குற்றம் க்ஷமிக்க வேண்டும். அடியேன் செய்த நூலின் அநுபவ உண்மையைத் தங்களுக்கு மெய்ப்பிக் கிற வரையும், தேவரீர் இங்கு அருள் புரிய வேண்டு மென்று வேண்டினர். பிறகு, அந்தப் பிரம்ம நிஷ்ட ரைத் தமது சிஷ்யர் ஏலேலசிங்க செட்டியார் அபி

---

"காதலின்பம் ஜனித்து விட்டால், அதனைத் தடுக்க மும்மூர்த்திகளாலும் முடியாதென்றால், மானி டர்களுக்கு எவ்வாறு சாத்தியமாகும்?"

மானித்திருக்கும் * காமரூபிணி என்னும் தேவதாசி வீட்டுக்கழைத்துச் சென்று, திருக்குறள் காமத்துப் பாலின் பெருமையை, சுவாமிகளுக்கு மெய்ப்பித்து, அடியேன் செய்த நூலுக்கு, ஆத்ம சிரேயஸ் தரும்படி செய்யவேண்டுவது உங்கள் கடமை யென்று கேட்டுக் கொண்டார். அவ்வாறே, அவ்வுத்தமகுல தாசியானவள், நாயனாரது விருப்பத்தைப் பூர்த்திசெய்யச் சம்மதித்து, பிர்ம்ம நிஷ்டருக்குச் சோட சோபசாரத்துடன் வந்தன வழிபாடுகள் செய்து நமஸ்கரித்தாள். அப்பெரியாரது

---

* காமரூபிணி என்னும் தாசி, நாயனாரது சிஷ்யர் ஏலேலசிங்க செட்டியாரது தாசியாவள். இவள் பத்மினி ஜாதிப் பெண்களுக்குரிய சர்வ லக்ஷணங்களையும் பெற்றவள். மூன்றாம் பிறையை நிகர்த்த புருவங்களும், முத்துப்போன்ற பல் வரிசையும், வேற்படையை யொத்த கண்களும், பவளச்செவ்வாயும், வாசிக்கொடியை நிகர்த்த சிறிய இடையும் மூங்கிலையொத்த தோள்களும், தாமரை மலர் போன்ற திருமுகமும், இயற்கை அழகு பொருந்திய இருகரங்களில் நவரத்னாபரணாலங்காரமும் பொருந்தியவள்.

பிரமதேஜஸ் ஜொலிக்கும் திருமுகத்தை உற்று நோக்கினாள்; மனதில் ஓர்வகை ஆச்சரியம் கொண்டு,

" பொற்றாமரையின் பொலிந்தே
விளங்கிடு பொன்மகிழும்
நற்றேவனோ ரதிநாயகனோ குல
நான்முகனைச்
செற்றுதரித்த வடிவேலனோ
எனச் செப்பிடவே
உற்றுணிவன்றனை யாரெனச்
சொல்கே னுரை யுளமே "

இப்பெரியார் யாராக இருக்கலாம்? இவர் பால்ய சந்யாசி; பிர்ம்ம நிஷ்டர்; ஆத்ம தேஜஸ் இவரது திருமுகத்தில் ஜொலிக்கிறது. ஆயிரங்கோடி சூரியப் பிரகாசம்போல் விளங்கும் இவரது திருமுக அழகுக்கு இணை சொல்வதற்கு யாது உளது? என்று, மனதுக்குள்ளே நினைத்தாள்.

---

" கணவனும் மனைவியும் ஒன்றுபட்ட மனமுடையவர்களாயிருந்தால் அவர்களுக்குள்நேரும் எந்தவித குற்றங்களும் நன்மையாகவே தோன்றும். "

“ மெய்த்தொண்டர் செல்லும் நெறியறியேன்
 மிக நற்பணி செய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்
 டுவந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புறமே
 உன்னைப் போற்றுகின்ற
இத்தொண்டனேன் பணிகொள்ளுதியோ
 கச்சியே கம்பனே. ”

— பட்டினத்தடிகள்.

அமுதவாக்கினைக் கவனித்தாள். நாயனாது விருப்பத்துக்கிணங்க, அப்பெரியாரை உயர்ந்த தங்க ஆசனத்தில் அமர்த்தி, சுகந்தவாசனைக்கொண்டு தானே பன்னீரால் ஸ்நாநம் செய்வித்தாள். உண்மாசு கழூவும் விபூதியை சரீரமெங்கும் பூசினாள். களப கஸ்தூரி கலவைச் சந்தனத்தினால் நெற்றியில் திலதமிட்டாள். அறுவகை ருசியுள்ள பதார்த்தங்களோடும், பஞ்ச

“ ஒரு குடும்பத்தில் மனைவியானவள் நல்லொழுக்கம் சிஷ்டாசார மில்லாதவளாயிருந்தால், அக்குடும்பத்தில், கணவன் சந்தோஷமாக இருக்க முடியாது. ”

பக்ஷண பரமான்னத்துடனும் போஜனம் ஊட்டினுள். பின்னர், அப்பெரியாரை மெல்ல அந்தப்புறத்திலிருக்கும் தனது பள்ளியறைக்கு அழைத்துப்போய் அங்குள்ள ஹம்சதூளிகா மஞ்சத்தின் மீது உட்கார வைத்து, இனிய கீதங்களைப்பாடி அப்பிரம நிஷ்டாதுமனைக் குதூகலிக்கச் செய்தாள். சரச சல்லாப வார்த்தைகளால் அவர் மனதை வசப்படுத்தினுள். பல வகை லீலா விநோதங்கள் செய்தாள்.

ஆத்மநிஷ்டாது பராகிய பிர்ம்மநிஷ்டர் மயா விலாசத்தில் மயங்கினுர். காமரூபிணி என்னும் அத் தேவதாசியின் சிங்கார லீலா விநோதங்களைக்கண்டு அவள் வயப்பட்டு, பலவிதமாய் அவளைப் புகழ்ந்தார்.

"வெய்ய மதன் விடுஞ்சரங்கள் வேதனையை
விளைத்தன வால
வெய்ய மதனடுங் கணைகள் வேந்தே
யான் ஆற் றகிலேன்
வெய்யமதன் வெந்துயராம் வேலையிடைப்
படிந்தயருந்
தையல்மய லொழித்திலையே தரிக்கிலனே
மா மணியே."

---

"காதலுக்கு ஜாதி மத பேதம் கிடையாது."

“ கல்வியிலே களித்த காலத்து நீயே களித்தனை
நான் களித்தறியேன்
உளவிலே யுவந்தபோது நீதானே யுவந்தனை
நான்உவந் தறியேன்
கொளவிலே சமுமோர் குறிப்பிலே வனைத்துங்
குறித்தனை கொண்டனை நீயே
யளவிலே யெல்லாமறிந்தனை யரசே யெமக்கடி
யுரைப்பதென் னினக்கே. ”

“ இனிப்பிரிந்திறைய மிருக்கலேன் பரிவை
யெண்ணி னும்ஐய கோ மயங்கிப்
பனிப்பிலென் னுடம்பு முயிரு முள்ளுணர்வும்
பாதவிப்பதை யறிந்திலேயோ
தனிப்படு ஞானவெளியிலே இன்பத்தனி
நடம்புரி தனித்தலைவா
கனிப்பயன்ற தெற்கிது தருதருணங் கலந்
தருள் கலந்தரு லென்னையே. ”

— திருவருட்பா.

---

“ காதல் உணர்ச்சிக்கு உட்படாத ஒரு புருஷன் ஸ்திரீ அவிப்பிறப் பென்றே சொல்லுதல்வேண்டும்.”

"பிரிந்தினிச் சிறிதுந் தரிக்கலேன் பிரிவைப்
பேசினு நெய்விடுந் தீப்போ
லெரிந்துளங் கருகிமயங்கல் கண்டிலேயோ
வெங்கணும் கண்ணுடை யெந்தாய்
புரிந்த சிற்பொது விற் றிருநடம் புரியும்
புண்ணியா வென்னுயிர்த் துணைவா
கரைந்திடா துறுதற்கிது தருதருணங்
கலந்தருள் கலந்தருளெனையே."

— திருவருட்பா.

இவ்வாறு பிர்ம்மநிஷ்டர் ஆத்ம சுகம்போல் சிற்றின்ப சுகத்தை விநோதமாய் அநுபவிக்கவும், தாசியானவள் இப்பெரியாரது போக சுகத்தை மிக உல்லாசமாய் அநுபவித்து,

---

• "உள்ளபடி காதல் கொள்ளும் பெண்மணிகள் தங்களுக்குப் பிறரால் எவ்வளவு கஷ்டங்கள் உண்டானாலும், எவ்வளவு பொருள் செலவழிந்தாலும், அவற்றை லக்ஷியம்செய்யாது, தான் காதலித்த புருஷனையே பின் தொடர்வார்கள்."

" பொற்றேவ மாதவரும் போற்றிப்
புகழ்ந்திடும் புண்ணியனைக்
கற்றுருரையுங் கடந்திடு
நல்வெழிற் காவினிடை
நற்றே ஞெழுகு நறுமலர்ப்
பந்தரினுனிருந்து
சற்றே அணைத்தொரு முத்த
மிட்டால் வரும் சாயுச்சியமே "

"வண்டு மொய்த்தணைய கூந்தல்
மதன பண்டாரவல்லி
கெண்டையோடொத்த கண்ணுள்
கிளிமொழி வாயினூறல்
கற்கண்டு சருக்கரையோ தேனே
கனியொடு கலந்த பாகோ
அண்டமா முனிவர்க் கெல்லாம்
அமுர்தமென் றளிக்க லாமே. "

---

" உண்மையான காதல் ஆண் பெண் இருவருக்கும் உண்டாகி விட்டால், அவர்கள் எவ்வளவு குரூபியாயும் நோயாளியாயுமிருந்தாலும், அவர்கள் இரதி மன்மதனுகப்பாவித்து, ஏகபோகமா யிருப்பார்கள். "

"காத்திருதாலும் கலிதீருமே கண்ணூட்டியுன்முகம்
பார்த்திருந்தாலும் பசியாருமே இடபாகமதில்
வீற்றிருந்தாலும் வினைதீருமே மெல்லிநல்லருளைச்
சேர்த்தணைந்தாலும் சிவபோக ஞானம் சித்திக்குமே"

தாசி காமரூபிணியும் பிர்ம்மநிஷ்டரும் மன்மத சுகாநந்தலீலா விநோதங்களை மாறி மாறி அநுபவித்து வருங்காலத்தில், பிர்ம்மநிஷ்டர் தாசியின் அதரங்களைச் சுவைக்க, அது தேவாமிருதம்போலிருக்கக் கண்டு அதிசயித்து, நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள் காமத்துப்பாலில் கூறியது, அநுபவத்தில் உண்மையே யெனக்கண்டு, உடனே மஞ்சத்தின் மீதிருந்திறங்கி, நேரே திருவள்ளுவர் வசிக்கும் குடிசைக் கருகே வந்து, வள்ளுவா! நீ செய்த சாஸ்திரம் மெய்!

---

• "விவாகமான பெண்களைவிட விவாக மாகாத பெண்கள் மிகத்துணிவாகத் தான் காதல் கொண்ட புருஷர்களைப் பின்பற்றுகிறார்கள். அந்தக் காதலின் சக்தியினால், தாய் - தந்தை - உற்றார் - உறவின் முறையார், வீடுவாசல் - செல்வம் முதலிய யாவற்றையும் துச்சமாக நினைக்கிறார்கள். இது காதலின் சக்தி!"

மெய்!! மெய்யே!!! ஆனல், மனமானது விஷயாந்தகாரத்தில் மூழ்கும் போது தான் என்றார்.

இது, கர்ண பாம்புரையாய் வெளிவந்த தாதலால், மெய்யாகவு மிருக்கலாம், பொய்யாகவு மிருக்கலாம். இதிலிருந்து நாம் அறியவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. மனேலயமே உண்மையான மன்மத விகாரத்துக்குக் காரணமாகின்றது.

மனமென்பது அந்தக் கரணத்தில் வாயுவின் அம்சம் கூடிய விருத்தியாதலால், வாயுவைப்போல் அலையுந்தன்மையது. சங்கற்பவிகற்பங்கள் பலவிருத்தியுடையது இதற்கு அதிதேவதை சந்திரன்பெண் னென்றும், ஸ்தானம் கண்டமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

"மனமேவ மனுஷ்பாணும் காரணம்
பந்த மோக்ஷதஹா:"

என்று சுருதிவாக்கியம் கூறுவதால், மனுஷ்யாளுக்கு கர்மபந்தத்தை உண்டாக்குவதும் மனதுதான்; மோக்ஷசாம் ராஜ்யத்தை அளிப்பதும் மனது தான்.

---

"நல்லொழுக்கம்-ஆசாரமில்லாமல் ஞான சாஸ்திரப்பயிற்சி செய்தல் பிரயோசனமில்லை. தான் கற்ற அளவு அநுபவத்தில் நடத்தல் வேண்டும்."

"பொன்போல விலங்கு மனஞ் சஞ்சலத்தால் குரங்காம்
புத்தி விசாரித்தறியும்
பொலிவதனு லாவாந்

தன்போல விலையெனலா லகங்கார மதமாம்
தனை நிகராஞ் சித்தமொரு
தன்மையினு னுயாம்

மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி
விசாரிக்கும் புத்தியினை
மெய்ப்பொருட் பால் விடுத்து

வன்போடு வருமகங்காரத் தினையுங் கடிந்தால்
வைத்த விடத்திருந்து
சித்த மகத்துவமுந் தருமே."

— உபநிடதம்.

---

• "உண்மையாகக் காதலால் விழுங்கப்பட்ட ஒரு யௌவனப் பெண்ணை, தான் காதலித்த ஒரு புருஷன் மறுத்து விடுவானேயாகில், அவள் அடையும் துன்பம், அளவிட்டுச்சொல்ல முடியாது. அதுவே அவளது மாணத்துக்கும் ஹேதுவாகும்."

இத்தகைய சலிக்கும் குணமுள்ள மனத்தை குரங்கென்றும் - பாம்பென்றும் - நாயென்றும், அதன் செய்கையினை நோக்கிப் பெரியோர் கூறுகின்றனர்.

“ கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
காடிவெம்புலி வாயையுங் கட்டலாமொரு
சிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம் வைத்தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமை யோடிருக்கலா மற்றொரு
சரீரத்தினும் புகுதலாஞ்
சலமே னடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்தி பெறலாஞ்
சிந்தையை (மனதை)படக்கியே சும்மாவிருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசைகுடி கொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே ”

— தாயுமானவர்.

“ தாழ்ந்து நின்றவர்கள் வாழ்ந்து நிற்பார்கள். ”

" மனமாளும் ஓர் ஐவர் வன் குறும்பர் தம்மை
சின மாள் வித்து ஓரிடத்தே சேர்த்துப் புனமேய
தண்டுழா யனடையத்தான தான்காணு மஃதன்றே
வண்டுழாம் சீரார்க்கு மாண்பு " — நம்மாழ்வார்.

"மனமெனு மோர் பேய்க்குரங்கு" என்று வடலூர் இராமலிங்க சுவாமிகள் கூறுகிறார். இந்த மனமானது பேயினால் பீடிக்கப்பட்டால், இதன் கோலா கலத்தைச் சொல்லத்தான் கூடுமோ? எழுதத்தான் முடியுமோ? பூர்வ வாசனை யாகிறகள்ளும் குடித்து, அகங்காரமாகிற தேளும் கொட்டி, ஆசா பாச மென்கிற பேயும் பிடித்தால், அத்தகைய மனத்தின் சுபாவத்தை ஒவ்வொருவரும், ஒரு விநாடி நேரம் யோசித்துப் பார்த்தால், போதும்; அவர்களே தெரிந்து கொள்வார்கள்.

ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களைக் கணக்கிடலாம்; பூமியிலுள்ள மணல்களை எண்ணி விடலாம். ஜலஸ்தம்பனம் செய்யலாம். வாயு ஸ்தம்பனம் செய்யலாம். இதுகளெல்லாம் ஒருபெரியகாரியமல்ல. நகர் நாய்

" துணைபோனாலும் போகலாம், பிணைபோகப் படாது. "

போல் அங்குமிங்கும் ஓடி அலையும் மனத்தை அடக்கு தல் தான் கஷ்டத்திலும் கஷ்டம். மனத்தை ஜெயித் தவன எவனே, அவனே மாயையை ஜெயித்தவனுவான். அவனுக்குத்தான் மோக்ஷ சாம் ராஜ்யத்தின் கதவுகள் திறக்கப் பட்டிருக்கின்றன.

ஆதலால், மன்மதன் - ரதி என்று சொல்பவை யெல்லாம் மனத்தின் சேஷ்டையாகும். மாயையைக் காணுவது கூடாதது போல், மன்மதனும் ஒருவர் கண்ணுக்கும் தோன்ருதவனுய்,உருவிலியெனப் பெயர் பெற்றிருக்கிருன்.

மனுஷ்யர்கள் மனத்தின்சேஷ்டைகளில் லயப்பட்டு தான்ருேன்றிகளாய், தன்னிஷ்டம்போல் அலைந்து கெட்டுப் போவார்களென்று, பண்டைக்காலத்து மக ரிஷிகள், பிரமசரியம் - கிருகஸ்தம் - வானப்பிரஸ்தம் - சந்நியாசம் என நான்கு ஆஸ்ரமங்களையும், அவற்றை அநுஷ்டிக்க வேண்டிய விதி நிஷேதங்களையும் அநுக் கிரகித்துள்ளார்கள்.

---

"மன அடக்க முள்ளவர்களுக்கு உலகத்தில் விரோதியே யில்லை."

"கள்ளும் ஊனும் நீ விரும்பினால்
மகங்கள் செய் காமத்தின் மனதானால்
கொள்ளும் பெண்டிரொடு கலவி செய்
யெனிலிவன் குறையெலாந் தொடாதென்றே
தள்ளும் வேதத்தின் சம்மதம் சகலமுந்
தவிர்வதே கருத்தாகும்
விள்ளு மிவ்விதி யென்னெனிற் பூருவ
நியமமாம் விதியன்றே."

"மது இறைச்சி களென்னென்ற சுருதி
பின் மணந்து பாரெனல் பாராய்
மிதுன இச்சையும் புத்திரோத் பத்தியால்
விரும்பென்ற விதி பாராய்
இதையும் விட்டொழி யதி நயிட்டிகவன்னிக்
கிகழ்ச்சி யற்றதும் பாராய்
அதை அறிந்து கன் மங்களாசைக
ளொழிந் தாநந்த மடைவாயே."

— கைவல்யம்.

---

"உடலும் உயிரும் போன்று, என்றும் இணை பிரியாத காதலே உண்மைக்காதல்."

பிரமசரிய ஆஸ்ரமத்தைக் கிரமமாக அநுஷ்டித்தோர், காம இச்சை உண்டானால், கிருகஸ்த தர்மத்தை அநுஷ்டித்து, விவாகம் செய்துகொண்ட தன் மனைவியோடு புத்திரோத்பத்தியை உத்தேசித்துக் கலவி செய்யவேண்டு மென்று சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய, இரவும் பகலும் சதா சர்வ காலம் விந்துவை காமவெறிகொண்டு, ஸ்திரீ சம்வர்க்கத்திலும் முஷ்டி மைதுனங்களிலும் செலவு செய்யும்படி, எந்த சாஸ்திரமும் கூறவில்லை.

---

## விந்துஜெயம்.

---

(யோக மார்க்கம்)

இந்நூலுக்கு முதற்பாகமாகிய "கொக்கோக வைபவம்" என்னும் "மன்மதன் திருவிளையாடல்" என்னும் புத்தகத்தில் 30 - 31 - வது விந்துவின் அரிய பெரிய

---

"ஒருமனிதனுக்கு ஆபத்காலத்தில் எல்லாம் தர்ம மயமாய்த் தோற்றும்."

மஹிமைகளைத்தனி அத்தியாயத்திற் கூறியிருக்கிறோம். விந்து ஜெயம்என்பதுபலதுளி இரத்தம் சுண்டியதுஒரு துளி விந்துவாகிறது. அத்தகைய விந்துவை ஜெயிக்கிற வன் யோகம் அறிந்தவன் ஒருவனே. எவன் விந்துவை ஜெயிக்கிறானோ, அவன்மிருத்யு(எமன்)வைஜெயிக்கிறான் விந்துவிட்டால் நொந்து (செத்து) விட்டான் என்பார் கள். இந்தமுறை ஹடயோகப் பிரதீபிகையில் யோக சாதன அத்தியாயத்தில் "வஜ்ரோலி" என்கிற தலைப்பின் கீழ், சொல்லப்பட் டிருக்கிறது. இதை இல்லற வாசிக ளாக, கணவன் - மனைவியோடு வாழ்கிறவர்கள், கூடு மானவரை அப்பியாசித்தால், அவர்கள் சரீரம் வஜ்ரம் போலிருப்பதோடு, நீண்ட ஆயுள் பொருந்தியு மிருப் பார்கள்.

---

"சிற்றின்பத்தை விளைவிக்கும் நாவல் முதலிய கீதா புத்தகங்களைப் படிப்பதாலும், சிற்றின்பத்தைப் பற்றிப் பேசும் கூட்டத்தாரோடு பழகுவதாலும், சினிமா - நாடகம் முதலியவற்றைப் பார்ப்பதாலும், பாலிய மங்கையர்களோடு நேசிப்பதாலும், மனோ (காதல்) தர்மம் அதிகமாகும். ஆயினும், காலதேச வர்த்தமானங்களை அறிந்து, அறிவாளிகள் அளவோடு காதலை உபயோகித்தல் வேண்டும்."

* புருஷ வஜ்ரோலி:—வஜ்ரோலியின் முதல் அங்கமாகிய பிரக்கிரியை கூறுகின்றதைக் கவனிக்கவும்.

ஈயம் (Lead) ரப்பர் குழாய் முதலியவற்றாற் செய்யப்பெற்றவொருகுழல் செய்து, அதை இலிங்கத்துவாரத்தில் (ஆண்குறி) வாயு சஞ்சரிக்கும் பொருட்டு, அடிக்கடி நெருப்பூது குழல்போல், மெல்ல பூதாகாசம் செய்தல் அதாவது ஊதுதல்.

புருஷன் சிறுநீர் விடும்போது, அதை வாய்வினால் பலமாகமேலேஇழுத்துக்கொண்டு, கொஞ்சம்கொஞ்சமாக விடவேண்டும். யோகாப்பியாசம் செய்து வைத்த குருவின் முன்னிலையில் அவர் அபிப்பிராயத்தை அநுசரித்து, மேலே இழுத்தல் வேண்டும். இவ்வாறு, ஆறுமாதம்தினசரி அப்பியசித்தால், மஹத்தான சித்தியைத் தரத்தக்க விந்து ஜெயம் உண்டாகும். விந்து ஜெயங்கொண்ட புருஷன்நூறு பெண்களோடுகூடினும், விந்து நஷ்டமடையாது.

* வஜ்ரோலியால் விந்து சித்திப்பதற்கானமுறை சிவ சம்ஹிதையிலும் கூறி யிருக்கிறது.

## * வஜ்ரோலியின் சாதனப் பிரக்கிரியை.

ஈயத்தாற் செய்யப்பட்டதும், மிருதுவானதும், இலிங்கத் துவாரத்தில் பிரவேசிக்கக் கூடியதாயுமுள்ள பதினொன்கு அங்குல அளவு கொண்ட சலாகை ஒன்று செய்து, அதை இலிங்கத்துவாரத்தில் செலுத்த அப்பியசிக்க வேண்டும். முதல் நாள் ஒரு அங்குலம், இரண்டாம் நாள் 2-அங்குலம், 3-ம் நாள் 3-அங்குலம், 4-ம் நாள் 4-அங்குலமாக, 12-அங்குலம் உட்பிரவேசித்தால் போதும். லிங்கம் சுத்தமாகும். 14-அங்குல சலாகையில் 12-அங்குலம் உட்பிரவேசம் போக, மிச்சம் 2-அங்குலத்தை மேல் முகமாக வளைத்துவைத்துக் கொள்ளுதல் வேண்டும். இச் சலாகையானது நெருப்பூது குழல் போலிருக்கல் வேண்டும். இலிங்கத்தினுட் செலுத்தப்பட்ட குழலின் மேலேயுள்ள இரண்டங்குல வழியாக, வாயு உட்பிரவேசிக்கும் வண்ணம் பூக்காரம்

---

* இதனை யோக குருவின் உபதேசத்தால் குருவின் முன்னிலையில் ஒவ்வொருவரும் அப்பியசிக்க வேண்டும். யோக நூல்களை பார்த்துத் தனியே செய்யக் கூடாது. அபாயம் ஏற்படும். ஜாக்கிரதை !

(ஊதுதல்) செய்தல் வேண்டும். அதனால், மார்க்க சுத்தி உண்டாகின்றது. பின்னர், ஜலத்தை இலிங்க மார்க்கமாக இழுத்தல் வேண்டும். இது, சித்தித்த பின்னர், விந்துவை மேலே இழுக்க அப்பியசித்தல் வேண்டும் விந்துவை ஆக்ருஷிக்கும் சக்தி சித்தித்தால், வஜ்ரோலி முத்திரை சித்திக்கும். இது, பிராண ஜயமுள்ளவனுக்குத்தான் சித்திக்கும். கேசரிமுத்திரையும் பிராண ஜயமும் சித்திசெய்து கொண்டவனே யோகியாவன். அவனுக்குத்தான் விந்து ஜெயம் உண்டாகும்.

ஸ்திரீ புருஷ சம்வர்க்க காலத்தில், புருஷன் விந்துவை விடுதற்கு முன்னமே, வஜ்ரோலி முத்திரையின் அப்பியாசத்தால், விந்துவை மேலே இழுத்தல் வேண்டும். இன்றேல், விழுந்த பிறகும் ரக்ஷிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ☞ சகாரத்தால் (உண்மையால்) சுக்கிலத்தோடு ஸ்திரீயின் ரேஜஸையும் இழுக்கலாம்.

---

" பெண்களைக் காம இச்சையுடன் பார்க்கும் போதே, விவாக ஆசை உண்டாகிறது."

— ஸ்ரீ ராம கிருஷ்ணபரமஹம்ஸர்.

வஜ்ரோலி அப்பியாசம் செய்யும் யோகிகளது சரீரம், எப்போதும் சுகந்த வாசனையோடு கூடியிருக்கும். சரீரத்தில் எவ்வளவுகாலம் விந்து ஜலமுள்ளதோ, அவ்வளவு காலம் சரீரத்துக்கு அழிவில்லை. அவனுக்கு மரணமில்லை. புருஷனது சுக்கிலம் ஜெயமானால், ஜீவன் நிலைக்கும்; நஷ்டமானால் மரணம் உண்டாகும் இது நிச்சயம். ஆனால், சித்தம் நிலைக்க வேண்டியிருக்கிறது. சித்தம் அசைந்தால், விந்து ஜெயமுண்டாகாது. ஆகலால், சுக்கிலத்தையும் மனத்தையும் இரக்ஷிக்கவேண்டுவது அவசியம். இவ்வாறே, ருது ஸ்நாநம் செய்யும் ஸ்திரீயின் ரேஜஸையும், தனது சுக்கிலத்தையும் ரக்ஷிக்கலாம்.

வஜ்ரோலியை அப்பியசிக்கும் யோகியானவன், உபஸ்தே (குஹ்யம்)ந்திரியத்தால், சுக்கிலத்தையும் ரேஜஸையும் வெகு சுலபமாக மேலே இழுக்கலாம்.

---

"எவன் ஒருவன் தனது மனைவியுடன் வாழும் போதே, விவேக வைராக்கியத்திலும் ஞானத்திலும் அணுவளவும் குன்றாதிருப்பானோ அவனே பிரம்மசுகத்தில் லயித்திருப்பவனாவான்."

—தோதாபுரி ஞானியார் (ராமகிருஷ்ணர் குருமூர்த்தி.

## ஸ்திரீ வஜ்ரோலி.

வஜ்ரோலி அப்பியாசமுள்ள ஸ்திரீயினது சுரோணிதம் அற்பமாயினும் வெளியாகி நாசம் அடைகிறதில்லை. அந்த ஸ்திரீயின் சரீரம் வஜ்ரம் போலிருக்கும். அவளது சுரோணிதமும் விந்துத் தன்மை அடைகின்றது. அதாவது, மூலாதாரத்தினின்றும் எழும்பிய நாதம், ஹிருதயத்தில் விந்துத் தன்மை அடைகின்றது. விந்துவோடு ஐக்கிய மடைகின்றது.

அமிர்த சித்தியில்:—

புருஷனது பீஜத்தினின்றும் வெளியாவது சுக்கிலமென்றும், ஸ்திரீயினது யோனியினின்றும் வெளியாவது சுரோணிதமென்றும் சொல்லப்படுகின்றது. இவ்விரண்டும் ஒன்று சேருவதால், ஜீவ சிருஷ்டி உண்டாகின்றது. சுக்கிலம் சந்திர மயம். சுரோணிதம் சூரிய மயம். இரண்டின் சேர்க்கையால், பரம பதம் உண்டாகின்றது. விந்துவானது சொர்க்கம் - மோக்ஷம்-தருமா

---

“ மனதின் உண்மையான சொரூபத்தை அறிந்தவர்கள், பிறர் மனம் நோகும்படி ஒரு காரியத்தையும் செய்யத் துணியார்கள். ”

தருமங்கள் இவற்றைத் தரும். அதன் மத்தியில் இந்திராதி சகல தேவர்களும் சூக்ஷ்மமாக வசிக்கிறார்களென்று சொல்லப் பட்டிருக்கின்றதுந் தவிர, விந்துவும் சுரோணிதமும் வஜ்ரோலி அப்பியாயத்தால் ஒன்றுபட்டுச் சரீரத்தில் தங்கிச் சகல சித்திகளையும் தருகின்றன. எந்த ஸ்திரீயானவள், தனது யோனியைச்சுருக்கி, சுரோணிதத்தை மேலிழுத்து ரக்ஷிக்கிறாளோ, அந்த ஸ்திரீ திரிகா லக்யானியாவாள். அவள் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் வல்லமை பெற்றவள்.

இந்த வஜ்ரோலி அப்பியாசம் செய்யும் யோகிகள், ஸ்திரீகளாயினும் சரி - புருஷர்களாயினும் சரி - ரூபலா வண்யம், சரீர பலம், மனோரத பூர்த்தி முதலாய சகல சித்திகளையும் அடைவார்களென்பது நிச்சயம். இது, இகத்துக்குரிய சகல போக போக்கியாதிகளைக் கொடுத்து, மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் அளிக்கும். இவ்வப்பியாசத்தினால்,சிற்றின்பமே பேரின்பத்துக்கு வழியென்றுசாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

---

" உலக அநுபவமறிந்த பெரியார்கள் எழுதும் நூல்கள் சுவாநுபவத்தைக் கொடுக்கக்கூடியது. "

"மாதரிடத்தே செலுத்தினும் அவ்விந்து
காதலினால் விடார் யோகங் கலந்தவர்
மாதர் உயிராசை கைக் கொண்டேவாடுவர்
காதலர் போற்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே"

— திருமந்திரம்.

இது விஷயமாக, ஆண் - பெண் இரு பாலரும் தெளிவாய் அறிதற்பொருட்டு "கொக்கோக வைபவம்" என்னும் "மன்மதன் திருவிளையாடல்" என்னும் புத்தகமும், அதற்கு இரண்டாம் பாகமாக "கணவன் மனைவி காம கலா ரகஸ்யம்" என்னும் புத்தகமும் வெளியிட்டோம். இவ்விரு புத்தகங்களையும் மனக்கலக்கமில்லாத சமயத்து, ஒருமுறைக்குப் பன்முறை வாசித்துணர்ந்தால், அப்புத்தகங்களின் நுட்பங்கள் அறிவதுந்தவிர, இந்நூல்கள் பேரின்பத்தை அடைவதற்குரிய மார்க்கங்களையும் போதிக்கும் திறமையுடையன வென்பதை உணரலாம்.

---

" சதா சிரிக்கிறவர்கள் - விளையாட்டில் புத்தி செலுத்துகிறவர்கள் - காம வெறி கொண்டவர்கள். இவர்கள் அரிய பெரிய காரியம் செய்வதற்கு அருகரல்லர். "

ஆதலால், ரதி மன்மதன் என்பது, தத்துவ விசாரணை செய்யும்போது, மனதின் சேஷ்டை யென்று ஏற்படுகிறது; மனத்தை ஒரு வழிப்படுத்தும் நிலையில் அப்பியசித்தால். மன்மதனது ஆடம்பரங்கள் ஒருவாறு சமனப்படும். இது பற்றியே, நமது இந்து வேதங்கள், மனுஷ்யாள் காலை முதல் இரவு படுக்கும் வரையில் தாங்கள் செய்ய வேண்டிய ஆசார அநுஷ்டானங்கள் முதலாய ஒவ்வொரு தொழிலிலும் ஆத்ம சம்பந்தத்தைப் புகுத்தி யிருக்கிறார்கள். பிரமசரியமாதி நான்கு வகை ஆஸ்ரமங்களிலும், சரியை யாதி நான்கு வகை சோபான முறைகளிலும் மன அடக்கத்தைப் பற்றியே போதித்திருக்கக் காணலாம்.

நவீன நாகரீகத்தவர்க்கு இதுபுதுமையாய்த்தோன்றும்.

"சிற்றின்ப வெறியிற் படிந்துதோய்ந்து
கிடக்கும்எவ்வினமும்பேரின்பம் அடையக்கூடும்"
— திருத்தக்க தேவர்.

---

" ஒவ்வொரு ஜீவர்களும இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் இயற்கை. "

## இரண்டாம் அத்தியாயம்.

# சதிபதிகள் வசீகர மார்க்கம்.

" அங்கணை யறுத்து விட்ட
　　அடலினை யாற்று நீசன்
தங்கிய யோக நீங்கி தன்னுடல்
　　பாதியாக வெங்கடும் காமத்தியால்
உடல் வெடித்திடப் போர்செய்த
　　திங்கள் வெண்குடை—
யினாற்றல் சேவடி சென்னி
　　வைப்பான் "

---

[சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தது. சிவஸ்வரோதயத்திலுள்ளதின் சுருக்கம்.]

அக்னி சாக்ஷியாக விவாகம் செய்துகொண்ட சதிபதிகள் ஒற்றுமையின்றி யிருக்கும் பக்ஷத்தில், அம்மனைவியைத் தன்வயப்படுத்துவதற்குப்பலவகையான மந்திர தந்திர சிகிச்சைகள் – கிரக தோஷ பரிஹாரங்

---

" மதமும் கவுரங்களும் மனிதனை அடக்கி ஆளும் ஆயுதம். " — நெப்போலியன்.

கள் - ஔஷத மூலிகாப் பிரயோகங்கள் முதலியவை செய்து வருவது, சில சாஸ்திர முறைபாக அநுபவத்தில் நடைபெற்று வருகிறது. அதனோடு, கீழ்க்கண்ட இம் முறைகளும் அநுபவமாகும் என்கிற நம்பிக்கையினால், இங்கு தெரிவிக்கிறோம். ஆனால், இம்முறைகள் விவாகம் செய்து கொண்ட மனைவி (சதி)யிடத்து உபயோகிக்கலாமே தவிர, பர ஸ்திரீ விஷயத்தில், இம் முறையை அநுஷ்டித்தால், பாப தோஷங்களுக்குள்ளாகிப் பலவகை நரகங்களுக்கும் ஆளாவான் என்பது பெரியோர்களது ஆக்ஞை.

" இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று." — திருக்குறள்.

என்கிற நாயனார் வாக்கியப்படி, மனிதர்கள் எல்லோரிடத்தும் அன்புடையாராய், இனிய வசனங்களால் அவர்களை மகிழ்விக்க வேண்டும் என்பது முறை.

---

" நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட இல்லற வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தால், அவ்வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு காரியமும், ஆத்மஞானத்துக்கு வழியாகவே நிற்கும்."

உடல் பொருள் ஆவி மூன்றையும் புருஷனுக்கே (பதிக்கு) தத்தம் செய்த ஓருயிர் ஈருடலாகிய மனைவியிடத்தில் (பதி) புருஷன் எத்தகைய அன்பும் விஸ்வாசமும் கொண்டிருக்க வேண்டுமென்பது, அறிஞர்களே அறிவார்கள். ஆனால், கால சக்கிர மாறுதலினாலும், கிரக தோஷங்களினாலும், உத்தம புருஷனுக்கு உத்தம மனைவி வாய்க்காமலிருப்பது, பிராரத்த கருமத்தின் பயனே யாகும். அதனாலே, அத்தகைய மனைவியோடு கடும் வார்த்தைகள்பேசி, அவள் மனதைப்புண்படுத்துவது அறிவாளிகளுக்கு அழகல்ல.

ஸ்ரீசிவபெருமான் உமாதேவியாருக்குச் சொல்லுகிறார்:—

(1) ஹே! பெண்ணே! கவனமாய்க்கேள்:-ஒரு (பதி) புருஷன் தன் (சதி) மனைவிக்குச் சந்திர (கலை) ஸ்வரம் நடக்கும்போது, தன்னுடைய சூரிய (கலை) ஸ்வரத்தினால், அந்தச் சந்திர ஸ்வரத்தை ஆகருஷ்ணம் செய்து, தன்னுடைய ஜீவ (கலை) ஸ்வரத்தினோடு சேர்த்து வந்தால், அந்த ஸ்திரீயும் புருஷனும் தம் வாழ்நாள் வரையும், மனமாறுதலின்றி, ஒற்றுமையாய், பாலும்

---

"கிழவன் பேச்சு கிண்ணாரக்காரனுக் கேற்காது."

நீரும்போல் கலந்து, குடும்ப வாழ்க்கையைச் சுகமே அநுபவித்து வாழ்வார்கள்.

(2) ஒரு புருஷன் தன்னுடைய ஜீவஸ்வரத்தினால், ஸ்திரீயினுடைய ஜீவ ஸ்வரத்தைக் கிரஹித்து, ஸ்திரீயினுடைய ஜீவஸ்வரத்தில் கொடுத்துச் சேர்க்கச் செய்தால், அந்த ஸ்திரீயானவள், தன் புருஷனுடன் ஜென்மபரியந்தம் பிரிய முள்ளவளாகிறாள்.

(3) இராக்காலங்களில, கடைசி ஜாமத்தில், மனைவியானவள் அயர்ந்து தூங்கும்போது, அவளுடைய சுழிமுனை நாடியை, அவள் புருஷன் உட்கொண்டால், அம்மனைவியானவள், தன்புருஷன் பிராணன் உள்ளவரையும், அவனை விட்டுப் பிரியாமலிருப்பாள்.

"இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலாலன்றி மகிழாதே" — ஔவையார்.

---

"எல்லாம் வல்ல இறைவன் உலகத்துள்ள சகல ஜீவ ராசிகளையும் அன்பு பூண்டு, நாடகம் நடிக்கிறார். ஆகையால், உலகம் அன்பு மயமானது. அன்பில்லையேல், அனைத்துமில்லை. அன்பில்லா ஜீவர்கள் உலகிற் கிடைப்பதரிது."

## மூன்றும் அத்தியாயம்.

# ஆலிங்கனத்தால் தழுவி வசீகரம் செய்யும் மார்க்கம்.

" அஞ்சி லோதிய ராடமைத்தோளியர்
வஞ்சமற்று மருவுதல் செய்தி—
வெஞ்சமேன்றி யிளையவர் யாவரும்
பஞ்சபாணன் பதத்தை யணங்குவாம். "

ஸ்திரீ புருஷர்கள் இருவரும் மதன சாஸ்திரப்படி * ஆலிங்கனம் செய்யும்போதாவது, மற்று மிருவரும் ஆசக்தமாயிருக்கும் போதாவது, எந்தப்புருஷன் தன்னுடைய சூரிய ஸ்வாத்தினால் தன் நாயகியின் சந்திரஸ்வாத்தை இழுத்து உட்கொள்ளுகிறானோ, அவன் மன்மதனைப்போல், தன்மனைவிக்கு மோக காரகனாகின்றான். சிவத்தினால் சக்தியையும், சக்தியினால் சிவத்தை

* இவிஷயமாக முதற்பாகம் "கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல்" 37-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யும், எந்தப்புருஷன் ஒன்றுபடச்சேர்க்கிறானோ, அவன் அந்த க்ஷணத்திலேயே நூறு ஸ்திரீகளை மோகிக்கச் செய்வான். (சிவம் - சூரியன், சக்தி - சந்திரன்.)

(2) ஸ்திரீயினுடைய சூரிய ஸ்வரத்தில் புருஷனுடைய சந்திர ஸ்வரத்தைக் கொடுக்கவேண்டியிருந்தால், 3-5-7-9-முறையாகக் கொடுக்கவேண்டும். ஸ்திரீயினுடைய சந்திர ஸ்வரத்தில் புருஷ ஸ்வரத்தைக் கொடுக்கவேண்டியிருந்தால், 2 - 4 - 6 - முறையாகக் கொடுக்க வேண்டும். இம்மாதிரி செய்யும் பக்ஷத்தில், சதிபதிகள் இருவரும், ஒருவரையொருவர் வசீகரித்துச் சுகமாய் வாழ்வார்கள்.

(3) சூரியனையோ சந்திரனையோ சதிபதியாக ஆகருஷ்ணம் செய்து, ஒரு தாமரைப் புஷ்பத்தை, புருஷனும் அவன் மனைவியும் தத்தம் உதடுகளில், ஒத்தடம் கொடுத்து, பிறகு அந்தப் புஷ்பத்தை முகத்தில் ஒத்திக்கொண்டு, உடனே ஸ்வரத்தை அந்தப் புஷ்பத்-

---

"சுவாநுபவ மின்றிக் கல்வியில் மாத்திரம் தேர்ச்சியடைந்தோர் எழுதும் நூல்களால் சுவாநுபவ சித்தி உண்டாவதில்லை."

தில் சேர்க்கவேண்டும். இந்தப்படி மேலே சொல்லியிருக்கிற விதம், மனைவி நித்திரை செய்கிற வரையில், புருஷன் செய்யவேண்டும். பிறகு, அம்மனைவி நித்திரை விட்டெழுந்த பின்னர், அந்த மனைவியினுடைய நேத்திரம்-கழுத்து இவ்விடங்களில் சும்பனம் செய்ய வேண்டும். இவ்விதமாகப் புருஷன், மனைவியின் ஸ்வரத்தோடு கலந்தால், மனைவிமார் புருஷனோடு இன்புற்று, ஆயுள் பரியந்தம் வாழ்வாள்.

"(சதி) ஸ்திரீயானவள் புணர்ச்சியில் இரவில்நெய்யும் பாலும் கலந்த சம்பா அரிசியைச்சமைத்து, எண்ணெயும் உளுந்தும் அதிகமாகக் கலந்த உணவை உட்கொண்டுவிட்டு, முதலில் இடதுகாலை வைத்து, அந்தப்புரத்தில் நுழைந்து, தனது பதி (புருஷன்)யின் இடது பக்கமாகச் சயனிக்கும் பஞ்சணையில் உட்கார வேண்டும்."

☞ எச்சரிக்கை:—இது, பர ஸ்திரீலோலர்களுக்குச் சொல்லக்கூடாது என்பது சிவபெருமான் ஆக்ஞை.

---

" மனோசஞ்சலம் வாழ்க்கையைக் குறைத்துவிடும் "

" பதி (புருஷன்)யானவன் நெய்யும் பாலும் கலந்த * சம்பா அரிசியைச் சமைத்த அன்னத்தைப் புசித்து, அந்தப்புரம்செல்லு முன், வலது காலை முதலில் வைத்துப் பஞ்சணையில் உட்காரவேண்டும்; அதன் பின்,

" சதி பதிகள் புணர்ச்சியில் இறங்கும்போது, முதலில் கீழ் வரும் மந்திரத்தைச் சோல்ல வேண்டும்.

" அஹிரஸி ஆயுரஸி ஸர்வதஃ ப்ரதிஷ்டாஸி
தாதா த்வாம் ததாது, விதாதா
த்வாம் ததாது, ப்ரஹ்மவர்ச்
சஸா பவேதி, ப்ரஹ்மா ப்ரு
ஹஸ்பதிர் விஷ்ணுஸ் ஸோமஸ்
ஸூர்யஸ்த தாச்விநௌ பகோத
மித்ராவருணௌ வீரம்ததாது
மே-ஸூதம் " — அஷ்டாங்க ஹ்ருதயம்.

---

* " சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க
உண்பாய்நீ யென்று சொல்ல
உழக்கு முக்கு நெய் வார்த்து
முத்துப்போ லன்னமிட்டு
முப்பழமுஞ் சருக்கரையும்
தித்திக்குந் தேனமிர்தம் என்கண்ணம்மா
தின்று களிப்பாயேனே "
இவ்வாக்கு கவனிக்கற் பாலது. — அழுகணி சித்தர்.

இதன்கருத்து:—சதிபதிகள் இருவரும் புணர்ச்சி காலத்தில், பரிசுத்த மனத்தோடு, சரீராரோக்கியம்-ஆயுள் விருத்தி - சந்தான விருத்தி முதலிய உண்டாக வேண்டுமென்றும், ப்ரம்ம-விஷ்ணு-சூரியன்-சோமன்-வருணன் முதலிய தேவர்களது அநுக்கிரகமும் அவர்களைப் போன்ற பலமும் உண்டாக வேண்டு மென்றும் பிரார்த்தித்தல் வேண்டும்.

சதிபதிகள் புணர்ச்சி செய்த பின்னர், ஸ்நானம் செய்து. சுகந்த வாசனை வஸ்து முதலானவற்றைத் தேகத்தில் பூசிக்கொள்ளவேண்டும். குளிர்ந்த காற்றில் உலாவ வேண்டும். தித்திப்பு சிற்றுண்டிக்களைப் புசிக்க வேண்டும்குளிர்ந்த ஜலம், பசும்பால்(இதில்-போகநதை விருத்தி செய்யும் வஸ்துக்களைச் சேர்த்துக் காய்ச்சிய) அன்னத்தின் மேலுள்ள குளிர்ந்த ஜலம் (நீராகாரம்) இவற்றைச் சாப்பிட்டு, உடனே சுத்தமான காற்றில் நித்திரை செய்வது நலமாகும். இவ்வாறு, இல்லற வாழ்க்கையை நடத்துகிறவனுக்கு, தேகததில் நஷ்டமடைந்த வீர்யம் (விந்து) மீண்டும் விரைவில் விருத்தியாகும். — அஷ்டாங்கஹிருதயம்.

---

"எல்லாம் வல்ல இறைவனது இயற்கையை ஜெயிக்க, ஜீவர்களுக்கு அணு மாத்திரம், சக்தி கிடையாது."

## மதனலீலா இன்ப அநுபவம்.

" செய்ய மலர் மெத்தையின் மேல்
வையம் புகழ் மதனும்
தேவி ரதியாளு மேவு சயனமதில்
சேர்ந்து முகத்தோடு முகமார்ந்து
கண்ணோடு கண்ணை
சிந்தை மகிழ்ந்து வைத்து
கந்த மலர் புனைந்து
தேசமெல்லாம் புகழும்
வாசம்பல அணிந்து
தேக்குபரி மளமாம் பாக்கு
மதன்கை யிலிட்டு
தெருளாக வெற்றிலையைச்
சுருளாகவே மடித்து
சேயிழையாள் மணக்கும்
வாயினாலே கடித்துக்
கொடுத்தாள் சில சுருளைத்
தொடுத்தாள் மதனலீலை
சித்தங் களி கூர்ந்தார்

---

" போலிநட்பு - புகையும் நெருப்பும். "

மெத்தப்புளக மிட்டார்
செஞ்சிலைக்கு வஞ்சி கொஞ்சி
ஹிதமாய் மையல் மிஞ்சி
தேசிகவேள் மடிமேலே
சுகமாகவே படுத்தாள்
செங்கையினாலே எடுத்து
இங்கிதமாய் அணைத்து செவ்வை
* * * பிடித்து கொவ்வை இதழ் கடித்து
தீனமுதம் கொடுத்து மீன
மிலங்குந் துவிஜன்
சிற்றிடையாள் சேலைதன்னை
முற்றுகையால் அவிழ்த்தார்
சேமரதி காமனிடை சோமன்
றனை உரிந்தாள்
திடமா யிருவர்களும் தொடை
மேல் தொடைபோட
சேல் விழியாள் காமியத்தைக்
கால் வழியாய் ஓடவிட்டாள்

---

"எத்திறம் நின்றான் ஈசன் - அத்திறம் அவளும் நிற்பாள்."

திங்கட்குடையோனும் ஆலிங்கனங்கள்
ஐந்து விதம்
செய்தோர் * * * சுவைத்து எய்தோர்
* * * கெருடி
தின்கைம் மூலத்தைஉண்டு உள்களவு
மாங்கனியைத்
தித்திப்பாய்ச் சுவைத்து அந்திப்
படவிழியின்
தேக்கித் திசைமுகச் சோமன்
நாக்கின்பமாக வைத்து
தேங்கிடாது சுகம் ஓங்கி
யிடாது நாகம
செல்வாதித் தலையில் புலவலமா யமுத்திச்
சீலம ருந்தியிலே ஏலமாகச் சிரித்தென்
கமு கொப்பாங் கழுத்தை
தன் கரத்தா லணைத்துச்
சேர்த்துக் குணங்குறிகள் பார்த்துத்
தனத்த வதில்

---

"அதிக ஆநந்தம் அநுபவிக்க ஆற்றல் இல்லாதவன், உயர்ந்த ஒழுக்க முடையோனாக இருக்க இயலாது."
— வால்டர் ராலி.

தீதில முதநிற்குமிடம் கோதில்
பதி நயந்து நிலைக்க
தரித்தே யிறக்குமிடம் பரிந்
தேய் சேறுமிடம்
திங்கின்விடை தானப்பாங்கலவ
வென்றுப்பிட்டிச்
செவ்வுள்ளந்தான் வருஷக்கவ்வி
விரல் சுவைத்து
தேன்கூட்டிலே குளவிதான்
கூர்ந்து போவதுபோல்
சொல்லகிதம் பத்தில் விரல்மெல்லங்
விரசுமுற்கரித்
தெள்ளமுத மெய் முழுதும்
வெள்ளமதன் பாய்ந்து"
"கலவித்தாக வூடிக்கட்புனல்
குளிக்கு நல்லார்
புலவிதீர் செவ்விநோக்கிப்
புணர் * * * போகந்துய்த்தும்

---

"ஆண்டையிற் சமர்த்தனில்லாத அரசனுக்கு அபகீர்த்தி எதிர்பார்த்து நிற்கும்."

நிலைநிலை யாமை நோக்கி நெறிப்
படு தரும் தானங்
கலைஞர் கைப்பெய்துங் காலங்
கழிப்பவ ரெண்ணிலாதார் ”

— திருவிளையாடற் புராணம்.

“ பிரணய கலகத்துக்குப் பின்னே, புணர்ச்சி இன்பந் துயத்தல் என்பது முன்னுள்ள காதலை அதிகம் மிகுதிப்படுத்தி வைத்தற்குரிய ஓர் உபாயமே யாகும்.”

“ கண்ணுதலியோ கிருப்பக்காம
னின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவராதி மெலிந்தமை
யோரார் மால்தான்
எண்ணிவேண் மதனையேவ
எரி விழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப்
பேரின்ப மளித்த தோரார். ”

— சிவஞான சித்தியார்.

---

“ வெறும் நாய் சந்தைக்குப்போனால், வெள்ளிக் கோலால் அடிபட்டு வரும். ”

## நான்காவது அத்தியாயம்.

# ஆண்மக்கள் பெண்களது மோக வலையில் சிக்குவதேன்?

“ மலரினில் நீலவானின்
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை ஈசன் இயற்றினன் * * *
அலகிலா அறிவுக்கண்ணால்
அனைத்தையும் நுகருமாதே” —சி.சு.பாரதியார்.

ஸ்ரீ அகண்ட பரிபூர்ண சச்சிதாநந்த சுயம் பிரகாசபராபரவஸ்துவானது, நாமரூப மற்றது. அதனிடத்தில் அக்கினியிற் சூடுபோல, அபின்ன சத்தியென்றொரு சத்தி உண்டாகி, நாம ரூபமுள்ள உலகம் தோற்றுகிறது. அவ்வுலகத் தோற்றத்தினிமித்தம், சிருஷ்டி-திதி சங்காரம் என்னும் முத்தொழிலை நடத்துவதற்கு, பிரமன் - விஷ்ணு - ருத்திரன் என்றும், அவர்களுக்கு

---

“ ஜீவர்களுக்கு காற்றும் ஜலமும் எவ்வளவு முக்கியமோ, அவ்வாறே பேரின்ப முத்திக்கு இல்லறம் முக்கியம். ”

" பெண்பாலுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலியோ கெய்திவீடுவர்காண் சாழலோ "
— திருவாசகம்.

" சத்தி தன்வடிவே தென்னிற்
றடையிலா ஞானமாகும் "
— சிவஞான சித்தியார்.

" வார்கொண்ட வனமுலையாள் உமை பங்கன்கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன் "
— திருத்தொண்டத்தொகை.

" அம்மையப்பரே யுலகுக்கு
அம்மை யப்பரென்றறிக "
— திருக்களிற்றுப் படியார்.

" போகமா யிருந்துயிர்க்குப்
போகத்தைப் புரிதலோரார் "
— சிவஞான சித்தியார்.

" அவனசைந்திடி லொருவனு வசைந்திடும்
அவனசை யாவிடிலணு வசைந்திடாது
சிவன்சத்தி யோடுறிற் செகம் விரிந்திடும்
சிவன்தனித்திடில் விரி செகமொடுங்குமால் "
— முதுமொழி.

" ஊண் அற்றபோதே - உறவற்றுப்போகும். "

முறையே சரஸ்வதி - லக்ஷ்மி - பார்வதி என்கிற முச் சக்தியையும் கற்பிக்கப்பட்டுள்ளது. சக்தியும் சிவமும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து நிற்குந்தன்மையதல்ல. இவை, மலரும்மணமும் போலாகும். இரண்டும் அநாதி. இவை உயர்வு தாழ்வின்றி, ஒத்து உலகத்துள்ள உயிர்களை இயக்குகின்றன.

"அருளது சக்தியாகும் அரன்
றனக்கருளை யின்றித்
தெருள் சிவமில்லை அந்தச்சிவ
மன்றிச் சக்தியில்லை"

— சிவஞான சித்தியார்.

"சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதற்பொருள்"

— திருவிளையாடற் புராணம்.

"சிவமெனும் பொருளுமாதி சக்தியொடு
சேரினைத் தொழிலும் வல்லதாம்
இவள் பிரிந்திடினியங்குதற்கு
மரிதரிதென மறையியம்பும்"

* * * — சௌந்தரியலஹரி.

---

"கலகத்தீயை ஊட்டுவோன், அதற்கே எரிகொள்ளியாகி, இறந்தொழிவான்."

" கண்ணுதலி யோகிருப்பக் காம
 னின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவாதி மெலிந்தமை
 யோரார் மால்தான்
எண்ணிவேண் மதனைபேவ வெரிவிழித்
 திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப்
 பேரின்ப மளித்த தோரார் "

— சிவஞான சித்தியார்.

" ஆதரித்த முதிர்கோல் தோய்த்த
வவயுவமமைக் குந்தன்மை
யாதெனத் திகைக்கு மல்லான்
மதனற்கு மெழுத வொண்ணு "

— பெரிய புராணம்.

" நல்ல சிவ யோகரையும்
 போகியரா யாக்கவல்ல

---

" அழியாத கீர்த்தியை விரும்புகிறவன், தர்மம் என்னும் பெயரைக்கேட்ட மாத்திரம், மயங்கிவிடலாகாது. தர்மம் இன்னதெனச் சோதித்தல் வேண்டும். "

நஞ்சக் கண்ணின்
வல்லமையை சொல்லு முலைவஞ்சியரின்
மிஞ்சுபடு வலையிற்சிக்கி" என்பதற்கிணங்க
போகியா யிருந் துயிர்க்குப்
போகத்தை அளித்த வோரார்
யோகியாய் யோகமுத்தி யுதவுவது யோரார்.
— சிவஞான சித்தியார்.

ஆண்டம், ஆண் பெண்ணாக அமைந்திருத்தல் போல, உலக சிருட்டியிலடங்கிய எழுவகைப் பிறவி எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளும, ஆண் பெண் வடிவமாகச் சிருஷ்டிக்கப் பட்டுள்ளன. உடற் கூற்று சாஸ்திரத்தின்படி, ஜீவராசிகளின் சரீரத்தின் இடது பக்கம் தண்மை நாடியும், வலதுபக்கம் வெம்மை நாடியும் ஓடுகின்றன. யோக சாஸ்திரங்களில் தண்மையை சந்திரகலை யென்றும், வெம்மையை சூரியகலை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விரு நாடியும் சமமாக நடக்கும் பக்ஷத்தில், மக்களுக்குத் துன்ப மொன்றில்லை.

---

" ஒழுக்கம் ஒன்றே, மெய்யுணர்வுக்கும் உயர் பதவிக்கும் மார்க்கமாகும். "

"அச்சமு நாணுமடனு முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப",
— தொல் காப்பியம்.

"ஈறிலாதவ னொருத்தியே யைந்தொழிலியற்ற
வேறு வேறு பேர் பெற்றென"

"மாறு மதியும் ஆதித்தனும் மாறின்றித்
தாறு படாமல் தண்டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறுபடா இன்பம் பார்மிசைப் பொங்குமே."
— திருமந்திரம்.

அண்ட பிண்டங்கள்யாவும் ஆண் பெண் வடிவாயிருத்தலை நிரூபிந்தற் பொருட்டுக் கடவுளும், ஒரு பாதி ஆணும், மற்றொருபாதி பெண்ணுமாய அர்த்தநாரீஸ்வர மூர்த்தியாய் அவதரித்து நிற்கிறார். இது பற்றியே நமது முன்னோர்கள் கடவுளை "அம்மை அப்பன்" என்று தோத்திரிக்கிருக்கிறார்கள்.

---

"ஒவ்வொருவனது அறிவுக்கு நியாயமாகப்பட்டது தான் நியாயம். அதற்கு விரோதமானது அநியாயம்."

" இல்லாளகத்திருக்க இல்லா தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். " — மூதுரை.

" இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை "
— திருக்குறள்.

உலகத்திலே கிருஹஸ்தாஸ்ரமத்தை அநுஷ்டிக்கும் ஒவ்வொருவருக்கும் இல்லாள் அவசியம் வேண்டற்பாலது. மனைவியில்லாத குடும்பம் மாக்ஷிமை அடைகிறதில்லை யென்பது அநுபவம். இல்லாளைக் குடும்பத் தெய்வமாகப் பாவிக்க வேண்டுமே தவிர காம வேட்கை தணிக்கும் யந்திரமாகவும், அடுப்பூதி சமைத்துப் போடும் வேலையாளென்றும், மதிப்பது அறியாமையாகும். குடும்பக் கொடுமைகளைப் பொறுத்தல் - உள்ளதை மற்றவர்க்கீந்து மகிழ்தல் - தனக்கென்வாழாது பின்னுலகாக்கும் உயிர் கட்கென வாழ்

" வைவார்க்கு இன்பமில்லை பொறுத்தார்க்குத் துன்பமில்லை. "

தல் - விருந்தோம்பல் - ஏழைகட்குதவுதல் - துறந்தார்க்கும் - துவ்வாதவர்க்கும் - இறந்தார்க்கும் செய்யவேண்டிய கடமையைச் செய்தல் முதலிய அரிய பெரிய குணங்களையுடையவள் இல்லாளெனப்படுவாள். ஆண்மகனும் இல்லாளோடு மனமொருமித்து வாழ்ந்து,கவுரவத்தோடு குடும்ப வாழ்க்கையை நடத்தும் பக்ஷத்தில், அவற்றாலாகுமின்பம் சொர்க்க போகத்துக்குச் சமானமாகும். அதனாலேயே, இப்பிறவியிலடைய வேண்டிய சுகத்தோடு பேரின்பத்தையும் அடையலாம். இது பற்றி யன்றோ "இல்லற மல்லது நல்லற மன்று" என்றார் ஔவைக் கிழவியார்.

பெண்களை அழகுத் தெய்வமென்றும், குடும்பத் தெய்வமென்றும் பெரியோர்கள் சொல்வதற்கிணைய, அவர்களிடம் ஓர் வகை வசீகரத் தன்மையிருக்கிறதென்பதை, கல்லார் முதல் கற்றோரீறாகவுள்ள சகலரும் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது.

---

"மூடத்தனமாக முன்பின் முரண்படாமை ஒன்றையே நாடுதல், சிற்றறிவினையுடையாரைப் பிடித்திருக்கும் ஓர் பேய்."

"நடந்தா லொருகன்னி மாராளசேசரி
நாட்டிற் கொங்கைக்
குடந்தானசைய வியலாயது கண்டு
கொற்றவருந்
தொடர்ந்தார் சந்யாசிகள் யோகம்விட்டார்
சுத்த சைவ ரெல்லாம்
மடந்தானடைத்துச் சிவபூஜையும்
கட்டி வைத்தனரே."

பெண்களது நடையுடை பாவனைகளும், ஆடையாபரணங்களும், ஆண் மக்கள் மனதை வசீகரப்படுத்தித் துன்புறச் செய்கின்றன வென்பதிற் சந்தேகமில்லை. தவிர, கவிமான்கள் பலர் பெண் மக்களைப் புகழ்ந்துரைக்கும் வர்ணனைகளைக் கேட்கும் ஆண் மக்களது மனம் கரைந்துருகாமல், வேறு என்ன செய்யும்? உற்று நோக்கும் விவேகிகளுக்கன்றி, ஏனையோர்களுக்கு மனம் கட்டுப்படச் சாத்தியமில்லை.

---

"உனது அறிவின் நேர்மையைப் பாதுகாத்துக் கொள்வது தான், எல்லாவற்றிலும் பெரிய தருமம். உனக்குள்ளே நீ நிஷ்களங்கமாக இருப்பாயானால், உலகம் உன்னை நாடும்."

“புன்னகையால் கைகள்புரள்
வதனுல் நாணத்தால்
மன்னு மச்சத்தால்முகத்தால் வாட்
கண்ணுல் - இன்மொழியால்
போலிவெறுப்பொயிலால்பூவையர்கள் ஆடவரை
மாலியற்றிப் பிணிப்பார் மற்று.”

“அரைக்கண் கடைக்கண் அரும்பார்வை பைய
உரைக்குமொழி நாணமுயன்று - கிளைக்கின்ற
புன்னகை ஓய்யாரம் பொருந்து நடைமாதர்க்குப்
பொன்னகை போலுள்ள பொருள்.”

“கருவிழியை மேலேற்றிக் காட்டுவாள் ஓர் சார்
உருவுளைந்து வீழ்ந்திடுவாள் ஓர்சார்—திருமடந்தை
ஒக்குமிவள் நாணல் ஒரு சாரார் தலைவளைப்பாள்
மிக்க ஒயில் ஓர் சார் விளக்குவாள்-தக்கமுகச்
செந்தாமரையைத் தெரிவிப்பாள் ஓர் சார் கண்
அந்தாமரை நீலமா மென்று - சந்தேகம்

---

“பிறர் துன்பங்களை அடையும்போது, அவர்களுக்கு நம்மாலான உதவி செய்யவேண்டியது மனித ஜென்மத்தின் தர்மம்.”

கொள்ளத்திருப்புவாள் கோலம் இது வென்று
விள்ளப் புகுவதெல்லாம் வீண்."

"மதிமண்டல முகமும் வாரிச்சேர் கண்ணும்
மதி பொன்போல் மேனி வனப்பும்-சுதிவண்டை
வெல்லும் அளகமும் வேழ நிகர் மார்பகமும்
ஒல்லும் இனிய உரைவழக்கும்—நல்ல
செயற்கையுள்ள இந்தச்சேயிழைக்கு நீங்கா
இயற்கையாயுள்ள எழில்."

"முகத்திற் சிறுநகைப்பு மொய்கலக வாட்கண
சுகத்திற் சிறந்த நீஞ் சொற்கள் - உகக்குமிடை
அங்கைப்பிடி நடையிங் காமிலற்றில் யாது சிறு
மங்கைக்கீ யாது வனப்பு."

—ஸ்ரீ பர்த்ருஹரி சிங்கார சதகம்.

பெண் மக்கள் அநேகர் புன் சிரிப்பாலும், கை களைப் புரட்டுவதனுலும், கூச்சத்தாலும், பயத்தாலும், முக நயத்தாலும், வாள் போன்ற கடைக்கண் பார் வையாலும், நயமான வார்த்தைகளாலும், போலி

"நாளைக்குக் கிடைக்கிற பலாப்பழத்தைவிட, இன்றைக்குக் கிடைக்கும் களாப்பழமே மேல்."

வெறுப்பான சொற்களாலும், சொகுசாலும் ஆண் மக்களை மயக்கித் தன்வசப்படுத்துவார்கள். மேலும், கடைக்கண்ணால் அரைக்கண் பார்வையால், இனிய ஈன சுரத்தோடு பேசுதலால், நாணத்தோடு கூடிய புன்னகையால், சிங்காரமான குலுக்கு நடையால், ஆடவர் மயக்குவார்கள். தவிர, பெண்கள் தம் கண் கறுப்பு விழியை மேலேற்றிக் காட்டுவாள்; துவண்டு வீழ்வது போல் பாசாங்கு செய்வாள்; வெட்கத்தால் தலை குனிவாள். மிக ஒயிலால் தன் சொகுசைக் காட்டுவாள்; தன் செந்தாமரை முகத்தைக் காட்டுவாள். தன் கண்களை நீலமலரோ வென்று பிறர் சந்தேகிக்கும்படித் திருப்புவாள். இவை யாவும் பெண்களது கோலமாகும். ஸ்திரீகளுக்கு இயற்கையாயுள்ள அலங்காரங்கள் சந்திர பிம்பம் போன்ற முகம்; தாமரை மலர் போன்ற கண்கள்; தங்கம் போன்ற சரீரம்; வண்டை வெல்லும் அழகிய கறுத்த கூந்தல்; யானை மத்தகம் போன்ற மார்பு

---

“ சிற்றின்பத்தில் எத்தனைகாலம் உழன்றாலும், அதன் ஆசை ஒழிவதில்லை; மேலு மேலும் அதில்மனம் சென்று கொண்டேயிருக்கும். ”

கள்; இனிய மதுரமான மொழிகள்; புன்னகை பூத்த முகம்; கலகவிழிகள்; காதுக்கினிய மொழிகள்; பெண் யானை போன்ற ஒய்யார நடை; இவையாவும் இளம் வயதுடைய பெண்களுக்கு அழகினைச் செய்யும். இம் மட்டா? காற்சிலம்பு கல்கல்லென அசைய, கைவளை கள் சில்சில்லெனச் சப்திக்க, இடையிலணிந்த மேக லாபரணம் பளிர் பளீரென்று மின்ன, மார்பிணிடமாக வுள்ள முத்து மாலைகள் மங்கையர்கள் ஸ்தன பாரங்க ளிற் புரள, குங்குமச்சாந்து குமுகுமு வென்றுமணக்க, அன்ன நடைநடந்து செல்லும் மங்கையரைக் கண் டால், முற்றத்துறந்த ஞானியும் பெண்கள் பின்னே சென்று, அவர்களது வேலையாட்களைப்போல், ஊழியஞ் செய்வார்க ளென்பதிற் நடையில்லை. இத்தகை பெண் களை மெல்லியவள் என்றும், பேதைகளென்றும், பெண் தெய்வ மென்றும், கல்விமான்கள் கூறுவார்கள். இத்தகைய உத்தம குணப் பெண்களைப் புருஷர்கள் தங்கள் இளம்பிராயத்தில், அவரவர் மதச்சடங்கின்படி,

---

" உணர உணருமுடையோரைப் புணரப்புணரு மாமின்பம்."

விவாகஞ்செய்து கொண்டு, கிருஹஸ்தாஸ்ரம தருமத்தை நடத்தி, அப்பெண்ணரசியோடு சிற்றின்ப சுகம் அநுபவித்து, புத்ரோத் பத்தி பெற்று, சரியை கிரியை யாதிகள் கருமங்கள் மூலமாக, ஆத்ம சாந்தி அடைய வேண்டு மென்பது ஆன்றோர்களது கட்டளை; இதுவே வேதாகம சம்மதம்.

" பெண்கள் உடம் பென்னும் பெருங்
காட்டில் மார் பென்னும்
கண்ண கன்றமேடு கலந்
திருக்கும் - உண்ணிலவி
மன்மதனெனு கள்வன் மகிழ்ந்
திருக்கின்றான் மனமே!
நின்னைவவிப்பான்
போகேல் நீ. "

" மணிமந்த் ரௌஷததத்தில் மகறுப்பெண் மோகம்
தணியா மயக்கந்தருமே—பிணிபோலக்
கால் கைகள் சோர இருகண் சுழலச் சித்தத்தில்
மால் பெருக்குமில்லை யொரு மாற்று. "

---

" எவரும் தன் சுபாவத்தை மீறி விட முடியாது. "

காம வெறி கொண்ட புருஷர்கள் இவ்வுண்மை தெரியாமல், பெண்களைக்காம யந்திரமாக மதித்து, அல்லும் பகலும் அவர்களது மோக வலையிற் சிக்கி உழல்வதினால், அவர்கள் அடைய வேண்டிய சுகம் பெருந்துக்கமாய் முடிகிறது. அவர்கள் இம்மையிலடைய வேண்டிய பல சுகங்களை இழந்து, மறுமையிலும் பெருந்துக்கத்தை அடைவார்கள் என்பது நிச்சயம்.

தற்கால நாகரீகத்தவர்கள் பெண்களைத் தெய்வமாகப் பாவித்து, அவர்களுக்குச் சர்வ சுதந்தரத்தைக் கொடுத்து, அவர்களது ஊழியர்களாகப் புருஷன்மார்கள் நடப்பது விபரீத பலனையே கொடுக்கும் என்பதை அநுபவத்தில் அறியலாம்.

"காதல் ஒருவனைக் கைபிடித்தே யவன்
காரியம் யாவிலும் கை கொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி."

— சி. சு. பாரதியார்.

---

"கற்பும் நல்லொழுக்கமு மில்லா பெண்கள் அழகு, மணமில்லா மலர் போன்றதாகும்."

## ஐந்தாவது அத்தியாயம்.

# சதிபதிகள் மதனலீலா இன்ப தத்துவம்.

" முகத்துக்கண்கள் முறுக்கித் திருத்தியே
அகத்துக்கண்ணை அறுத்துப் பிளந்த பின்
வகுத்த ஜோதி மணிவிளக் கென்னுள்ளே
தொகுத்துப்பார்க்கச்சுகம் பெற்றாய் நெஞ்சமே."

மனிதர்கள் தங்கள் முகத்திலுள்ள இரண்டு கண்களையும் அகக்கண்ணாகிய மனக்கண்ணால் பார்த்து, இல்லற வாசிகளுக்குரிய உபதேச மந்திரத்தை ஓதி, பிராண வாயுவாகிய சுவாசத்தை உள்ளே இழுக்கவும், மேலே வாங்கவும் பழக்கம் செய்து வருவது, அவர்கள் கடமையாகும். ஆனால், இப்பழக்கம் மனிதர்களுக்கு மிக்க அருமையானது. ஆயினும், இவ்வப்பியாசத்தை யோகப் பழக்கமுள்ள மஹாத்மாக்களை அடுத்து

---

" எத்தகைய நன்மை பயப்பனவாயினும், வருவதை நினைக்கப்படாது."

இயன்ற மட்டில் பழக்கம் செய்து வருதல் வேண்டும். இவ்வப்பியாசம், சரீரத்துக்கு ஆதாரமாயிருப்பதோடு, ஜீவிய காலத்தையும் அதிகப்படுத்தும்.

மனிதர்கள் எப்போதும் அரிய பெரிய தவங்கள் செய்து, தன்னையும் தனக்காதாரத்தலைவனையும் அறிந்து சரீரத்தை பரிசுத்த மாக்குவதற்கு, மலக்கூத்து மக்கர என்று சொல்லப்படா நின்ற நாசி வழியாயிருக்கிற தென்று யோக சாஸ்திரங்கள் கூறும். இவ்வுண்மை யினை யோகாப்பியாசமுள்ள மெய்ஞ்ஞான நிஷ்டர்கள் அநுபவித்ததாகச் சொல்லுகிறார்கள். மலக்கூத்து மக்கர என்கிற பழக்கத்தால் பிராண வாயுவை உள்ளே இழுத்து * மூலாதாரம் - சுவாதிஷ்டானம் - மணி பூரகம் - அநாதகம் - விசுத்தி - ஆஞ்ஞை என்னும் ஆறு

* ஜீவோற்பத்தி சிந்தாமணி - தத்துவதீபிகை யிற் விரிவாக காண்க.

" நம்முடைய ஜீவியகாலத்தில், நாம செய்யும் ஒவ்வொரு காரியத்தையும், எல்லாம்வல்ல இறைவன் நமக்குத்தெரியாமலே, உள்ளிருந்து பார்த்துக்கொண் டிருக்கிறார். "

ஸ்தலங்களில், முறையே பக்குவமாய் நிறுத்தி, பின்னர் மேல் எழுப்பி, மனதை நிலைக்கச் செய்தலே தவத்துக் கெல்லாம் மேலான தவ மென்று சொல்லப் பட்டிருக்கிறது. இவ்வப்பியாசத்தினால், பிராண வாயுவானது ஆறு தாரத்துக்கு மேலேற்றினால், அந்தச் சுவாசத்தின் கடோமான அக்கினிச் சூடானது, சிரசிலுள்ள மூளையை வளரச் செய்யும். ஆனால், இது சரீரத்தைப் போஷிக்க முடியாத ஏழைகட்கும், வயது சென்றவர்களுக்கும் ஆபத்து ஏற்படும். ஆதலால், சரீர பலம்மனோதிடம் அறிந்து ஆரம்பத்தில் குருநாதன் முன்னிலையில, இதை அப்பியசிக்க வேண்டும்.

பெண் போகம் விரும்பும் ஆடவர்கள், மேலே சொல்லிய அப்பியாசம் செய்யும்போது, பிராணவாயுவானது,நாசிமூளை-உண்ணாவின் புழையாகிய இருதலங்கட்கு மேற் போகாமல் மெதுவாகச் சமனப் படுத்த வேண்டும். என்னெனில், சரீரம் அதிகம் சூடாகும்.

---

"பெண்களைக் காமஇச்சையுடன் பார்க்கும் போதே, விவாக ஆசை உண்டாகிறது."

— ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

அக்கினிச் சுவாலையாக வருகின்ற சுவாச உஷ்ணமானது, விந்துவுக்கிடமாகிய பாத மட்டிற் சென்று, விந்தை இளகச் செய்து, சிரசு அளவில் முட்டி, அங்கிருந்து, நாத மென்கிற மணியோடு கலந்து, இராஜாவாகிய நாதமும், விந்துவாகிய மந்திரியும் ஒன்று கூடிப் புரடி வாசலால் வெளியாகி, வீணாதண்டின் (முதுகெலும்பு) துவார வழியாக வந்து, அம்முதுகின் கீழுள்ள குளத்தில் (பள்ளத்தில்) வந்து சேரும். அங்கு வந்தபோது, அது எண்ணமாகிய தடையை முறித்துக் கொண்டு, தின்னிக்குத்தியாரும் மூலாதார மென்கிற ஆண்குறித் துவார வழியாய் வெளியில் குதித்துப் பாயும். அது சரீர பலத்தையும் ஆயுள் பலத்தையும் குறைக்கச் செய்யும்; இதுதான், மாயா விலாச மோக வாரிதியிலாழ்த்திடும் பாழான சிற்றிடை மடந்தையர்கள் சிற்றின்பத்திலாழ்ந்த இல்லற வாழ்க்கையிலீடுபட்டுள்ள ஆடவர்கள் ஜெனன மரணத்துக் காளாகின்றனர் என்பது சர்வ சாதாரணமாயுள்ளது.

---

"மனிதன் தன் யோக்கியதையை நன்றாகத் தெரிந்து கொண்டு, உலகில் காலைபோன்று உலாவலாம்."

அவ்வாறு, அதிக துன்பத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கிக் கொள்ளாமல், தன்னுடைய சமத்துவ குணமும் அறிவும் படைத்த பெண்களோடு, தம் புருஷன் போகம் செய்ய முற்படும்போது, அந்த ஸ்திரீயை பலவித மதன லீலைகளால் உற்சாகப்படுத்தி, அவளது காம நீரை முதலில் வெளியாக்கிப் பின்னர் இவனது காம நீரை நிதானமாக விடுதல் உத்தம மென்று, மதன நூலாசிரியர்கள் கருத்தாகும்.

இவ் வப்பியாசம் சுலபமான தல்ல. வீணாதண்டத்தின் கீழுள்ள பள்ளத்தில், நாதம் வந்து தங்கும்போது, விவேகியானவன் அதன் போக்கிற் செல்ல விடாமல், மனதைக் காற்றில்லாக் கடலில் மிதக்கும் படகு போலாக்கி, அப்படகை யோட்டும் சுக்கான் போன்ற

☞ "கொக்கோக வைபவம் 3-பாகமும்"
குடும்ப வாழ்க்கையில் ஆத்ம லாபத்தை அடைவதற்கும், இல்லற இன்ப லீலாசுகத்தை அநுபவித்துப் புத்திர புத்திரிகளைப்பெற்று, ஒற்றுமையாக வாழ்வதற்குமுரிய மதன சாஸ்திர நூற்தனித்தனி பாகம் ரூபா 2—8—0 3-பாகம் ஒன்றாக விலை ரூபா 5-0-0

தனது ஆண் குறியைத் தளராதாக்கிப் பெண்ணின் காமநீர் கழன்ற பின், ஆடவன் தன் போகத்தை விடாமலிழுத்துக் கொண்டாலும் சரி, சந்தான விருத்தியை உத்தேசித்து விட்டாலும் சரி, எல்லாம் நன்மையேயாகும்.

இத்தகைய அப்பியாசியே மதன நூலை வாசித்து, அதன் (தத்துவ) உட்பொருளை அறிய வேண்டும். கேவலம் பெண்களைச்சிற்றின்ப யந்திரமாகக் காலதேச வர்த்தமான மில்லாமல் அநுபவிப்பவன், சர்வ ரோகத் துக்காளாவதுடன், சந்தான விருத்தி யில்லாமலும் கஷ்டப்படுவான். இது ஆன்றோர்கள் வாக்கு.

" தத்துவந் தொண்ணூற்றாறுங் தாழ்விலாவாயுபத்தும்
மெத்தென நாடிபத்தும் மெய்யுள்ளே ஆறுதாரஞ் [ம்
சுத்தமாங்காரண நான்குந்தோற்றுமண்டலங்கள்மூன்று
இத்தனை யறிய வல்லா ரிறையவ ராகுந்தானே."

---

" கன்யாவாரதே ரூபம் - மாதாவித்தம் - பிதாஸ்ருதம் - பாந்தவான்குலம், இச்சந்தியக்வான் இதரே ஜனா: "

## ஆருவது அத்தியாயம்.

## (சதி) ஸ்திரீ புருஷர் (பதி) களுக்கு புணர்ச்சிக்குரிய லக்ஷணங்கள்; சுபநாள்கள்.

" மங்கைதான் (சதி) முன்னே நோக்க
    மன்னவன் (பதி) பின்னே நோக்க
சங்கியாலுற்ற நோக்கில்
    தையலுக்கிச்சை யுண்டாம்
இங்கிவள் விடாம நோக்கி
    லேந்திழைக் கிச்சை யுண்டாம்
தங்குவார் சதா (சர்வ) காலத்தும்
    தயவுடன் இருக்கு மென்றே "
" நோக்கும் போதொக்க நோக்கி
    மாரிப்பன் நோக்குமாகில்
நிற்கவும் சென்றிடாதே
    சிறிது நாட்சென்று சேருவார்

---

" மேனாட்டாருக்கு மெட்டீரியல் (Material) உலகம் பிரத்தியக்ஷமாகத் தோன்றுவதுபோல், இந்தியர்களுக்கு மதக்கொள்கை (வாழ்க்கை ஞானம்) பிரத்தியக்ஷமாகத் தோன்றுகிறது."— ஸ்வாமி விவேகாநந்தர்.

சாக்கை நோக்காக நோக்கும்
கன்னியை (பெண்) க் கருத வேண்டாம்
பார்க்கும்போ தொக்க பார்க்கிற்
பய நுண்டென்றறிய லாமே "

" மூர்த்தநூன் முறையினலே
மொழிந்தஇ வண்ணமே தான்
சிந்தனை கெடாத வண்ணஞ்
சேயிழை (பெண்) தன்னை யன்பாய்
அந்தநாள் இருபத் தேழும்
அளவுடன் புணரும் போது
இந்தநூல் முறையே யாகில்
யாவரும் வெல்ல மாட்டார் "

" வடிவுடை இடையினாளை
வகிப்பவன் மதுரம் பேசி
அடியினை வருடிநீவி
அங்கையார் கண்ணி லொற்றி

---

" ஒருவன் தான் பழகும் சகவாசத்துக்குத்தக்க குண விசேஷங்களை அடைகிறான். மற்றொருவன் தன் குண விசேஷங்களுக்குத்தக்க சகவாசத்தையே தேடுகிறான். ' — ஸ்ரீராமகிருஷ்ணர்.

இடியவர் விச்சை செய்து
மெய் சொல்லிப் புகழ்ந்து பேசி
கடியதாய்ப் புணர வேண்டும்
கசிந்த தெய்வத்தினாலே ”

“ மொய்குழல் கோதிக் கோதி
உச்சி மோந்து பைய தாள்கள்
மெய் தோறும் சுவைத்து விட்டு
விடாநின்ற போது நீனவ்
கையினால் உருவ மெல்லாம்
களிப்புட னின்ப மூட்டி
தையலார் கமலத் தன்னை
அங்கையாற் றடவ வென்றார். ”

“ கருங்குழல் கோதிக் கோதிக்
தூற்றிவிட் டுச்சிமோந்து
விரிநுதல் உந்தியல் குல்
விதம்பட சுவைத்து விட்டு
பெருக் கென மொழிகள் கூறி
பேதைவாய் அமுத முண்டு
அருகினில் அணைத்துக் கொண்டு
அன்புடன் புணர்க வென்று ”

---

“ ஜீவர்களை ஆக்குவதும், இரக்ஷிப்பதும், அழிப்பதும், எல்லாம் கடவுள் செயல். ”

" சருக்கரைக் குட்டி யாகும்
அவள் தலை தன்மேல் வைத்து
சிக்கன வல்குல் தட்டித்
சேர்ந்துடை விருடக் கட்டி
மைக்குழல் தன்னைக் கோதி
வாய முதத்தை யுண்டு
உக்கிரமாகக் கட்டி
உரக்கவே புணர்க வென்று "

" குவிந்தவேள் கண்ணுளாகி
கருங்குழல் சொய் தாய் நீண்டு
குவிந்தவெண் சிலையாளாகிற்
கொடியிடையணுகி நோக்கி

---

" கொக்கோக வைபவம் 1-2-3-பாகம்.

பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய இந்நூலின் அசல் கொக்கோக விஷயங்களேயும், அதற்குரித்தான மேற்கோள் உதாரண செய்யுட்கள், பெரியோர் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கிறது. சிவராஜயோகி அவர்கள் நல்லபடிப்பாளி; அநுபவி; அவருடைய நூலை ஒவ்வொரு இல்லறத்தாரும் வாங்கி வாசித்தல் நலமாகும், புத்தகம் அழகியமுறையில்உள்ளது." –கணேசன்
தனித்தனி பாகம் ரூ 2-8-0 மூன்று பாகம் விலை
ரூபா 5—0—0

சிவந்த வளொளி வாளாகும்
செய் நல்ல வழி தானுகும்
உவந்தவர்க்குள்ள முள்ளம்
அவள் பொருள் கொடுத்துச் சேர்வர் ''

" நேசமாகக் கவுளை நெறித்துத் தன்
னெயிற்றம்பலம் வாயின் வழங்குவையேல்
பூசுமேனிக் குழைந்து புளகெழப்
பாசிலச் சுருள்பாதி யருந்தியே. ''

" மதமொழிப் பலதும் பேசி
மனதுக் கேற்ற வண்ணம்
மிதவியைக் கரத்தால் - பல்லால்
விரைத்துச் சும்பனங்கள் செய்து
விதிநுதல் மார்புக் கேற்றி
வரியர்பால் குலுக்கி
இதவிபை யங்கை கொண்டு
இனிதுடன் வகிக்க வென்று ''

" துன்பம் வந்தபோது வருத்தமும், சுகம் வந்த போதுசந்தோஷமும் அடையாமல், சுகதுக்கங்களுக்குச் சாக்ஷியாய், எல்லாம் கடவுள் திருவருளென்று நினைப்பவன் விவேகியாவான். ''

" மூலை முகங்குழைய மோந்து
முத்த வாயமுத முண்டு
கலைமதி நீமத்தோடு
பாகுதன் கரத்தா லூட்டி
இலையது கொடுப்பான் போல
வில்லிதழ்க் கனியப் பற்றிப்
புல்லியை திருத்திச் சேர்வர்
மதன நூல் புலமை யோர்கள் "

" பரந்த ஜாதி குணம் தெய்வ பப்யிற்சி
சேஷியை சுபாவமின்றித் தரவிகள்
கொள்கை இங்கிதமே முதலாங் குதியாததால்
குரங்குரு நரும் மாதளங் கனியை
உண்டு சாரங் குளிப்பதுவே "

---

" தினம் தினம் அழிவில்லாத இன்பலீலா ஆனந் தத்தைச் சதிபதிகள் அடைய ஏன் முயற்சிக்ககூடாது? இதோ பண்டிட் நமசிவாய ராஜயோகி எழுதிய இன்ப சாகர நூல்கள் - கொக்கோகவைபவம் 3-பாகம் உள்ளன இன்றே வாங்குங்கள்; வாசியுங்கள்; இன்பசுகத்தை அநுபவியுங்கள். "

" மிக்கதன் சுகத்தைப் பார்த்து மெல்லியர்தனக்கு முந்தில்
குக்குடம் போலப் போகம் போக்கிடும் குறியிலானைத்
தக்கமேன் வேள்வி மாதர் தழுவிட அருவருத்து
மங்கையின் சுக விரோதம் மரமென வெண்ணுவாளே "

திங்களிற் றிங்கண் முன்னாள்
ஜென்ம நாள் அமாவாசை
மங் கயர் மூன்று நாளும்
வரும் பிறை யுதித்த நாளும்
பொங்கிய ஏகாதசிப் பூவையைப்
புணர்வா ராகில்
அங்கமும் கறுத்து மேனி
ஆருயிர் இழப்பர் தாமே. "

புதவாரம்—சுக்கிர (வெள்ளிக்கிழமை) வாரம்.

" வெள்ளியிற் சேரு மாகில்
விளங்கிய உள்ளங் கூடும்
கள்ளவிழ் கோதை தானும்
கணத்துடன் கூடி வாழும்

---

" தன் குற்றத்தைத்தான் தெரிந்து, அதனைத் திருத்திக்கொள்வது, அறிவாளிகளுக்கு அழகு ?"

ஒள்ளிய புதனிற் சேரில்,
    ஒருமையாய் இனிது வாழும்
தெள்ளிய சீர்ய தன்று
    திடமுடனு ரைத்தவாறே"

சோம (திங்கட்கிழமை) வாரம்

"திங்களிற் சேருமாகில்
    சிறந்தோர் மனத் தெளி வுண்டாம்
மங்கையர் மகிழ்ந்து மெங்மேல்
    மன்மதன் (லீலை) மடியில் வீழும்
அங்கையா லெடுத்து மெள்ள
    அமுத வாய் முத்த முண்டு
கொங்கையைத் தடவி (மதன) இன்பம்
    கொடுத்தவ ளின்பங் கொள்வார்"

---

"மனிதர்களுக்குக்கஷ்டம், எவ்வாறு தாம் நினையாமல் வருகிறதோ, அவ்வாறே சுகமும் நினையாமல் வருகிறது."

சனிவாரம் — மங்களவாரம் (செவ்வாய்க்கிழமை)
ஆதிவாரம் (ஞாயிற்றுக்கிழமை)

"தயவிடும் பதியுண்டாகும்
சனியுடன் சேரும்போது
துயருடன் பிணியுண்டாகும்
மூத்ததோர் வாரம் செவ்வாய்
அயர் வரு மிரக்க மில்லை
அனைத்துயிருந்தி வீழும்
அயர் விடு குணங்களெல்லாம்
ஆதி வாரந்தானே"

குரு (வியாழக்கிழமை) வாரம்.

"விற்பொரு நுதலினாளை
வியாழநாள் வியக்கும்போது
இப்புருஷன் தனக்கின்பம்
மேன் மேலுண்டாம்

" ஆண் - பெண் இருவரும் சுக துக்கங்களைச் சமமாக அநுபவிப்பதற்காகவே, இந்த ஜென்மம் கிடைத்திருக்கிறது."

நட்பிருவருக்கு மொத்த
நாள் நலமறிந்து கொண்டு
கைப்புநாள் வாரா வண்ணங்
கண்டு நீ கருதிக் கொள்வீர் "

---

## ஏழாவது அத்தியாயம்.

# நற்குணப் பெண்டிர்
# கிருஹ லக்ஷ்மி யாவள்.

" செப்பு முகம் கமலம் திங்கள்
ஒப்பரிய கத்தரிகை யூசலாம்
மப்புநிலை கண்ணாடி சாணைக்க போலம்
குமிழ்ச் சாதியெண்ணாசி கைக்குவமையே "

" வில்லன புருவங் கண்கள் வேலனக் கூர்மையாகும்
கல்லென நெஞ்சாம் வல்லிகாயமே சிவந் திருக்கும்
மெல்லென நடையு மெத் தெனக் கீழே நோக்கும்
மில்லையாயிடையு முற்ற யிவள் தெய்வப்பெண்ணதாமே "

---

" காதலுடையார் ஆணாயினும், பெண்ணாயினும் கண்ணுறக்கம் வாராது. "

" அண்ணூர்ந்து முகத்தைப் பார்த்து
அடுத்து பின் நோக்கிடாமல்
மண்ணுறப் பார்த்து நின்றால்
மானிட மடந்தை யாகும்
கண்ணாலே காலைப் பார்த்து
கதுப்பிப் பின் முகத்தை நோக்கில்
பெண்ணாகுமிவளே என்று
பேசினார் மதன நூல்வல்லோர் "

" சத்தியவசந முள்ளாள்
தம்பிமார் தமய னுள்ளாள்
உத்தம குலத்தாள் நல்ல
உத்தமப் பகுதி யாளும்
புத்தியில் விசால முள்ளாள்
புகர்ந்துற்றார் பெற்றார்க்குள்ளாள்
உத்தார மேன்மையுள்ளாள்
ஒருவற்கும் இச்சை வையாள் "

ரோணுணுபந்தத்தில் ஒருவனுக்கு மனைவி - மக்கள் - வீடு - உத்தியோகம் முதலிய கிடைக்கும். இல்

---

" காமவெறி கொண்டார்க்கு, முத்தி நெறியில் மனம் செல்லாது."

வாழ்க்கைக்குரிய மனைவி நற்குண நற்செய்கை யுடையவளாயிருந்தால், அக்குடும்பத்தில் வறுமையிருந்தாலும் ஸ்ரீமான் வீட்டுக்குடி வாழ்க்கைபோல் பிரகாசிக்கும். இத்தகைய மனைவியைக் கிருக லக்ஷ்மியாக மதித்து, உலகம் புகழும். குடும்பத்தில் எல்லாக்காரியங்களையும் மனைவி, தானே நடத்தும்படியான திறமை அதிசயிக்கத்தக்கதாய் அமைந்திருக்கக் காணலாம். அவர்கள் அப்பொறுப்பை ஒரு பாரமாக நினைக்க மாட்டார்கள்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு." — திருக்குறள்.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களை உள்ளக்களிப்போடு வரவேற்று, அவர்கள் மனம் கோணாமல், அறுசுவை உண்டி அமைத்துப்போற்றுதல் வேண்டும். அத்தகைய பெண், வந்த விருந்தினர்களுக்கு உப்பிலாக் கூழிட்டாலும், அமுதமாக உண்பார்கள். சில குடும்பத்

"தனவந்தர்களிற் சில மாதர்கள் பார்வைக்குக்கற்புள்ளவராகவே காணப்படுவார்கள். அவர்கள் நடவடிக்கை வியபிசாரத்திலீடுபட்டதாகவே இருக்கும். இது நவீன நாகரீகத்தின் கொடுமையாகும்."

துப் பெண்கள், தங்கள் தாய் வர்க்கத்தார்-அவர்களைச் சார்ந்தபந்துக்கள் வந்தால், அவர்களுக்குச் சகல வித உபசாரங்கள் செய்து, தன் புருஷனது பந்து வர்க்கத்தார் வந்தால், அவர்களுக்கு வேண்டா வெறுப்போடு முகங்கோணி சிடுசிடுவென்று முணுமுணுத்துக்கொண்டே அன்னமிடுவதைக் காண்கிறோம். இவர்கள் குடும்பத்துக்கு எமனாகவே மதிக்கவேண்டும்.

குடும்பத்தில் தங்கள் மாமன் - மாமியார் - மைத்துனர் - மூத்தார் - நாத்தி முதலியவர்களிடம் அடக்கமொடுக்கமாக நடக்கவேண்டுவது அவர்களது கடமை. மாமன் - மாமி முதலியவர் சிறிது கடுமையானவர்களாயினும், அவர்களுக்குச் செய்யும் உபசாரங்கள், அவர்களது தீய குணத்தை மாற்றும். குடும்பத்துக்குக் கௌரவத்தை உண்டாக்கும். புருஷனுக்குப் பெருமை தரும். குடும்பத்தில் சுகாதார விதிப்படி சுத்தமாக வீட்டை வைத்திருக்கும் பக்ஷத்தில், அவ்வீட்டிலிலுள்ள ஸ்திரீ புருஷர்களும் சந்தோஷமா யிருப்பார்கள்.

---

"பெண் பித்தம் பிடித்தோர், பேய்போல் அலைவர்."

தன் கணவன் விஷயத்தில் நற்குணப் பெண்மணிகள் எவ்வித குடும்பக்கவலையையும் தெரிவிக்கமாட்டார்கள். புருஷன் உத்தியோகத்திலோ வியாபாரத்திலோ கஷ்டப் பட்டு அலேந்து திரிந்து வீட்டுக்கு வருகிற சிரமமே போது மென்று எண்ணி, குடும்ப பாரம் முழுமையும் தாங்களே ஏற்றுக்கொண்டு, நாயகனுக்கு வேண்டிய சகல உபசாரங்களையும் தாங்களே செய்து, அவன் மனம் குளிரச் செய்வார்கள். நாயகன் ஸ்நாநம் செய்து, பூஜை முடித்து, அன்னம் புசித்து, தாம்பூலம் தரித்து, சிரம பரிஹாரம் செய்து, வெளியே போகிற வரையும், மனைவி நாயகனருகிலிருந்து சர்வோபசாரம் செய்யவேண்டும். நாயகன் சாப்பிடும் சமயத்திலாவது, சிரம பரிஹாரம் செய்து கொள்ளும் சமயத்திலாவது, அரிசியில்லை-உப்பில்லை-மிளகாயில்லை - வண்ணான் சம்பளத்துக்கு வந்து போனான் - அடுத்த வீட்டுக்காரி இப்படிச்சொன்னாள்-எதிர்வீட்டுக்காரி அப்படிசொன்னால்-

---

"புருஷன் தன் மனைவியை காமயந்திரமாகவும், பிள்ளை பெறும் யந்திரமாகவும், சமையல் செய்யும் அடிமையாகவும் நினைத்தால், அக்குடும்பம் நோய் வாய்ப்பட்டுப் பல துன்பங்களை அடையும்."

என்கிற சங்கதிகளை நாயகனது செவியில் போட மாட்டார்கள். இத்தகைய மனைவியிடம் தாங்கள் சம்பாதிக்கும் பொருளைக் குடும்பச் செலவுக்குப் போதுமானதைக் கொடுத்துத்தான் யாதொரு விசாரமின்றி, நிம்மதியா யிருக்கவேண்டியது உத்தம புருஷனுடைய கடமை. நாயகியோ,புருஷன் கொடுத்த பணம் கொஞ்சமாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும், வீட்டுச் செலவுகளைக் கூடுமான வரை சிக்கனமாகச் செலவு செய்து, அவசர காலத்தில் உபயோகப் பட, சிறிது மிகுதியாக்கி வைத்தல் நற்குணப் பெண்டிர் லக்ஷணம்.

எத்தனையோ குடும்பங்களில் மாமி - நாத்தி, இவர்கள் செய்யும் கொடுமைகளால் நற்குணப்பெண்டிர்கள் கொடுமைகளைச் சகிக்க முடியாமல், வெளிக்குச் சொல்ல வெட்கபட்டு, தன்னைத்தானே நொந்து, மனம் புழுங்கிக் கஷ்டப் படுவதோடு, தற்கொலை செய்யவும் முன்னிற்கிறார்கள். இதனால் நாயகனுக்குக் கஷ்டமும்

---

"நம்மால் கூடுமான வரையும் எளிய வாழ்க்கையை நடத்த வேண்டும். ஆடம்பர வாழ்க்கையில் பின்னால் துன்பம் உண்டாகும்."

குடும்பத்துக்கு அகவுரவமும், இல்லறத்தில் கலகமும் உண்டாகிறது. இத்தகைய குடும்பத்திலுள்ள புருஷன் முன் ஜாக்கிரதையாக இருகக்வேண்டியது அவசியம்.

நற்குணப் பெண்டிருக்குத் தீக்குண புருஷனும், தீக்குணப் பெண்டிருக்கு நற்குண புருஷனும் கிடைப்பது, அவரவர் பூர்வ கர்ம வினைப்பயனாகும்.

“ஏடுசாத்திரங்கள் வேண்டேன் - நின
தின்பம் வேண்டுமடி கனியே—நின்றன்
மோடி கிருக்குதடி தலையை நல்ல
மொந்தைப் பழைய கள்ளைப்போலே.”

— சி. சு. பாரதியார்.

---

“நாய், வேண்டும்போதெல்லாம் ஸ்திரீ சங்கமத்தை நாடுகிறதில்லை. வருஷத்தில் ஒரு முறை குறிப்பிட்ட மாதத்தில், சம்வர்க்கம் செய்து பிள்ளைப் பேறு அடைகின்றது.”

## எட்டாவது அத்தியாயம்.

# பெண்ணுலகு.

['நவசக்தி' ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் எழுதுவது.]

உலகத் தோற்றத்துக்கும் ஆக்கத்துக்கும் பிற வற்றிற்கும் முதலாயிருப்பவர்கள் பெண்மக்கள். பெண்ணுலகின் பெண்மையும் தாய்மையும் இறைமை யுமே உலகை நடாத்தி வருகின்றன. அப் பெண்ணுல கின் நிலைகொண்டே ஒரு நாட்டின் நாகரீகத்தை அளந்துணரல் வேண்டும்.

நமது நாட்டின் பெருமையை நாம் அடிக்கடி பேசி மகிழ்வடைகிறோம். அப்பெருமையை நமது நாடு எப்பொழுது பெற்றிருந்தது? பெண் உரிமை பெற் றிருந்த காலத்திலன்றோ? பெண் உரிமை இழந்த நாள் தொட்டு, நமது நாடு அடிமைக் குழியில் வீழ்ந்து வரு

"வாரத்துக்கு ஒரு முறை விரதமிருந்தால், உடல் நல முண்டாகும். அதனால் தான் பண்டைக் காலத் தோர் விரத நாட்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்."

கிறது. தாயை அடிமைப் படுத்திய பாவம் நாட்டைச் சூழ்ந்து நிற்கிறது.

பெண்ணடிமை ஒரு கொடுமை. உலகம், பெண் ஆணால் ஆக்கப்பட்டிருக்கிறது. அவ்வுலகில் ஒரு கூறு கிய பெண்மக்கள் மட்டும், தாழ்த்தப் பட்டதற்கு ஏதாயினும் பொருள் உண்டா? பெண்ணுலகம் தாழ்த்தப் பட்டால், ஆணுலகமும் தாழ்த்தப்படும். இரண்டும் உரிமை பெற்றுள்ள இடத்திலேயே, உரிமை ஞாயிறு ஒளி செய்து கொண்டிருக்கும். ஒன்று அடிமைப்படின், மற்றொன்றும் அடிமைப்பட்டு, முடிவில் நாடே அடிமைக் குழியில் வீழ்ந்து படும்.

கடவுளை அம்மை யப்பராகப் போற்றிய இந் நாட்டிற் பெண்ணடிமை எங்ஙனே நுழைந்து விட்டது? வேத காலத்தில் பெண் மக்கள் உரிமை பெற்றிருந்தார்கள்; சங்க காலத்தில் அம்மக்கள் உரிமை யின்பம் நுகர்ந்தார்கள். கம்பன் காலம் வரை, பெண்ணுரிமைக் குப் பெருங் கேடு நிகழவில்லை. தமிழ் நாட்டிற் பெண்

"பன்றியோடு கூடிய கன்றும் மலந் தின்னும் துஷ்டரோடு கூடியவனும் துஷ்டனாவான்."

ணுரிமைக்கு ஊறுநேர்ந்த காலம், பின்னைய காலமே யாகும்.

வடமொழியில் உபநிடதங்களை யருளிய பெண்ணரசிகள்—தமிழிற் காவியங்களை யாத்த பெண் தெய்வங்கள்—வழி வழி வந்த பெண் மணிகளின் அறிவைக் குலைத்து, அடிமைக் குழியில் வீழ்த்திய பாவம் நம்மைச் சூழ்ந்து நிற்கிறது. "ஒத்த நலனும்-ஒத்த குணமும் - ஒத்த கல்வியுமுடைய ஒருவனும் ஒருத்தியும்" என வரூஉம் நக்கீரனார் உரையை நோக்குக. ஒத்த கல்வி பெறவேண்டிய பெண்ணுலகம் அடிமைப்படின், ஆணுலகிற்கு இன்ப மேது ?

பெண்மக்கட்கு விதித்துள்ள கட்டுப்பாடுகளை உன்ன உன்ன உள்ளம் உருகுகிறது. அவைகளை விதித்தவர்களின் நெஞ்சைக் கல்லெனக் கழறுவதா ? இரும்பென இயம்புவதா ?

---

"விசேஷ காலங்களில் வீண் செலவை நீக்கி, மிதமாயும், ஆடம்பரமின்றியு மிருந்தால், வறுமைக்கும் கடனாளியாவதற்கும் வழியிராது."

பெண் கல்வி மறுப்பு, இளமை மனம், நாயகனைப் பெண் தானே தெரிந்தெடுக்கும் முறை அழிவு, இளங் கைம்மையரையும் மொட்டை யடித்துச் சிறையிடல், அவர்களை இயற்கையினின்றும் செயற்கைக் கொடுமையாற் பிரித்தல், அவர்களைப் பட்டினியால் மெலிவித்தல், அவர்களை மூதேவிகளாகக் கருதுதல், ஒருவன் பல பெண்களை மணத்தல், நரை மூதாளன் கட்டழகுக் கன்னியை மணத்தல், பெண் விபசாரத்துக்கு மட்டும் தண்டனை, அத்தண்டனை ஆணுலகிற்கின்மை, திருமணம் என்னும் பெயராற் பெண்ணை விற்றல்-வாங்கல், இன்னோரன்ன சிறுமைக் கொடுமைகள் நாட்டில் புகுந்து, நாட்டைக் குலைக்கின்றன. இக்கொடுமைகள் முற்றும் களையப் பட வேண்டும்.

எதற்குஞ் சட்டங்களை எதிர் பார்த்தல் கூடாது. சமூகங்களே சீர்திருத்தஞ் செய்து கொள்வது நலன். சமூகங்கள் அந்நிலை எய்தாவிடின், சட்டங்கள் பிறக்கும் வேளையில், அவைகட்குத் தடை விளைத்தல் முன்னேற்றத்தை நாடுவதாகாது. இப்பொழுதுள்ள

---

"கெலிப்பும், தோற்பும் ஒருவர் பக்கம் அல்ல."

ஹிந்து சட்டங்களிற் பல—சிறப்பாகப் பெண்மக்கள் உரிமை கட்டுஞ் சட்டங்கள், கால நிலைக்கேற்ற முறையில், சீர்திருத்தஞ் செய்யப் பெறல் வேண்டும்.

பெண்ணுலகச் சீர்திருத்தம் பெரிதும் ஆண் இளைஞர் மனோ உறுதியைப் பொறுத்து நிற்கிறது. ஆணுலகம் பெண்ணைக் காமக் கூடாகக் கருதிக் கொண்டிருக்கு மட்டும், பெண்ணுலகம் வளர்ச்சி யுறாது. பெண்ணுலக வளர்ச்சி யில்லையேல், மற்ற உலகத்துக்கும் வளர்ச்சியில்லை. இனியாதல் ஆணுலகம பெண்ணுலகத்திற்கு மதிப்பும் உரிமையும் நல்க முந்துவதாக.

தவிர, பெண்ணுரிமை என்னும் பெயராற் சில குப்பைகளைக் கொணர்ந்து, பெண்ணுலகில் குவிப்பதும், நாட்டுக்குப் பெருங்கேடு விளைப்பதாகும்.

பெண் மக்களிடம் பெண்மை, தாய்மை, இறைமை ஆகிய மூன்று இயல்புகளிருக்கின்றன. அவைகள் முறையே மலர்ந்து, காய்த்துக் கனியும் முறையில், அவர்கள் வாழ்வு நடத்துவதற்கு ஆணுலகம் துணை புரி

"வறுமையிலும் செம்மை வேண்டும்."

தல் வேண்டும். இறைமை கனியாதவாறு, பெண்ணுலகைச் கெடுத்தல் பாவம். " கிருக லக்ஷ்மி "

---

### ஒன்பதாவது அத்தியாயம்.

# சதி பதிகள் கற்பொழுக்கம்.

### [கணவன் மனைவி]

" பஞ்சணையிலருகாக நின்று வா வென்றனபின்
பரிவினுட னருகில் வந்து
பாக்கிலை மடித்து சுருளீந்து மெத்தையில் வந்து
பரிமள மிகத் திமிர்ந்து
கொஞ்சிமலர்சூடி யிசைபாடி விளையாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியிதழ ருகொரு முறை பருகியி னியபுட்
குரலோசை மிக முழங்க
நெஞ்ச மகிழ்வோடு சுரத கரண கரிகர வுபரி
நேய ரதிகேளிதன்னால்
நிறையமிர்த போக சம்போக வைபோக
நீங்காத மோக முதவும்
வஞ்சியினலாது மன்ம் வெளுன்றிங் மகிழுமோ. "

---

" நல்லாரை நாவில் உரை; பொன்னைக் கல்லில் உரை."

" பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின். " — திருக்குறள்.

" கற்பெனப்படுவது சொற்றிறம் பாமை " என்னும் ஔவைக்கிழவியார் வாக்கின்படி, கற்பென்பது ஆடவர்-மகளிர் இருவருக்கும் பொதுவாகக் கூறியுள்ளது. ஆனல், பெண்களுக்குத்தான் கற்பொழுக்கம் அவசியம் இருத்தல் வேண்டுமென்று சொல்வது அசம்பாவிதம்.

புருஷனது கற்பு எத்தன்மைத் தேனில்:—கல்வி கேள்விகளிற் சிறந்து, ஈசுரபக்தி - குருபக்தி - அடியார் பக்தி - அன்பு - அடக்கம் - பொறுமை - காருண்யம் முதலிய நற்குணங்கள் அமையப்பெற்று, தாய் தந்தையர்களை ரக்ஷித்து, உற்றார் உறவின் முறையாரை அநுசரித்து, பெரியோர்களை நேசித்து, எல்லா ஜீவர்களிடத்து இரக்கங் கொண்டு, சாந்தம் - சமத்துவம் - சத்திய நெறிகளிற் பயின்று வாழ்தல் வேண்டும். தன்

---

" எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாக இருக்க விரும்பினுல், இளமையில் துக்கத்தைச் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது."

மனைவியைத் தவிர, ஏனைய ஸ்திரீகளைத் தாய் போல் நினைத்தல் வேண்டும். கோபத்தை அறவே ஒழித்தல் வேண்டும். தீத்தொழிலுக்கஞ்சி, தீயாரை வெறுத்து நீக்கி, அவர்களது தரிசனமே பாபத்துக்கிடமாகு மென்று அஞ்சி யிருத்தல் வேண்டும். தன் மதாசார அநுஷ்டானங்களினின்றும், சிறிதும் நழுவுதல்கூடாது. கள் - சாராயம் - கஞ்சா அபின் முதலிய போதை தரும் வஸ்துக்களை எக்காரணம் பற்றியும் சாப்பிடக் கூடாது. சூது - சொக்கட்டான் - சோழி முதலிய ஆடப் படாது.

> " காதல் கவளுடல் கள்ளுண்டல் பொய்ம் மொழிதல்
> ஈதன் மறுத்தல் இவை கண்டாய்—போதில
> சினையாமை வைகுந் திரு நாடா செம்மை
> நினையாமை பூண்டார் நெறி. " — நளவெண்பா.

சூதாடுபவர்களிடத்தும் போதைவஸ்துக்கள் சாப்பிடுவோரிடத்தும் நேசிக்கப்படாது. ஒருவரையும் பகைத்துக் கொள்ளப்படாது. வஞ்சகம் பேசிப்பிறர்

---

"உன்னால் கூடுமான தருமம் செய்யச் சமயம் வாய்க்கும்போதெல்லாம், அதை மறந்துவிடாதே."

பொருளை அபகரிக்கப்படாது ; கனவிலும் பிறருக்குத் தீங்கு விளைக்க எண்ணப்படாது. தாய் - தந்தையர்களைத் தெய்வமாகப்பாவித்து, அவர் சொற்படிநடந்து, அவர்களைப் பூஜித்து வருதல் வேண்டும்.

"தந்தையுரை தட்டினவன் தாயுரை யிகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்த மாணையை மறந்தோன்
சந்தமுறுவேதநெறி தாண்டின விந்நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய் கண்டீர்."

தனக்குச் செல்வத்திலேனும் குலத்திலேனும் கல்வியிலேனும் தாழ்ந்தவரிடத்தும், நாம் மரியாதையாக நடந்து கொள்ளல் வேண்டும். ஏழை எளியவர்களுக்குத் தன்னால் கூடியவரையும் உபகாரம் செய்தல் வேண்டும். அவர்களுக்கு உபகாரம் செய்யத் தனக்குச் சக்தியில்லை யென்றாலும், அவர்களது ஏழ்மைத் தனத்துக் கிரங்கிச்சாந்த குணத்தோடு, அவர்களிடம் நடந்து கொள்ளுதல்வேண்டும். கனவிலும் பொய்பேசக் கூடாது. எப்போதும் சத்திய நெறியிலேயே நிற்றல்

"எல்லா உயிர்களிடததும் அன்பனா யிருந்தால், அதுவே உனக்குக் கடவுளைக் காட்டும் துணையாயிருக்கும்."

வேண்டும். அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச்சொல், இந்நான்கையும் விலக்குதல் வேண்டும். குடும்ப கஷ்டங்களைப் பிறரிடம் சொல்லப்படாது. தனக்குக் கிடைத்ததைக்கொண்டு, திருப்தி அடைதல் வேண்டும். "உள்ளது போதுமேன்கிற மனமே குறைவற்ற களஞ்சிய"மாகும். "போதும் என்கிற மனமே பொன் செய்யும் மருந்து."

பெண்களது கற்புநிலை எத்தன்மைத்தெனில்:—விவாகம் செய்து கொண்ட பெண்கள், தன் நாயகன் சொல்லுக்கு மாறுபாடின்றி நடத்தலே, கற்பொழுக்கமென்று சொல்வார்கள். அதுவே பெண்களுக்கு நல்லொழுக்கம்; உயரியகுணம்; கற்பு நிறைந்த மனைவியை அடைந்த புருஷன், அஷ்டயிஸ்வரியங்களையும் சகல நன்மைகளையும் அடைந்தவனாவான்.

> "நாடெழுருநனி புகழ்ந்தேத்தலும்
> பீடுறும் மழைபெய் கெனப்பெய்தலும்
> கூடலாற்றவர் நல்லது கூறுங்காற்
> பாடுசான் மிகு பத்தினிக்காவதே" — வளையாபதி.

"நாம் உண்மையான இன்பம் அடைய விரும்பினால், இவ்வாழ்க்கையில் நம் கடமையைத் தவறாது செய்யவேண்டும்."

" கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினர் கொள்வது கொடுப்பதுவே. "
— தொல்காப்பியம்.

இப் பாசுரத்துக்கு நச்சினார்க் கினியர் என்னும் பேராசிரியர் பொருள் கூறுகிற விதம்:—கற்பொழுக்கமாவது, மனைவியானவள் தன் கணவனை இன்னவாறு வழிபடுதல் முறை யென்றும், தாய் - தந்தையர்கள் - அந்தணர் - பெரியோர் - ஆசிரியர் - தேவர் இவர்களிடத்து, இன்னவாறு நடந்து கொள்ள வேண்டியதென்றும், கணவன் கற்பித்தவாறு மனைவி நடத்தல் வேண்டு மென்பது முறையாகும்.

" குலனுடைமையிற் கற்பு சிறந்தன்று "
" இருள் தீர்ந்த கண்ணோராச் செய்வது கற்பு. "

என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. பெண்களுக்கு நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பு என்னும் நான்கு குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். இல்லறஞானியாய் விளங்கிய திருவள்ளுவ நாயனார் கற்புக்கரசியாகிய

---

" நம்முடைய உதவியால் சிநேகிதர்களைத் தேட முயன்றால், அந்தச் சிநேகம் நீடித் திருக்காது. "

தன் மனைவி வாசுகி அம்மையாருடன் கூடி இல்லறம் நடாத்திய, பெருமையை அவாது சரித்திர மூலமாக சகோதர சகோதரிகள் அறிவார்களாக.

"முக்கணர் தண்டலை நாட்டில் கற்புடையோர்
பெருமை மொழிந்திடில் ஒருத்தி
ஒங்கும் எரிகுளிரலவத்தாள்; ஒருத்தி வில்
வேடனை எரித்தாள்; ஒருத்தி மூவர்
பக்கமுற அமுது அளித்தாள்; ஒருத்தி எழுபரி
யவனை இணங்க வைத்தாள்;
கொக்கெனவே நினைத்தனையோ கொங்கணவா
என்றொருத்தி கூறினளே."

அக்கினியைக் குளிரவைத்தவள் சந்திரமதி; வேடனை எரித்தவள் தமயந்தி; பிரம்ம - விஷ்ணு - ருத்திராதி மூத்தேவர்களைக் குழந்தைகளாக்கினவள் அநுசூயை; சூரியன் உதயமாகாது சபித்தவள் நளாயினி; கொக்கென்று நினைத்தனையே கொங்கணவா என்றவள் வாசுகி; இத்தகைய அற்புதம் வாய்ந்த கற்புக்

"பெண்களது பொறுமையை அளவிட விரும்பினால், அவர்களது குடும்ப வேலைகளைச் செய்து பார்க்க உண்மை வெளிப்படும்."

கரசிகள் வாழ்ந்த நம் பாரத நாட்டில் கற்பிலக்கணம் கூறவேண்டியது அநாவசியமாயினும், தற்காலம் மேனாட்டுக் கல்வி-மேனாட்டு நடை யுடை பாலனைகள் முதலிய பாவி, எல்லாம் தலைகீழ்ப்பாடமா யிருத்தலி னால், கற்பின் ஒழுக்கத்தைப்பற்றி, இச்சிறு புத்தகத் தில் சில வரிகள் எழுத முன் வந்தோம்.

"தெய்வந்தொழா அள் கொழுநற் றொழு தெழுவான்
　　பெய்யெனப் பெய்யும் பெருமழை என்ற
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்
　　பசியு நோடியும் பிறர்வாய்க்கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
　　கடவுட் பேணல் கடவியை யாகலின்
மடவர லேவ மழையும் பெய்யாது
　　நிறையுடைப்ப பெண்டிர் தம்மே போலப்
பிறர் நெஞ்சு சுடூஉம் பெற்றியும் இல்லை
　　ஆங்கவை பொழிகுவை யாயினையிழை
ஓங்குரு வானத்து மழையுநின மொழியது."
　　சீத்தலைச் சாத்தனார்.

---

"பெண்கள் கைத் தொழில் கற்றிருந்தால் குடும்பத்துக் குப் பேருதவியாவது மன்றிச் சீவனோபாயமுமாகும்."

" நாற்குணமு நாற்படை யா னவம்புலனு நல்லமைச்சா
யார்க்குஞ் சிலம்பே யணி முரசாவேற் படையும்
வாளுமே கண்ணாய் வதனமதிக்குடைக் கீழ்
ஆளுமே பெண்மை யரசு "

" தம்மேனி நோக்கார் தனையுணரார் கைக்கொடியார்
எம் மேனியாயினும் நோக்கார் தலைமகன்
தன்மேனியல்லாற்பிற. " — ஆசாரக்கோவை.

" கட்கினியாள் காதலன் காதல்வகை புனையாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்
உட்கிடனறிந்தூடி இனிதினுணரும்
மட்மொழி மாதரார் பெண் "

" தாசிபோல் பணியில் புத்திதன்னிலே
யமைச்சு போலும்
தேசினிற் றிருவுமூட்டுஞ் சினே
கத்தி லன்னை போலும்
மாசிலாப் பொறைக்குப் பூமா
தென்னவு மருவு நாளில்
வேசிபோற் குண மிதாறு மிருந்த கற்
பினுக்கு நன்றே. " என்பன ஆன்றோர் வாக்கு.

---

" காரியமில்லாத எவ்வகை வீண் வார்த்தைகளும் மனத்
தாங்களைக் கண்டிப்பாய்க் கொடுக்கும். "

" மடந்தையர் வதனநல்ல மதி எனு மாற்றம் வானோர்
கடைந்தவா னமுத மென்னக் கவினுமென்றாலு முள்ளம்
விடங்கொடு புரிந்தவள்போல் வெங்கொலை விரும்பு மந்த
அடங்கலார் மனஞ் செல்வண்ண மாரறிந்தறைய இற்பார். "
— பாகவதம்.

" பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா
உண்ணிறை யுடைய வல்ல வோ ராயிர மனத்தவாளகும். "
— சிந்தாமணி.

" பெண்மனம் பேதிற் றொருப்பேன் என்னும்
எண்ணில் ஒருவன். " — விளையாபதி.

" கற்பெனப்படுவது கணவனின் வழித்தே "
— இறையனார் அகப்பொருள்.

" கற்புறு சிந்தைமாதர் கணவனை யன்றி வேறோர்
பொற்புறுத் தவரை நாடார். " — தாயுமானவர்.

" தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்
• பெய்யெனப் பெய்யுமழை. " — திருக்குறள்.

கற்புடைய மாதர்களுக்குத் தெய்வம் கணவனே யாவர். அவர், வேறு கோயில் குளங்களுக்குப் போக

---

" கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்பதற்கு பிரகலாதன் - மார்க்கண்டேயர்முதலியோரை நினைக்க.

வேண்டிய அவசியமில்லை. அவர்கள் மழை பெய்ய வேண்டுமென்று, சங்கற்பித்தவுடனே, மழை பெய்யும். கணவன் அங்கமெல்லாம் குறைந்து தொழுநோய் களாற் பிடிக்கப் பட்டும், அழகில்லாது குரூபியாயிருக் கினும், கோபம்-தரித்திரம் - படிப்பின்மை - மூர்க்கத் துவம் முதலிய துர்க்குணங்கள் பொருந்தியவனுயி னும், இது நாம் செய் தவப்பயன் என்று மனதுக்குச் சொல்லி, அப் புருஷனை ஷோடசோபசாரத்துடன் பூஜித்துத் தெய்வமாகப் பாவிக்க வேண்டியது கற் புடைய மாதர் கடமை. கல்லென்றாலும் கணவன் புல் லென்றாலும் புருஷன் என்று இல் வாழ்க்கையை நடத்துபவளே, கற்புக்கரசி என்பார்கள். தாய்க்குப்பின் தாரம் என்று சொல்வதற் கிணைய, கணவனுக்குத் தாயைப்போல் அறுசுவை உணவுகளை ஊட்டவேண் டும். வேலைக்காரியைப் போல் குடும்ப வேலைகளைச் செய்தல் வேண்டும். தன்னை மஹாலக்ஷ்மியைப் போல் தன்னிடமுள்ள ஆடையாபரணாதிகளால் அலங்கரித்துக் கொண்டு, புருஷன் மனது சந்தோஷ

" மனிதர்களுக்குக்கவலை அதிகப்பட்டால், பைத்தியத்துக்கு அஸ்திவாரமாகும் - மனக்கவலையே பலக்குறைச்சல். "

மடையச் செய்தல் வேண்டும். புருஷன் கோபித்தாலும் திட்டினாலும் பூமியைப்போல் பொறுத்திருக்க வேண்டும். சையோக காலத்தில் விலைமாதர்களைப் போல், அவன் மனம் ரமிக்கும்படி சிற்றின்ப சுகத்தைக் கொடுத்தல் வேண்டும். மந்திரிகளைப்போல் வரும் பொருள் உரைத்தல் வேண்டும். இக் குணங்களையுடையவள் கற்புடையாளெனக் கூறுவர் பெரியோர்.

"கொழுநன் உண்டபின் நானுகர் கொள்கையும்
விழிதுயின்றபின் துஞ்சலு மென்துயில்
எழுதல் முன்ன மெழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே."

— காசிகாண்டம்.

புருஷன் சாப்பிட்ட பின்னர், தான் சாப்பிட வேண்டும். இரவில் அவன் நித்திரை செய்த பின்னர், தான் நித்திரை செய்தல் வேண்டும். விடியற்காலையில் அவன் எழுந்திருப்பதற்கு முன்னம், தான் எழுந்து, நித்தியக்கடன் முடித்துப் பல் துலக்கிக் குங்குமப் பொட்டணிந்து, புருஷன் எழுவதற்கு முன், தன் முகத்

" ஒவ்வொருவருடைய பெருமைகள் அவர்கள் இறந்த பின்னர்தான் தெரியவரும்."

தை அவன் தரிசிக்கக் காட்டவேண்டும். அவன் எழுந்ததும், அவனுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து, பின் வீட்டுக் காரியம் பார்க்க வேண்டும். இத்தகைய கற்பொழுக்கம் நிறைந்து விளங்கியவர் திருவள்ளுவநாயனார் மனைவி வாசுகி அம்மையார். இவ் வம்மையார் இறந்ததும், நாயனார் மனம் வருந்திப் பாடியது.

" அடிசிற் கினியாளே ! அன்புடையாளே !
படிசொற் றவறாத பாவாய் ! - அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே ! போதியோ?
என்தூங்கு மென் கணிரா. "

புருஷன் சம்பாதிக்குமளவுக்கேற்ப, மனைவி குடும்ப வாழ்க்கையை நடத்துதல் வேண்டும். வரவுக்கு மேல் செலவு செய்தால், குடும்பம் கஷ்டமடையும். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை முகம் கோணாமல் உபசரித்தல் வேண்டும். உற்றார் உறவின் முறையாரிடம் நேசப்பான்மையோடு நடத்தல் வேண்டும். கணவன் கோபிக்குங் காலத்துத்தான் எதிர் நின்று

---

" உனது மரியாதையை இழக்க - சடன்படுவேது முதற்படி. "

பேசாதிருத்தல் வேண்டும். "பெண்டிர்க்கழகு எதிர் பேசா திருத்தல்" என்றார் ஔவைப்பாட்டி.

"வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்விருந்தோம்பி - திருவாக்கும்
தெய்வதை எஞ்ஞான்றும் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு." — சிறுபஞ்சமூலம்.

காரணமின்றிப் பெண்கள் சிரிக்கப்படாது. "சிரிப்பு சீரைக் குலைக்கும்" என்பார்கள். அசங்கியமான வார்த்தைகளையும் - பரிஹாச வார்த்தைகளையும் எந்த சமயத்திலும் பேசப்படாது. ஆடையாபரணாலங்காரம் செய்து கொண்டு, பர புருஷர்கள் பார்க்கத் தெருவில் நிற்கப்படாது. ஜன்னல் வழியாக உட்கார்ந்து கொண்டு, தெருவில் போகிறவர்களைப் பார்க்கப்படாது. மெத்தை மீதிருந்து, தலைமை விரித்து ஆற்றிக்கொண்டு, வேடிக்கை பார்க்கப்படாது. குடும்ப காரியத்தைக் கவனியாமல், வம்பு வார்த்தைகளை உபயோகிக்கிறவர் மத்தியில் நின்று, வேடிக்கை பார்க்கப்படாது. சண்டை

"உனது சுத்தமான நம்பிக்கையே, உன்னைப்பாதுகாக்கும்."

சச்சரவு செய்யுமிடங்களிற் போகப்படாது. வாலிபப் புருஷர்களிடம் வார்த்தை யாடப்படாது. அவர்களி ருக்குமிடத்துக்குத் தனியேயாவது, தன் சிநேகிதிக ளோடு சேர்ந்தாவது, போகப் படாது. விபசாரம் செய்யும் ஸ்திரீகளிடம் சேரப்படாது. மாமன் - மாமி மற்றுமுள்ள பெரியோர்கள் முன், உயர்ந்த ஆசனத்தில் அமரக்கூடாது. கணவன் தவிர, ஏனைய புருஷர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கப்படாது. துஷ்ட ஸ்திரீகளி டம் சகவாசம் செய்யப்படாது. கணவன் நாமத்தையா வது, மாமன்-மாமி-நாத்தி இவர்கள் நாமத்தையாவது, சொல்லப்படாது. குடும்பத்திலுள்ள சண்டைசச்சரவு, கஷ்ட நஷ்டங்கள் இவற்றை அண்டை அயலாரிடம் சொல்லி முறையிடப்படாது. அண்டை அயல் பெண் களிடம் சண்டையிட்டு, அதனால் நேரும் கஷ்டநஷ்டங் களைத் தன் புருஷனிடம் சொல்லி, வீண்சண்டை மூட்டி வைக்கப்படாது. கற்புடையாள் தன் சுய அறி வாலும், சாமர்த்தியத்தாலும் குடும்ப வாழ்க்கையை கவுரவமாய் நடத்தி வருவாள்.

---

" ஒரு நூலின் பெருமை, அந்த நூலாசிரியர் இறந்த பின் னர் தான் தெரியவரும். "

“ முடிப்பதூஉம் மக்கட்பெறுவதூஉம் பெண்பால்
முடிப்பதூஉம் எல்லோரும் செய்வர் - படைத்ததனால்
இட்டுண்டில் வாழ்க்கை புரிந்து தான் நல்லறத்தே
நிற்பரே பெண்டி ரென்பர். ”

எல்லாரும் ஆடையாபரணாதிகளால் தன்னை அலங்கரித்துக் கொள்வார்கள். புருஷனோடு இன்பம் அனுபவிப்பார்கள். பிள்ளைகளைப் பெறுவார்கள். அதனாலடையும் பயன் யாதொன்றுமில்லை. இல்வாழ்க்கையை நல் வாழ்க்கையாக நடத்தும் பெண்களே, பெண்களென்று சொல்லப்படுவர்.

“ கொண்டான் குறிப்பொழுகல் கூறிய நாணுடைமை
கண்டது கண்டு விழையாமை—விண்டு
வெறுப்பன செய்யாமை வெஃகாமை நீக்கி
உறுப்போடுணர் வுடையாள் பெண். ”

“ கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந்தருதலும் சுற்ற மோம்பலும்
பிறவுமன்ன கிழவோன் மாண்புகள். ”

— தொல்காப்பியம்.

---

“ அறிவுள்ளவன் அதிகம் பேசமாட்டான். ”

" இல்லறத்திற்கியைவன ஈட்டுவோர்
அல்ல செய்தே வழிதி னழித்திடார்
புல்லுகாதலர் ஆயுட்பொலிவுற
மல்லலோங் கணி மஞ்சள் அணிவரால்."

— காசிகாண்டம்.

கற்பொழுக்கம் நிறைந்த பெண்கள், தன் நாயகன் விருப்பத்தைக் குறிப்பினாலறிந்து, அவன் சொல்வதற்கு முன்னமே செய்வள்; நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பு என்னும் நாற்குணங்களையும் அமையப்பெறுவாள்; கண்ணுற்காணும் வஸ்துக்களையெல்லாம் இச்சியாள்; புருஷன் வெறுப்பனவற்றைத்தானும் வெறுப்பாள்; தம் வீட்டுக்குவரும் விருந்தினரை, தன் தாய் வீட்டு மனுஷ்யாளாயிருந்தாலும் சரி, தன் புருஷன் வீட்டு மனுஷ்யாளாயிருந்தாலும் சரி. இருவகையன்றி பிற புது மனுஷ்யாளாயிருந்தாலும் சரி, பாரபக்ஷமில்லாமல் சமத்வமாய் உபசரித்து மகிழ்வாள். குடும்பத்துக்கு வேண்டுவனவற்றைச் சேகரிப்பாள்; அவை அழியாமற் பாது காப்பாள். தன் நாயகன் ஆயுள் விரு

---

" எத்தனை இடர்ப்பட்டாலும், அவற்றைத் தைரியமாய் எதிர்த்து ஜெயிப்பது ஆண்மையாகும். "

த்தியாகும் பொருட்டு, மஞ்சள் - குங்குமம் அணிவாள். கணவன் உத்திரவின்றி, வாசற்படி கடவாள். வியாபாரிகள் - விருத்தர்கள் - ஆயுர் வேத பண்டிதர்கள் இவர்களைத்தவிர, மற்றைய புருஷர்கள் எதிரில் நின்று பேச மாட்டாள். தன் அவயவாதிகள் நன்றாக மறையும்படியான உடைகளை உடுப்பாள். சரீரம் தெரியும்படியான மெல்லிய ஆடைகளை உடுக்க மாட்டாள். நற்குண நற்செய்கையுடைய பெண்களையே நேசிப்பாள், துர்க்குணம்-துர்ச்செய்கை - கலகப்பிரியம் - கோட் சொல்லல் - சண்டையிடுதல் - பெரியோர் சிறியோர் என்கிற மரியாதையில்லா திருத்தல் முதலிய குணங்களையுடையவர்களை ஏறெடுத்தும் பார்க்கமாட்டாள்.

தன் வினைக்கீடாகக்கிடைத்த புருஷன் தீப்பழக்கமுடையவனானாலும், அவனுக்குச் சமயோசிதமாக ஹித வார்த்தைகள் சொல்லி, அவனை நல்வழிக்குத் திருப்புவாள். புருஷன் மனமிசையும்படியான ஆகாரத்

"காதலுக்குக் கண்ணில்லை, பெற்றபெண்ணானாலும் செத்த நாயானாலும் பார்க்க முடிகிறதில்லை."

திகளைச்சமைத்து, அவன் மனம்சந்தோஷிக்கும்படியாயிட்டுச் சந்தோஷிப்பிப்பாள். வீட்டுப்பாத்திரங்களை அன்றாடம் சுத்தம்செய்து, வீடுவாசல்களை சுகாதாரமாய் வைத்திருப்பாள். கணவனுக்கு உயிர்த்துணை மனைவியென்றும், மனைவிக்கு உயிர்த்துணை கணவனென்றும் சொல்லப்படுவதால், கணவனும் மனைவியும் இல்லற மென்கிற ரதத்தை ஒருமித்தமனதோடு நடத்திச் செலுத்தவேண்டும்.

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பி னல்லால் — ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான் சகடம்
செல்லாது தெற்றிற்று நின்று."

தினசரி நல்லெண்ணை-தேங்காய் எண்ணை, இவற்றில் ஏதாவதொன்றைத் தலைக்குத் தடவிச் சீப்பிட்டு மயிர் வாரிக் கொள்ளவேண்டும். அந்திய நாட்டு வாசனைத்தயிலம்-சென்டுகள் உபயோகிக்கப்படாது. தலைமயிர் வளர வேண்டுமாயின், நல்லெண்ணெய் அல்லது

---

"கஷ்ட நஷ்டங்கள், மேலே செய்யும் காரியங்கட்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையுங் கொடுக்கும்."

தேங்காய் எண்ணெயில் வெந்தயம் - மகிழம்பூ-ரோஜா மொக்கு - வெட்டிவேர் - கார்போக் அரிசி போட்டு ஊறவைத்துத் தலையில் தடவிவரலாம். கண் குளிர்ச்சி உண்டாகும்.

காலையில் நீராகாரம் உப்பு போட்டு கால்படிக்குக் குறையாமல் சாப்பிடுதல் நன்று. தேசாசார பழக்கம்படி அரிசி நொய்க்கஞ்சி-கேழ்வரகு கூழ் முதலிய சாப்பிடலாம். கோகோ (Cocoa) டீ (Tea) ஓவல்டின் (Ovaltine) காபி (Coffee) முதலிய பானங்கள் ஏழைகளாயினும், தனவந்தர்களாயினும் சாப்பிடுவது கூடாது. அவை சரீரத்துக்குக் கொடுதி செய்யும் என்பது ஆயுர்வேத வயித்திய சாஸ்திரக் கொள்கை.

---

"பிறருடைய செல்வம் - அழகு - வல்லமை - அதிருஷ்டம் - பெருமை இவற்றைக் கண்டு பொறுமை அடைகிறவன் பெரு நோயாளி."

---


## ☞ ஆயுர்வேத ஆசான்.

[ஆயுர்வேதத்திற்கு ஆசாரிய புருஷர்களாகிய சித்தர்கள் வாசஸ்தலத்துடன் 45-வருடமாக சுதேச வைத்தியத்தில் அநுபவமுள்ள பண்டிட் S. R, நமசிவாய ராஜயோகி எழுதிய இப்புத்தகத்தில் ஒரு பிரதியை வாங்கியவர்கள் வைத்தியர்களைத் தேடவேண்டிய அவசியமில்லை. விலை ரூபா 2—0—0

" தரும மெனும் பண்டமிடும் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்து மனைக்காதலியுந் தானு மென
இருவராய்ப் பூண்டிழுப்பினெத்தூரமும் செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பினொரிறையும் செல்லாதால். "

கற்பொழுக்கம் குறையாத பெண்கள், தமக்கு உயர்ந்த ஆடையாபரணங்களில்லாவிடினும், அக்கினி சாக்ஷியாக பெரியோர்கள் முன்னிலையில், தன் புருஷனால் தரிக்கப்பட்ட திருமாங்கிலியத்தை மாத்திரம் எந்நிமிஷமும் விட்டிருக்கமாட்டார்கள். தன் கணவன் கண்டு சந்தோஷிக்கக் கற்புடை மகளிர், தன்னை ஆடையாபரணங்களாலும் - வாசனை புஷ்பங்களாலும் அலங்கரித்துக் கொள்வார்களே தவிர, கணவனில்லாத போது, ஒருக்காலும்தன்னை அலங்காரம் செய்யமனது கொள்ளார்கள். கணவன் விருப்பத்துக்கிணங்கத் துறந்தார்க்கும் - துவ்வாதவர்க்கும் - பிதுர்க்களுக்கும் - தெய்வத்துக்கும் வந்தனை வழிபாடு செய்து-உபசரிப்பார்கள். இல்லறத்துக்குரிய அம்மி - உரல் - உலக்கை - வாயிற்படி - முறம் இவற்றின் மீது உட்காருவதும் -

" பிறர் குற்றம் கண்டு நம்மைச் சீர்திருத்திக் கொள்ளுதல் அறிவுடைமை. "

மிதிப்பதும் கற்பின் ஒழுக்கமல்ல. மாத விடாய் காலத்தில் பெண்கள் ஒதுங்கியிருந்து, புருஷன் முகம் பார்க்கப்படாது என்பது குடும்ப வாழ்க்கையின் சிறந்த தருமமாகும்.

> " கடுபுடுத்து அன்புமுடித்து நாண் மெய்ப்பூசி
> நற்குண நற்செய்கை பூண்டார்க்கு - மக்கட்பே
> றென்பதோர் செல்வமுமுண்டாயினில் லன்றே
> கொண்டாற்குச் செய்தவம் வேறு. "
>
> — குமரகுருபர சுவாமிகள்.

ஒவ்வொரு மகளிரும் கற்பாகிய ஆடையை உடுத்து, அன்பாகிய மலரை முடித்து, நாண மென்கிற மஞ்சளைப்பூசி, நற்குண நற்செய்கைகளாகிய ஆபரணம் பூண்டு, தன்னை அலங்காரம் செய்து கொண்டுள்ள கணவன் மனைவிக்குப்புத்திரப்பேறு ஒன்றுஉண்டாகும் பக்ஷத்தில், அந்தக் குடும்பத்துக்கு வேறு தவம் வேண்டுவதில்லை.

> " தாயோ டறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
> சேயோடு தான்பெற்ற செல்வம்போம் - தாய உடல்

---

" எளியாருக்குரிய ஐஸ்வரியம் பெருந்தகைமை. "

வந்தோன் மரிக்கில் வலிபோம் மனையெனிலோ
அந்தோ இவையெல்லாம் போம்." — நீதிசாரம்.

"தாய்க்குப் பின் தாரம்" என்பார்கள். தாயானவள், தான் பெற்ற பிள்ளைக்கு, அவன் வாயிற்குகந்தபடி, அறுசுவை உணவுகளைச் சமைத்து ஊட்டி வளர்ப்பாள். அதுபோலவே, கற்புடைய மனைவி, கணவன் வாய்க்கினிய உணவுகளைச் சமைத்து ஊட்ட வேண்டியது கடமை. தந்தைக்குப்பின் மகனுக்குக் கல்விச் செல்வம் பெருகாது. உடற்பிறந்தான் இல்லாவிடில், புஜபல பராக்கிரமம் செல்லாது, தன் புத்திரன் மரிக்கில், தனக்குப் பின் தன் செல்வத்தை விருத்தி செய்யவும், பிதாவின் பேரை முன்னுக்குக் கொண்டுவரவுமியலாது. மனைவிபோய் விடிலோ, இவ்வித சுகங்கள் அனைத்தும் போய்விடும் என்பதுண்மை.

"தாதைதன்னினும் தன் அனைதனினும்
மாதர்மென்மொழி மைந்தர்கள் தம்மினும்

---

"இன்பத்தின் முடிவு துன்பம் - துன்பத்தின் முடிவு இன்பம்."

கோதில் கற்புடையார் தம் கொழுநர்பால்
காதல்கூர்ந்து களிமகிழெய்துவார்." — காசிகாண்டம்.

தாய்தந்தையர்கள் தவமிருந்து அருமையாய்ப் பெற்று வளர்த்துத் தாலாட்டிச் சீராட்டிய பெண்ணேயினும், வயது வந்த காலத்து, ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்தபோது, அப்பெண் தன் தாய் தந்தையர்கள் உற்றார் உறவின் முறையார் இவர்கள் மீதிருந்த அன்பை மறந்து, தன் கணவனிடத்துப் பூரண அன்பு வைத்துக் காதலாகிச் சந்தோஷ படைவாள். இவளே கற்புடைய பெண்ணென்பார்கள்.

" கொழுநன் சொற்கடவாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான் தவமாற்றுதல்
தொழுது தெய்வம் பராய் மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே. "

— காசிகாண்டம்.

"பிறரிடம் தாக்ஷண்யம் காட்டு - உன்னிடம் மட்டும் தாக்ஷண்யம் காட்டாதே."

தன் கணவன் சொற்கடவாது நடத்தல், அவனது திருவடிகளைப் போற்றி வணங்குதல், முதலிய செய்வது, கற்புடைய பத்தினிக்கழகு. இம்மாதுக்கு வேறு தருமம்-தானம் - தவம் - தேவதார்ச்சனை முதலிய விரதங்கள் ஒன்றும் அவசியமில்லை.

“ அழகின் வீக்கம் சிறிதிலராயினும்
ஒழிவின்நோய் நிரப்பெற்றிலராயினும்
கிழவுத் தன்மையராயினும் கேள்வரைப்
பழுது சொல்பவன் பண்பின் முயங்குவர். ”

— காசி காண்டம்.

ஒரு புருஷனுக்கு மனைவி வாய்ப்பதும், மனைவிக்குப் புருஷன் வாய்ப்பதும் அவரவர் கரும வினைப் பயனென்று நமது இந்து சாஸ்திரம் கூறுகின்றது.

“ திதியுங் கணவனு நேர்ப் படினும்
தத்தம் விதியின் பயனே பயன். ”

ஆகையால், பதிவிரதா தர்மமுள்ள ஸ்திரீகள், தனக்கு வாய்த்த புருஷன், எவ்வகை யிழிந்தவனாயினும்

“நல்ல மனைவியிலும் உயர்ந்த வரமில்லை. பொல்லா மனைவியிலும் தாழ்ந்த சாபமில்லை. ”

" கொண்ட கணவன் குரூபியே யானாலும்
பண்டுதான் செய்த பலனெனவே - கண்டு கொண்டு
குற்றமென வெண்ணி பாவை கோணு தவன் பணியைப்
பற்ற மிகச் செய்வார் பரிந்து. "

" மிடியினர் குணயிவர் விருத்தர் நோயினர்
வடிவிலர் உறப்பிவர் வஞ்சர் மூடர் வெவ்
கொடியவ ராயினும் கொழுநர் தம்மிடை
மடிவிலரன்பு கற்புடை மாதரே." — ஆன்றோர்.

அவனைத் தெய்வமாக மதித்து, அவனுடன் கூடிக் குலாவி குடிவாழ்க்கையை நடத்துவார்கள்.

" கற்றமேய கனங்குழை மாதரைப்
பெற்றுளோர் தம்மரபும் பெருந்தவம்
கற்பினுர் கொண்ட காதல ஞருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துவார். "

" நண்ணுகற்புடை நங்கையர் சீறடி
மண்ணினெவ்விடந் தோயினு மற்றது

---

" நாம் நித்திரைக்குப் போவதன் முன்னர், அன்று நாம் செய்துள்ள குற்றங்களைக் கவனித்து, அவற்றை மறு தினம் திருத்திக்கொள்ள முயல்வது அறிவுடையோர் கடமை. "

என்னுகின்ற தலங்களெலற்றினும்
புண்ணியத்தல மென்று புகழ்வரால். "

— காசி காண்டம்.

கற்புடைய மங்கையைப்பெற்ற தாய் தந்தைகள் - சுற்றத்தார் - அவர்கள் சந்ததியார் - அத்தகைய நங்கையை மனைவியாகக் கொண்ட கணவனது சந்ததியார் முதல் யாவரும், இக லோகத்தில் நற்பெயர் - நற்கீரத்தி பெற்றுப் பரலோகத்தில் மோக்ஷ பதவியை அடைவார்கள். தவிர, கற்பிற் சிறந்த மங்கையர்களது திருவடிகள், எந்த இடத்தில் பட்டாலும், அந்த இடம் புண்ணியத்தலமென்று புகழ்வார்கள். "மாதர் கற்புடை மங்கையர்க்கோர்மழை" என்று சொல்லப்பட்டதால், மாதமும்மாரியில், இவர்களுக்காக ஓர் மழை பெய்யும் என்பார்கள்.

" மாசிலாக்குலத்து வந்தாள் வருவிருந்துவப்ப வூட்டும்
நேசமிக்குடையாள் கொழுநன் கனிகளைப்பதிந் தொழுதுரோஷ்
தேசுறுவாய்மையுள்ளாள் சினந்திடவென்றுமில்லாள்
பேசுதின் கற்புவாய்ந்தாள் பெற்றதே கொண் டுவப்பாள்"

---

" மனோ வியாதியைப் பிறரிடம் கூறுவதினாலும், தன் அந்தரங்கத்தைப் பிறரிடம் கூறுவதினாலும், மன ஆறுதல் உண்டாகும். "

எவ்வகைக் குற்றமு மில்லாத நற்குடியிற் பிறந்த கற்பு நிறைந்த மங்கையர்கள், கணவனை நாடிவரும் விருந்தினர்களைச் சகல உபசாரங்களோடும் உண்பிப்பாள். மறந்தும் ஒரு பொய் சொல்லாது, காலங்கழிப்பாள். கோபமென்கிற கொடிய வியாதியை அறவே ஒழித்து, எக்காலத்தும் சாந்தம் தவழு முகத்தினைப் பொருந்தியிருப்பாள். கணவன் நினைப்பதை அறிந்து, அதற்கியைய நடப்பாள். தான்பெற்றதை இன்பமாயிருந்தாலும் சரி, துன்பமாயிருந்தாலும் சரி, நாம் இவ்வளவு தான் கொடுத்து வைத்தோமென்று, மன விஸ்ராந்தி அடைந்து சந்தோஷமாயிருப்பாள்.

"சாதிமணிற் சாதரோதற மன்னவன் றணந்த காலைப்
பூமனும்புனைதலின்றிப் பொற்புடன் புலம்பலைகிக்
காமனை யென்றுஞ் சொல்வார் கணவற்கை தொழுதவாழ்வார்
தேமலர்த் திருவோடொப்பார் சேர்ந்தவன் செல்வதீப்பார்."

— சீவக சிந்தாமணி.

"பாரியாய ஸமோ நாஸ்தி சரீர போஷணம்."

"கண்ணிற்சிறந்த உறுப்பில்லை கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை - கொண்டானின்

---

"ஆடம்பரத்தைத் தேடுவது அழிவுக்குக் காரணம்."

தன்னியகேளிர் பிறனில்லை என்றாளின்
என்ன கடவுளு மில். " — நான்மணிக்கடிகை.

சரீரத்தில் அமைந்துள்ள எல்லா உறுப்புக்களிலும் கண் எப்படி சிறந்த உறுப்போ, அவ்வாறே, குடும்ப வாழ்க்கையில் கற்பொழுக்க மனைவி சிறப்புடையவள். மனைவி யின்றேல், கணவனது சரீர போஷணம் இல்லை யென்றே சொல்லலாம்.

" காலா றுமாறாய் நனிசிறிதாய் எப்புறனும்
மேலா று மேலுறை சோரினும் - மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழுமாண் கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல். " — நாலடியார்.

கற்பிற் சிறந்த மங்கையர் வாழுமில்லம் சகலவளங் களும் பொருந்திய நகரமாய் விளங்கும். ஸ்ரீகம்ப நாட்டாழ்வார் தாமியற்றிய இராமாயணம்பாலகாண்டத்தில், வேள்விப்படலத்தைச் சிலாகிக்கும்போது "தங்கள் நாயகரிற் றெய்வம் பிறிலை வேன்றெண்ணும் மங்கைமார் சிந்தை போலத்தூயது" என்று,கற்பொழுக்க மங்கையர் களை உபமானமாகக் கூறுகிறார்.

---

" ஆசைகளைக் குறைப்பது இன்பம் காணும் வழியாகும். ஆசைகளைத் திருப்தி செய்ய முயல்வதன்று. "

" தலைமகனிற் றீர்ந்துறைதல் தான் பிறரிற் சேர்தல்
நிலைமையிறீப் பெண்டிர்ச்சேர்தல் - கலனணிந்து
வேற்றூர்ப் புகுதல் விழாக்காண்டல் நோன்பிடுதல்
கோற்றொடியாள் கோளழியு மாறு."

— அறநெறிச் சாரம்.

கணவனும் மனைவியும் இருவரும் கற்பொழுக்க முடையராயிருத்தல் வேண்டும். ஒருவர் கற்புடையாரா யும், மற்றவர்கள் கற்பிற் றவறியவராயு மிருத்தல், இல் வாழ்க்கைக்கு அழகன்று. அவ்வில்லத்தில் எந்நேரமும் சண்டை-சச்சரவு - கலகம் - வறுமை-அக்கம் பக்கத்தா ரால் இகழ்ச்சி முதலிய துன்பங்களுக்கிட முண்டாகும்.

இராவணன் ஸ்ரீராமபாணத்தால் ஆவி யிழந்து மண்மீது கிடக்கும்போது,

" திட்டிவிடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலேயே இது விதியில் வண்ணமே " என்றும்,

" உண்ணுதே உண்ணுதே உயிருண்ணுதொரு நஞ்சு
ஜனகி எனும் பெரு நஞ்சு உனைக்
கண்ணுலே நோக்கவே போக்கியதே உயிர்
நீயும் களப்பட்டாயே. " என்றும்,

---

" ஊழியத்திலும் அநுபவமே மக்களுக்கு அதிக உதவி அளிப்பதாகும். "

கும்பகர்ணன் வருந்தினன். தவிர, சீதாபிராட்டி யாரை இராவணன் காதலித்துக் கொண்டுவந்தபோது, மண்டோதரி கூறியது.

"அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதை
யென்னும் அமுதாற செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளை இத்தகைய னன்றோ."

தவிர, சீதாபிராட்டியாரை அநுமான் கண்டு வியந்து, அம்மங்கையின் கற்பின் சிறப்பை ஸ்ரீராம பிரானிடம் கூறிய விதம்:—

"உன்குலம் உன்னதாக்கி உயர்புகழ்க் கொருத்தியாய
தன்குலம் தன்னதாக்கித் தன்னை யித்தனிமை செய்தான்
வன்குலம் கூற்றுக் கீந்தவ்வானவர் குலத்தை வாழ்வித் [ய."
தென்குலம் எனக்குத்தந்தான் என்னினிச் செய்வ தெம்மோ

கற்பொழுக்கமாவது ஸ்திரீகளுக்கு மாத்திரம் உண்டென்பதில்லை. புருஷர்களும் ஏகபத்நி விரதாநுஷ்டான பரராயிருக்கவேண்டுவது முக்கியம்.

---

" அன்பினால் நமது தாயை; ஆலிங்கனம் செய்து கொள்ளலாம். அதிகாரத்தால் நமது மனைவியையும் தொட முடியாது."

"அறைகாத்தான் பெண்டிழந்தான்" என்று சொல்லப்பட்டிருப்பதால், பெண்கள் தமது கற்பினால் தங்களைக்காவல் செய்து கொள்ளவேண்டுமே யொழிய, கணவன் அவர்களைச்சிறையிட்டு வைப்பதுபோலக் காத்தல் பிரயோசனமில்லை. தாய் வீட்டேகிய பெண்ணும் பேயோடாடிய கூத்தும் ஒக்கும்" என்பார்கள். கற்பொழுக்கமுள்ள பெண்கள், தன் தாய்வீடு அருகிலிருந்தாலும் அடிக்கடி போகமாட்டார்கள். கற்பொழுக்கமுள்ள பெண்கள், சகலராலும் புகழப்பெற்று,மறுமையில் தெய்வ சந்நிதி அடைவார்கள். கற்புநெறி தவறியவர்கள், இம்மையில் பல கஷ்டங்களை அநுபவிப்பதோடின்றி, மறுமையில் யமதண்டனைக்கு முள்ளாவார்களென்பது, இந்த தருமசாஸ்திரங்களின் அபிப்பிராயம்.

"மண்ணினல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல்ல காதிக்குயாது மோர் குறைவிலைக்
கண்ணினல்லஃது றுங்கழுமலை வளநகர்ப்
பெண்ணினல்லா ளொடுப் பெருந்தகை யிருந்ததே."

---

"கள்ளரிற் கள்ளர் லோபி; அவன் தன்னையே கொள்ளை அடிக்கிறான்."

## பத்தாவது அத்தியாயம்.

# கற்புடை மாதர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்.

## (1) நாணம், (2) மடம், (3) அச்சம், (4) பயிர்ப்பு.

(1) **நாணமாவது**, எஞ்ஞான்றுங்கூடி யொழுகினும், அஞ்ஞான்று கண்டார் போன்று ஒடுங்குதல் என்பது பரிமேலழகர் அபிப்பிராயம். காமக் குறிப்பு நிகழ்ந்த வழிப்படுவதோர் உள்ள வொழுக்கம் என்பது நச்சினார்க்கினியர் அபிப்ராயம்.

(2) **மடம்:**—மடமென்பது, கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்பது அடியார்க்கு நல்லார் அபிப்பிராயம்.

(3) **அச்சம்:**—அச்ச மென்பது, பெண்மையிற்றான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து, அஞ்சு

" இன்பமும் துன்பமும் நேர் விரோதமாயிருந்தாலும், அவை எப்பொழுதும் இணைபிரியா நண்பர்களாயிருக்கவேண்டுமென்பது இயற்கையின் ஏற்பாடு. "

வது என்பது இறையனார் அகப்பொருள் உரை கண்டவர் அபிப்ராயம்.

(4) பயிர்ப்பு:—பயிர்ப்பாவது, பயிலாத பொருட்கண் வந்த அருவருப்பு என்பர் - திருக்கோவையாருக்கு 12-ம் செய்யுள் உரைகண்ட பேராசிரியர் அபிப்பிராயம் கண்டறியாதன கண்டுழி மனங்கொள்ளாமை என்பது நச்சினார்க்கினியர் அபிப்பிராயம்.

## அறம் வளர்க்கும் அணங்கு.

கலைகள் அறுபத்து நான்கு:—பண்டைக் காலத்தில் ஆண் பெண் இரு பாலரும் அறுபத்து நாலு கலைகளிலும் பயிற்சி பெற்றிருந்தனர். முன்னாளில் பெண்கள் அடிமைகளா இல்லை. ஜகமெல்லாம் மாதா பராசக்தியின் தோற்றம். சக்தியின்றேல் ஜகமில்லை. சக்தியின் வடிவம் பெண்கள். பெண்கள் இல்லையேல், உலகம் இல்லை; கலைகள் இல்லை; அன்பு இல்லை; ஆனந்தம் இல்லை; கவிதை இல்லை; காதல் இல்லை; வீரம் இல்லை; வாழ்வே இல்லை; பக்தி யில்லை; முக்தி யில்லை; தவமில்லை; தான மில்லை;

" நீண்டநேரம் பேசுவதைவிட, கொஞ்சநேரம் யோசனை செய்தால், அதிக பலனை அடையலாம்."

ஒன்று மில்லை. உலகம் நடப்பது பெண்களாலேயே; உலக நடப்புக்கே எழுமையாயுள்ள பெண்கள் தவறான வழியில் செல்லலாமோ? அன்பும், அறமும், காதலும், கலையும், வளர்க்கவேண்டியவர்கள் பெண்களே.

— உயர் திரு - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்.

பண்டைக்கால வழக்கத்தின்படி ஒவ்வொரு மனைவியும்,

1. காலையில் எழுந்து, நித்திய கருமத்தை முடித்துப் பல் துலக்கி, மாமன் - மாமி - கணவன் இவர்களுக்கு நமஸ்காரம் செய்து, வீட்டு வேலைகளைக் கவனிக்கவேண்டும்.

2. குளிக்கும்போது அழகையும் ஆயுளையும் கொடுக்கத்தக்க மஞ்சளை இழைத்து, முகம் - மார்பு - அடிவயிறு - திருமங்கில்யம் இவற்றில் அதிகமாகவும், சரீரமுழுதும் உபாயமாகவும் பூசிக்குளித்தல் வேண்டும். அந்நிய நாட்டுச் சோப்பாகிலும் உள் நாட்டு சோப்பாகிலும் உபயோகிக்கப்படாது. ஏன்? அதில் சுண்ணாம்பு சத்து அதிகமிருக்கிறது. அதனால், சரீரம் திரைந்து விடும். அஃதின்றி, இலுப்பைப் பிண்ணாக்கு பச்சரிசி

"உறுதியுடனிருப்பவனுக்கு ஒரு தாக்கமும் உண்டாவதில்லை."

நொய் கலந்து இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு தேய்த்தால், சரீரத்திலுள்ள அழுக்கு நீங்குவ தோடு, சர்ம சம்பந்தமான ரோகங்கள் யாவும் நீங்கும்.

---

## பதினோராவது அத்தியாயம்
# பெண்கள் தனித்திருத்தல் கூடாது.

" அல்லலே பெண்ணைப்பிறத்தல் ஆங்கதின்
அல்லலே இளமையிற் சிறத்தல் ஆங்கதின்
அல்லலே கட்டழகுடைமை ஆங்கதின்
அல்லலே இரவலர் சார்பினுதல். "

பெண் ஜென்மம் எடுப்பதே துன்பம்; அதனோடு அழகுடனிருப்பது ("பாரியா ரூபவதி சத்ரு") அதை விட துன்பம்; அதனோடு - செல்வம் - இளமை இவற் றோடிருந்தாலும் மேலும் துன்பம்; அத்தகைய பெண் கள் தன்னிடம் விட்டுப் பிற இடத்திருந்தால், உண்டா கும் துன்பத்துக்கு அளவேயில்லை.

---

" உலகம் ஒரு கண்ணாடி; நாம் நகைத்தால் அது வும் நகைக்கும். நாம் முகத்தைச் சுளித்தால் அதுவும் முகம் சுளிக்கும். "

புருஷர்களை விட ஸ்திரீகள் சரீரத்தில் பலஹீனர்களாயிருப்பதோடு மனத்திலும் பலஹீனர்கள். * ஸ்திரீகளது சரீர அமைப்பைக் கவனித்தால் தெரியவரும். அதனால் ஸ்திரீகள் எப்போதும் தனியாயிருப்பதுகூடாதென்பார்கள். ஸ்திரீகளைமெல்லியலார் என்றும், பேதையர்கள் என்றும், ஏழையர்கள் என்றும், புராதன நூலாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள்.

" எண்ணறக் கற்றும் எழுத்தற வாசித்தும்
பெண் புத்தி பின் புத்தியாமே. "

" நுண்ணறிவோடு நூலொடு பழகினும்
பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்து. "

சாதாரணமாய் பெண்கள் எவ்வளவு படித்திருந்தாலும், நுண்ணிய அறிவு கொண்டவர்களானாலும், அவர்களது புத்தி யோசனை அற்றது. பின்வரும் கெடுதியை நினைக்கும் சக்தியற்றது.

" தந்தைய ராயினும் விழைவிற்றன் றுடனே
ஒருவயிற்றிற் சார்ந்தா ராயினும்
மைந்தராயினும் மிக வனப்புடையரெனி லிவர் மேல்
மடநல்லார் தம் சிந்தை நடந்திடும். "

---

* ஆயுர்வேத ஆசான் - 4-ம் பக்கத்தில் பார்க்க.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்போதும் பெண்கள் மனம் சபலமுடையது. ஆயிரமுகம் கொண்டு செல்லும் மனோசக்தியுடையது. அதனால் "ஆயிரம் சிந்தையாளர்" என்பார்கள். ஆதலால், ஸ்திரீகள் எப்போதும் தனியே இருக்கப்படாது என்பார்கள்.

" மங்கையை இளமைதன்னில் வளமுறு பிதாவேகாப்பன்
பொங்கியயௌவனத்தில் பொருந்து பர்த்தாவே காப்பன்
தங்கிய மூப்பில் தன்னில் தனயரே காப்பரன்றிச்
சங்கிய ஒருகாலத்தும் சுதந்தரர் அல்ல தானே."

" பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவனே
ரக்ஷந்தி வார்த்தகே புத்ரா ஸ்திரீஸ்வா தந்தரிய மாஹறதி."

ஸ்திரீகள் இளமையில் மாதா பிதாக்களது ஆதரவிலும், யவ்வனத்தில் தன் பிதாவின் ஆதரவிலும், வயோதிகத்தில் தன்னுடைய புத்திரர்கள் ஆதரவிலும் இருக்கவேண்டுமே தவிர, ஸ்திரீகளுக்கு எக்காலத்தும் சுயேச்சை யென்பது கூடாது. தற்கால நாகரீகத்தவர்கள், பெண்களுக்குச் சுதந்திரமும் சமத்துவமும் கொடு

---

" எவ்வளவு எளிய நிலையிலிருப்பினும், மனதில் மாத்திரம் உற்சாகம் ததும்பி நிற்கவேண்டும்."

க்கவேண்டுமென்று வாதாடுகிறார்கள். என்னே! அதிசயம்!!

" எத்தொழின் மிக்கானினியான் இசைவல்லான்
காந்தையர் கண்கவர் நோக்கத்தான் - வாய்ந்த
கயனுடையின் சொல்லான் கேளெனினு மாதர்க்
கயவார் மே யாகு மனம். "

" தலைமகனிற்றீர்ந்துறைதல் தான்பிறரிற் சேர்தல்
நிலைமையிற் றீப் பெண்டிர்ச் சேர்தல் - கலனணிந்து
வேற்றூர்ப்புகுதல் விழாக்காண்டல் நோன்பிநிதல்
கோற்றொடியாள் கோளழியுமாறு. "

பெண்களின் மனோநிலையை உணர்ந்த பெரியோர்கள், தங்கள் அநுபவத்திற் கூறியவற்றை அன்பர்கள் கவனித்தல் வேண்டும்.

" ஈன்றாள்மகள் தன் உடன் பிறந்தாளாயினும் சான்றோர்
தமித்தா உறையற்க - ஐம்புலனும் தாங்கற் கரிதாகலான். "

— ஆசார கோவை.

" நற்றாய் புதல்வியுடன் றோன்றிய நங்கையேனும்
உற்றோருழியிற் றனி செய்தி யுரைத்தவாகா. "

— காசி காண்டம்.

---

" அந்நிய தேசக்கல்வி அடிமைத்தனத்துக்குட்படுத்தும். "

" தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா - தீமையான்
ஊர்மிகின் இல்லையே சரியே ஒலித்துடன்
நீர்மிகின் இல்லை சிறை. "

" ஐம்புலன்களும்ஐவரும் பதிகளாகவு
மின்னொருவன்
எம்பெருங்கொழுநனுவதற்குருகும்
இறைவனை எனது பேரிதயம்
அம்புவிதனிற் பெண்பிறந்தாலெவர்க்கு
மாட வரிலாமையி னல்லால்
நம்புவதற்குமுளகோ என்றனன் கெட்டன்
நல்லற மனைவியே யனையான். "

— ஸ்ரீ வில்லிபுத்தூராழ்வார்.

" அன்புநூலாக இன்சொலவர் தொடுத்தமைந்த காதல்
இன்பஞ்செய் காமச் சாந்திற்கை புனைந்தேற்றமாலை
சண்பகந் சூட்டிவிள்ளாது ஒழுகினும் நங்கைமார்க்குப்
பின்செலும் பிறர்கணுள்ளம் பிணையனுர்க்கடியதன்றே. "

மேலே கூறிய ஆன்றோர்களது ஆப்த வாக்கியங்கள், ஸ்திரீ புருஷர்கள் இருவருக்கும் நிபந்தனையாக விதித்

---

" நமக்கு ஏற்படும் இன்ப துன்பங்களிலிருந்து, உண்மையான உலக அநுபவங்களைக் கண்டறியலாம்."

திருக்கின்றன. ஆதலால், புருஷர்கள் எப்போதும் ஸ்திரீகளைத் தனியேவிட்டு வைத்தல் கூடாது.

" மங்கையர்பொருட்டாலெய்து மாந்தர்க்கு மரணமென்றல்
சங்கையின்றுணர்தி வாலிசெய்கையாற் சாறு மின்னும்
அங்கவர் திறத்தினலே அல்லலும் பழியுமெய்தல்
எங்களிற்காண்டியன்றே இதற்குவேறேதியாதோ. "

— கம்பர்.

உலகத்தில் பழிபாவம் அச்சம் முதலிய உண்டாவதற்குக்காரணம் பெண்களேயாவர். சுக்கிரநீதி என்கிற நூலிற் சொல்வது:—

"இளம் பிராயமுள்ள தன் மனைவியைப் புருஷன் தன் காவலில் எப்போதும் அடக்கி வைத்திருத்தல் வேண்டும். எக்காரணத்தாலும் அவர்களைச் சுதந்தரர்களாக விட்டு வைக்கப்படாது. அவர்களுக்குச் சுதந்தரம் கொடுப்பது தனக்குப் பெருங்கேட்டினை விளைவிப்பதோடு, குடும்ப வாழ்க்கைக்கும் அகவுரவத்தை உண்டு பண்ணும். அயலாரோடு நேசிக்கும் பெண்களுக்கு நேரும் கெடுதி சொல்லத்தர

---

" கஷ்டப்படுகிறவன் ஒருவனே, சுகத்துக்கும் சுதந்தரத்துக்கு முரியவனாகிறான். "

மல்ல; எப்பொழுதும் பெண்கள் வசம் வயப்பட்டவர்கள் உயிர் வாழ்ந்தாலும், அவர்கள் நடைப்பிணங்களாவர்."

ஒருவன் விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று வேதம் விதித்திருக்கிறதென்னெனில், இல்வாழ்க்கையென்னும் கிருகஸ்தாஸ்ரமத்தைச் சிறப்பாக நடத்துவதற்கும், சந்தான விருத்தி உண்டுபண்ணி வம்சம் விருத்தியாவதற்குமே தவிர, பணத்துக்காசைப்பட்டேனும், போகத்துக் காசைப்பட்டேனும் அல்ல; இவ்விதி ஆண் பெண் இருபாலருக்கும் பொருந்தியது. பணத்துக் காசைப்பட்டேனும், போகத்துக் காசைப்பட்டேனும் விவாகம்செய்து கொண்டால்; அவர்களிடம் கற்பொழுக்கம் நீடித்திராது.

---

" A man who marries for money or ambition is departing from biological and moral ends of marriages. A man who sells herself is morally on the same level, as one who sells herself for a might."

(HANELOCK ELLIS.)

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

# தாய்வீடேகும் பெண்களின் தவிப்பு.

விவாகமான பெண்கள் தங்கள் நாயகன் வீட்டிலேயே யிருந்து, மாமன் மாமிகளுக்கு உபசாரம் செய்வதோடு, நாயகனோடு ஒற்றுமையாயிருந்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாகச்செய்து வாழவேண்டுமென்பது கிருகஸ்தாஸ்ரமத்தின் கொள்கை. பிர்மா சரஸ்வதியை நாவிலும், மஹாவிஷ்ணு லக்ஷ்மியை மார்பிலும், உமாதேவியாரைப் பரமசிவம் தமது இடப்பாகத்திலும் அமர்த்தியிருப்பதாகச் சொன்னது, சத்தியும் சிவமும் பிரிக்க முடியாததென்பதை நிரூபிக்கிறது.

இவ்வாறிருக்க, அநேக குடும்பங்களில் தம் பெண்களை விவாகம் செய்து கொடுத்த பிறகு, தாய் தந்தையர்கள், தங்கள், வீட்டுக்கு அடிக்கடி வரவழைத்து,

---

"பணத்தை வீணாக அழிப்பதைவிட, பணத்தினிடத்தில் பேராசை வைப்பதே அதிகமாக நாசம் செய்யும்."

நீண்டநாள் வைத்துக் கொள்ளுகிறார்கள். அதனால் கண வனுக்கும் மனைவிக்கு முள்ள காதல் வாழ்க்கையானது, கெடுதி அடைகிறதுமன்றி, கணவனுக்கு மனைவியால் செய்யவேண்டிய உபசாரங்கள் குறைவுபட்டு, கண வன் வருந்தும்படி நேரிடுகிறது. மனைவியினிடத்துள்ள காதல் மிகுதியினால், கணவன் தனது மாமனார் வீட்டிற்குச் செல்வானாகில், சில மாமனார் - மாமியார் - மைத்துனர் முதலியோர்கள், அவனைச்சரிவர உபசரித்து, மரியாதை செய்யாமலும், அலக்ஷியமாகவிருப்பது நிதர் சனமான விஷயமாகும். இச்செய்கைகள் சகல சாஸ் திரம் படித்து, உலகம் மதிக்கும் பெரியார்கள் குடும்பங் களில் மிகுதியாக நடக்கின்றன. பெண்களிடம் வைத் துள்ள விஸ்வாசத்தினால், தாய் தந்தையர்கள் பெண் களுக்கு நல்ல உணவும் நல்ல ஆடையும் கொடுக்க முடி யுமே தவிர, புருஷ சுகத்தைக்கொடுக்க முடியுமா என் பதை ஆலோசிக்க வேண்டும். தாய் வீடே கதியுள்ள பெண்கள், கணவனிடத்தில் மரியாதையாக இரார்கள்.

---

"அதிக ஆநந்தம் அநுபவிக்க ஆற்றலில்லாதவன், உயர்ந்த ஒழுக்கமுடையோனாயிருக்க முடியாது."

தன் மாமன் மாமிகளையும் அலக்ஷியமாக நினைப்பார்கள். கணவனும் தன் காமவெறியை நீக்கிக்கொள்ள, மனைவி வீட்டிலில்லாமையால், பர ஸ்திரீகமனம் செய்யவும், தாசி வேசிகளிடம் நட்பு கொள்ளவும், அதனால் சரீர கஷ்டமும் பொருள் நஷ்டமும் அடைந்து வருந்தும்படி நேரிடும். இது, மனைவிக்குத்தான் பலவகை கஷ்டங்களைப் பிற்காலத்தில் உண்டாக்குமென்பதைத் திட

நண்பர்காள்! உமது மனைவினிடம் அன்புண்டா? காதல் உண்டா? புத்திரசந்தான உண்டா? வாழ்க்கையில் சந்தோஷமுண்டா? மனைவிக்கு உன்னிடம் நம்பிக்கையும் - காதலும் - அன்பும் உண்டா? மதன லீலா இன்பம் அடைவதற்குரிய மார்க்கம் இல்லையே! என்பதாக சதி பதிகள் இருவரும் கவலை அடைய வேண்டாம் இனி! 50 - வருட அநுபவம் வாய்ந்த பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய,

1. அசல் கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் 2—8—0.
2. கணவன் மனைவி காம கலா ரகஸ்யம் 2—8—0.
3. சதிபதிகள் மதனலீலா இன்ப தத்துவம் 2—8—0.

இம்மூன்று புத்தகத்தையும் ஆழ்ந்து படித்தால், மேற்சொன்ன விஷயங்கள் யாவும் ஒருங்கே அடைவீர்கள்! இது அநுபவித்த குடும்பத்தார்களுடைய வாக்காகும்.

மாய் அறியவேண்டும். தாசிவேசி நேசங்கொண்டவர்கள், தம் மனைவியை வெறுத்து ஹிம்சிப்பார்கள். குடும்பத்தைக் கவனிக்கமாட்டார்கள். மனைவி உத்தமகுணமுடையவளா யிருந்தால், காமநோய் வரினும் ஒருவாறு தணித்துக்கொண்டு, அதனால் நேரும் கஷ்டங்களை அநுபவித்துக்கொண்டிருப்பாள். அதம குணமுள்ள மனைவியாயிருந்தால், வியபிசாரத்துக்கீடுபட்டுக் குடும்பப்பெருமையைக் கெடுத்துத்தானும் பலவகை அல்லல்களுக்குட்படுவாள். இதனாலன்றோ "தாய் வீடேகிய பெண்ணும் பேயோடாடிய கூத்து மொக்கும்" என்று பெரியோர் கூறியிருக்கிறார்கள். ஆகையால், பெண்ணைப்பெற்ற தாய் தந்தையர்கள், பின்னால் பெண் அடையும் கஷ்டங்களை யோசித்து, பெண்ணிடத்துப் பூரண விஸ்வாச மிருந்தாலும், அடிக்கடி தம் வீட்டில் தனியே வரவழைக்காமலிருக்கவேண்டுவ தவசியம். விசேஷ காலங்களில் வரவழைக்க நேரினும், தன் புருஷனோடு வரவழைத்து உபசரித்து, தகுந்த மரியாதை செய்வித்து, உடனே அனுப்பி விடவேண்டும்.

---

"நற்குண நற்செய்கையுடைய மனைவிகள் வாழும் குடும்பத்தில் வறுமையிருந்தாலும் அது வெளித்துத் தெரியாது."

சில விடங்களில் பெண்ணின் தாய் தந்தைகள் புருஷன் வீட்டாரிடம் மாற்சரியப்பட்டு, அதனுல் தம் பெண்ணை வரவழைத்துத் தம் வீட்டில் வைத்துக் கொள்ளுகிருர்கள். அக்கம் பக்கத்தார் அத்தகைய பெண்ணை, வாழாவெட்டியென்று சொல்லும்படி நேரிடு கிறது. பெண்ணின் புருஷன் எவ்வளவு வறியவனுயிருந் தாலும், பெண் தன் புருஷனிடமே வாழவேண்டிவிட்டு விடவேண்டியது தாய் தந்தையர்களது கடமை. பெண் வீட்டார் இயல்புடையவர்களாயிருந்தால், மருமகனு க்கு வேண்டிய சகாயம் செய்யலாம். புருஷன் எத்தகைய கொடுமையாளனு யிருந்தாலும், மனைவி தன் புருஷனோ டிருந்து, சகல கஷ்ட நஷ்டங்களை அநுபவித்து, அவன் காலின் கீழே உயிரை விடவேண்டும். இது, உத்தம ஸ்திரீகளுக்கு அழகு. இவள் தான் கற்புடைய மங்கை என்பார்கள்.

" வேதமோதிய வேதியர்க்கோர்மழை
நீதிமன்னர் நெறியினர்க்கோர் மழை

---

∴ எப்போதும் சந்தேகமுள்ளவன் செய்யும் எக்காரியமும் சங்கடத்தில் வந்து முடியும். " ஸம்ஸ யாத்மா வி நஸ்யதி-கீதை

கோதில் கற்புடை மங்கையர்க்கோர் மழை
மாதமூன்றும் மழையெனப் பெய்யுமே"

சில ஆடவர்கள் தன் மனைவியின் தாய் வீட்டார் செல்வந்தர்களாக விருப்பின், அங்கிருந்து பொருள் கொண்டுவர நிர்ப்பந்தித்து வருத்துவார்கள். அந்த நிர்ப்பந்தத்தைப் பொறுக்கமாட்டாமல், தாய் வீடே கதியாயிருப்பார்கள் சில ஸ்திரீகள். இது ஆடவர்க்கும் அடாது; உத்தம ஸ்திரீகளுக்கும் அடாது;

"உத்தமம் சுயரார்ஜ்ஜிதம் வித்தம்,
மத்திமம் பிதுரார்ஜ்ஜிதம், அதமம் சேவகாவிருத்தி,
ஸ்திரீ வித்தம் அதமாதமம்"

என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில ஆடவர்கள் பெருமைமேலீட்டினாலும், மாமியார் வீட்டுச்சொத்தை அபகரிக்கவேண்டுமென்கிற எண்ணத்தினாலும், மாமியார் வீட்டிலேயே தங்குகிறார்கள். மாமியார் வீட்டில் தங்கி ஜீவிக்கின்றவன், மஹாபாபகரமான நரகத்தை அநுபவிப்பானென்று தர்மராஜாவுக்கு பீஷ்மாசாரியார்

"மனிதர்கள் சிலர் உருவத்தில் பலவீனமாயிருந்தாலும், மனத்தில் திடமாக இருப்பார்களாயின் அவர்கள் செய்யும் காரியங்கள் சுகமாகவே முடிவு பெறும்."

உபதேசித்ததைக் கவனிக்கவேண்டும். தவிர, மாமியார் வீட்டில் விருந்துண்பவன் மூன்றுவேளைக்கு மேல் சாப்பிடக்கூடா தென்பார்கள்.

முதல்நாள் வாழையிலை; இரண்டாம்நாள் தையல் இலை; மூன்றும் நாள் கையிலே; நான்காம் நாள் எறிந்து விடும் எச்சிலிலைக்குள்ள மதிப்புண்டாகுமென உலகத்தார் சொல்லுவார்கள். மாமியார் வீட்டில் தங்கும் ஆடவன், தன் மனைவி இஷ்டம்போல் நடத்தல் வேண்டும். இன்றேல், அவன் தன் மனைவியாலும் மாமன் - மாமி - மைத்துனன் முதலியவர்களாலும் அலக்ஷியப் படுத்தப்படுவான் என்பது நிதர்சனம். எக்காரணம் பற்றியும், ஸ்திரீகள் புருஷனைவிட்டு அரைக்ஷணமும் பிரியக்கூடாது.

" மருமகன் மாமியார் வீட்டில் நிரந்தரம் விருந்துண்பவன், ஒருநாள் ஸ்வஸுரகிருஹம் (மாமியார் வீடு பரமஸுகம், என்று எழுதி வைத்தனர். அதற்கு மைத்துனன், அதன் கீழ் த்ரிராத்திரிக்கு (மூன்றுதினம் விருந்

" ஸ்வஸுரகிருஹம் பரமஸுகம் திரிராத்ரி அஸ்தி சேத் ஸ்வான சமானம். "

துன்னில்) ஸ்வான (நாய்) சமானம் என்று எழுதி வைத்துச் சென்றான் என்பது ஆன்றோர் வாக்கு."

---

## பதிமூன்றாவது அத்தியாயம்.

# மாமி மருமகள் வாழ்க்கை.

கணவனும் மனைவியும் இன்ப சுகந்தரும் அன்பு பொருந்திச் சேர்ந்து பெற்றுச் சீராட்டித் தாலாட்டிக் கல்விகற்பித்து வளர்த்த மகனுக்கு, நல்லகுலம்,கோத்ரம்-நல்லொழுக்கம் நிறைந்த குடும்பத்தில் பொருந்த நிமித்தம் பார்த்து, ஒருபெண்ணை விவாகம் செய்து வைக்கிறார்கள் தாய் தந்தையர்கள். அம்மகனுக்கு மனைவியாய் வந்த பெண், மருமகள் என்று சொல்லப் படுவார்கள். மருமகளைத் தான்பெற்ற பெண்ணுக்குப் பதின் மடங்கு பரிதுகாத்துத் தன் மகனும் மருமகளும் ஒற்றுமையோடு வாழ்ந்து, அவர்களுக்குள் மனத்தாங்கல் உண்டாயின்,

---

" தற்காலம் மேனாட்டார் நம் நாட்டுக்குக் கொண்டுவந்துள்ள கருப்பத் தடையினால் பெண்களுக்கு ஒழுக்கக்கேடும் - தேக வலிமைக் குறைவும் - சோரமும் அதிகமாகு மென்று மஹாத்மா காந்தி முதலிய அறிஞர்களது அபிப்பிராயம். "

அதைப் பாரபக்ஷமின்றித் தீர்த்து, அவர்கள் சந்தோஷமாய் இல்லற சுகத்தை அநுபவிக்கும்படிச் செய்யவேண்டியது மாமியாரது கடமையும் நீதியுமாகும். சில குடும்பங்களில் மருமகளைப் பல வழியில் துன்பப்படுத்தி, தன் மகனோடு ஒற்றுமையாய் வாழவிடாமல் செய்வது, மாமிமார்களின் அறியாமை யென்றே சொல்லலாம். காதல் வாழ்க்கையிலீடுபட்டுச் சிற்றின்ப சுகத்தை அடைய வேண்டிய பெண்மணிகள் மாமியாரின் கொடுமைகளால், தன் இளமையில் புருடனுடன் அநுபவிக்க வேண்டிய அன்பையும் சுகத்தையும் புத்திர பாக்கியத்தையும் அநுபவியாமல், பல வகையான துன்பங்களை அநுபவிக்கிறார்கள். சில பெண்கள் மாமியாரின் கொடுமைக்கு ஆற்றாது, தன் தாய் வீடு செல்லுகிறார்கள். தாய் வீடு செல்வந்தனாயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, தான்பெற்ற பெண்ணுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து ரக்ஷிப்பானே தவிர, புருஷ சுகத்தை

---

"ஸ்திரீ புருஷ சம்வர்க்கம் செய்யும் போதெல்லாம் கருப்ப முண்டாகிற தென்பது தவறு. பூர்வ ஜென்ம பரிபாகமும் கடவுள் திருவருளும் உண்டானலொழிய புத்திர பாக்கியம் உண்டாவதில்லை."

எவ்வாறு கொடுக்க முடியும் ? மனைவி, தாய் வீடு சென்றால், புருஷன் என்ன செய்வான் ? மனைவி பக்கம் பேசினால், தலையணை மந்திரம் தலைக் கேறிவிட்டதோ என்பாள் தன் தாயார். விவேகியாயுள்ளவன், சொன்னால் வெட்கம் அழுதால் துக்கமென்று, தனக்குள் தானே மனம் புழுங்கி வருந்துவான். சிலர், இதுதான் சமயமென்று, தாசி வேசிகள் நேசம் செய்து, கைப் பொருளிழப்பதோடு, சரீரத்தில் பல ரோகங்களுக்குமுட்பட்டு வருந்துவார்கள். தாய் வீடுசென்ற மனைவி கதியோ, உத்தமிகள் காம மயக்கத்தால் மனம் வெந்து, உடம்பு மெலிந்து கஷ்டப்பட்டும், சிலர் உயிரிழந்தும் போகிறார்கள். சில துஷ்டைகள் வியபிசாரத்திலிறங்கி, பிறந்த வீட்டுக்கும் அகவுரவத்தை விளைவிப்பார்கள். வியபிசாரமாய்ப் போனவர்களைத் தாய் வீட்டாரும் சேர்க்கார்கள். புருஷன் வீட்டாரும் வெறுப்பார்கள். உற்றார் உறவின் முறையாரும் பழிப்பார்கள். சில பெண்கள் மாமியின் கொடுமையால் தற்கொலை செய்து கொள்வது முண்டு. வியபிசாரத்துக் கிடுபடுத்திச் சேர்ந்த

---

“பாவத்துக்கு அஞ்சு ; எல்லாம் வல்ல இறைவனை நம்பு. உனக்கு மேலான பதவி கிடைக்கும்.”

புருஷன், சில நாள் வரையும் அன்புடன் நேசித்துப் பின்னர் ஆலாய்ப்பறக்க வைப்பார்கள். அப்போதுதான் வியபிசாரத்தாலுண்டான சுகம் துக்கமாக மாறிப் பல வகை துன்பத்துக்கு ஆளாக வேண்டி நேரும். இவ்வளவும் மாமியார் செய்த கொடுமையே காரணம்.

கணவன், தன் மனைவி மாமியார் மூலம் கஷ்டப் படுவதைக் கண்டிரங்கி, தன் தாயை நோக்கி, அம்மா! அவள் என்ன குற்றம் செய்தாள்? எனக்கு விளங்கச் சொல்லுங்கள் என்று சமாதானமாய்க்கேட்பினும், தாய் ரௌத்ரகாளி உருக்கொண்டு, அடேய்! நேற்றைய மொட்டைப் பையன், நேற்றுவந்த சிறுக்கியின் மயக்கத்தில் அகப்பட்டு, என்னை விசாரிக்க வந்துவிட்டனையோ! பேஷ்! நன்றாயிருக்கிறது. சிறுக்கி தலையணை மந்திரம் மண்டைக்கேறி விட்டாப் போலிருக்கிறது. வந்ததே சிறுக்கி பந்தடித்தாள் - வரவர சிறுக்கி கழுதை மேய்க்கிறாள் என்று சொல்வார்கள். அதுபோல் மாமி-நாத்தி

" ஒருவன் செய்த குற்றத்தை மன்னிப்பதும் அதை மறந்து விடுவது உத்தமம். அதனால் ஒருவர்க்கொருவருடைய நேசம் விருத்தி அடையும்; நட்பு பரவும். சமாதானம் வளரும். சண்டை சச்சரவுகளுக்கிடமில்லை."

யென்கிற மரியாதை கொஞ்சம்கூட இல்லாமல், எங்களை லக்ஷியம் செய்வதில்லை அந்த முறிச்சிறுக்கி! அடபாவி! மாலைப் பொழுதில் நறு மஞ்சள் அரைத்தே குளித்து, வேலை மினக்கிட்டு விழித்திருந்தேன்; சூல் கொண்டேன்; பத்து மாதம் சுமந்தேன்; பெற்றேன்; சிரிட்டேன் தாலாட்டினேன் பெயரிட்டேன். இத்தனை பெரியவனாய் வளர்த்தேன். கடனுடன் பட்டேன்; கஷ்டப் பட்டேன்; உனக்குக் கலியாண இழவும் செய்தேன்; அடபாவி! என் வயிறு எரிகின்றதே! அந்த முண்டை சொன்னபடி கேட்கிறாளா! நான் ஒன்று சொன்னால்

---

ஸ்ரீ ஸதானந்த யோகீஸ்வரர் சர்வ ரோக ஹரி என்னும்
கிழவனைக் குமரனுக்கும்

மதன விநோத சிந்தாமணி லேகியம்.

இதைப்பற்றி தமிழ் நாட்டுத் தேசபக்த வீரத் தலைவரான ஸ்ரீஜத் சுப்பிரமண்ய சிவம் எழுதுவது:—“இவ் லேகியம் இடீரென்று கிழவனைக் குமரனுக்காவிடினும், விளம்பரத்தில் சொல்லியபடி ரோகங்களை நீக்கி, ஜீரண சக்தியை விருத்தி செய்து, சரீரத்தைப் பலமுள்ளதாகவும் கட்டுப்பாடுள்ளதாகவும் மனதிற்கு குதூகலமும் உற்சாகமும் உண்டாகும்படி செய்கிறது”

(ஒப்பம்) சுப்பிரமண்ய சிவம்,

விலை 1-பவுன் புட்டி 1-க்கு விலை ரூபா 4—0—0.

அவள் இரண்டு சொல்லுகிறாள்! நாம் என்ன? ஜாதியில் தாசியா ? வேசியா ? விதம் விதமான ரவிக்கையும் சேலையும் அணிகிறாளே தவிர, குடும்பக் கவலை அவளுக்கு என்னத்துக்கு? அவள் என்ன உபதேசம் செய்தாள் ? என்னை விசாரிக்க வந்துவிட்டனையே! என்று கொக்கரித்துப்பேச, அண்டை அயல் வேடிக்கை பார்க்க, மகன் என்ன செய்வான் ? திக்பிரமைகொண்டு மரம்போல் நின்று, போதும் போதும் கல்யாணம் பண்ணிக் கொண்ட சுகம் என்று மனம் வருந்தி, இருதலைக் கொள்ளி எறும்புபோல் கஷ்டப்படுவான். இந்த சங்கதி வீட்டோடோர்வது போகுமா ? அக்கம் பக்கம் பெண்

---

சுவராஜ்யத்திற்கு முதல்வழி உம்முடைய தேக ஆரோக்கியமே!

அதனை அடைவதற்கு

வாத்யாயனர் மதனலீலா லேகியம்

ஒரு மண்டலம் சாப்பிடுங்கள்

மனச்சிக்கல் - வயிற்று-கோளாறுகள்-வாய்வு ரோகங்கள் மேக ரோகங்கள் முதலிய சகல ரோகங்கள் இருந்தவிடம் தெரியாமல் பறக்கும். இந்திரிய புஷ்டி தரும்; இன்பத்தில் மனம் வயிக்கும். 1-பவுன் புட்டி 1-க்கு விலை ரூபா 5-0-0.

பிள்ளைகளிடம் மருமகளைப்பற்றி அபாண்டமெல்லாம் சொல்வாள். இவ்வளவும் மருமகளைக்கவுரவித்து நடத்தாத மாமியின் கொடுமையே. இந்த கோலாகாலத்தைக் கண்ட புருஷன் என்செய்வான் ? விவேகியாயிருந்தால், தன் மனைவியும் தானும் வேறு குடித்தனம் பண்ணுவார்கள். அங்கேயும், பெண்சாதி வந்தாள், அடுப்பு இரண்டாச்சுது என்று மருமகள்மீது வீண்பழி நேரும்.

இத்தகைய கொடிய மாமியாரோடு தாய் வீடேகதியென்று வந்துள்ள நாத்தியும் சேர்ந்தால், வேறு வினை அந்தக்குடும்பத்துக்கு வேண்டியதில்லை. நெருப்பில்லாமல் படி அரிசி அங்கு வேகவைக்கலாம். மருமகள் திண்

---

ஒரு விசேஷம் :—கொக்கோக வைபவம் என்னும்
மன்மதன் திருவிளையாடல் என்னும் புத்தகம்

விளம்பரத்தை படிக்கும் போதே அதன் மீது மனம் மயங்கி அதனை வரவழைக்க ஆர்வம் கொள்ளுகிறது. அதனைப் படித்து இன்புறுவர்கள்; திடமான இல்லறஇன்பத்தை உண்மையாகவும் ஒற்றுமையாகவும் அடைவது திண்ணம். பல போலி புத்தகங்கள் வந்துள்ளன ; அதனை ஏமாந்து வாங்கி கஷ்டமடையவேண்டாம். கவனித்து வாங்குங்கள்!!!

டாடப்படுவதொரு புறமிருக்க, மகனும் ஓடுவதற்கும் வழி தேடவேண்டியதுதான். மாமி நாத்திகளின் மருமகளிடம் செய்யும் கொடுமைகளை வரையப்புகுந்தால், ஆயுள் முழுதும் புத்தகம் புத்தகமாக எழுதலாம். இச் சிறு புத்தகம் இடம் கொடாததினால், ஏதோ இரண்டொரு, விஷயங்களைச் சுருக்கமாக எழுதினோம்.

ஆதலால், தாய் தந்தையர்கள் தன்மகனுக்கு விவாகம் செய்தவுடனே, தனிக்குடித்தனம் வைத்து, அவர்கள் சந்தோஷமாயிருக்கக்கண்டு கண்குளிரப் பார்ப்பதே, விவேகத்தன்மையாகும். இதனால் இரு குடும்பமும் சந்தோஷமாயிருக்கு மென்பதில் ஐயமில்லை.

---

"கடவுள் எல்லா வஸ்துக்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார், அதி அற்புதமான சிருஷ்டிக்கும் காரண பூதர் அவரே. ஆனால், இவ்வித ஆச்சரியமான வஸ்துக்கள் எவற்றிலும் பிரசன்னமாக இருப்பதில்லை, காருண்யம் - தயை - தருமசிந்தனை இவை குடிகொண்ட பரிசுத்த ஹிருதயங்களில் எப்போதும் பிரசன்னமாக இருக்கிறார்.

## பதினான்காவது அத்தியாயம்.

# நற்குணப் பெண்டிர் விதவா நோன்பையும் வெறுப்பர்.

பண்டைக் காலத்துத் தமிழ் நாட்டு மகளிற் பலர், தன் நாயகன் இறந்தா னெனச்சொல் செவியிற்படா முன்னே, பெருமூச்சு விட்டு, அயர்ந்து உயிர் துறப்பர். தன் கணவனுக்காகக் கட்டப்பட்ட செந்தீயை நன்னீர்ப் பொய்கையாகக் கருதி மூழ்குவர் பலர். மற்றும் சிலர் தம் புத்திரனைக் காப்பாற்ற வேண்டித் தம்கொழுநனோடு, மறுமையின் கண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையை விரும்பி, விதவைகள் செய்யும்படியான நோன்புகளை நூற்று, முகத்துக்கு அழகினை யுண்டாக்கும் தலைமயிரை க்களைந்தும், சுக போகத்தை வெறுத்தும், நல்லாடை

" கணவன் மனைவி புணர்ச்சி செய்யுங்காலத்தில். மனைவி யானவள், எந்த குணத்தை நினைக்கிறளோ, அந்த குணத்தை யுடைய கர்ப்பம் அமையும்; புணர்ச்சி செய்து எழுந்திருக்கும் போது, எந்த உருவத்தைப் பார்த்தாளோ, அந்தச் சாயல் கருப்பத்தில் போடோ படம் போல் தங்கும். "

ஆபரணங்களை நீக்கியும், கனல்வாதைவந்தெய்தும்போது, காய் - கனி - கிழங்கு - பச்சிலைகளை யுண்டும், வெறும் தரை மீதிற் படுத்துறங்கியும் வாழ்ந்து வந்தனர். திருஷ்டாந்தமாக,

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களாக அரசு செலுத்தி, தேவர்களைநடுங்கச்செய்து, ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் வேலாயுதத்தால் மடிந்த சூர பத்மன், இறந்தானெனச்செவியுற்ற காதலி, பதுமகோமளை யென்பாள், இடியேறுண்ட நாகம் போல் பதறி வீழ்ந்து, உயிர் நீத்தாள். பூத பாண்டியன் இறந்தானெனக் கேட்ட அவன் காதன் மனைவி பெருங்கோப்பெண்டு, தீப்பாயச் சென்றபோது, ஆங்குள்ள சான்றோர்கள், விதவா நோன்பு நூற்றுக் காலங் கழிக்கலாமென்றோதியும், அம்மாது விதவா நோன்பு நூற்பது

"பட்டுப்போலும் ஸ்பரிச உணர்ச்சி தரும் உடம்பினதாயினும், வாய் நிரம்பிய விஷப்பற்கள் உடைய சர்ப்பம் போன்றது இவ்வுலகம். அறிவில்லாதவர்கள் இத்தகைய உலகின்மீது ஆசை கொண்டு அலைந்து வருந்துவர், அறிஞர்கள் புளியம் பழமும் ஓடும்போல், ஒதுங்கி நிற்பர்.

கயவற் பெண்டிரென்று சொல்லித் தீப்பாய்ந்து ஆவியை நீத்தாள். கோவலன் மனைவி கண்ணகை, காதலன் இறக்கவும், கனையெரி வீழாமல், சின்னாள் தங்கிப்பின், தன் கணவனை அடைந்தாள். சிரங்கநாயகியோ தூர தேசம் சென்ற நாயகன் நிலைமை அறியாமலே, செயற்கருஞ் செயலாகிய தீ மூழ்கி ஆவி துறந்தார். இத்தகைய கற்புக்கரசிகள் வாழ்ந்த நம் பாரத நாட்டில், தற்காலம் விதந்துவாய்விட்ட பெண்மணிகள் காமவெறி கொண்டு, பலப்பல ரோகங்களால் பீடிக்கப்பெற்று, இளமையில் உயிர்துறக்க நேரிடுகிறதே யென்று மாயக் கண்ணீர் விடுக்கும் நவீன ஆசார சீர்திருத்தக்காரர் களும்—ஆரிய பிர்ம்ம சமாஜத்தாரும் நிரம்பி, விதவாவிவாகம் செய்ய வேண்டுமென்று கூக்குரலிடும் வேடிக்கையை என்னென்றுரைப்பது? இவ் வரசாங்கத்தில் உடன் கட்டையேறக் கூடாதென்கிற சட்டம் இருப்பது வாஸ்

---

“கைம்மாறு கருதி கடவுளை வணங்குவார் சிலர்; இது வர்த்தக முறை. தண்டனைக்கஞ்சி வணங்குவார் சிலர்; இது அடிமை முறை. நன்றி செலுத்தும் பொருட்டு வழிபடுவோர் சிலர்; இது சுதந்தர புருடர் செய்யும் உத்தம முறை.”

தவமே! விதவா நோன்பை அநுஷ்டிக்கப் படாதா? சுக போகத்தையும் நல்லாடை ஆபரணாதிகளையும் கட்டில் மெத்தையையும், சுக உணவையும் விதந்துக்கள் நீக்கிக் கடவுளிடம் மனோ வாக்குக் காயத்தை அர்ப்பணம் பண்ணி, பக்தி செலுத்தப்படாதா? என்னமோ? கலிகால் நாகரீகம்? கலிகாலக் கொடுமை! விபரீத புத்தி தோன்றி,பாரத நாட்டைப்பரதவிக்கவிடுகிறது. கடவுள் தான் இரக்ஷித்தல் வேண்டும்.

> "அன்பு வாழ்கென்ற மைதியிலாடுவோம்
> ஆசைக்காதலைக் கை கொட்டி வாழ்த்துவோம்
> துன்பந்தீர்வது பெண்மையினாலடா
> சூரப்பிள்ளை தாயென்று போற்றுவோம்."
>
> — சி. சு. பாரதியார்.

---

"உன்னுடைய ஜீவிய காலத்தில் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தாலும், அதற்காகக் கவலை யுறப்படாது. உனது குடும்ப வாழ்க்கையில் எத்தகைய இன்னலும் இடையூறுகளும் வந்தால், தைரியமாயிருத்தல் வேண்டும். புயற்காற்று எவ்வளவு பலமாய் அடித்தாலும்,சீக்கிரத்தில் நின்று விடுவதுபோல், நமது கஷ்டங்களும் நீங்கி விடும்."

## பதினைந்தாவது அத்தியாயம்.

# விதந்துக்கள் அநுஷ்டிக்க வேண்டிய முறைகள்.

மனைவியை யிழந்த புருடர்கள் தேக திடமும்-தக்க வயதும் - பொருள் சவுகரியமும் - காம இச்சையும் உண்டாகி, மனமிருந்தால், மறுவிவாகம் செய்துகொள்ள லாம். முதல் சம்சாரத்துக்குக் குழந்தைகள் இருந்தால், அவர்கள் மறு மணம் செய்து கொள்வது, அவ்வளவு உசிதமல்ல. அவர்கள் ஒருவாறு மனதைத் தன்வயப் படுத்திப் பிரமசரிய விரதம் அநுஷ்டித்தால், தாங்கள் எல்லா வகையாலும் சுக மடையலாம்.

| | | |
|---|---|---|
| முதல் விவாகம்—சாரம் | = | கயிறு |
| இரண்டாவது விவாகம்—பாரம் | = | சுமை |
| மூன்றாவது விவாகம்—வாரம். | = | கற்பழிவு |

அதாவது முதல் விவாகமானது இல்வாழ்க்கையை நடத்துவதற்கு ஒருவித உபகாரமாயிருக்கும். மறு மண

" செல்வத்துக்கு மனிதர்களை அடிமைப் படுத்தத் தக்க சக்தி உண்டு. "

மாவது தனக்குத் தொந்தரவாயிருக்கும். இரண்டாவது வந்த மனைவிக்கு இஷ்ட காம்யத்தைப் பூர்த்தி செய்ய அவ்வளவாகச் சரீரத்தில் திறனிராது. ஆதலால், அது தனக்குப் பாரம் என்பார்கள். மூன்றாவது விவாகத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆண் மகனுக்கு வயோதிக திசை ஆரம்பமாகிறது. வந்த மனைவியோ, வாலிப வயதுடையவள். அவளுடைய இச்சையைப் பூர்த்தி செய்யப் புருஷன் என்ன முயன்றாலும், சரீர திடம் அதற்கு இடம் கொடாது. மனைவியோ காம விகாரங்கொண்டு, பர புருஷனைத் தேட வேண்டிவரும். புருஷன் அவள் இஷ்டத்துக்கு உடன் படவேண்டும். இன்றேல், அவள் வீட்டைவிட்டு விலகுவாள். இவ்விரு சந்தர்ப்பமும் குடும்பத்துக்கு அகௌரவமே யாம். ஆதலால், இதை வாரம் என்பார்கள். மறுமணம் வேண்டாமல், தாசி - வேசி நேசம் செய்தால், அதனு லுண்டாகும் தீமையை, இந்நாலின் 2-ம் பாகம் கணவன் மனைவி காமகலா ரகசியம் என்னும் புத்தகத்தில்,

---

" ஆண் பெண் இருவர்களது கோரிக்கைகள், தம் வாழ்நாளில் ஒன்றாயிருந்தால் தான், விவாகம் சந்தோஷமாக இருக்கும். "

வியபிசாரம் என்கிற அத்தியாயத்தில் விசிதமாய்க் காணலாம்.

பெண்கள் புருஷனை யிழந்தால், மறுமணம் செய்வதற்கு, நமது இந்து சாஸ்திரங்களில் ஆதாரம் எதுவுமில்லை யென்பார் பலர். வேறு சிலர் விதவைக் கல்யாணத்துக்குச் சாஸ்திர ஆதாரங்கள் உண்டு என்பார்கள். சாஸ்திர சம்மதம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஸ்திரீகள் வீணைக் காம விகாரத்தால் மனம் கலங்கி, வியபிசாரத்துக் குள்ளாவார்கள். அதனால் பலபேர் அறிய மறு மணம் செய்வதே உசிதமென்று சொல்வார்கள் பலர். ஆனால், சில ஜாதி வகுப்பில் நடுவீட்டு தாலி ஒன்று கட்டி, மனைவியாக வைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த முறையை அவ் வகுப்பார் அநுஷ்டித்தாலும், சில நற்காரியங்களில் அப் பெண்களை விலக்கியே வைக்கக் காணலாம். மேனாட்டு நாகரீகம் பரவிவரும் காலம்; பெண்களைப் புருஷர்களோடு சமத்துவமாக்க முயலும் காலம்.

---

"உள்ளும் புறம்பும் ஒன்றாயிருப்பான்; ஒருவருக்கும் அஞ்ச மாட்டான். தீய உள்ளமுடையான் ஒருநாளும் சுகம் அடைய மாட்டான்."

மேனாட்டுக் கல்வி - மேனாட்டு நடையுடையுடை பாவனை மேலோங்கி வரும் காலம்; ஆகிய இக் காலத்தில் மநு தர்ம சாஸ்திரமும் - பராசரஸ் மிருதியும் மற்றுமுள்ள தர்ம சாஸ்திரங்களும் என்ன பலனைத் தரும்?

ஆயினும், மநுதர்ம சாஸ்திர விதிப்படி விதந்துக்கள் அநுஷ்டிக்க வேண்டிய முறைகளை, ஈண்டு ஒருவாறு சொல்வோம்.

" காதலன் இறப்பின் கனையெரி பொத்தி
இன்னுயிர் ஈவர், ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரிபுகா ஆராயின், அன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர். " — மணிமேகலை.

ஆன்றோர்களது தர்ம சாஸ்திர விதிப்படி பத்தினிப் பெண்கள் புருஷன் இறந்தானெனக் கேள்வியுற்ற மாத்

---

" சர்க்கஸ் வித்தையிலே ஒரு சிறு பையன் உயரச்சென்று, ஒரு கயிற்றைப்பிடித்துச் சிறிதும் பயமின்றிச் சுற்றி வருகின்றானே, அதுபோல் கடவுளை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, உலகத்திற் செய்யவேண்டிய கடமைகளை, நீதி முறை தவறாது செய்துவந்தால், சிறிதும் பயமேயிராது." - ஸ்ரீராமகிருஷ்ணர்.

திரம், உயிர் விடுவார்கள். இவர்கள் பதிவிரதா தர்மத்தில் உத்தமர்கள். இதற்கு ஓர் கதை உண்டு:—

ஓர் ஊரில் அரசனும் அவர் மனைவியரும், ஓர் தினம், தன் மேல் மாடியில் நின்று, தன்னூரைச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவ்வூர் வணிகர் வீதியில், ஓர் சிறு வயதுள்ள ஆடவனிறக்க, அப்பிரேதத்தை மயானத்தில் கொண்டுபோய் எரிக்க முயன்றார்கள்; அப்போது வாலிபமும் அழகும்பொருந்திய அவன் மனைவியும், அப் பிரேதத்தோடு உடன் கட்டை யேறினாள். இந்த அதிசயத்தை அரசன் தன் பத்தினிக்குச்சொல்லி, நமது அரசில் தரும நீதிஎவ்வாறு விளங்குகிறது பார். வயதையும் அழகையும் நோக்காது, தன் புருஷனோடு உடன் கட்டையேறினாள். இவளல்லவோ பதிவிரதை? யென்று சொன்னான். அரச பத்தினி இதைக்கேட்டு, புருஷன் இறந்த பிறகு, உடன் கட்டை ஏறுபவள் பதிவிரதையா? என்று சொல்லவும், அரசன் ஆழ்ந்து யோசியாது வெகுண்டு, மனைவியோடு வாழ்

" ஆகாயத்திற் கப்பாலுள்ள நித்திய வாழ்வு, செல்வத்தினால் அடைய முடியாது."                    — லாங்பெல்லோ.

வதை வெறுத்தான்; மனைவியோ அரசன் தன்னிடம் வெறுப்புற்றிருந்தாலும், புருஷனுக்குச் செய்யவேண்டிய சகல உபசாரங்களையும் தவறுதலின்றிச் செய்து வந்தாள். ஓர் நாள், அரசன் வேட்டையாடச் செல்வதாகத் தீர்மானித்தான். ஈதறிந்த அரச பத்தினி, மந்திரி-பிரதானி - வேட்டையாட்கள் - முதலியவர்களை வரவழைத்து, வேட்டைக் காலத்தில் அரசனுக்கு யாதொரு விபத்தும் நேரிடா வண்ணம் பாதுகாத்து வரவேண்டுமென்று ஆக்கினையிட்டாள். வேட்டையாடும் தினத்தன்று, அரசன் மந்திரி பிரதானி சேனைகளோடு புறப்பட்டுச் செல்லும்போது, அரசியானவள், கடவுள் தியானத்தில், அரசன் ஆபத்தொன்றுமின்றிச் சுகமே வந்து சேரவேண்டுமென்று பிரார்த்தித்தாள். அரசன் வேட்டைக்குப் போனது முதல், தன் நாயகனையே ஸ்மரித்துக் கொண்டு, க்ஷேமமாய் வந்து சேரவேண்டு மென்று பிரார்த்தித்து, மணி கணக்கைப் பார்த்துக் கொண்டே

---

“ கொடுப்பவர்கள் பக்ஷமில்லாதவர்களென்று தெரிந்தால், அவர்கள் கொடுக்கும் சிறந்த வெகுமதிகள், பெருந்தன்மையுள்ளவர்களுக்கு அற்பமாகும். ” — ஷேக்ஸ்பியர்.

யிருந்தாள். மாலை 5-மணியானதும், வேட்டைக்குப் போன அரசன் வரும் வழியை நோக்கி, அரசனை எதிர் பார்த்திருந்தாள். ஈதிவ்வாறிருக்க, வேட்டைக்குப் போன அரசன், வேட்டையாடி முடிந்ததும், தனது பத்தினியின் மனதைச் சோதிக்க, அரசாங்க சேவகனொருவனை அழைத்து, "அடா நீ வாயுவேக மனோவேகமாய் ஓடி, இராணியைக் கண்டு, அரசனிறந்தானெனக் கூறு; அங்குள்ள நடவடிக்கையை உடனே என்னிடம் வந்து தெரிவி" என்றான். அவ்வாறே, சேவகன் ஓடோடியும் வருவதைக் கண்ட அரச பத்தினி, மனங் குழம்பி, போது போய்விட்டது, அரசனும் சேனைகளும் இன்னும் திரும்பி வரவில்லை, என்ன ஆபத்தோ என்று வருந்தி நிற்குங்காலையில், சேவகன் வந்து "அம்மா! அரசர் இறந்தார்" என்று சொல்லவும், அரசியானவள் மூர்ச்சையாய்க் கீழே வீழ்ந்தாள். உயிர் நீங்கிற்று. அடடா! அரசன் விளையாட்டுக்காகச் சொன்ன வார்த்தை, விபரீதமாய்ப்போச்சுதே யென்று, சேவகன் ஓடோ

---

"மனைவி மக்களிடத்து வைக்கும் அன்பு மானிட அன்பல்ல; ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதனுக்கும் உண்டாகும் அன்பு ஒன்றே மானிட அன்பாகும்."

டிச்சென்று, "அரசே! அரசர் இறந்தாரென்கிற கேள்வி மாத்திரம், அம்மா உயிர் துறந்தார்" என்று சொல்ல, அரசன் பெருமூச்சு விட்டு, பதிவிரதா தர்மம் என்பது ஈதல்லவா? இறந்தபின் உடன் கட்டையேறுவது சாஸ்திரத்துக்கும் உலகக் கட்டுகப்பாட்டுக்குமேயன்றி, உள்ளபடி மனம் கொண்டதல்லவென்று தீர்மானித்தான்.

இத்தகைய பதிவிரதைகள் கிடைப்பது அரிதினுமரிது. அதனால், அவர்கள் புருஷன் இறந்ததும் அவனோடு உடன் கட்டையேறுதல் உத்தமனென்று மநு சாஸ்திரம் சொல்லுகிறது. அந்த உடன் கட்டையேறும் விதி, நமது இங்கிலீஷ் அரசில் நிவிருத்தி செய்யப் பட்டிருக்கிறது. ஆதலால், புருஷனை இழந்த ஸ்திரீகள் தனியாய் வசிக்கப்படாது. தன் புருஷனுடைய தாய்தந்தையர்களிடமாவது, தன் தாய்தந்தை அண்ணன் தம்பி இவர்களிடமாவதிருந்து வசித்தல் வேண்டும். குங்குமம் மஞ்சள் அணியப்படாது. உயர்ந்த ஆடைகள் உடுக்கப்படாது. ஆபரணங்கள் யாவையும் விலக்குதல் வேண்

---

டும். தாம்பூலம் தரிக்கப்படாது. சத்துள்ள ஆகாரம் சாப்பிடக் கூடாது. தலை மயிரை நீக்க வேண்டும்-களப் கஸ்தூரி - சந்தன முதலிய வாசனை த்ரவியங்களை உபயோகிக்கப்படாது. ஒருபோது ஆகாரம் அருந்தல் வேண்டும். சாந்திராயண விரத மநுஷ்டானம் புரிய வேண்டும். எந்நேரமும் பகவத் பத்திசெய்து, கடவுள் நாம சங்கீர்த்தனம் செய்து வரவேண்டும். வயது முதிர்ந்த சாதுக்களோடு பழகி வருதல் வேண்டும். உலக போகங்களைத் துச்சமாகக் கருதவேண்டும். இது தான் ஆன்றோர்கள் அநுஷ்டித்து வந்த முறையாகும்.

☞ நவீன நாகரீகம் மேலோங்கும் இக்காலத்தில், மேனாட்டு நடையுடைய பாவனை ஒரு புறமும், மேனாட்டுக் கல்வி ஒரு புறமும் இருக்க, புருஷனிருக்கும்போதே பெண்கள், மஞ்சளையும் குங்குமத்தையும் நீக்கி, உயர்ந்த சோப்புக்களைப் பூசி, முகம் திரைந்து, கைம் பெண்கள்

---

"கொலை புரியாதே; வியபசாரம் செய்தே; பொய் சாக்ஷி சொல்லாதே; ஒருவரையும் துரோகம் செய்யாதே; பிறர் பொருளை அபகரியாதே; நீ எவ்வாறு நேசிக்கிறாயோ, அவ்வாறே பிறரையும் நேசி." — ஏசுகிறிஸ்து நாதர்.

போலக்காணப் படுகிறார்கள். அத்தகையோர்க்கு தர்ம சாஸ்திர போதனை எற்றுக்கு? கரு உண்டாகாது காக்கும் மருந்தும், கருவை அழிக்கும் மருந்தும், கரு தரியாமலே இஷ்டம்போல் அநுபவிக்கும் செய்முறைகளும் பரவி வரும்போது, விதந்துக்கள் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை?

“உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிருனுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரினு மித்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள் ஆடுகளுகொண்டே.”

— சி. சு. பாரதியார்.

---

## பதினாறுவது அத்தியாயம்.

# ஸூரிய நமஸ்காரம்

### தியானம்.


“பத்மா கரோபத்மகரத் த்வி பாயஹா
பத்மத் வ்தீ ஸப்த துராங்க வாஹா:
திவாக ரோ லோக குரு: கிரீடஹ:
மயிப்ரசாதம் - வித்தாது தேவாஹ:

---

“பாவம் செய்யாத ஒவ்வொரு நாளும் திருநாளாகும்.”

ஓம்:

ஆத்யாதி நவக்கிரகாதி பதியே நம:



சூரிய பகவான்

வரலாறு:—ஆதித்யம், ரத்தவர்ணம், ரக்த வஸ்த்ரம், ரக்த கந்தம், ரக்த மால்வாம் பாதரம், ரக்த கந்தாநுலேபனம், ரக்தாஸ்வம், ரக்த ஸ்சத்ரத்விஜாத பதாகாதிலேபாபிதம், திவ்ய ரதஸமாரூடம், மேரும் ப்ரதக்ஷிணே குர்வாணம், பிரான் முகம், சிம்ஹ ராசியாதி பதீம், கலப்க தேசா தீஸ்வரம், காஸ்யபகோத்ரம், விஸ்வாமித்ர ரிஷி: விசாக நக்ஷத்ர ஜாதகம், சுகாஸனம், ஸாங்கம், ஸாயுதம், ஸவாஹனம், ஸ ஸக்தி, ஸ பத்நி, ஸ புத்ர, ஸ பௌத்ர, ஸ பரீஸஹ, ஸ மேதகம், அதி தேவதா ப்ரதி தேவதா ஸஹிதம், மத்யே வ்ருத்தகாரமண்டலே, சூர்யக்கிரஹம் ஆவாஹயாமி: சூரியக் கிரஹஸ்ய தக்ஷணத. அக்நீம் ஆவாஹயாமி; சூரியக்கிரகஸ்ய உத்ரத: ருத்திரம் ஆவாஹயாமி: ஹிதம் ஆஸனம் சமர்ப்பயாமி; ஸ்தாபயாமி; பூஜையாமி: ஓம் சூரியக்கிரஹாய நம:

"காசினி இருளைநீக்கும் கதிரொளியாகி எங்கும்
பூசனை உலகோர் போற்றப் புசிப்பொடு சுகத்தை நல்கும்
வாசி எழுடையதேர் மேல் மாகிரி வலமாய் வந்த
தேசிகா எனைரக்ஷிப்பாய் செங்கதி ரவனே போற்றி."

---

"எவனொருவன் உலகத்தாண்டுதலுக்குள்ளிருந்து கொண்டே, பரிபூரணத்துவம் அடைகிறானோ, அவனே தீரன்."
— ஸ்ரீராமகிருஷ்ணர்.

## சூரிய நமஸ்கார தத்துவம்.

சூரிய நமஸ்காரத்தினால் பெரு வியாதி முதலாகிய சமஸ்த ரோகங்களும் நீங்கிச் சரீரத்துக்கு ஆரோக்கியத்தையும் வலிமையும் உண்டாக்குமென்று, நமது முன்னோர்களாகிய மஹாரிஷிகள், மத விஷயமாகிய சடங்கின் மூலமாக அநுக்கிரஹித்திருக்கிறார்கள். தற்கால நாகரீகச் சேற்றிலழுந்திய நாம், இந்த சுலபமான ஆரோக்கிய வழிகளை மறந்தோம். பல வகையான துக்கங்களையும் அநுபவிக்கின்றோம். அப் பெரியார்களை விட புத்திசாலியாக நினைக்கிறோம். அதனால், நாமும் நமது வம்சச்சிறுவர்களும் பலஹீனர்களாகி, அற்பாயுளில் மரணத்துக்குள்ளாகின்றோம். அந்தோ ! பரிதாபம்.

---

" மேனாட்டில் நாகரீகம் திடீர் திடீரென்று மாறி வருகிறது. ஜெர்மனியில் பெண்கள் சமையற் கட்டுகளுக்குப்போய் சமையற் காரியங்களைப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறார்கள். ஆகையால், இந்தியப் பெண்மணிகள் மேனாட்டு நாகரீகத்திற் சிக்காமல், புராதனமான இந்திய நாகரீகத்தைப் பின்பற்றி நடக்க வேண்டும்." -ஸ்ரீ ஜெயராம் தாஸ் தெளராம்

சூரிய நமஸ்காரமென்பது ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடிய ஓர் வகை தேகாப்பியாசம். இந்த அப்பியாசம் என்னவெனில், விடியற் காலத்தில் எழுந்து, காலைக் கடன் முடித்து, ஓடும் ஆற்று சலத்திலாவது-பரிசுத்த

---


## கலியுக மகிமை "ஜெயலக்ஷ்மி" இரக்ஷா பந்தனம்.

இதனை பக்தியுடன் தரித்துக்கொள்வோர்கட்குப் பேய், பிசாசு, ஜின்முனி, ப்ரம்ம ராக்ஷசு, ஏவல், பில்லி, சூன்யம், குழந்தைகளுக்குரிய தோஷங்கள், பாலக்கிரக தோஷம், ஸ்திரீகட்குரிய தோஷங்கள், இவை நீங்கிச் சந்தான விருத்தி உண்டாகும். பிரசவ வேதனை நீங்கிக் குழந்தைகள் சுகமே உதயமாகும். வியாபார விருத்தி, காரியானுகூலம், பிரபுக்கள் நேசம், உத்தியோக பலம், முதலியன உண்டாகும், தரித்திரம் நீங்கும், எந்த முக மும் தங்க முகம்போல் பிரகாசிக்கும். முக வசீகர சக்தி உண்டாகும். இது, ஓர் பிரஹ்மநிஷ்டரால் தயார் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்காகச் செலவழித்து வருவதே போதுமான நற்சாக்ஷி. தபால் வி. பி. சார்ஜ் உள்பட தனி இரக்ஷை 1-க்கு ரூபா. 5—0—0.

மான கிணறு குளத்திலாவது, வீட்டில் வெந்நீர் அல்லது குளிர்ந்த ஜலத்திலாவது, ஸ்நானம் செய்து, அவரவர் மத சம்பந்தமான அநுஷ்டானங்களை முடித்து, கிழக்கு நோக்கி, சூரியனைப் பார்த்து நமஸ்காரம் செய்தலே யாகும்.

## சூரிய நமஸ்காரம் செய்யும் விதம்.

" உரஸா சிரஸா த்ருஷ்டியா - மனஸா வஜஸா ததா: பதப்யாம் கராப்யாம் ஜாநுப்யாம் - பிரணமோஷ்டாங்க ஈரிதஃ "

---

" விஸ்வாமித்ரப் பராசர ப்ரப்ருதயோ
வாதம்பு பர்ணாஸனா !
ஸ்தேபி ஸத்ரீமுக பங்கஜம்
ஸுலலிதம் த்ருஷ்ட்வைவ மோகம் கதா: ! "

— பர்த்ரு ஹரி.

விஸ்வாமித்ர, பராசராதி பெருந்தவ சிரோன்மணிகளும் பெண்களின் அழகைக்கண்ட மாத்திரத்தில் மோகம் அடைகிறார்கள்.

தொடைகள் - தலை - கண்கள் - மார்பு - வாய் - பாதங்கள் - கைகள் - முழங்கால்கள் ஆகிய சரீரத்தின் எட்டு பாகங்களும் பூமியைத் தொடும்படி சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யவேண்டும். இதைச்சாஷ்டாங்க நமஸ்காரம் என்று சொல்வார்கள். இந்த அப்பியாசத்தில், சரீரத்தின் எல்லாச் சதைகளும் ஒரே அளவுக்கு மாற்றி மாற்றி நீட்டப்பட்டும் குறுக்கப்பட்டும் செய்வதால், இது ஒரு ஆரோக்கியமான அப்பியாசமென்பார்கள். இந்த நமஸ்காரம் கிழக்கு நோக்கி, சூரியன் முன் செய்வதால், அந்த சூரியனுடைய பிராணுதாரமான அல்ட்ராவயலெட் கிரணங்கள் தேகத்தில் படுகின்றன. இதனால், நமது சரீரத்திலுள்ள எலும்புகளும் பற்களும்

---

## எத்தகைய மாதர் தேவை ?

"இலக்கியம் வளர்க்கும் பெண்கள் நமக்குத் தேவை; நீதி வழங்கவும் நம் நாட்டுப்பெண்கள் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். வாணிபம், போர்த்தொழில் முதலிய யாவற்றிலும் பெண்கள் முன்னிற்கவேண்டும். ஆனாலும்; அவர்கள் மனை வாழ்வைத் திரஸ்கரித்தல் கூடாது."

— மிருநாளினி (நவசக்தி.)

சரியாக வளருவதற்கு ஓர் வகையென்று, நவீன சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்த நமஸ்காரம் அவரவர் சரீர வலிவுக்குத் தக்கபடி 108 அல்லது 1008 செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். அந்த அப்பியாசத்தினால் சரீரத்திலுள்ள அநேக வியாதிகள் சாந்தியாவதோடு, சரீரத்துக்கு வலிவையும், பக்தி வைராக்கியத்தையும், உண்டாக்கும் என்பதில் தடையில்லை.

---

30-நாளில் தானே சோதிடம் கற்க!

## சோதிட ஆசிரியன் வசனம்.

[நான்கு பாகம்] விலை ரூபா 4—0—0

"600-விஷயங்கள், பல சக்கரங்கள், நவக்கிரகவிஷயங்கள் அடங்கிய சோதிடப் பொக்கிஷம்." சோதிடக்கலை, விதியின் உண்மையை வலியுறுத்துவது; விதியால் விளையும் வாழ்வு நிகழ்ச்சிகளை விளக்குவது. விளைவது விளைக சோதிடக்கலை எற்றுக்கு? என்று சிலர் கேட்கலாம். சோதிடக்கலையால் வருங்கால நிலைமையை உணர்ந்து, அதற்கேற்ற முறையில் வாழ்வைப் பண்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். முயற்சியால் விதியின் விளைவை வெல்லுமாறு தூண்டுவது சோதிடக்கலையாகும். விதியை வெல்லுவதற்கு அறிவு கொளுத்தவே சோதிடக்கலை ஏற்பட்டது. அஃதொரு விஞ்ஞானக்கலை." நவசக்தி.

# சூரிய ஸ்தோத்திரம்.

ஸ்லோகம்.

"பானோ பாஸ்கர மார்த்தாண்ட சண்டரஸ்மி திவாகரஹ: ஆயுராரோக்கியம் ஐஸ்வர்யம் பர்ஸ்கராய நமோ நம:

"ஓம் ஹ்ராம் ஹ்ரீம் லோகாய
கனதன ஸ்ரீ சூர்ய முக ஸ்வாஹா:
மார்த்தாண்டாய ஸ்வாஹா:"

"ப்ரம்ம சொரூப முதயே
மாத்யேன்னுது மஹேஸ்வரா:
அஸ்தமானே ஸ்வயம் விஷ்ணு
த்ரிமூர்த்தாய திவாகராஹா:"

"ஓம்ஹரீம் ஹ்ரண்ய கர்ப்பாய
ஓம் ஐம் இஷ்டார்த்ததாய
சுப்ரஸன்னாய நமோ நம:

---

"அதிருஷ்டம் ஒருவர் வேண்டி வராமல், கர்மானுசாரத்துக்குத் தக்கபடி வரும்."

" கரயுகமுனு சரணம்
யுரமு லலாட ஸ்தலம் புனுன் ஜூத் புஜமுங்
சரிதரணி மோ பிம் ரோக்கின
பருவடி ஸாஷ்டாங்க மன்றுமரமமு நீந்து. "

## ஆதித்ய ஹ்ருதய மந்தரம்.

ஓம் ஆதித்ய ஸவிதாசூர்ய ககப்பூஷா கபஸ்திமான், ஸொர்ணஸ் ஸத்ருஸோபாநு ஸ்வரன் ரேத திவாகர:,

அரிதஸ்வ ஸஹஸ்ரார்ச்சிஸ் ஸப்த ஸப்த ஸ்பதீ மரீஸிமான்,

திமிரோன் மதனஸ் ஸம்பு த்விஷ்டா மார்த் தாண்ட ஹம்ஸுமான்,

ஹிரண்ய கர்ப்பஸ்ஸஸிரா தபனபாஸ்க ரோரவி,
அக்நீ கர்ப்பேக் திதிதே புத்ரா, ஸங்க ஸஸிர நாசனமா,

---

" நமது பாரத நாட்டில், பெண்மணிகளுக்குத் தேகப் பயிற்சி அவசியம். அப்பயிற்சியில் அவர்கள் சரீரம் உறுதி யாகும்.

ஸ்ரீமதி காசல்.

வ்யோமி நாதஸ் தமோ பேதீ, ருக் யஜஸ்ஸாஸ் ஸாம பாஹரா,

கனவ்ருஷ்டி அமா மித்ரோ விந்திய வீதி பிலவங்கமா, அதபீமண்டலீம் ம்ருத்யு, பிங்களஸ் ஸர்வதாபனு;

ரவிவிஸ்வர் மஹா தேஜோ, ரக்தஸ் ஸர்வ பவோத்பவ,

நக்ஷத்ர க்ரஹ தாராணும், அதிபே விஸ்வபாவனு,

தேஜஸாம் தேஜஸ்வீ துவாத சாத்மான் நமோ நம:
நமப் பூர் வாயக்ரயே பஸ்வலிமா யாத்ரயே நம:
ஜோதிர் கணுனும் பதே வீதினும் பதே நம:

ஜயாய ஜயபத்ரா ஹரீஸ்வராய நமோ நம: ஸஹஸ்ராம்ஸ நமோநம: உக்ராய வீராய சாரங்காய நமோ நம: நமப்பத்மப் பிரபோதாய நமோநம: மார்த்தாண்டாய நமோநம:

---

"ஜன்மபூமியின் சேவைக்காக பெண்கள் ஜென்மமெடுத்திருக்கிறார்கள். அதனுல், அவர்கள் மனச்சோர்வில்லாமல் காட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டுவது அவர்கள் கடமை."

— ஸ்ரீமதி சரோஜினி தேவி.

பிர்ம்ஹமேசா நாசுதேஜாய சூர்யாய ஆதித்ய வர்க்க சே பாஸ்வான்,

ஸர்வ பக்ஷாய ரவுத்ராய - வபுஸே தமோக்னய ஹ்ருதக்னய - சத்ருக்னய அபிதாத்மனே, க்ருதக்னய தேவாய ஜோதிஷாம் பதீ நமோ நம :

ஸப்த ஸாபிகராய் அக்நியூ விஸ்வ கர்மனே நமோ நம :

நமஸ்தமோப நிக்னய ரவியே லோக சாக்ஷிண்யீ நமோ நம. :

ஒவ்வொரு பிரமசாரியும் - கிருகஸ்த தர்மத்தி லுள்ளசதிபதிகளாகிய கணவன் மனைவியும், வானப் பிரஸ்த-சந்நியாசிகளும், தினசரி சூரியபூஜை செய்வது இகபாரார்த்தங்களுக்குச் சவுக்கிய சந்தோஷத்தை உண்டு பண்ணும்.

---

“காமவெறி கொண்ட புருஷன், உருத்திராக்ஷப் பூனையைப்போல் விபூதி ருத்திராக்ஷமணிந்து, ஆஷாட பூதியாய் நடித்தாலும். அவன் கண்கள் ஒவ்வொரு ஸ்திரீயையும் காமப் பார்வையால் அவ்யங்களைப்பார்க்கும். எவ் உருவமும் காமப் பொருளாகவே தோன்றும்,

"பேசிடு வெண்டாமரையா சனனுகிச்சிவந்த
பேரொளிசேர் தருவிருத்த மண்டலமத்தியனு
பாசறுமா துளங்கமலம்போலு நிறத்தினனு
யலர்ந்தன வாயிரு புயங்க ளடைந்த வெண்டா மரை
காசறுநாளம் பிடித்த கை யிரண்டினேடு [யின்
கருதுமொரு நகமிரண்டு கண்க ளுடையவனுய்க்
தேசுமலி செய்யவுடை தனையுடுத் தோனுகித்
திகழ் சிவ சூரியனை நிதஞ் சிந்தனைசெய்திடுவாம்."
"விளங்குதண்டி முதலோரால் சேவிக்கப் படுவோன்
விவலன்முத லுற் சிங்கபதாசத்தின் மேலோன்
களங்க மிலாத்தீத்தை முதற் சத்திகண சகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி
துளங்கலிறன் னங்கந்தன் னங்கமெனுங் கிரகத்
தொழுமுடுவாதிய சூழச்சுவேத கஞ்சத்திலர்ந்தோன்
வளங்கொள்கவே தாம்பரத்தோட்கரனிருநல்விழியோன்
வருசிவ சூரியர் காக்க மகிழ்ந்தடி யெங்களையே."

---

" பொம்மைகளால் குழந்தைகளுக்குக் கற்பனு சக்தி அதி கரிக்கிற தென்றும், இளங்குழந்தைகளுக்கு தாய் தந்தைகள் பொம்மைகள் வாங்கிக் கொடுத்து விளையாட விடவேண்டுவது அவசியமென்றும், டாக்டர் இத்திரசிங் கூறுகிறார்.

அதிகாலையில் சூரியமண்டலத்தை நோக்கி, மேலே சொல்லிய பாசுரங்களை ஓதி, "ஓம் சிவ சூர்யாய நமஃ" என்று துதி செய்து, ஆன்ம வலம் இருமுறைவந்து,

(1) ஓம் வைகர்த்தாய நமஃ
(2) ஓம் விவஸ்வதே நமஃ
(3) ஓம் மார்த்தாண்டாய நமஃ
(4) ஓம் பாஸ்கராய நமஃ
(5) ஓம் ரவயே நமஃ
(6) ஓம் லோகப்பிரகாசகாய நமஃ
(7) ஓம் லோகசாக்ஷிண்யே நமஃ
(8) ஓம் திரிவிக்ரமாய நமஃ
(9) ஓம் ஆதித்யாய நமஃ
(10) ஓம் மஹா சூர்யாய நமஃ
(11) ஓம் ஹம்ஸ மாலினே நமஃ
(12) ஓம் திவாகராய நமஃ

என்று துவாதச திருநாமங்களைக் கூறிப்பன்னிரண்டு தரம் நமஸ்காரஞ்செய்து நின்று தொழுது, தான் இச்சித்த வரங்களைப் பிரார்த்தித்துக்கேட்க வேண்டும்.

---

" சங்கீதத்தினால் உலகத்தையே வசீகரப்படுத்தி வெற்றி பெறலாம்.
— ஸ்ரீமதி. K. B. சுந்தராம்பாள்.

## சூரிய தரிசனத்தில் அறியும் பலா பலன்கள்.

" வலருதித்தவன்பால் தெரிசனை விநோதம்
வகுத்திடக்கே ளமாவாசை மத்யானத்தினில்
இலகியதா மிர வட்டத்தி னறு நெய் பெய்து
இப்புவியின்மேல் வைத்திவனுருவம் பார்க்கில்
நிலவசைதல் நிற்றல் கறுத்திடல் சிவத்தலிவைசேர்
நிதிபதிவிட்டோ டலிறப்பிருப்பின் னேர்குணபால்
குலமைந் தர் தாதை துணியவன் வங்கிசந்தாய்
குடும்பமிவைக் கவ்வாண்டாகுலம்குறைவுற்றதுவே."

ஆதித்தவாரம் அமாவாசை கூடியதினத்தில், அதி காலையில் எழுந்து, ஸ்நாநம் செய்து, நித்திய கருமமுடித்து, சூரிய நமஸ்காரம் செய்து, அன்று விரதமிருந்து, சூரியன் உச்சியில் வரும் மத்தியான்ன காலத்தில், நிலத்தைமெழுகிக் கோலமிட்டு, ஓர் செப்புத்தாம்பாளத்தில் நிறைய பசு நெய் வார்த்து வைத்து, அருகே நறு

---

" மனிதர்களை நாசம் பண்ணக்கூடிய வஸ்துக்கள் உலகில் அநேகம் உண்டு. ஆயினும், பரஸ்திரீ கமனம் - களவு - நண்பர்களை வெறுத்தல் - சூதாடுதல் - பொய் பேசுதல் - துரோகம் செய்தல், இவை முக்கியமாகக் கருத வேண்டியவை.

மஞ்சள் அரைத்து, விநாயகப்பெருமானாக ஆவாஹனித்து, அருகு-கொன்றை புஷ்பங்கள் அணிந்து, தேங்காய் பழம் - வெல்லம் - பஞ்சாமிருதம் முதலிய நிவேதனம்-வைத்து, தீபதூப ஆராதனைகள் செய்து பூஜித்த பிறகு, தாம்பாளத்திலுள்ள நெய்யில் அசைவற்றுப் பிரகாசிக்கும் சூரியனைப்பார்க்கவும். அப்படிபார்க்கும்போது, சூரியன் ஒளியற்று பரிசுத்த வட்டமாய்த்தோற்றினல், ஐஸ்வரியம் உண்டாகும். அசைந்து காணப்பட்டால், தானிருக்குமிடம் மாறும். அசைவற்று நின்றால், வாழ்ந்த வீட்டிலேயே குறைவற்று வாழலாம். கருநிறமாகக் கண்டால் மரணம் நெருங்கும். சிவந்து தோன்றினல், மனக்கிலேசம் உண்டாகும். கீழ்த்திசை குறைந்து தோன்றினல், தன் குலத்துக்காகாது. அக்கினி மூலை குறைந்து தோன்றினல், மனைவிக்குக் கெடுதி உண்டாகும். தென்றிசை குறைந்தால், புத்திரர்களுக்குக் கெடுதி. நிருதி திசை குறைந்து காட்டினல், பிதாவுக்கு அரிட்டம். மேற்றிசை குறைந்தால், சகோதரருக்கு அரிட்டம். வடமேற்கில் குறைந்தால், தனக்கே கெடுதிசம்பவிக்கும்

---

"மாமியார் வீடே கதி யென்று கிடக்கும் மருமகன், மானமழிந்தவனே யாவன்."

வடதிசை குறைந்தால் சுற்றத்தார் பகையாவர். ஈசானி யதிசை குறைந்தால் தாய்வருக்கத்தாருக்கு அரிட்டம் என்று அறியவேண்டும்.

**சூர்ய நமஸ்காரத்தின் மகிமை:**—ஜேம்ஸ் ஸ்டான்லி 'ஹெல்த்பார் ஆல்' என்ற பத்திரிகையில் எழுதியது.

மூவாயிரம் வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்தில், சூர்ய நமஸ்காரம் செய்யப்பட்டு வந்தது. பிறகு சிலர் தோன்றி சூர்ய நமஸ்காரம் விக்ரஹ ஆராதனைக்குச் சமானமென்று அதைக் கண்டித்தார்கள். ஆனால், இந்த இருபதாம் நூற்றாண்டிலோ நாம் பூர்ண ஆரோக்கியத்துடன் வாழவேண்டுமானால், பிரதிதினமும் நாம் சூர்யனை நமஸ்கரிக்கவேண்டியது இன்றியமையாததென்று அத்தேசத்து அறிவாளிகள் சொல்லுகிறார்கள். இவர்களுடைய அபிப்பிராயந்தான் சரியானதென்று நமக்குத் தோன்றுகிறது. அப்படியிருந்தும் நாம் ஒரு வருஷத்தில் சுமார் பதினைந்து நாட்கள் தான் சூர்யனுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் சரியாகச் செய்து

"தன்னுடைய மனம் பரிசுத்தமாயிருந்தால், பத்துமனிதர்களது பலத்தை அடையலாம்." — டென்னிஸன்.

வருகிறோம். இந்தச் சொற்பநாட்களில் நாம் பிரதிதின முமம் பத்துமணி நேரம் சூர்ய ஸ்நானம் செய்வதால், நம் முடைய தோல் வழண்டு நமக்கு, தொந்தரவு ஏற்படுவ துடன் நாம் ரொம்பவும் பலஹீனமாய் விடுகிறோம்.

சூர்ய ஸ்நானம் செய்வது மருந்து சாப்பிடுவதைப் போன்றது. ஒரு வைத்தியர் தினம் பிரதி வேளை வீதம் ஒரு வருஷத்திற்கு நாம் ஒரு மருந்து சாப்பிட வேண்டு மென்று சொன்னால், நாம் முதல் ஐம்பது வாரத்திற்கு அம்மருந்தை, கையால் கூடத்தொடாமல் இருந்துவிட் டுக்கடைசி இரண்டு வாரங்களில் 365-வேளை மருந்தை யும்உட்கொள்வது மடத்தனமே யாகும். நாம் சூர்ய நமஸ்காரம் செய்வது இப்படியே இருக்கிறது.

தற்கால நவீன நாகரீக வழக்கமாகிய "சூர்யஸ்நா னத்தால் நமக்கு நன்மை யுண்டென்று சிலர் சொல்வது உண்மையா? இல்லையா? என்று சிலர் சந்தேகிக்கலாம்; இது பிரயோஜனமற்ற அநுஷ்டானம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இப்படி எண்ணுவது சுத்த

"எல்லோரையும் நேசி; சிலரை நம்பு. ஒருவருக்கும் கெடுதி செய்யாதே.
— ஷேக்ஸ்பியர்.

பிசகு. சூர்ய வெப்பமும் வெளிச்சமும் பிராணுதாரத்திற்கு ரொம்பவும் அவசியமென்று நவீன சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நம் வீட்டிலுள்ள அத்தைப்பாட்டிகள் கூடத்தங்களுக்கு ரொம்பவும் பிரியமான புஷ்பச்செடிகளை சூர்ய வெளிச்சம் அதிகமாயிருக்கும் இடத்தில் தான் வைப்பார்கள். இயற்கை வைத்தியர்கள் சென்ற ஐம்பது வருஷங்களுக்கு மேலாகவே, சூர்ய வெளிச்சம் நம்முடைய ஆரோக்யத்திற்கு இன்றியமையாததென்று வற்புறுத்திய போதிலும், ஸாதாரண வைத்தியர்களும் தத்துவசாஸ்திரிகளும் நம்முடைய ஆரோக்யத்திற்கும் சூர்யனுக்கும் உள்ள சம்பந்தத்தை சமீபத்தில் தான் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

குளிர்காலக் கடைசியில், உன் தேகாரோக்யம் குறைந்திருப்பதை நீ கவனித்திருக்கலாம். வஸந்தகாலம் ஆரம்பித்தவுடனேயே, நீ உன் குளிர்காலச்சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு, நீ ஒரு சிறு குழந்தையைப்போல்

---

“ தப்பிதத்தைக் கண்டனம் செய். அதைச் செய்தவனைக் கண்டிக்காதே. — ஷேக்ஸ்பியர்.

கடற்கரையில் உத்ஸாகத்துடன் ஓடிக்கொண்டிருந்த காலம். எப்பொழுது வரப்போகிறதென்று ரொம்ப, ஆவலுடன் நீ எதிர்பார்த்தவனு யிருக்கிறுய்.

குளிர்காலத்தில் அதிகக் குளிரினுல் உனக்கு ஆரோக்கியக்குறைவு ஏற்படுகிறதென்று, நீ நினைக்கலாம். அப்படியானுல், நம் தேசத்தை விட அதிகக் குளிரா யுள்ள தேசங்களில் உள்ள ஜனங்கள் ஆரோக்யத்தில் நம்மைக்காட்டினும் மிக்க சேவலமாயல்லவா இருக்க வேண்டும்? ஆனுல், நம் தேசத்தைவிட மிகக் குளிர்ச்சி யான கனடா தேசத்தில் வசிப்பவர்கள், குளிர் காலத்தில் நம்மைக் காட்டிலும் பலிஷ்டர்களாயும் ஆரோக்யமுள்ள வர்களாயும் இருக்கிறுர்கள். ஆகையால், நம்முடைய ஆரோக்யக் குறைவுக்குக் குளிர் காரணமல்ல, வேறு காரணம் இருக்கவேண்டும். அதுஎன்னவென்றுல், சூர்ய வெளிச்ச மின்மையேயாகும். நம்முடைய வீடுகள்-காரி யாலயங்கள்-நாடகசாலைகள் முதலிய இடங்களும் இருள்

“ கடனுளியாயுமிராதே, கடன் கொடுப்பானுமாயிராதே, ஏனெனில் கடன் கொடுப்பதும் வாங்குவதும் பணம் தொலைந்து போவதோடு சிநேகத்தையும் பிரியச் செய்யும். ”

— ஷேக்ஸ்பியர்.

அடைந்து கிடக்கின்றன. நாம் குளிர் காலத்தில் நம்நகர தோட்டத்திற்குப் போனாலும், அங்கேயும் பகலில்கூட இருட்டாயிருக்கிறது. ஏதாவது கொஞ்சம் வெளிச்சம் தோன்றியபோதிலும், நம் 'நகரப்புகை' அதைமறைத்து விடுகிறது. அக்டோபர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரையில், நம் தேசத்தை சூர்யன் இல்லாத தேசமென்றே கூறலாம் ஆனல், கானடா தேசத்திலோ, வருஷம் பூராவும் சூர்யன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். அதனால் தான் அத்தேசவாசிகள் தங்களுக்குத் தேவையான சூர்ய வெளிச்சத்தைப்பெற்றுத் திடகாத்திரர்களாய், உற்சாகத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

நம் தேகாரோக்யத்துக்குத் தேவையான சூர்ய வெளிச்சத்தை, நாம் எப்படி பெறுவதென்று, நம்முள் அநேகர் அறிய விரும்பலாம். நவீன வழக்கமாகிய 'சூர்ய ஸ்நானம்' தான், வெளிச்சமின்மையாய் நடக்கு உண்டா

"நக்ஷத்திரங்களை நெருப்பென்பதைச் சந்தேகிக்கிறாய். சூரியன் தன்னைத்தானே சுற்றுகிறதையும் சந்தேகிக்கிறாய். உண்மையைப் பொய் என்றும் பொய்யை உண்மை யென்றும் சந்தேகிக்கிறாய், ஆனல், நான் எதை நேசிக்கிறேனோ அதை சந்தேகிப்பதில்லை.

— ஷேக்ஸ்பியர்.

கும் தீங்குகளை நிவர்த்தி செய்யும் சூர்ய ஸ்நானத்தால் நாம் விசேஷ நன்மையைப் பெறலாம். இந்தியாவில் பின் வரும் பழமொழி வழங்குகின்றது. அதாவது, ஜலத்தில் ஸ்நானம் செவ்வது சிலாக்கியம், காற்றில் ஸ்நானம்செய் வது இதைவிட சிலாக்யம். ஆனால், சூர்ய வெளிச்சத்தில் ஸ்நானம்செய்வது, எல்லாவற்றைக் காட்டிலும் ரொம்ப மேன்மையானது"

ஓய்வு நாட்களில் நீ அதிக உடுப்பு தரித்துக்கொள் ளாமலிருக்கும்பொழுது, நீ எவ்வளவு குதூகலத்துட னும், உற்சாகத்துடனும் இருக்கிறாய் என்பதை நீ கவ னித்திருக்கிறாயா ? நமக்குத் தேவையான சூர்ய வெளிச் சம் நம்மீது விழுந்தால், நமக்கு எப்பொழுதும் இம்மா திரியான உற்சாகம் உண்டாகும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

## சூர்ய வெளிச்சத்தை எப்படி புட்டியில் அடைப்பது.

மருந்துகளைப்போல் சூர்ய வெளிச்சத்தை சீஷாக் களில் நிரப்பிவைக்கமுடியாது. ஆனால், சூர்ய வெளிச்சம்

"நேர்மையாளர்களுடைய செயல்கள் உயர்ந்த புஷ்பங் களைப்போல் பரிமளிப்பது மல்லாமல் மலர்ச்சியும் உண்டாகும்".
— ஜே ஷெர்லி.

பிரதிதினமும் இருக்கும் கோடைகாலங்களில் நமக்குத் தேவையான வெளிச்சம் நம்மீது விழும்படி, நாம் சூர்ய ஸ்நானம் செய்து வருவோமாகுல், அதன் பலனை நாம் குளிர் காலத்தில் அனுபவிப்போம்.

## 'சூரிய ஸ்நானம்' செய்வதெப்படி ?

நாம் நிதானமாய் 'சூரிய ஸ்நானம்' செய்யவேண்டும். அதாவது, முதல் நாளிலேயே அதிக நேரம் சூர்ய வெப்பம் நம்மீது விழும்படி, நாம் ஸ்னனம் செய்யக் கூடாது. முதல் நாள் 4-நிமிஷங்களும், இரண்டாவது நாள் 6-நிமிஷங்களும், மூன்றுவது நாள் 8-நிமிஷங்களும், இவ்விதமாக, தினம் கொஞ்சம் கொஞ்சமாக நேரத்தை அதிகரித்துக் கொண்டு, நாம் சூர்ய வெளிச்சத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். இப்படி நாம் செய்து வந்தால், ஒரே நாளில் 10-மணி நேரம் ஸ்நானம் செய்வதால் ஏற்படும் கெடுதல், அதாவது தோல் வழண்டு போதல்-பலஹீனம் முதலியன உண்டாகா.

---

"குடியும் சூதாட்டமும் ஒருவனைக் கந்தைத் துணியோடிருத்தலேயும் வறுமையிலும், மானபங்கத்திலும் அழுத்தும்."

— ஹோரன்ஜோ மோர்.

நீ சூர்ய ஸ்நானம் செய்ய ஆரம்பித்தவுடன், உனக்கு 'குஷியாய்' இருக்கிறது. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, உன் தேகம் உஷ்ணப்படுகிறது; அதன் பிறகு, உனக்கு பலஹீனம் ஏற்படுகிறது. நீபலஹீனம் ஏற்படும் வரையில், சூர்யவெப்பத்தில் இருக்கக்கூடாது. உனக்கு உஷ்ண உணர்ச்சி ஏற்பட்டவுடனேயே, நீ ஸ்நானத்தை நிறுத்திவிட வேண்டும்.

மேலே சொன்ன பிரகாரம், நீ சூர்ய ஸ்நானம் செய்துவந்தால், உனக்குக்குளிர்காலத்தில்ஜலதோஷம் உண்டாகாது. தவிர, நீ அதிக குளிரையும் சுலபமாக சகித்துக்கொள்ளலாம். மேலும், குளிர்காலத்தில் உன்னைச் சுற்றியுள்ளவர்கள் தேகாரோக்யம் இல்லாமல் பலஹீனர்களாயிருக்க, நீ பலிஷ்டனும், உற்சாகமுள்ளவனும் இருப்பதுடன், நீ 'சூர்ய நமஸ்காரம்' செய்து வந்ததைப்பற்றி, கடவுளுக்கு ரொம்பவும் நன்றியறிவுள்ளவனுயிருப்பாய்.

— 'ஞான போதினி' புதுவை.

---

" இன்பமும் துன்பமும் உள்ளத் தோடிவைந்தது."

— கம்பர்.

# சூர்யனே இயற்கை மருந்து.

## வெயிலில் திரிபவரே பல்முடையார் ;

### நாகரீகமற்றவர் நலமாயிருப்பதேன் ?

### சூரிய ஸ்நானத்தைப்பற்றிய குறிப்புகள்

(திரு - மியா)

சூரியனது பெருமைமுற்காலத்திலிருந்தே, சூரியன்—காற்றுமுதலியஇயற்கைச்சக்திகள்நோயைப்போக்கவல்லனவென்பது,பலரும்கண்டஓர்உண்மையாகும்.ஆனால் தற்போது இவைகளுக்குப் பதிலாக, நோயைப்போக்க மருந்துகள் உபயோகிக்கப் படுகின்றன. மக்கள், சூரியனையும் காற்றையும் முற்றும் மறந்து விடவில்லை. விலையேயில்லாத இவ்வியற்கை மருந்துகளின் பெருமையை உலகம் இப்போதே உணரத் தலைப்பட்டிருக்

---

"நம் பிறப்பின் மேன்மையும் அந்தஸ்தும் நிலை பெற்றிரா பல், நிழலைப்போல் மறைந்து விடக் கூடியன. விதியைத் தடுக்கக் கூடிய கவசம் இவ்வுலகில் கிடையாது. எமன் சாதாரண மனிதர்களை மாத்திர மல்லாமல், மன்னாதி மன்னர்களையெல்லாம் கொண்டு போகிறான்." — ஜெ. ஷெர்லி.

கிறது. பெரிய நகரங்களில் மிகக்குறுகலான தெருக்களும் விசாலப்படுத்தப்படுகின்றன. இதனால், மக்கள் வேண்டிய அளவு, காற்றையும்-சூரிய ஊஷ்ணத்தையும் பெற்றுச் சுகமாக வாழ்கிறார்கள். சூரிய ஊஷ்ணமும் காற்றும் தாராளமாக வீட்டில் நுழையும்படியே, இப்போது வீடுகள் கட்டப்படுகின்றன. உடையும் அவ்வாறே சுருங்கிவிட்டது.

காற்று ஸ்நானம் ஸ்காட்லாந்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் காற்றுஸ்நானம் என்று லார்ட்மான்போடோ ஒருபுதியமுறையை அனுசரித்தார். ஒருவித உடையுமின்றி, விடியற்காலையில் சிறிது நேரம் தம் அறையில் உலாவினார். இதுவே காற்று ஸ்நானமாம். இவ்வாறே தம் பெண்களையும் உலவச்செய்தாராம். அதே ஸ்காட்லந்தில், அறிஞர் பென்ஜாமின் பிராங்க்லின் சிலசமயங்கள் உடையின்றித் தம் வேலைகளைக் கவனித்தார். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன், ஆஸ்திரியாவில் ரிக்லி என்பார், இவ்வாறே இலேசான காற்று கட்டங்

" நியாயமுள்ளவர்களுக்கு ஆபரணம் - நல்ல மரணமே. "
— ஹென்றி. வாஹான்.

களை ஏற்படுத்தினர். காசம்-கை கால் பிடிப்பு முதலிய நோய்களுக்குச் சில வைத்தியர்கள், வெயில் ஸ்நானத்தையே மருந்தாகக் கூறுகிறார்கள்.

சூரியன்:— நோய்க்குக் காரணமான விஷக்கிருமிகள் இருளிலேயே பெருகுகின்றன. வெயிலும், வெளிச்சமும் மேசுகாதாரத்துக்கு இன்றியமையாதன. தேகம் சுகமாக இருந்தால், மனதும் சந்தோஷமாக இருக்கும். ஆரோக்கியமும் சந்தோஷமும் நெருங்கிய சிநேகமுடையன. தொத்துநோயைத் தடுப்பனவும் சூரியக் கதிர்களே. மிருகங்களும், செடி கொடிகளும் உயிர்வாழச் சூரிய ஒளி மிக அவசியம். நாம் உண்ணும் உணவிலும், சூரிய ஒளி நிரம்பியிருக்கிறது. உருளைக்கிழங்கு விதைகள் வெயிலில் காயவைக்கப்படுகின்றன. இருளில் இருக்கும் விதைகளுக்கும், வெயிலில் காய்ந்த விதைகளுக்கும் உள்ள வித்தியாசங்கள் பல.

'ஐரிஸ்' என்ற ஒருவகைச்செடி சூரிய ஒளியைக்கொண்டே புஷ்பிக்கும். இவற்றை மழைக்காலங்

" மனத்தோற்றத்தை முகத்தில் காண்பதற்கு வேறொரு வித்தையும் தேவையில்லை. (அகத்திலழகு முகத்திற் றெரியும்)
— ஷேக்ஸ்பியர்.

களிலும் புஷ்பிக்கச்செய்யலாம். இச்செடியின் ஒரு கிளையை வெட்டி உஷ்ண மிகுந்த இடத்தில் போட்டு வைத்தால், இலைகள் வதங்கிய போதிலும், பூக்கள் புஷ்பிக்கும். காரணமென்ன? இலைகளின் மூலமாக சூரியசக்தி புஷ்பங்களை அடைகிறது. சூரிய சக்தி கிடைத்ததும், பூக்கள் உண்டாகின்றன; அதனால், செடிகளுக்குச் சூரிய உஷ்ணம் அவசியமென்பது ஏற்படுகிறது.

நோயைத் தீர்க்கமட்டும் சூரியஒளி பயன் படுவதாக நினைப்பது தவறு. உடலை நன்னிலையில் வைத்திருக்கவும், பலத்தைக் கொடுக்கவும், சூரிய ஒளி மிக அவசியமாகும். 1835-ம் வருஷத்தில் திரு. ரோஸன்பாம் என்பார் 'ஸ்க்ரபுலா' என்ற நோய்க்குச் சூரிய ஸ்நானத்தையே மருந்தாகக் கூறினார். 1902-ம் வருஷத்தில் செயின்ட் மோரிட்ஸ், வேட்டுக் காயங்களுக்கும் சூரிய ஒளியையே மருந்தாக உபயோகித்தாராம். அறிஞர் பலர், சூரிய ஒளியைப் பல நோய்களுக்கு மருந்

"தெய்வப் புலவருக்கு நாவுணர்வும்
சித்திரக்காரனுக்கு கையுணர்வும் வேண்டும்."
— பழமொழி.

தாக உபயோகித்தமைக்கு உதாரணங்கள் பல இருக்கின்றன.

உடையேயில்லாது வெட்டவெளியில் திரியும் நாகரீகமற்ற ஜாதியினரே மற்றவரை விடத் திடகாத்திரராகவும், பலமுள்ளவராகவும் இருக்க, நாம் காண்கிறோம். இவ்வித வாழ்க்கையைவிட்டு, அவர்கள் நிழலில் வேலை செய்யவும், உடைகளை அணியவும் பழகினால், அவர்களிடத்து நோய்களும் பெருகுகின்றன.

சூரியஸ்நானத்துக்கு நாம் பணம் கொடுக்க வேண்டுவதில்லை. ஏழை மக்களும் ஒருவிதப் பணக்கஷ்டமுமில்லாமல், இச்சுகத்தைப் பெறலாம். அதனால், சூரிய ஸ்நானத்தைப்பற்றி அனைவரும் அறிந்து கொள்ளவேண்டுவது அவசியமாகும்.

குறிப்புகள். சூரிய ஸ்நானத்துக்கு முன்னர், தேகமுழுவதும் எண்ணெயைத் தடவிக் கொள்ளுதல்

---

"நன்மை செய்தால் நன்மை விளையும்; தீமை செய்தால் தீமை விளையும்; நன்மையும் தீமையும் பின் வரக் காணலாம். அசனால் அறிவுடையோர்கள் தீமை செய்வோர்க்கும் நன்மை செய்து அவர்களைக் காப்பாற்றுகிறார்கள்."

வேண்டும். சிறிது சிறிதாகத் தேகம் வெயிலில் படும்படி செய்தல் அவசியம். உச்சி வேளையில் சூரியஸ்நானம் செய்தல் கூடாது. வெயிலிலும் நிழலிலும் மாறி மாறி சூரிய ஸ்நானம் செய்தலே நல்ல பலனைத்தரும்.

வெயில் அதிகமில்லாத நாட்களிலேயே சூரியனிடத்து 'அல்ட்ரா வயலட்' கதிர்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. காற்றும் சிறிதாக வீசுதல் சூரிய ஸ்நானத்துக்கு உதவி செய்வதாகும். பழக்கமில்லாதவர் தலையில் மூடி ஒன்றுமில்லாது, வெயிலில் நீண்ட நேரம் இருப்பது தவறு.

சூரிய ஸ்நானத்தால் உடம்பிலுள்ள நோய்கள் அகல்கின்றன. இவற்றிற்குப் பதிலாகப் பலமும், சந்தோஷமும் இடம் பெறுகின்றன.

— 'ஹிந்து.' (நவசக்தி)

---

"யவ்வன வயதில் சில மாதர்கள் உள்ளுக்குள்ளே அந்நிய புருஷருடன் கூடி அவிசாரியாகி, வயது முதிர்ந்து அவயவங்கள் தளர்ந்து, தென்றிசைக் கோமான் வரவை எதிர் பார்த்திருக்கும் சமயத்து, சங்கரா! மஹாதேவா! யாதவா! கேசவா! இராமா! கிருஷ்ணா! என்று தியானிப்பார்கள்.

# சூர்ய ஸ்நானம்

அல்லது

## சூரிய நமஸ்காரத்தின் இரகசியம்

(வலம்புரி சாண்டோ கே. எ. சோமசுந்தரன் எழுதியது)

திரேகாப்பியாசம் பற்பல விதங்களாயிருந்தாலுங் கூட. சூர்ய ஸ்நானம் செய்யவேண்டிய அவசியம். சூரிய ஸ்நானத்தால் திரேகம் கருநிறமாகிறது. என்னுடைய சுய பரீக்ஷையில் சூர்ய ஸ்நானம் திரேகத்தைக் கட்டுகிறது. சூர்ய ஸ்நானத்தால், சிலர் திரேகம் கருநிறமாகவும், சிலர் திரேகம் தோல்கள் உரிந்தும் போகிறது. அது, திரேகத்திற்குத் தக்கவண்ணம்; சிலர் திரேகம் கருநிறமாக இருந்தாலும்கூட, தோல் மழுமழுப்பாக உள்ளது. சிலர் திரேகம் எண்ணைப் பசையில்லாமல்

"தான் திருடி அயல் வீட்டை நம்பாள்; கூத்திக் கள்ளன் பெண்டாட்டியை நம்பமாட்டானென்று சொல்வதற்கிணைய, ஒவ்வொரு ஸ்திரீயும் தன்னைத்தான் கஷ்டநெறியினின்றுக் காப்பாற்றிக்கொள்ளவேணுமேயொழிய புருஷன்பாராவிருந்து காப்பதிற் பிரயோசனமில்லை."

வரட்சியாகவுள்ளது. சூர்யனுடைய காந்தியால், எண்ணெய் பசையுள்ள திரேகம், தோல் வெடிக்காமல், கருநிறமாக மாறி, மழமழப்பாகிறது. நீக்ரோ ஜாதியாரின் தோலானது கருநிறமாகி எண்ணெய் பசையுள்ளது. நீலநிறக்கண்ணும் சிவந்த நிறமுமுடைய சில ஜாதியார் திரேகம் எதிரிடையானது.

சூர்ய ஸ்நானம் தினசரி ஒவ்வொரு பாகத்தையும் 5 நிமிடம் சூர்ய வெப்பத்தில் காட்டவும், ஒவ்வொரு நாளும் நாளுக்கு நாள் அதிகாலை சூர்ய வெப்பத்தில் ஒவ்வொரு பாகத்தையும் காண்பிக்கவேண்டும். ஒரு பாகத்தைக்காட்டி, மறுபாகத்தைக்காட்டுமுன், கொஞ்ச நேரம் நிழலில் இருக்கவேண்டும். கண்கள் சூர்ய வெப்பத்தால் சீக்கிரத்தில் கெட்டுப் போகக்கூடியதாயிருப்பதால், சந்திர பிரமாணமாயும், மிகுந்த ஒளியில்லாமலும் இருக்கக்கூடிய நேரத்தில், சூர்ய ஸ்நானம் செய்ய

---

* "பார்யாரூபவதி சத்ரு" என்கிற வாக்கியத்துக்கு, சிலர் பார்யை ரூபவதியாயிருந்தால் பிறருடைய பார்வைக் குட்பட்டு பிறர் அபகரிக்க எண்ணுவார்களென்றும், வேறு சிலர் பார்யை அரூபவதியாயிருந்தால் புருஷர்கள் வெறுக்கப் படுவாரென்றும் சொல்லுகிறார்கள்."

வேண்டும். சூர்ய வெப்பம் தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சரிவரப்பட வேண்டும். சூரிய ஸ்நானம் மெதுமெதுவாக, தினசரிசெய்து வரவேண்டும். சூர்ய வெப்பமானது பிடரியில்படாமல், அதிஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சூர்யனுடைய வெப்பம் பிடரியில் பட்டால், ஒரு விதமான மயக்கமுண்டாகும். தலைவலியும் பலஹீனமும் உண்டாகுமென டாக்டர்கள் கூறுகிறார்கள். பிடரி சூடாகத் தெரிந்தால், கொஞ்ச நேரம் நிழலிலிருந்து தேகத்தைக்குளிர்ச்சியாக்க வேண்டும். ஒரே தடவையில் ஜாஸ்தி நேரம் சூர்ய வெப்பத்திலிருக்கக் கூடாது. சூர்ய வெப்பத்திலிருக்கு முன்னர், யாதொரு விதமாகிய தைலம் தேய்த்துக் கொண்டிருப்பது நலமாகத் தெரிகிறது. நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெ யாகிலும் பூசிக் கொள்ளலாம். இவைகளைப் பூசிக்கொள்ளவதால், சூர்யனுடைய வெப்பமானது; தசைகள் நரம்புகளில் ஊடுருவிச் செல்லுகிறது. சூர்யனுடைய வெப்பமானது, தேகத்

---

"நோயுடன் கூடிய கோடீஸ்வரனைக் காட்டிலும், நோயற்ற பிச்சைக்காரன் எத்தனையோ மடங்கு மேலானவன்."

— சர் ஆர்யத் நெட்லேன்.

திற்கு அநேக நன்மைகளைத் தருகிறதென்று பெரிய ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள், சூர்யனுடைய வெப்பச் சுடர்கள் சில சிகப்பு நிறமாகவும், சில நீல நிறமாகவுமிருக்கின்றன. சூர்யனுடைய வெப்பத்திலிருந்துதான், எக்ஸ்ரே கண்டு பிடிக்கப் பட்டதாக டாக்டர்களும் கூறுகிறார்கள். சூர்யனுடைய வெப்பமானது தேகத்தில், அதாவது-சதையில் கால் அங்குலம் வரை, உஷ்ணம் ஊடுருவிச் செல்லுகிறது. சூர்யனுடைய வெப்பமானது கண்ணாடி ஜன்னல்களுக்குள்ளும், ஊடுருவிச் செல்லுகிறது. கண்ணாடிகளுக்குள் சூர்யனுடைய சிகப்பு சுடர்கள் மட்டுந் தான் ஊடுருவிப் பாயுமாம். ஆனால், நீலநிற சுடர்கள் ஊடுருவிப் பாயாதாம். ஆகையால், பூர்ண பலன் கிடைக்காதென்பது டாக்டர்கள் அபிப்பிராயம். சூர்யனுடைய வெப்பமானது தேகத்தின் இரத்தோட்டத்தை விருத்தி செய்கிறது. சூர்யனுடைய சுடர்கள் சிகப்பு வர்ணம்.

---

"அநேக பெரிய மனுஷர்கள் தங்களுக்கு நற்குண நற்செய்கைகளையுடைய மனைவிகள் வாய்க்காததால், அவர்களது இல்வாழ்க்கை சந்தோஷ மற்றதாக இருக்கிறது-"

— எடித்-ஷாக்கில்டான்-

மஞ்சள் வர்ணம், ஆரஞ்சு நீல வர்ணங்களுள்ளது, சூர்யனுடைய நிறச் சுடர்களானது காயங்களை வெகு சீக்கிரமாகச் சொஸ்தப் படுத்துகிறது. தொத்து வியாதிகள் திரேகத்தை அணுகாமல், சூர்யவெப்பம் தடுக்கிறது. சூர்யனுடைய வெப்பம் சில எலும்புருக்கி வியாதிகளைச்சொஸ்தப்படுத்துவதாக, தமிழ் வைத்திய ஆராய்ச்சியால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. சூர்ய ஸ்நானமானது மனிதருடைய சுகாதாரத்திற்கு உகந்தது. ஆனதால், ஒரே தடவையில் அதிக நேரம் சூர்ய ஸ்நானம் செய்யக்கூடாது. தினந்தோறும் சில நிமிஷங்களை செய்யவேண்டும். சூர்யனுடைய இளம் வெயிலின் அளவற்ற மகிமையைப்பற்றி எழுதுவதென்றால் இங்கு இடங்தராது. வாழ்வின் முக்கிய பாகமாகிய காற்றுக்குச் சமமாக சூர்ய வெளிச்சத்தைக் கூற வேண்டும். நமது வாழ்விற்குத்தகுந்த ஜீவ சத்துப் பொருள்கள் சூர்ய வெப்பத்தில் அடங்கியிருக்கின்றன. சூர்யனின் இளம் வெய்யில் உடலுக்கு நீடித்த ஆயு

---

“நம்முடைய அஜாக்கிரதையே நம்முடைய தேக அசவுக்கியத்திற்குக் காரணமாயிருக்கிறது-”

— டி எல்லிஸ் பேக்கர்-

ளும் நிறைந்த பலமும் தருகிறது. சூர்ய வெப்பமும் நல்ல காற்றோட்டமுமுள்ள இடத்தில் வசிக்கக்கூடிய ஒவ்வொருவரும், பலமுள்ளவர்களாய் நோயின்றி வாழலாம். உடலில் வியாதிகளை உண்டுபண்ணக் கூடிய கிருமிகள், இளம் வெயில் காய்தலால் நீங்கிவிடும். ஆகையால், சூர்ய வெளிச்சத்தைப்பற்றி அசட்டையாயிராமல், உங்கள் உடலைத்தினந்தோறும் அதிகாலையில் சந்திர பிரமாணமாய், கொடூர ஒளியின்றி உதயமாகும் சூர்ய வெளிச்சத்தில் எதிர் நோக்கி நின்று, தேகத்தில் சூர்ய ஒளி படச் செய்யவேண்டும். ஆனால், கண் நிரம்பக் கூசும்படியானநிலைக்கு, தனது வலிமையைக் காண்பிக்குந் தருணம் வரை, இளம் வெயிலில் காயலாம். அதற்குமேல் காய்ந்தால், கிறுகிறுப்பு உண்டாவதுடன், மூளைக்கும் சிறிது கெடுதலும் ஏற்படக்கூடும்.

---

• "சென்ற காரியத்தை நினைத்தால் என்ன பிரயோஜனம், இனி நடக்கவேண்டியதை யோசிப்பதில் அது போல் நேருவது கஷ்டம். ஆகையால் கண் முன் கஞ்சி - கூழ் - அல்லது பஞ்ச பக்ஷண பரமான்னத்தோடு கூடிய உண்டி எது கிடைத்தாலும் சாப்பிட்டு ஆநந்திக்கவேணும்.

ஆனதால், அதிகாலையில் முன்னதாக இளம் வெயில் காய்தல் வேண்டும். இதையே நமது முன்னோர்கள் "சூரிய நமஸ்காரம்" என்று கூறுவார்கள். ஆனால் சூரிய நமஸ்காரத்தை அவ்வித ஒழுங்காக இன்று நாம் செய்வதில்லை. அதிக வெயிலானவுடன் செய்து வருகிறோம். அதனால் கெடுதலே தவிர நன்மை யுண்டாவதில்லை. ஆனதால், அதிகாலையில் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்து, நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் நின்று, சூரிய வெளிச்சம் படும்படி நாம் சூரிய நமஸ்காரமும், தேகாப்பியாசமும் செய்தலால், நமது உடலுக்கு, தகுந்த ஆரோக்சியமும், பலமும் கிடைக்கும். இச்சூரிய நமஸ்காரத்தை இன்று மேல் நாட்டார் மிகக் கொண்டாடுகிறார்கள். அதனால் அவர்கட்கு நன்மையும் கிடைக்கிறது. நாமும் மேற் கூறியவாறு நடந்து நமது உடல் ஆரோக்கியமாகவும், பலமாகவும் இருக்கும்படி செய்ய வேண்டியது அவசியம். —" ஊழியன் "

---

" சாஸ்திரிகளைப்போல் சாமர்த்தியமாய் அஞ்ஞானம் பேசுவதிலும், சான்றோர்களைப் போல் சாமர்த்தியமின்றி ஞானம் பேசுதலே சாலச் சிறந்தது." — செஸ்டர்டன்.

# சூர்ய ஸ்நான முறை

## (அதன் பயனும் அபிவிருத்தியும்)

சூரிய ஸ்நானத்தைப்பற்றி (வெயில் குளித்தல்) பலர் கேள்விப்பட்டிருக்கின்றனர். பலர் சித்திரங்களின் வாயிலாக அறிந்திருக்கின்றனர். கடலோரத்தில் அரை நிர்வாணக் கோலத்துடன் வெயில் காய்ந்துகொண்டிருக்கும் காட்சியைப் பார்த்தவர்களுமுண்டு. ஆனால், சூர்ய ஸ்நானம் செய்யவேண்டிய முறையை நன்கு அறிந்தவர்கள் சிலரே. இதை ஒழுங்கீனமாகச் செய்வதால் அடையும் பயன் ஒன்றுமில்லை. ஒழுங்கீனமான முறைகள் கெடுதலையே விளைவிக்கும்.

பறவைகள் சூர்ய ஸ்நானம் செய்யு முறையைக்கவனியுங்கள். மனிதனைவிடச் செம்மையாய் அவை வெயில் குளிக்கின்றன. ஆரம்பத்தில் அவை ஓர் புறமாக மல்லாந்து படுத்துக்கொண்டு, தனது இறக்கையை விரித்துக் காற்றும் கதிரவன் கிரணங்களும்

---

" இன்றைக்கு உண்மையாயிருப்பது நாளைக்குப் பொய்யாய்விடும். " அறிஞர்-எ- எம்-லே.

தமது தோலின்மீது விழச் செய்கின்றன. பின்னர் மற்றொரு புறமாய்ப் படுத்துக்கொண்டு, இதர இறக்கையை விரித்துக் கொண்டே, சூரிய ஸ்நானம் செய்கின்றன. இவ்வாறு மாறி மாறிச் செய்வது வழக்கம்.

நாம் சூரிய ஸ்நானம் செய்யுங் காலத்தில், நமது மேலாடைகள் எல்லாவற்றையுமே அகற்றிக் கொள்ள வேண்டும். ஒரே புறமாய் வெகு நேரம் படுத்திருந்தோமாகில், நமது தோலில் சூடு பற்றிக் கொள்ளும். ஆதலால், நாம் பறவையைப் போலவே சரீரத்தை அசைத்துக் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதாவது, சரீர அங்கங்களைத்தும், நன்கு அசையும் வண்ணம், திறந்த வெளியில் தேகாப்பியாசம் செய்ய வேண்டும்.

சூரிய ஒளியும், சுத்தமான காற்றும் - நோயணுகாமல், ஒருவரைக் காப்பாற்றும் கவசமென்றே கூற வேண்டும். சூரிய ஒளிபடுதலால், சருமத்திற்கு அதிக வலிவு ஏற்படும். தொத்து நோய்க்குரிய ஜீவ அணுக்கள் சரீரத்தில் இருந்தால், அவை மாய்ந்து போம். இதர கொடிய நோய்களை எதிர்க்குஞ் சக்தியும்

---

தண்ணீரில் இறந்தாரிலும் சாராயத்தில் இறந்தவர் அதிகம்."

சரீரத்தில் விருத்தியாகும். பெரும்பாலும் நிர்வாண மான நிலைமையிலேயே, வெயில் குளிக்கவேண்டு மென்பதன் கருத்தைக் கவனிக்க வேண்டும். அதி மேன்மையான ஆடையும் சூரிய ஒளியைத் தடுத்துவிடும் என்று அறியவேண்டும். சூரியனது கிரணங்கள் இரத்தக் குழாய்களினுல் உட்கொள்ளப்பட்டு, சரீரம் அனைத்திலும் உண்டாகிக் கொண்டிருக்கும் வளர்ச்சி மாறுதல்களுக்கு ஆக்கந் தருகின்றன.

சரீரத்திலுள்ள ஜீவ அணுக்களைக் கொல்லும் கதிர்கள், நம்மீது பலமாகக் காயுமாயின், உடம்பின் தசைகள் எல்லாவற்றையுமே, அவை அழித்துவிடும் என்பதற்குச் சந்தேகமில்லை. இதனுலேயே, மிதமிஞ்சின சூர்ய ஸ்நானம் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

---

இந் நூலுக்கு இரண்டாம் பாகம், கணவன் மனைவி காம கலா ரகஸ்யம். இந் நூலாசிரியர் எழுதியது. 28 அத்தியாயம், 101 சாஸ்திரங்களின்று பேற்கோள், காம கலா விருக்ஷப்-படம் வசீகர மந்திரங்கள் - சக்கரங்கள் பூஜிக்கும் முறை முதலியன அடங்கியது. பல படங்கள் விலை ரூபா 2—8—0.

சூர்ய கிரணங்கள் சாளரங்களின் வழியாகப் பாயுமானால், அறைகளுக்குள்ளே இருந்து கொண்டும் கதிர் காயலாம். ஆனால், திறந்த வெளியிற் கிடைப்பதைப் போன்ற புத்துணர்ச்சி தரும் சுத்த ஆகாயம் வீட்டின் உட்புறங்களில் கிடைத்தல் அரிது.

நீரும் மணலும் நிறைந்த பிரதேசத்தில் படுகின்ற சூர்ய ஒளியில் ஸ்நானம் செய்வதால், மிகுந்த நன்மை உண்டாவதனாலேயே, கடற்கரை யோரங்களில் கதிர் காய்வதற்கு மக்கள் செல்கின்றனர். பனிக்கட்டிகளால் மூடுண்ட மலைப்பிரதேசங்களில் பிரதிபலிக்கும் சூர்ய ஒளியில் குளித்தலும் மிகுந்த பலனை அளிக்கும்.

சூர்ய ஸ்நானம் செய்தால், சரீரத்திலுள்ள கெட்ட வஸ்துக்களை வெளிப்போக்கும், தோல், குண்டிக்காய், முதலான உறுப்புகள் சுறுசுறுப்பாய் வேலை செய்யும். சூர்ய ஸ்நானம் செய்வோர், அடிக்கடி ஏராளமாய்த் தண்ணீர் அருந்தவேண்டும்.

---

“சரீர சவுக்கியத்தை நாடுவோர் எவ்வளவு திரவியம் செலவானாலும் அதை யோசியாது செலவு செய்து உடல் நலத்தைப் பாதுகாக்கவேண்டும்.”

பயிற்சியை ஆரம்பிப்போர் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விதிகள் உண்டு. ஆரம்ப தசையி லுள்ளவர்கள், திடீரென உடல் முழுதையும் நீண்ட காலத்திற்கு சூர்ய ஒளியிற் காய விட்டுவிடலாகாது. நிழலில் பயிற்சி ஆரம்பிக்கவேண்டும். முதலிலேயே கொடிய வெயிலில் சரீரத்தைக் காய வைத்து விடலாகாது.

சிலர் உடம்பில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு பயிற்சி செய்கிறார்கள். இதனால் பயன் ஒன்றுமே விளையாது. சூர்ய கிரணங்களை சரீரத்துக்குள் நுழையா வண்ணம், எண்ணெயின் பசைப்பூச்சு தடுத்து விடுகிறது.

---

"பால்ய ஜோசியம் விருத்த வயித்தியம்" இதற்கு ஜோசியம் பால்யரிடத்துக் கேட்க வேண்டு மென்றும், வயித்தியம் வயது சென்றவர்களிடம் செய்து கொள்ளவேண்டு மென்றும், உலகம் சொல்லும். ஆனால், பால்யர்கள் தங்களுக்கு அதிருஷ்டம் வரும் காலத்தை ஜோசியம் கேட்டு வருகிறார்களென்றும். வயோதிகர்கள் இளமையில் பல வழியில் சரீர வலிமையிழந்து, முதுமையில் சரீர வலிமைத் தேடுவதற்கு வயித்திய சிகிச்சை தேடுவார்களென்றும் அறிவுடையோர்களது அபிப்பிராயம்."

சூர்ய ஸ்நானத்தினுல் தோல் தடிப்பேறி விடுமாகில், தோலில் மீண்டும் உணர்ச்சிவரும் வரையிலும், வெயில் குளித்தலை நிறுத்தல் செய்து விடவேண்டும். சூர்ய வெப்பத்தால் சரீரம் தீய்ந்துவிடுமாகில், சருமத்தின் தசைகளுக்கும் தீமை ஏற்படும். ஆதலால், காயம் பட்ட இடம் சுகமடையும் வரையிலும், பயிற்சி செய்யலாகாது.

வெயில் குளிக்குங் காலத்தில் குளிர் உண்டானுல், மேலாடை அணிந்து கொள்ள வேண்டும். அதிக வெப்பமாயிருக்குமாயின், நிழலில் தங்கிக்கொள்ள வேண்டியது. சூர்ய ஸ்நானம் செய்யுங்காலத்தில் மனதில் மகிழ்ச்சி, ஊக்கம், வலிமைபோன்ற உணர்ச்சிகள் தோன்ற வேண்டும். பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள், நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று மணிநேர

"குப்பை உயரும்; கோபுரம் தாழும்; யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரும்; தாழ்ந்தவன் உயர்ந்தோனுவான்; உயர்ந்தவன் தாழ்ந்தோனுவான்; செல்வம் ஒரு வழிப் பட்டதல்ல; சென்று கொண்டே யிருக்கும்; தரித்திரம் என்றால் என்றும் நிலையில்லாததென்பது பொருள்."

மும், புதுப்பயிற்சியாளர்கள், தினந்தோறும் சில நிமிட நேரமுமே பயின்று வரவேண்டும்.

தேகத்தின் சில பாகங்களை மட்டிலும் அதிகநேரம் சூர்ய ஒளியிற் தோய்ப்பதைவிட அதிக பாகத்தை மிதமான அளவிற்கு சூர்ய ஒளியில் தோயவைப்பதே மேலாகும். உடலின் எல்லா உறுப்புகளும் சூர்ய ஒளியில் தோயவேண்டுமென்பதன் நோக்கத்தை நன்கு உணரவேண்டும். ஜனனேந்திரியங்களில் சூர்ய ஒளி படுவதால், சரீரத்தினின்று வெளியாகும் Endocrine எனும் நீர்ச்சுரப்பு இரத்தத்துடன் கலந்து, உடம்பின் உறுப்புகளைத்திற்கும் சிறந்த சக்தியை ஊட்டுகின்றது. இப்பாகங்களைத்தான் சாதாரணமாக எல்லோரும் மூடி வைத்துக் கொண்டு, அப்பியாசிப்பது வழக்கம். முற்றிலும் நிர்வாணமாயிருக்க இயலாதென்றாலும், மர்ம ஸ்தானங்களை மட்டிலுமாவது சூர்யனொளியிற் படும்படியாக, சூர்ய ஸ்நானம் செய்தல் மிக நல்லது. இடையை

---

" நாம் வலிமையுள்ளவன் என்னும் நம்பிக்கை நம்மனதில் எப்போதும் நிரம்பி இருக்கட்டும். தன் நம்பிக்கை யாகிற இருப்புக் கம்பியின் நாதத்துக்கு, எல்லா ஹிருதயங்களும் அநுகாதம் செய்யும். "

மறைத்து, இதர பாகங்களை மட்டிலும் சூர்ய ஒளியில் ஸ்நானம் செய்விப்பதால், சிறந்த பலனை அடைய முடியாது. — 'வைத்யா' (ஊழியன்.)

சூர்ய கிரணங்களின் நன்மை, ஜீவ சக்தி ஓட்டம். சூரிய கிரண சக்தியைப் பற்றி ஒரு பிரிட்டிஷ் டாக்டர் கூறுவதாவது:—" சூர்ய கிரணங்கள் தாராளமாக விழும் இடத்தில், காற்று சுத்தமாய் இருக்கும். விஷக்கிருமிகள் இல்லாததாய் இருக்கும். அந்தக்காற்று தான், உடலுக்கு க்ஷேமத்தைத் தரும்.

" நல்ல காற்று தேகத்துக்கு நிறைய வேண்டியிருக்கிறது. இரத்த ஓட்டத்துக்குத்தேவையான பிராணவாயு உட்கொண்டால், போதுமானது என்று நினைப்பது தவறு. உள் அவயங்களில் பழுது ஏற்பட்டால், அதைச் சீர்திருத்தவும், அவ் வயவங்களுக்கு புத்துயிர் அளிக்கவும், பிராணவாயு அவசியம். ஆனால், பிராணவாயு தேவை என்பதற்காக, கிருமிகள் நிறைந்த காற்றை உட்கொள்ளலாகாது. அதற்குத்தான் சூர்ய ஒளி தாராள

---

" சாமான்ய ஜனங்களால் தூற்றப் பெறுதலே பெருமைக்குக் கட்டளைக் கல்லாகு மென்று நினை. "

மாகப் பரவும் இடத்திலிருந்து, காற்றை சுவாசிக்க வேண்டுமென்று கூறுகிறேன்.

பலம் - புத்துயிர்:—" தவிர, உணவுப்பொருள்களி லும், சூர்ய கிரணங்கள் பரவுவதால், மிக்க நன்மை ஏற் படுகிறது. காய் கறிகள் புத்துயிரும் பலமும் பெறுகின் றன. பால் தரும் பசுக்களுக்கு முக்கிய ஆகாரமான புல்லுக்கு, ஜீவ சக்திதருவது, நல்ல சூர்ய வெளிச்சமே.

" சூர்யன் ஒளிமங்கி நிற்கும் மழைக்காலத்தில் இரத்தசோகைமாதிரி, ஒருவித வியாதிவருவதைப் பார்க் கிறோம். இந்த வியாதி, கோடைகாலத்தில் இருந்த இடம் தெரியாமல், ஓடிப்போய் விடுகிறது. இதிலிருந் தும், சூர்ய வெளிச்சத்தின் அரிய குணங்கள் நன்றாகத் தெரிகிறது." — 'ஹிந்துஸ்தான்'

---

• "நான் உண்மையைப் போல் கர்ண கடூரமாயிருப்பேன். நீதிநெறி தவறாது நடப்பேன். எந்தக் காரியமானாலும் வேஷம் போடேன். எந்த வேலையிலும் உண்மையாகவே உழைப்பேன். இரண்டு படப்பேசேன். சாக்கு போக்கு கூறேன். அணுவள வும் பின் வாங்க மாட்டேன். அதனால் நான் கூறுவதற்கு யாரும் செவி சாய்க்காமல் இருக்கமுடியாது." - கேரிஸன்.

கண் கொடுக்கும் கதிரவன். பிரதி தினமும் காலையில் எழுந்து, சூரியனைப் பார்த்து வந்தால், கண் நோய் தீருமென்று டாக்டர் அகர்வால் கூறுகிறார். சூர்ய வெளிச்சம் கண்ணுக்கு மிகவும் அவசியமானதாம். நல்ல பார்வையுள்ள பிராணிகள்கூட, இருளில் அடைக்கப்பட்டால், பார்வை மங்கினவையாகும். சுரங்கத் தொழிலாளர்களுக்குக் கண் நோய் வரக் காரணமென்ன? போதிய சூர்ய வெளிச்ச மின்மையே என்று அவர் கூறுகிறார். சூர்ய நமஸ்காரம் நமது மூதாதையர் செய்து வந்த தன் பலனை, இப்பொழுதாவது மக்கள் உணர்வார்களா? — நவசக்தி.

## பாரதியார் வாக்கு.

கடலின் மீது கதிர்களை வீசிக்
கடுகி வான்மிசை ஏறுதி ஐயா!
படரும் வானொளி யின்பத்தைக் கண்டு
பாட்டுப் பாடி மகிழ்வன புட்கள்;

---

“ தான் அறவழியில் நிற்பதால், பிறர் அடையும் சாந்தியும் சந்தோஷமும் இவ்வளவென்று கணித்தல், அநேகமாக ஆயவாத காரியம். ” — அக்கம்பீஸ்.

உடல் பரந்த கடலுந் தன்னுளே
ஒவ்வொர் நுண் டுளியும் விழியாச்
சுடரு நின்றன் வடிவையுட் கொண்டே
சுருதி பாடிப் புகழ்கின்ற திங்கே. 1

என்ற னுள்ளங் கடலினைப் போலே
எந்த நேரமு நின்னடிக் கீழே
நின்று தன்னகத் தொவ்வொர ணுவும்
நின்றன் ஜோதி நிறைந்தது வாகி

நன்று வாழ்ந்திடச் செய்குவை யையா!
ஞாயிற் றின்க ணொளிதருந் தேவா!
மன்று வானிடைக் கொண் டுலகெல்லாம்
வாழ நோக்கிடும் வள்ளிய தேவா! 2

காதல் கொண்டனை போலு மண்மீதே;
கண்பிறழ் வின்றி நோக்குகின்றாயே;
மாதர் பூமியு நின்மிசைக் காதல்
மண்டினா விதி லையமொன் றில்லை;

---

"கள்ளரிற் கள்ளன் லோபி அவன் தன்னையே கொள்ளை அடிப்பான்."

சோதி கண்டு முகத்தி லிவட்கே
தோன்று கின்ற புதுநகை யென்னே!
ஆதித்தாய் தந்தை நீவி ருமக்கே
ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன். 3

— சி. சு. பாரதியார்.

## சந்திர தரிசனத்தின் பலாபலன்.

“குறைவறுசோமனைப் பூரணைநிசியிவணுண்டுமிக்
கொண்டமுகமுத்தரமாய்ச் சசிகொடு நோக்குதலு
நறைமலராதிபணிற்போ னண்ணிடிலப்பலமாம்
நடுவையிருகரமடித்து நாட்டிதியுங் கலப்பாய்
நிறையவிராப்பகற்பொழுதுற்றிடுங்காலம் வடக்காய்
நின்மலவான் பார்க்கநிலா நிறைவினுறும் நிறைதான்
மறைதல் வியாகுல நிதிய மரணமிதன் பலமாம்
மலைய முநியே காதற்கிதம் சொல்லும் மதுவே.”

“கடலுலகு முழுமையுமே விளக்கிக் காட்டும்
கதிர்மதியு மிருவர்களே கடவுளாகும்

---

* உற்சாகமும் சுறுசுறுப்பும் நிறைந்த மக்கள் ஒருவனது நினைவில் நீண்ட காலம் வாழ்கிறார்கள்.

உடலுக்குள் இருகலையாய்ப் பிரிந்தே நாளும்
உயிரானோர் இரவி மதி யவரே யென்றும்
இடைவிடா திருநேரம் தெரிசித் தோர்கள்
ஏழுலகப் பெருந்தகையை எழுதப் போமோ
கடலுவகை உடலுலகிற் கருவமைத்துக்
கதிர்மதியைக் கண்டவரே கடவுளாமே.''

இந்த சந்திரதரிசனம், பிரமசாரியும் கிருகஸ்தனும் அவசியம் செய்தல் வேண்டும். யோக நிஷ்டர்களாகிய ஆத்ம ஞானிகள் உடலுக்குள்ளே இதைத் தரிசிப்பார்கள்.

சோமவாரம் - பௌர்ணமி கூடிய தினம், இரவு பதினைந்து நாழிகையில், பூர்ண சந்திரன் ஆகாய நடுவில் பிரகாசிக்கும்போது, வடக்குமுகமாக நின்று, அண்ணாந்து பார்க்க, முன் சூரிய தரிசனத்திற் கண்ட பலாபலன்களைப் போன்று அறியலாம்.

சித்திரை - அற்பசி மாதங்களில் ஆதிவாரமும் - பௌர்ணமியும் கூடிய தினத்தில், இரவிலாவது, சோம

"ஒரு பையனை ஆண்மையுடையவனாக்குவதற்கு எந்த பெண்பிள்ளையாலும் இயலாது. — ஆர்-ஜே-ஆண்டர்சன்ஸ்

வாரம் அமாவாசையும் கூடிய தினத்தில் நடு நிசியிலா வது, ஆகாயம் நின்மலமாக இருக்கும் தருணத்தில், இடையை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு, வடக்கு நின்று, தெற்குமுகமாகப்பார்க்க, மேலே கண்ட உருவம், அளவு குறைந்து தோன்றும் பக்ஷத்தில், மனோ வியாகூலம் உண்டாகும். நிறையளவாகத் தோன்றும் பக்ஷத்தில், ஐஸ்வரிய அபிவிருத்தி உண்டாகும். ஒரு ருவமும் தோன்ருத பக்ஷத்தில், மரணம் நெருங்கி வருகிற தென்றறியவும்.

## கருட தரிசனம்.

" அருக்கனிலறியா தியற்றிடுந் தீங்குகள்
அனைத்துமே விலகு மரும்பிறை தன்னில்
திருக்குரா புந்தியும் குருவுமே வெற்றி
பிரபலமாம் வெள்ளியு முடவன்
தரித்திடுமாயுள் பூரண மென்னத்
தவத்தவராலுரைத்த தரிசனமாகும்
கருடனை நிதமும் கண்டவரடையும்
காக்ஷியின் மிக்க காக்ஷி யிலையால்."

---

" கலையே பனித வாழ்வின் விஷம் " — பிளேர்.

ஆதிவாரம் காலை கருட தரிசனம் கிடைத்தால், தான் அறிந்தும் அறியாமலும் செய்த பாப தோஷங்கள் பஞ்சாய்ப் பறக்கும். திங்கள் - செவ்வாய் வாரங்களில் தரிசித்தால், மனோ வியாகூலம் நீங்கும்; புதன் - வியாழன் வாரங்களில் தரிசித்தால், பகைவர்கள் வல்லமை கெடும். எக்காரியத்தும் தனக்கே வெற்றி கிடைக்கும். வெள்ளி - சனி வாரங்களில் தரிசித்தால், ஆயுள் வளரும். குடும்பம் தழைத்தோங்கிச் சந்தானம் பெருகும்.

---

## பதினேழாவது அத்தியாயம்.

# ஜீவ மின்சாரம்.

[தலைசை - எஸ். கோவிந்தசாமி எழுதியது.]

நம் மானிட தேகத்தில், ஜீவன்-மூளை-நரம்பு-அஸ்தி மாமிசம்-சர்மம்-இந்திரியம் முதலிய உறுப்புக்கள் ஒன்றுக்கொன்று சம்பந்த முள்ளவை. இவற்றுள், முன்

" பலவீனர்கள் அதிருஷ்டத்தில் நம்பிக்கை வைக்கின்றனர். பலமுடையவர் காரண காரியத் தொடர்பில் நம்பிக்கை வைக்கின்றனர். — எமர்ஸன்.

சொல்லப்பட்ட ஜீவன்-மூளை ஆகிய இரண்டுமே விசே டிக்கன. இந்த மூளையின் சுவாதீனத்திலேயே நரம்பு கள் இருக்கின்றன. மானிட தேகத்தில் நடக்கும் ஒவ் வொரு தொழிலும், பிராணன் அல்லது ஜீவன் என்கிற ஓர் அற்புத சக்தியினால் நடைபெறுகிறது. இந்தப் பிராண சக்தி மானிட தேகத்தில், உச்சி முதல் உள்ளங் கால் வரையிற் பரவி யிருக்கிறது, இதற்கு ஜீவ மின் சாரம் என்றும், ஆத்ம ஜோதி என்றும், நரம்புத்தேஜஸ் என்றும், மானுஷ்ய காந்தமென்றும் பல பெயர்களுண்டு.

இது, கட்புலனுக்குப் புலப்படாத ஒருவித நுட்ப சக்தி. சூர்யனிலிருந்து கிரணங்கள் பரவுவது போல, ஒவ்வொரு மனிதனிடத்திலிருந்தும், அதிகமாகவோ - குறைவாகவோ, ஜீவ மின்சாரம் பரவுகிறது. ஒரு வரு டைய தேகத்தில் ஜீவகாந்தம் குறைவாயிருக்குமாயின், அதை மற்றவர் தேகத்திலிருந்து பூர்த்தியாக்கலாம். இந்த ஜீவகாந்தம் குறைதலினாலோ, அன்றிக் கூடுதலினா லோ, நோய் உண்டாகிறது. சுவாசாசயத்தில் போது மான அளவு, காந்த சக்தி யில்லாதிருக்குமாயின், க்ஷய

---

"சிறு கவலை பெசும்; பெரிய கவலை ஊமை." - ஸெனிக்க.

ரோகம் - சுவாச காசரோகம் போன்ற ரோகங்கள் உண்டாகும். இப்படியே இரத்தாசயத்தில் போதுமான வளவு காந்த சக்தி இல்லாவிட்டால், இருதய வியாதிகளும், அன்னாசயம் ஜலாசயம் குண்டிக்காய் ஈரல் முதலியவைகள் விஷயத்திலும், ஜீவ மின்சாரம் குறைவாயிருந்தால், அவ்வவ்விடங்களில் வியாதி யுண்டாகும். சுகதேகியிடத்திலிருந்து நோயாளியிடம் ஜீவ மின்சாரம் பரவ ஏது உண்டு. ஒருவரை யொருவர் தொடுவதாலும், தொடாமற் சமீபத்தில் இருப்பதாலும், தூரத்தில் இருப்பதாலும், இந்த ஜீவாதார காந்த சக்தியானது பாயக்கூடும். இப்படிப் பாயச்செய்தலினால், நோயாளியின் நோய் சொஸ்தமாகும்.

இந்த மானுஷ்ய காந்தத்திற்கு மூல ஸ்தானம் மூளையே. அறிவு-ஆசை-சன்மார்க்கம்-துன்மார்க்கம்-பொறுமை-கோபம்-ஆண்மை முதலிய எல்லா வகைக் குணங்களுக்கும் இருப்பிடம் மூளையே. ஓர் அரசனது அரண்மனைக்கு, நாட்டின் பல பாகங்களிலிருந்தும், சமா

" அநேக சமயங்களில் துக்கத்தை விடக் கவலைகளை நிவர்த்திக்க ரொம்ப கஷ்டமாகும். என் ? துக்கம் நாளடைவில் சாகும் கவலை நாளடைவில் வளரும். " — ஜீன்பால்.

சாரம் வருவதும் போவதும் போல், நமது உடம்பாகிய நாட்டிலிருந்து, மூளையாகிய அரண் மனைக்கும், மூளையிலிருந்து உடம்புக்கும், நரம்பாகிய தந்திக்கம்பி மூலம் செய்தி யனுப்பப்படுகிறது. நமது பாதத்தில் முள்ளேனும் ஆணியேனும் தைத்தால், உடனே மூளைக் கறிவிக்கப்பட்டு, அங்கிருந்து கைக்குக் கட்டளை இடப்பெறுகிறது. அந்தக் கை உடனே முள்ளேயேனும் ஆணியையேனும் பாதத்திலிருந்து எடுத்து விடுகிறது. இவையெல்லாம், ஒரு கணப்பொழுதுக்குள் முடிவடைந்து விடும். நரம்புகளெல்லாம் ஜீவ மின்சாரத்தைக்கொண்டு தான், இவ்வேலைகளைச் செய்கின்றன. இந்த ஜீவ மின்சாரம் மூளையென்னும் பொக்கிஷசாலையிற்றான் சேமிக்கப்படுகிறது. அங்கிருந்து உடம்பெங்கும் நரம்புகள் மூலம் செல்லுகிறது. இந்த ஜீவ மின்சாரம் மூளையிலிருந்து உடம்பெங்கும் எவ்வாறு செல்லுகிறதென்பதை, நாம் யாவரும் அறியவேண்டும். நமது தலையின் கபாலத்தைத்திறந்தால், அங்கே மூளை காணப்படும். மூளையின் மேற்பகுதி பழுப்பு நிறமாகத் தோற்றும். இந்தப்

"பெரிய மனிதராகக் கூடிய வாலிபருடைய அகராதியில் 'தோல்வி'' என்னும் பதம் கிடையவே கிடையாது - லிட்டன்.

பழுப்பு நிறத்திற்றான், ஜீவ மின்சாரம் சேமிக்கப்படும். இங்கிருந்து ஒன்பது நரம்புகள் வெளிப்படுகின்றன. பின், மூளை வழியாக அவற்றிலொன்று முதுகுத் தண்டினூடாகச் செல்லுகின்றது. இந்த நரம்பு முப்பத்தொரு நரம்புகளாகின்றது. இந்த நரம்புகள் நாற்பதும், இன்னும் பல பிரிவுகளாகின்றன. உடம்பின் எந்தப்பாகத்திலிருந்து மூளைக்குச் சமாசாரம் எட்டவேண்டுமாயினும், மேற்சொல்லிய நரம்புகளின் வழியாகவே செல்ல வேண்டும். ஒரு ஊசியினாற் குத்தப்படுமிடத்திலும், நரம்புண்டு. ஆதலினாற்றான், எங்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. இந்த உணர்ச்சிகளெல்லாம், இமைப்பொழுதில் 196 அடி வீதம் மூளைக்குச் செல்லுகிறது. இவ்வளவு விரைவாக இவை நடவாவிட்டால், நாம் பெரிய துன்பப்பட வேண்டி வரும். நம் தேகத்தில் அங்கங்கே யுதிக்கும் ஒவ்வொரு காரியமும், அவ்வப்போது அறிவிக்கப்படுகிறது. பஞ்சேந்திரியங்களும் தங்களுடைய அனுபவங்களை அவ்வக்காலத்தில் மூளைக்குத் தெரிவித்து விடுகின்றன. இவ்வாறு உடம்பில் இரணம் ஏற்பட்டா

---

"தேவர்கள் செல்ல அஞ்சும் இடத்துக்கு மூடர்கள் பாய்ந்து விடுவர்." — போப்.

லும், ஓர் அவயவத்தில் நோயுண்டானாலும், ஆகாயத்தில் சீதோஷ்ண நிலை மாறினாலும், வெளிச்சம் - இருள் - இன்பம் - துன்பம் முதலியவை நேரிட்டாலும், அவை யெல்லாம், ஜீவமின்சார சக்தியுள்ள நரம்புகளின் மூலம் மூளைக் கறிவிக்கப்பட்டு, அதற்குரிய சமாசாரம் நடைபெறுகிறது. அவயவங்களிலிருந்து மூளைக்குச் செய்தி யனுப்பும் நரம்பும், மூளையிலிருந்து அவயவங்களுக்குச் செய்தி யனுப்பும் நரம்பும் ஒன்றல்ல. அவை வெவ்வேறானவை.

சில உலோகத் துண்டுகளை ஒருவகைத் திராவகத்தில் அமிழ்த்தி வைப்பதால், இரசாயனத் தொழில் நடந்து, அதிலிருந்து மின்சாரம் ஏற்படுகிறது. அவ்வாறே, நமது தேகத்திலும் பலவகையாக ஜீவகாந்த சக்தி ஏற்படுகிறது. இரைப்பையில் ஆகாரம் ஜீரணமாகும் போது உண்டாகும் இரசாயன மாறுபாட்டால், அங்கே ஜீவ மின்சாரம் உண்டாகிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் பிராணவாயு விருக்கிற தென்பது, நமக்குத் தெரி

அறிஞர்கள் கடைசியாக உதறித் தள்ளுவது, புகழிலுள்ள மோகமேயாகும். ”
— டாஸிட்டஸ்.

யும். அந்தப் பிராணவாயுவில் மின்சார சக்தியுண்டு. உள்ளே சுவாசிக்கும்போது, காற்றானது சுவாசப் பைக்குச் செல்லுகிறது. அங்கு அசுத்த இரத்தத்தைச் சுத்தீகரிக்கிறது. சுத்தீகரிக்கப்பட்ட இரத்தமானது காற்றிலுள்ள பிராணவாயுவையும் பெற்றுக்கொண்டு, இரத்தாசயத்திற்கு வந்து, அங்கிருந்து உடம்பெங்கும் செல்லுகிறது. அவ்வவ்விடத்திலுள்ள நரம்புகளால் பிராணவாயுவிலுள்ள ஜீவ மின்சார சக்தி கிரகிக்கப்படுகிறது. தோலின் உட்புறத்தில் ஒருவகை வெள்ளை நிறமான பகுதியிலிருந்து புளிப்பு, காரம் என்னும் பொருள்கள் உற்பத்தியாகின்றன இவற்றிலும் மானுஷ்ய காந்தம் அல்லது நரம்புத் தேஜஸ் என்னும் வஸ்து உண்டு. இன்னும் ஒருவரோடொருவர் கலந்து கொள்வதாலும், ஒருவர் தேகத்திலிருந்து மற்றவர் தேகத்திற்கு நரம்புத் தேஜஸ் பாயக்கூடும். ஆங்கிலேயர் இருவரும் சந்தித்தாற் கைகுலுக்கிக் கொள்வது வழக்கம். அவ்வாறு கைகளைச் சேர்த்துக் குலுக்கும்போது, ஒருவர் முகத்தை ஒருவர்

---

“ தங்கத்தால் செய்யப்பட்ட தானாலும் தளைகளை விரும்புபவன் சுத்த முட்டாள் என்பது உறுதியான துணிவு. ”

— ஸ்பென்ஸர்.

பார்க்கவேண்டிய அவசியம். இவ்வாறு செய்வதால், இருவருக்கும் இடையிலுள்ள சந்தோஷத்தைக் காட்டிலும் வேறு பயன்கள் அநேகமுண்டு. கை குலுக்குவதாற் சன்மார்க்கம் தேகாரோக்கியம் சற்குணம் முதலியவை உண்டாகின்றன. ஒருவரிடமுள்ள குணம் மற்றவரிடத்துக்கு, ஜீவ மின்சாரம் மூலம் செல்லுகிறது. ஒருவனுடைய குணங்களே மாறுமாயின், ஒருவனிடத்தில் ஏற்படும் வியாதியை மாற்றுவதும் கஷ்டமா? ஒருவனது குணங்களை அவன் கண்பார்வையினாலேயே அறிந்து கொள்ளலாம். எந்த மனிதனையும் கண் பார்வையால் அடக்கியாளலாம். இது பற்றியே கை குலுக்கும்போது, முகத்தைப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது. ஜீவ காந்தம் உண்டாகும் விதம், இதுகாறுங் கூறப்பட்டது. இப்படி உண்டாகும் நரம்புத் தேஜஸ் எல்லாம் நரம்புகளின் மூலம் கிரகிக்கப்பட்டு, மூளையிற் சேமிக்கப்படுகிறது. இரத்தாசயமானது உடம்பு முழுதுக்கும் எப்படி இரத்தத்தை அனுப்புகிறதோ, அப்படியே ஜீவ

---

"விலை மதிப்புள்ள ஆடைகளை அணிந்து கொள்வது மனிதத் தன்மையன்று. ஆடம்பரமேயாகும்." - ஷேக்ஸ்பியர்.

மின்சாரமும் மூளையினால் அளவுப்படி அனுப்பப் படுகிறது. ஒருவருடைய நரம்புத் தேஜஸை மற்றவரிடம் முழுதும் போகாமற் றடுக்கவும் முடியாது. ஒரே கணப் பொழுதில் அளவற்ற மின்சாரத்தைப் பாயும்படி செய்யவும் முடியாது.

இந்த நரம்புத் தேஜஸை அதிகமாக்கிக்கொள்ளப் பல வழிகள் உண்டு. அவற்றிற் சிலவற்றை நாம் அறிய வேண்டியது அவசியம். சுருங்கச் சொல்லுமிடத்துச் சுவாசாப்பியாசத்தால் தேகாரோக்கியமும், தேகாரோக்கியத்தால் முக மலர்ச்சியும் விருத்தியாகின்றது. இப் பிராணாயாமத்தாலும்,நற்பழக்கத்தாலும், திட சித்தத்தாலும், அவருடைய ஜீவ காந்த சக்தி வளர்ந்தோங்கும். மானுஷ்ய காந்தத்தை அதிகமாக்க விரும்புவோர்க்குப் பிராணாயாமம், அத்தியாவசியகம். தன்னடக்கம் ஏகாக்ர சித்தம், தன்னம்பிக்கை முதலிய மனோ சக்திகளால் உண்டாகும் பயன்களெல்லாம் பிராணாயாமத்தால்

---

" ஆடையைத் தம்மில் ஒரு முக்கிய அம்சமாகச் செய்து கொள்பவர் பொதுவாக ஆடையை விட அதிக மதிப்பில்லாதவராய் விடுவர்."

— ஹாஜ்வுட்.

நிறைவேறும். எதிரிகளுக்குத் தெரியாமல், நல்ல காரியங்களுக்கும் நியாயமான விஷயங்களுக்கும் உபயோகப் படுத்திக் கொள்ளும்பொருட்டு, அவர்களை வசப்படுத்தி, நமக்குள்ளாக்கும் படியான சக்தி யுண்டாகும். ஒருவருக்கும் தெரியாமல் இந்தச் சக்தியைச் செலுத்துவதற்குச் சுவாசாப்பியாசம் அவசியமானது. இன்னும் பிராணுயாமம் செய்வதால், ஆயுள் நீடிக்கும். நோய்கள் தீரும். கோபம், பயம் மனோ சஞ்சலம் துக்கம் முதலிய ஜீவசக்தியைக்குறைக்கக்கூடிய தன்மைகளை நீக்கி, அன்பு சாந்தம் பொறுமை தயாளசிந்தை சிவகாருண்யம் திடசித்தம் சந்தோஷம் முதலிய ஜீவாதார நற்குணங்களை விருத்தி செய்வதற்கும், ஞான ஒளியை உண்டாக்கிப் பரமானந்தத்தைக் கொடுப்பதற்கும், இதுசாதனமாகும். பிராணுயாமம் செய்யும் முறை: தனிமையான ஒரு அறையிலிருந்து, தன் வலக்கைக் கட்டை விரலால் வலது நாசியை மூடி, இடது நாசியின் வழியாய்ப் பத்து என்னும் வரை சுவாசத்தை இழுத்து, இடது நாசியை

"சந்தர்ப்பம் இடம் கொடுத்த அளவு சரியாய் காரியங்களைச் செய்து முடிப்பவன் பெருங்காரியம் செய்தவனுன்வான் அதற்குமேல் செய்ய தேவர்களாலும் முடியாது" — யங்

யும் மோதிர விரலால் மூடிப் பத்து எண்ணும் வரை சுவாசத்தை யடக்கல். பிறகு வலது நாசியைத் திறந்து, பத்து எண்ணும்வரை மூச்சை விடுதல்; பின் வலது நாசியால் மூச்சை வாங்கி நிறுத்தி, இடது நாசியால் விடுதல்; இப்படியே மாறி மாறிச் செய்தல். இப்படிக் காலை மாலை பத்து நிமிஷமாயினும் செய்யவேண்டும்.

இப்படியெல்லாம் உண்டாகியும் உண்டாக்கப் பட்டும் வரும் ஜீவ மின்சாரத்தின் நற்பயன்கள் எண்ணிறந்தன.

எத்தகைய செய்தற்கரிய தொழில்களையும் செய்ய லாம். உடம்பிலுள்ள ஒவ்வொரு தொழிலும் ஜீவ மின் சாரத்தாலேயே உதிக்கின்றன. ஜீரணம் என்னும் ஒரு தொழிலை எடுத்துக்கொள்வோம். இத்தொழில் இரைப் பையிலிருந்த பொழுதிலும், அத் தொழிலை நடத்துவ தற்கு, ஜீவ மின்சாரசத்து மூளையிலிருந்து வரவேண்டி யிருக்கிறது. மூளைக்கும் இரைப்பைக்கும் சம்பந்த முள்ள நரம்புகளின் வழியாக, மின்சாரம் ஓடிக்கொண் டிருக்கிறது.

---

" நேர் வழியில் அடைய முடியாததை நேரல்லாத வழி யில் ஒரு நாளும் அடைய முடியாது " — கதே.

இவ்வுலகத்திற் காணப்படும் சிகிச்சா முறைகளில் நரம்புத் தேஜஸைக் கொண்டு செய்யும் காந்த வைத்தியமும் ஒன்று. ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு தேகத்தையும் மனத்தையும் பக்குவப்படுத்துகிருனே, அவ்வளவுக் கவ்வளவு, ஜீவமின்சாரத்தால் நோயை நீக்கும் தன்மையுமுண்டு. சில நிமிஷங்களில் எவ்வித நோயானுலும் சரி, எவ்விதமான கெட்ட வழக்கமானுலும் சரி, பார்ப்போரும் கேட்போரும் அதிசயிக்குமாறு, அதை நீக்கி விடலாம். அது மாத்திரமன்று; கோழைத் தனத்தைத் தவிர்த்துச் சீர்குலைந்த நரம்புக் கூட்டங்களினுல் ஏற்படக்கூடிய சகல வியாதிகளையும் தீர்க்க முடியும். அப்படித் தீர்க்கப்பட்ட வியாதியானது மறுபடி உண்டாகாது என்பது திண்ணம். இவ்வைத்தியத்திற்கு ஆயுதங்களும் வேண்டியதில்லை. மருந்துகளும் வேண்டியதில்லை. மன நம்பிக்கையே போதுமானது.

காந்த வைத்தியரின் ஆத்மா, மனத்திற் புகுந்து, பிறகு மூளையின் வழியாக, இந்திரியங்களின் உதவியால்

---

"கொஞ்சமான வஸ்துக்களை வைத்துத் திருப்தி அடைய முடியாதவன் முடிவிலாத தண்டனையை அநுபவிப்பவனுவான்" — ஹாரிக்.

தனது ஆத்ம ஜோதியாகிய ஜீவ மின்சாரத்தைப் பிணியாளியினுடைய இந்திரியங்களின் வழியாக மூளைக்குச் செலுத்தி, அங்கிருந்து மனத்தின் வழியாக ஆத்மாவிற் சேர்க்கிறது. இவ்வாறு சேர்க்கிறவர் செய்துகொள்பவர் ஆகிய இருவரது ஆத்மாவும் கலக்கும்போது, மற்றவருக்கு நன்மை புரியும் காந்த வைத்தியரது ஆத்மா, தனது சக்தியைக் கொடுக்கிறது. இதனால், நோய் நீங்குகிறது. காந்தக் கல்லானது ஊசியை எவ்வாறு பற்றுகிறதோ, அவ்வாறே காந்த வைத்தியனும் நோயாளனுடைய மனதைப்பற்றி, அதன் மூலம் அவனுக்குச் சுகத்தைக் கொடுக்கிறான். ஒவ்வொருவராலும் அறிந்தோ அறியாமலோ வியாதிகளை நீக்குவதற்கும் மனத் துன்பத்தை போக்குவதற்கும் மானுஷ்யகாந்த மென்னும் ஜீவ மின்சாரம் உபயோகப்பட்டு வருகிறது. வைத்தியரால் கைவிடப்பட்டு இறக்குந் தறுவாயிலிருக்கும் குழந்தையைத் தொட்டிலிலிருந்து எடுத்து மார்போட

"நம்மை நாசம் செய்யும் கண்கள் பிறர் கண்களே! என்னைத் தவிர ஏனையோர் எல்லோரும் குருடாயிருந்தால் எனக்கு ஆடம்பரமான ஆடைகளும் ஆடம்பரமான வீடுகளும் தேவையிரா"

— பிராங்க்லீன்.

ணைத்தும் முத்தமிட்டும் அக் குழந்தையின் பிராணனுக்காகக் கடவுளைத் தொழுது பிரார்த்திக்கும் அன்னையர்களை நாம் அறிந்ததில்லையா? குழந்தையை மார்போடணைத்து மடிமீது வைத்துக் கொண்டு, தம் கையால் தமக்குத் தெரியாமலே அக் குழந்தையின் உச்சந் தலையையும் முகத்தையும் தடவிக் கொடுப்பவர்கள், பிரியத்தால் அவ்வாறு தடவிக் கொடுக்கும்போது, அக் குழந்தை, நோய் நீங்கிச் சுகமடையவேண்டு மென்னும் தமது முழு விருப்பத்தையும் செலுத்துகிறார்கள். அப்படியாகத் தாயினிடத்திலிருந்து, அவளுக்குத்தெரியாமலே, குழந்தை ஜீவ மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டு, சுகமடைய ஆரம்பிக்கிறது. தாயினுடைய கண்ணுக்குப் புலப்படாத ஜீவமின்சாரத்திலிருந்து, குழந்தை சுகமடைகிறது. இவ்வாறே, எந்த வியாதியஸ்தனிடத்திலும் ஜீவ காந்தா சக்தி அதிகமாயுள்ள ஒருவர் செய்தாற் சுகமடையலாம்.

---

"உன்னைப் பற்றி யாரேனும் குறை கூறினால், அது உண்மையாயின் அதை திருத்திக் கொள். பொய்யாயின் நகைத்துவிடு" — எபிக் டெட்டஸ்.

நரம்புத் தேஜஸின் நன்மையைப் பற்றிச் சிலர் எண்ணிறந்தபடி புகழ்கின்றார்கள். சிலர் அதை இகழ்கிறார்கள். நரம்புத் தேஜஸ் என்னும் ஒருவித சக்தி உண்டென்பதை எல்லாரும் ஒப்புக்கொள்ளும்படி ஒரு காலம் வரும். அப்பொழுது எல்லா வியாதிகளுக்கும் காரணம் நரம்புத் தேஜஸ் என்பது வெளியாகும். மனிதரிடத்தில் வியாதிதொத்துவதற்குக்காரணம் கிருமியல்ல. நரம்புத் தேஜசே என்பது சித்தாந்தப் படுத்தப்படும்.

இ. சா. ("லோகோபகாரி")

---

## பதினெட்டாவது அத்தியாயம்.

# இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ?

" இத்திறநூலிற் சொன்ன வியல்பினை
முழுது மோர்ந்து

---

" கோபத்தைச்சாந்தத்தாலும், தீமையை நன்மையாலும், உலோபத்தை தயாளத்துவத்தாலும், பொய்யை மெய்யினாலும் வெல்லுதல் வேண்டும். — கௌதம புத்தர்.

முத்தெனும் நகையார் போகம்
முயற்கினை பெற்றோர் தாமே
செத்தபின் முக்தி சேர்வார் என்னும்
அச்சில கைத்தீர்த்து
கொத்நலர் குழலார் அன்பிற்
கொடுக்க பேரின்பம் பெற்றும். "

"கடவுள், நாயகன் ஸ்வரூபமாக இருப்பதால், மனைவிதன் நாயகனை நேசிக்கிறாள். அக்கடவுளே நாயகி ஸ்வரூபமாக இருப்பதால், நாயகன் நாயகியை நேசிக்கிறான்." — பிரஹதாரண்ய உபநிஷத்.

இந்த சந்தேகம் ஒவ்வொருவர் மனதிலும் உலாவி வருகிலதைக் காணலாம். சிலர் இல்லறமே பெரிது; இல்லறத்திலேயே துறவறத்தை அடையவேண்டும். பேரின்ப முத்திக்குச் சிற்றின்பமே ஒரு மார்க்கமாகு மென்பர். மற்றும் சிலர் சீ! சீ!! 'சம்சாரம் சாகரம் துக்கம்" சம்சாரமாகிய மஹா துக்க சமுத்திரத்தில்

---

" குற்றமற்ந்த நெஞ்சுக்குக் கொலையாளி வேண்டிய தில்லை." — போமண்ட் பிளெச்சர்.

மூழ்குகின்றவர்கள் மஹா கஷ்டத்தைச் சதா அநுபவிக்க வேண்டி வரும்.

“ மண்ணினும் தனத்தினும் மனைக்குவாய்ந்த நற்
பெண்ணினும் மகவினும் பெரிய பேறினும்
நண்ணென விழைவினைத் துறந்த தூயரே
விண்ணினு மின் புடன் விளங்கி மேவுவார். ”
— சிவ தருமோத்தரம்.

ஆதலால், துறவறமே சிறந்தது என்பார்கள்.

“ சாட்டையிற் பம்பர சாலம் போலெலாம்
ஆட்டுவா னிறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றுஅறவருட் செயலி னிற்றியேல்
வீட்டறம் துறவற மிரண்டும் மேன்மையே. ”

இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையுடையன வென்று தாயுமானவ பெருந்தகையார் கூறுகிறார்.

---

“ இல்லாறத்தானல்லேன் இயற்கை துறவியல்லேன் நல்லறத்து ஞானியுமல்லேன்” என்று கூறும் அமுதவாக்கினை கவனிக்க.

"இல்லற மல்லது நல்லற மன்று" என்று ஔவைப்பாட்டி சொல்லுகிறார். ஆனால், இந்து மதத்தில் பிரமசரியம் - கிருகஸ்தம் - வானப் பிரஸ்தம் - சந்நியாசம் என நான்கு வகை ஆஸ்ரமங்களில், கிருகஸ்த தர்மத்தை அநுஷ்டித்த பிறகே, சந்நியாச தர்மத்தை அநுஷ்டிக்க யோக்கியதை உண்டாகுமென்று சொல்லுகிறது. பொய்யா மொழிப் புலவராகிய நாயனார், தான் திருவாய் மலர்ந்தருளிய சதுர்வேத தாற்பரிய சங்கிரமமாகிய திருக்குறளில் இல்லற தர்மத்தைப் பற்றி 20 அதிகாரமும், துறவறத்தைப் பற்றி 13 அதிகாரமும் சொல்லியிருக்கிறார். அதனால், இல்லற துறவற தர்மங்களை விதிப்படி அநுஷ்டிப்போர்க்கு, இரண்டு வகையும் சிறப்பாகவே தோன்றும்.

ஒரு காலத்தில் இல்லறம் பெரிதோ? துறவறம் பெரிதோ என்கிற சந்தேகம் உண்டாகி, அச் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வான் வேண்டி, திருமயிலாப்பூரில்

---

"பணத்தை வீணாக அழிப்பதைவிட, பணத்தில் பேராசை வைப்பதே மனிதனை அதிகமாக நாசம் செய்யும்."

— கோல்டன்.

குடியிருக்கும் திருவள்ளுவ நாயனாரிடம் அறிவுடைய வர்களாகிய இருவர். சச்சிதானந்தம்-சிவராமகிருஷ்ணர் ஆக இருவரும் வந்தார்கள். நாயனார் வந்தவர்களை உப சரித்து, வந்த காரிய மேதென்று வினவாமலே, சில நாள் தங்கிப் போம்படி உத்திரவிட்டார். வந்தவர்களும் நாய னார் விருப்பத்தின்படி, அங்கு தங்கியிருந்தார்கள்.

ஒரு நாள், நாயனாரது மனைவி வாசுகி அம்மையார், கிணற்றில் நீர் முகந்து கொண்டிருக்கிற சமயத்து, நாய னார், தன் மனைவியை, பெண்ணே! என அழைத்தார். நிறைகுடம் நீரோடு, பாதி கிணற்றில் சேந்தி வந்து கொண்டிருந்த கயிற்றை அப்படியே விட்டு, "இதோ வந்தேன்" என்று பரிந்து வந்து, நாயனார் முன்னின் றார்; அம்மையார். அரைக்கிணற்றில் விட்ட நிறைகுடம் கயிற்றோடு, விட்டது விட்டபடி, அசைவற்றிருப்பதைக் கண்டு, வந்தவர்கள் அதிசய முற்றார்கள்; மற்றொருநாள் பட்டப் பகலில், நாயனார் தான் நெய்து கொண்டிருந்த

---

"உன்னில் உயர்ந்தோர் சிலரோடு, ஒப்பிட்டுப் பாராதே; உன்னில் தாழ்ந்தோர் பலரோடு, உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்."

— ஜான்ஸன்.

குழல் ஊசி நழுவிக் கீழே விழுந்தது. அதைத் தேடி எடுக்க, "பெண்ணே! விளக்கு கொண்டு வா, குழலைத் தேட வேண்டும்" என்றார். அவ்வாறே, அம்மையார் விளக்கும் கையுமாக வந்தார். மற்றொருநாள், அதிகாலையில், நாயனார் தாம் பழைய அன்னம் சாப்பிடும்போது, பெண்ணே! பழைய சாதம் சுடுகின்றது; விசிறி கொண்டு வா" என்றதும், அம்மையார் விரைவாக விசிறி கொண்டுவந்து, பழையதை விசிற, அதினின்றும் ஆவி கிளம்பிற்று. இம்மூன்று அதிசயத்தையும் கண்ட, சந்தேகம் தெளிய வந்தவர், அதிசயித்து,

> "ஈதல் அறம் தீவினை விட்டீட்டல்
> பொருளெஞ்ஞான்றும்
> காதலிருவர் கருத்தொருமித்துப்
> பட்டதே இன்பம்"

கணவன் மனைவி இருவருடைய மனமும் கருத்தும் ஒருமித்தால் தான், இல்வாழ்க்கையானது நல்வாழ்க்கையாக முடியுமென்று, மனம் திடம் கொண்டு, சந்தேகம் நீங்கிச் சென்றார்கள்.

---

"எல்லோரையும் நேசி; சிலரை நம்பு. ஒருவருக்கும் கெடுதி செய்யாதே.
— ஷேக்ஸ்பியர்.

எங்கெந்த விதத்தில் புருஷனது மனம் சந்தோஷிக்குமோ, அந்தந்த விதத்தில் கொஞ்சமேனும் மனம் சலிக்காமல் ஒழுகுவதே கற்புடைய மங்கையரின் லக்ஷணம். இது, இயற்கையாய் அமைய வேண்டிய குணம். புருஷன் துஷ்டனென்று பயந்து, அவனிட்ட வேலையைச் செய்பவள் உத்தம குணமுடையவளல்ல. மனைவியைப் பயமுறுத்தி வேலை வாங்குபவன், இல்லறத்துக்குரியவனல்லன்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகள் யாவும் ஆண் பெண் இருபாலாகச் சிருஷ்டிக்கப் பட்டுள்ளன. அவை ஆணோடு பெண்ணும், பெண்ணோடு ஆணும், கூடி வாழ்வதற்காகவே, கடவுள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளாரென்பது உலக இயற்கையான தர்மமாகும். இந்த தர்மத்தைத்தான் இல்லற மென்று சொல்லப்படும். இந்த தர்மத்தை ஓர் விருக்ஷமாகப் பாவித்து, அவ் விருக்ஷத்துக்குரிய வேர் -

---

"உண்மையாகவே உயர்ந்தவன் ஒருவன் உலகத்தில் உதித்தால், அவனை அறிந்து கொள்வதற்குரிய அடையாளம் யாதெனில், அவனுக்கு விரோதமாக அறிவிலிகள் அனைவரும் கூடிக் கொள்வார் என்பதே." — ஸ்விட்.

பட்டை - இலை - காய் - மலர் - கனி முதலியனவற்றை, திருமணம் - பிள்ளைப் பேறு - அன்பு - விருந்தோம்பல் - ஒழுக்கம் - பொறை - ஒப்புரவு - ஈகை - அருள் - தவம் - வாய்மை - துறவு - மெய்யுணர்வு முதலியவற்றை உவமானமாகக் கூறுதல் பொருந்தும். என்பார்கள்.

துறவறம் என்பது இல்லறத்தின் ஓர் கூறாகும். எவ்வாறென்னில் மனத்தின் கண் அனுப்பிரமானமேனும், மாசொன்றின்றி நீத்தலே துறவறமாகும். இல்லறத்தில் பெண்களை காம யந்திரங்களாகப் பாவித்து, போகத்தை அநுபவிப்பதற்கும் - பிள்ளைகளைப் பெறுவதற்கும் ஏற்பட்ட தருமமல்ல. அவ்வில்லறம் அன்பு அருள் பெறுவதற்கும்முடிவில்பேரின்பநிலையை அடைவதற்கும் துணைபுரிகின்றது. ஆதலால், அவ்வில்லறம் உடலின்பத்தை தருவதுடன், உயிர் இன்பத்தையும் தரவல்லதாகும்.

---

"தேவர்கள் நம்மைக்காண வருவார். ஆனால், நாம் அவர்கள் போன பிறகு தான் அதை அறிந்து கொள்வோம். வாழ்வாகிய நதி வெள்ளத்தில் பொன்போன்ற விசேஷ சந்தர்ப்பங்கள் நம் அருகில் ஓடும். ஆனால், நாம் மண்ணைத் தவிர வேறெதையும் காண்பதில்லை."

— ஜார்ஜ் எலியட்.

"பிரிவின்றிநின்ற பெருந்தகைப் பேதை மனக்
குறியொன்றி நின்றிடும் கோமளக்கொம்பு
பொறியொன்றி நின்ற புணர்ச்சி செய்தாங்கே
அறிலொன்றி நின்றனளாருயிருள்ளே."

— திருமந்திரம்.

இம்மையிலும் மறுமையிலும், அது கடந்த பேரின்ப நிலையிலும், பெண்கள் கூட்டுறவின்றி, அந்தந்த நிலையில் இன்ப மெய்துதலில்லை. ஆனால், அவ்வின்பம் ஒவ்வொரு விதமாகத் தோன்ற, முடிவில் பேரின்ப நிலை எய்தும். அந்தப் பேரின்ப நிலையைக் கூட்டி வைப்பதே இல்லறமாகும்.

"தம்மிலிருந்து தமது பாத் துண்டற்று
லம்மா வரிவை முயக்கு"

— குறள் புணர்ச்சி மகிழ்தல்.

[தொழிலுவமம். இல்லறஞ் செய்தாரெய்துந் துறக்கத்தின்பம் எனக்கிப் புணர்ச்சியே தருமென வரையுடன் படான் கறிய வாறாயிற்று.]

---

"விலங்குகள் ஸஹிதமான நண்பர், சபைகளில் கேள்வி கேட்பதுமில்லை; குறை கூறுகிறதுமில்லை."— ஜார்ஜ் எலியட்.

தெளிபொருள் விளக்க உரை:—(இவளை நீ கலியாணஞ் செய்து கொண்டு உலகோர் தமது இல்லிலிருந்து தமது பாகத்தை உண்ணும் இல்லறத்தோடு பொருந்தல் வேண்டுமென்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது) (இ - ள்) அம்மா வரிவைமுயக்கு அழகிய பொன்னிறத்தையுடைய மங்கையின் புணர்ச்சியானது, (இன்பந் தருதலில்) தம்மிலிருந்து தமக்குரிய மனையிலிருந்து, தமது - (உலகோர்) தமது (முயற்சியால் வந்த பொருளை), பாத்து - (தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் என்னுமிவர்களுக்கு) பகுத்துக் கொடுத்து, உண்டற்று. (தமது பாகத்தை) உண்டாற் போலும், (எ- று) இது தொழிலுவமையணி. இல்லறஞ் செய்தாரடையும் சுவர்க்க இன்பத்தை எனக்கு இப் புணர்ச்சியே தருமென்று கலியாணத்திற்கு உடன் படாதவன் சொல்லியபடியாயிற்று.

— திருக்குறள் உரை (கோ. வ. பதிப்பு)

---

" மனிதர்களை நாசம் பண்ணக்கூடிய வஸ்துக்கள் உலகில் அநேகம் உண்டு. ஆயினும், பரஸ்திரீ கமனம் - களவு - நண்பர்களை வெறுத்தல் - சூதாடுதல் - பொய் பேசுதல் - துரோகம் செய்தல், இவை முக்கியமாகக் கருத வேண்டியவை.

இக் கருத்து பற்றியே "இல்லறமல்லது நல்லறமன்று" என்றார் ஔவைப்பாட்டி. திருவள்ளுவநாயனார் இல்லறத்திலிருந்து, தாம் பெற்ற அநுபவத்தைக் கொண்டே "திருக்குறள்" என்னும் நூலைப் பெண்ணின்பத்தைப் பற்றியும், இல்வாழ்க்கையைப் பற்றிய கூறிய பாக்களே போந்த சாக்ஷியாகும். பெண்கள் என்பு தோல் போர்த்த ஓர் காமக் கூடு. அவளோடு இன்பம் சின்னாள் அநுபவித்துப் பின்னர் தொலைத்துவிடுவோம்; ஏகாந்தமாயிருப்போம் என்று எண்ணும் காமுகர்க்கு, இல்லறத்தில் பெண்களது அரிய பெரிய நிலை தெரியாதென்னலாம்.

கடவுளது அரிய மஹிமை பொருந்திய இன்ப நிலையை அடைந்த சுந்தரமூர்த்தி நாயனார், பரவை-சங்கிலி என்னும் இருபெண்மணிகளோடு இன்ப நுகர்ந்தார் என்பதை, அவரது சரித்திர வாயிலாகக் கேட்டிருக்கிறோம். அவர், "பண்மயத்தமொழிப்பரவைசங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்" என்று கூறுகிறார்.

---

"பிடிவாதமும் வாதத்தில் கோபமும், மடமையின் நிச்சயமான நிரூபணங்களாகும்." — மாண்டேய்ன்.

ஸ்ரீ கவி ரவீந்தர தாகூரால் செய்யப் பெற்ற கீதாஞ்சலி என்னும் உலகப் பிரசித்திபெற்ற நூலில், எதையும் வெறுத்துத் துறத்தல் கூடாதென்கிறார். அதனால், அன்பு நோக்குடையார்க்கு எல்லாம் இன்பந் தரும் என்பது.

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள், இல்லறத்திலிருந்து கொண்டே ஆத்ம ஜோதியைத் தரிசித்து பல்லோரால் வணங்கப் பெற்று நிற்கிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், இல்லறம் வகித்திருந்ததை அறிந்த, அவரது குருவாகிய ஸ்ரீ தோதாபுரி ஸ்வாமிகள்,

"எந்த ஆஸ்ரமத்திலிருந்தாலென்ன? விவேகத்தாலும் வைராக்கியத்தாலும் ஞானக் கினியை வளர்த்துக் கொண்டிருக்கும் புருஷன், தன் மனையாளுடன் சதா கூடி வாழ்பவனாயினும், பிரமஞானத்திலேயே சதா நிலைத்து நிற்கிறான். மாதர் முன்னிலையிலும் மனவுறுதி பெற்றிருப்பவனே உண்மையில் பிரம்மத்தை

---

"கோபம் வந்தபோது நிலக்கண்ணாடியில் உன்னைப்பார். உன்னை நீ அறிந்து கொள்ளமாட்டாய்." — ஓவிட்.

அறிந்தவன். புருஷர்களையும் பெண்களையும் சமமாகப் பார்க்கவும், புருஷர்களிடமும் பெண்களிடமும், பிர்ம்ம சொரூபம் பிரதி பிம்பித்திருப்பதைக் காணவும், சக்தி யுடையவன் எவனோ, அவனே உண்மை ஞானி, ஆணுக் -கும் பெண்ணுக்கு வேற்றுமை காண்பவன், நான்கு சாதனங்களைப் பெற்றவனாயினும், அவன் ஞானம் பெற்றவனல்லன்'' என்று கூறினார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஒரு முறை தன் மனைவி ஸ்ரீ சாரதா தேவியாருக்கு செய்த உபதேசம்:—''உலகில் தோன்றும் மக்கள் அனைவருக்கும், சந்திரன், அவர் களது அன்புக்குரிய மாமனாவது போல (நம் தேசத்தில் சந்திரனை சந்த மாமா என்று அழைப்பது வழக்கம்) கடவுள் உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் அவர் களது அன்புக்குரிய தந்தை யாகிறார். அவரை விரும்பி வணங்க ஒவ்வொருவருக்கும் சமமான உரிமை உண்டு. யார் ஒருவர் அவரை அன்போடு விரும்பி அழைப் பாரோ, அவர்களுக்கு அருள் புரியச் சித்தமாயிருக்

---

''ஒருவன் தவறுசெய்து, அதை ஒப்புக் கொள்ள விரும் பாதபோது, அவன் எப்போதும் கோபப்படுவான்.''

— ஹாலிபர்டன்.

கிறார். பெண்ணே! நீயும் அவரை அன்போடு நாடினால், அவரைக் காண்பாய்" என்றார்.

ஓர் காலத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணரும் அவரது மனைவி ஸ்ரீசாரதாதேவியாரும், ஒரே படுக்கையில் படுத்திருக்கும்போது, ஸ்ரீ இராமகிருஷ்ணர் விழித்தெழுந்து, தன் மனதை நோக்கி, "ஏ மனமே! உலகினர் மெத்த அருமையாய்ப் பாராட்டும் இதே ஸ்திரீ ரூபம் உன்முன் கிடக்கிறது. ஆனால், எவனொருவன் அதில் இச்சை கொள்ளுகிறானோ, அவன் அந்த உடற் கூற்றில் கட்டுண்டு, கடவுளைக் காணமாட்டான். ஓ! மனமே! இந்த சிற்றின்பம் வேண்டுமா? அல்லது பேரின்பம் வேண்டுமா? என்று சொல்ல, அவரது பரி சுத்தமான மனது அன்றிரவு முழுதும் ஆழ்ந்த சமாதியிலிருந்தது. மறுநாள் காலமே, நெடுநேரம் அவர் காதில் பகவந்நாமத்தை உச்சரித்த பின்னரே, மிகவருந்தி உலகப்பிரக்ஞை வந்தது.

---

"நமது பாரத நாட்டில், பெண்மணிகளுக்குத் தேகப் பயிற்சி அவசியம். அப்பயிற்சியில் அவர்கள் சரீரம் உறுதியாகும்.

— ஸ்ரீமதி காசல்.

இவ்வுண்மை பிருகதாரண்ய உபநிஷத்தில் சொல்லி யிருப்பதை அநுசரித்து ஸ்ரீராமகிருஷ்ணரது இல்வாழ்க்கை அடிப்படையாகக் கொண்டது.

இவ்வாறு, ஒவ்வொரு இல்லற வாழ்க்கையை நடத்துவோர் அநுஷ்டித்தால், அவர்களது வாழ்க்கை, இம்மையிலும் மறுமையிலும் கீர்த்திபெறும். கணவனுக்கேற்ற மனைவி கிடைக்காமல், கணவன் சொல்லுக்கு ஏறுமாறாக நடக்கும் மனைவியை விட்டு, ஒருவருடனும் சொல்லாமல், சந்நியாசக் கோலம் கொள்ளுவது தான் உத்தமபுருஷனுக்கு அழகாகும். கால தேச வர்த்தமானமின்றிக் காம வெறியைத் தீர்த்துக்கொள்ளலாமென்று கன்னிகையை மணம் புரியவேண்டுமென்று அபிப்பிராயங்கொண்டவர்கள், நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேரிருக்கலாமென்று சொல்லக்கூடும். கிருகஸ்த தர்மமின்ன வகைத்து, மணம் புரியுங்காலத்து மங்கையர்க்கு மங்கிலியம் தரிக்கும்போது சொல்லும் * மந்தி

* மந்திரங்களின் விபரம், இந்நூல் முதற்பாகம், கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடலில் காண்க.

ரங்களின் இரகஸ்யம் யாது? என்கிற விசாரணையில் லாதவர்கள் பெரும்பாலோராவர். அதனாலேயே நல்லறம் செய்யவேண்டிய இல்லறம், பொல்லறமாக முடிந்து, கணவனையும் மனைவியையும் அநேக மனஸ்தாபங்களுக்கும் - கஷ்ட நஷ்டங்களுக்கு முள்ளாக்குகின்றது.

ஒருநாள், ஔவையார் வெயிலில் வெகுதூரம் நடந்துகளைத்துப் பசியால் முகம் வாடி இளைத்து, ஒரு இல்லறத்தான் வீட்டிற்போய், ஒரு புண்யவானைக்கண்டு, "அப்பா! பசிக்கிறது. கொஞ்சம் அன்னம் கொடு" என்று கேட்டாள். அந்தப் புருஷன் உள்ளபடியே தர்ம சிந்தனையும் ஜீவகாருண்யமும் படைத்தவன். அவன்மனைவியோ படு நீலி! அவன், ஔவையின் பசி நோயை நீக்குவான் கருதி, அடங்காப் பிடாரி தன் மனைவியின் அருகிற்சென்று, முகத்தைத்தடவிக் கொடுத்து, தலைமயிரை அவிழ்த்து, ஈரையும் பேனையும் எடுத்துக் குத்தி, இனிய வார்த்தைகள் பேசி, பெண்ணே! ஒரு தள்ளாத கிழவி, பசியினால் வருந்தி, நம் வீட்டுத்தெருத்

---

"சூரிய கிரணங்கள் போன்றவையே சொற்கள். அதிகமாகச் சுருங்கினால், ஆழமாய்ச் சுடும்." — ஷதே.

திண்ணையில் விழுந்து கிடக்கிறாள். அவளுக்குச் சிறிது அன்னம் கொடு என்று சொல்லிய மாத்திரம், அட ! உன் பவிஷுக்கு விருந்து ஒரு கேடா ? சீ ! சீ ! நாயே ! கிழவி யாவது, பசியாவது அன்னமாவதென்று எழுந்து, வாயில் வராத வசைச்சொற்கள்பாடி ஆடிப் பாடிபழமுறத்தால் புருஷனை அடிக்கவந்தாள். புருஷன் பயந்து ஓடத் தலைப்பட்டான். இந்த கோலாகலத்தைக் கண்ட ஔவையார் தன் பசியை மறந்து ஓடினாள்.

சில குடும்பங்களில் பெண்கள் நிவிரக்க பச்சாதாப முள்ளவர்களாயிருந்து, புருஷன் கடின சித்த முடைய வனா யிருந்தாலும் அவ்வில்லறம் நல்லறமாகாது. கணவனும் மனைவியும், ஈருடலும் ஒருயிருமாயிருந்தால் தான், அவ்வில்லறம் நல்லறமாகும்.

"அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்." — பொய்யாமொழி.

---

"நாம் பிறக்கும் பொழுது அழுகிறோம். ஏன் ? மூடரின் பெரிய நாடக மேடைக்கு வந்து விட்டோமென்று."

— ஷேக்ஸ்பியர்.

" முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"

(குறுந்தொகை-167)

தன்மகள் தனது இன்னுயிர்க் கணவனது இல்லின்கண் எப்படி யிருக்கின்ருள் என்பதைக் காணும் பொருட்டுச் சென்ற செவிலித்தாய் அவ்விருவரும் கழிபேரன்பினராய் வாழ்தலைக் கண்டு தன்னுள் மகிழ்ந்து கூறியதா இது பாடப்பட் டிருக்கின்றது.

இதன்பொருள்.—என் அருமை மகள் (தன் கணவன்மேலுள்ள ஆரா அன்பினல்ஏவலரும் பிறரும் சமை...

" மதன வாழ்க்கைக்கு வழியான நூல் எவை கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் மூன்றுபாகம் தான்."

யல் செய்வதற்கு இசையாதவளாய்) வற்றக் காய்ச்சிய கட்டித் தயிரைப் பிசைந்த காந்தள் மலர் போன்ற சிவந்த மெல்லிய விரல்களால், இடுப்பில் கட்டிய உயர்ந்த வெண்மையான ஆடை (சமையல் செய்யும் விரைவால்) அவிழ்ந்து விழ (கையினைக் கழுவிக் கட்டலாமென்றால் காலந் தாழ்க்கும், அதனால் கணவன் பசியால் வருந்த நேருமெனக் கருதி, அதன்கண் அழுக்குப் படிதலையும் பொருட் படுத்தாது) அதனைக் கழுவாமல் உடுத்துக் கொண்டு, குவளை மலர்போன்ற மைதீட்டிய தன் கண் தாளிப்புப் புகை பட (அப்புறம் திரும்பினால் பாகம் தவறிவிடக் கூடுமேயென்று அதனையும் பாராமல்) தான் துடுப்பினால் துழாவி, மிக்க அன்போடு ஆக்கிய தித்திப்பான புளிக்குழம்பினைத் தனது கணவன் இனிது இனிதெனச் சொல்லிக் கொண்டே உண்ணுதலைப் பார்த்து, எழில் மிக்க என் மகளின் முகம் உள்ளுக்குள்ளே மகிழ்வடைந்தது.(இல்லற மாண்பு) - "செந்தமிழ்ச் செல்வி"

---

"ஒவ்வொரு சதிபதிகளுக்கும் மனத்தில் தோன்றும் பல இன்பங்களிலும் (காம) உண்மைக் காதலின்பமே சிறந்தவை யாகும்."

ஒருவன் உண்மையாகவே இல்வாழ்க்கைக் குரிய தருமத்தின் வழியே நின்று, தென்புலத்தார் - தெய்வம் - விருந்தினர்கள் - சுற்றத்தார் - பிரமசாரி - வானப் பிரஸ்தன் - சந்நியாசி முதலியோர்களுக்கு அன்னமிட்டு உபசரித்து, தானும் தன் மனைவி மக்களும் உண்டு, எல்லோரிடத்தும் அன்புடையோனாய் நிற்கும் பக்ஷத்தில், அவன் வீட்டை விட்டுக்காட்டுக்குச் சென்று கடுந்தவம் புரிந்து அடையும் பலனைக்காட்டிலும் அதிக பலனை இல்லறத்தில் அடையலாம். கணவனும் மனைவியும் அபேதமென்றறிவிக்கும் அறிகுறியாக, சிவபெருமான் உமாதேவியாருக்குத் தன்னுடலிற் சரிபாதி பகிர்ந்து கொடுத்து, அர்த்த நாரீஸ்வர திரு அவதாரம் காட்டி நம்மை மகிழ்விக்கிறார். இல்லற சுகத்தை அனுபவிப்பதற்குக் கணவன் மனைவி இருவருக்கும், (சதிபதிகள்) ஒருவருக்கொருவர் அன்பு பூண்டொழுகுதல்வேண்டும்.

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு." — பொய்யாமொழி

---

"விழிமின்! எழுமின்! சிரேஷ்டமான ஞானத்தையடையும் வரையில் உருகுமின்! உழைமின்! உணர்மின்!"
— கடோபநிஷத்.

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாயாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."

— திருமந்திரம்.

---

## பத்தொன்பதாம் அத்தியாயம்.

# சதிபதிகள் இல்வாழ்க்கையும், வேதாந்தமும்.

"பெரின்பமான பிரமக் கிழத்தியோ
டோரின்பத் துள்ளானென்றுந் தீபற
உன்னையே ஆண்டா னென்றுந் தீபற"

— திருவுந்தியார்.

---

• வாங்கிப் படிக்கத் தவறாதீர்கள். எதனை?

"பண்டிட். S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய அசல் கொக்கோக வைபவம் - என்னும் மன்மதன் திருவிளையாடல் 3 - பாகம் தனித்தனி விலை ரூ 2-8-0 மூன்று பாகமும் ஒரே காலத்தில் வாங்கினால் ரூ 5 தான்."

இல்வாழ்க்கை யென்பது சதிபதிகள் (கணவனும்-மனைவியும்) கூடிக்குடும்பத்தைப்பார பட்சமின்றி, உத்தம வழியில் நடத்துதல். வேதாந்த மென்பது வேதத்தின் முழுமுதற் பொருளாகிய பிரம்ம வஸ்துவை அறிதல். இதை இல்லறத்திலிருந்த படியே அறியலாமோ வெனில், அதற்கு * பூர்வ ஜென்ம புண்ணிய பரிபாகமும், சாஸ்திர விசாரமும் தத்துவ சோதனை-சாது சங்கப் பழக்கம் - சாந்தம்-சமத்துவம் - அன்பு - அடக்கம் - பொறுமை - காருண்யம் முதலிய நற்குணங்களும் அமையப் பெற்று, சதிபதிகள் இல்லறத்தில் நடத்த வேண்டிய கர்மங்களை நிஷ் காமியமாகச் செய்ய வேண்டும். இவை அமையப் பெற்றால், குடும்ப வாழ்க்கையில், ஒருவருடைய மனதையும் நோவச்செய்யாமல் நீதியாக, தாமரையிலை ஜலம் போல்,சகலதருமத்தையும் நடத்தலாம். திருவள்ளுவ நாயனர் இல்லற

* இதன் விரிவை கைவல்லிய நவநீதத்துக்கு, பண்டிதர் கோ - வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய வசன வினவிடை விரிவுரைப் புத்தகத்தில் காணலாம். விலை ரூபா 2—8—0.

தர்மத்திலிருந்து கொண்டு, மோக்ஷ பதவி அடைந்ததாகச் சொல்லப் பட்டிருக்கிறது. வாய் வேதாந்தம் பேசினால் சித்திக்காது. அநேகர் வேதாந்த சாஸ்திரங்களை அடுக்கடுக்காய் வாசிப்பார்கள். பிறர்க்குப் போதிப்பார்கள். ஜனக் கூட்டங்கள் மத்தியில் நின்று பிரசங்கிப்பார்கள். வேதாந்த நூற்களுக்கு உரையிடுவார்கள். இவ்வளவு செய்தும், அனுப் பிரமாணமும் வஸ்து நிச்சயத்தை அநுபவத்தில் அறியகில்லார்கள். வஸிஷ்டர் ஸ்ரீராமருக்கு உபதேசித்த ஞான வாசிட்டத்தில், கண்ணாடியில் உருந்து உருளும் அவ்வளவு சீக்கிரத்தில், ஞானம் சித்திப்பதற்கு மூன்று முறைகள் சொல்லியிருக்கிறது. முதலாவது, சென்று போன விஷயங்களை நினைப்பதால் பயனில்லை, அதனை மறக்க வேண்டும். இரண்டாவது, நாளை வரும் விஷயத்தை யோசிக்கும் பக்ஷத்தில், தம்மிஷ்டப்படி நடப்பதில்லை.

---

"சினமிறக்கக் கற்றாலும், சித்தி யெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."

— ஸ்ரீ தாயுமான சுவாமிகள்.

"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்கினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்."

"வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்
தேங்கி நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாநினைந்தும்
துஞ்சுவதே மாந்தர் தொழில்." — ஒளவை.

அதனால், மேல் நடக்கும் காரியத்தைச் சிந்திப்பதிற் பயனில்லை. மூன்றாவது, நடக்கும் காரியத்தை சுகமாயிருந்தாலும் சரி, துக்கமாயிருந்தாலும் சரி, சாக்ஷி பூதமாய்ப்பார்த்துக்கொண்டு தத்தம் மதாசாரக் கொள்கைகளினின்றும் வழுவாது, தான்தான் செய்ய வேண்டிய கர்மங்களைத் திரிகரண சுத்தியாகச் செய்து, கடவுளுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். இதுதான் வேதாந்தத்தின் உட்பொருள்.

---

"துறவறத்தின் மேன்மையை விளக்கமாக தமிழ் நாட்டு தேசபக்த வீரர் ஸ்ரீயுத சுப்பிரமண்ய சிவம் - (சுவதந்திரானந்தர்) எழுதிய சச்சிதானந்தசிவம் (சம்பாஷணை) விலை 1—2—0." மோக்ஷ சாதன ரகஸ்யம் வசனம் பார்க்க. விலை ரூபா 4-0-0.

தவிர, சூரியனது சந்நிதானத்தில் உலகம் சேஷ்டிக்குமாப்போல், கடவுளிடத் துண்டான மாயா சக்தியின் பிரபாவத்தால், நாமரூப பேதங்களாய் உலகம் தோன்றி, மறுபடியும் கடவுளிடத்தே ஒடுங்குகின்றதென்கிற உண்மையை உணர்ந்தால், அதுவே வேதாந்த ஞானமாகும்.

இல்லற ஒழுக்கத்தி லீடுபட்டோர் ஒவ்வொருவரும், தத்தம் தாய் தந்தை மனைவி மக்கள் உற்றார் பெற்றார் உறவின் முறையார் யாவரும் சந்தையிற் கூடிய கூட்டம்போலும், மணி மாட மாளிகை மேடை சதுரங்க சேனையோடு கூடிய வாழ்வு இந்திர ஜாலம் போல் நிலையற்றது. வஞ்சனை பொறாமை லோபம் நிறைந்த மலப் பாண்டமாகிய இச் சரீரம் சொர்பனம் போன்றது; இது முதலான உண்மைகளை அறிவதே வேதாந்த ஞானம்.

---

" அசல் மதன (கொக்கோக) விஷயங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக, சாஸ்த்திர ஆதாரணங்களுடன், பல படங்கள் - சக்கரங்கள் - பூஜிக்கு முறைகள் அடங்கியது கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் என்னும் புத்தகம் 3 - பாகம்.

" தந்தைதாய் தமர் தார மகவென்னு மிவையெலாஞ்
 சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேகமில்லை மணிமாட மாளிகை மேடை
 சதுரங்க சேனை யுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்திர ஜாலக் கோலம்
 வஞ்சனை பொறாமை லோபம்
வைத்த மன மாங் கிருமி சேர்ந்த மல பாண்டமோ
 வஞ்சனை யிலாத கனவே
யெந்த நாளுஞ்சரி யெனத் தேர்ந்து தேர்ந்துமே
 யிரவு பக லில்லா விடத்
தேகமாய் நின்று நின்னருள் வெள்ள மீதிலே
 யானென்ப தறவு மூழ்கிச்
சிந்தைதான் றெளியாது சுழலும் வகை யென்கொலோ
 தேடரிய சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
 தேஜோ மயா னந்தமே. "

— ஸ்ரீ தாயுமானவர்.

---

" மோக்ஷசாதன ரகசியம் இது சுவாநுபவ நூல் வசனம் விலை ரூபா 4-0-0

இத்தகைய ஞானத்தை இல்வாழ்க்கையிலிருந்து கொண்டே உணர்ந்து, அதன்படி நடக்கலாம். வேலை செய்யச் சோம்பலுற்று, தம் தாய் தந்தை மனைவி மக்களைக் காப்பாற்றாத அறிவிலிகள், சம்சாரம் சாகரம் துக்கமென்று, அங்குமிங்குமாக, ஒவ்வொருபாடல்களைக்கற்று, ஊர்ஊராய்ச்சுற்றி சாதி மதம் பாராமல்,கண்டவிடத்து விலாப்புடைக்கத் தின்று, கள் - சாராயம் - அபின் - கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை உண்டு, மந்திரம் செய்து முநி - பேய் - பிசாசுகளை ஓட்டுவேன்; பிரிந்துள்ளாரைக் கூட்டுவிப்பேன்; கூடியிருப்பாரைப் பிரித்து வைப்பேன்; ஸ்திரீ - வசியம் புருஷ வசியம்

---

50-வருட அநுபவமுள்ள பண்டிட். S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதியமூன்று பாகங்களடங்கிய அசல்

(1) கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல். 2—8—0, (2) கணவன் மனைவி காம கலாரகஸ்யம். 2—8—0, (3) சதிபதிகள் மதனலீலா இன்பதத்துவம் 2—8—0, ஒரே காலத்தில், 3 - பாகமும் வாங்கினால். ரூபா 5—0—0.

ஜனுக்ருஷ்ணம் முதலிய செய்வேனென்று, ஒன்று மறியாத பாமர ஜனங்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதோடு, ஸ்திரீ சோரம், பொருள் சோரம் செய்து காலங்கழித்து, அகப்பட்டுக் கொண்டால் சிறைச் சாலையை நிரப்புகிறார்கள். ஏழை மக்கள் இந்த சோம் பேறிப் பயல்களை, சுவாமி யென்றும், பரதேசி என்றும், கும்பிட்டுக் குறி கேட்கிறார்கள். இத்தகைய ஆபாச முறைகளுக்கிட மில்லாமல், ஒவ்வொருவரும் இல்லற தருமத்தை அனுசரித்து வாழ்வார்களாயின், அவர்கள் இல்லற வாழ்க்கையிலே பேரின்ப மார்க்கத்தை-வேதாந் தத்தின் உண்மைப் பொருளை அடைவார்களென்பது நிச்சயம். இதன் விரிவை பெரிய நூல்களில் விரிவாகக் கண்டு தெளிக.

---

"கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திரு விளையாடல் 3-பாகம், வெளி வந்துள்ள மதன (கொக் கோக) நூல்களிலும் ஒருபடி உயர்ந்தது, என்றே படித்தவர்கள் கூறுகிறார்கள்! எச்சரிக்கை!"

பண்டிட். S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய தாகக் கவனித்து வாங்குங்கள்.

" வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை யொழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை யொழிந்திடம்
* வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே."

---

* வேதாந்தம் கேட்பதும், குருமுன்னிலையில் கேட்டபடி அநுசந்தானம் செய்வதும், இல்லறத்திலிருந்தும் தாமரையிலை தண்ணீர் போல் பற்றற்றிருத்தல் வேண்டும். சில வேதாந்திகளிடம் நய வஞ்சனை; பொறாமை; துரோகம் - மோசம் - சமயம் பார்த்து ஏமாற்றுதல்; முதலிய துர்க் குணங்கள் நிறைந்தும், வெளியில் புலி பசுத்தோல் போர்த்தது போல, சாது வென்றும், யோகி என்றும், வேதாந்தி யென்றும், ஞானியென்றும் பெயர்களை வைத்துக்கொண்டு, பிறரை மயக்கி, அது மூலமாக ஜீவிக்கின்றனர். உள்ளே நுழைந்து பழகினல், இவர்கள் செய்கை எழுதத்தரமன்று; சுத்த ஆபாசமானது.

## இருபதாம் அத்தியாயம்.

# சதிபதிகள் இல்லறவாழ்க்கையில் பேரின்பம் அடையும் மார்க்கங்கள்.

"பேரின்பமான பிரமக் கிழத்தியுடன்
ஓரின்பத் துள்ளானை உள்ளயடி—பேரின்பம்
கண்டவரே கண்டார் கடலுயிர்த்த இன்னமுதம்
உண்டவரே உண்டார் சுவை."

— திருக்களிற்றுப்படியார்.

"இல்லற வாழ்க்கையில் கிணற்றுத் தவளைகளா யிருந்த காலம்போதும்; இனி அப்படியிருக்கயாருக்கும் பிரிய மிருக்காது அல்லவா ?

ஆனால், உங்கள் இல்லற வாழ்க்கையின் உயரிய தத்துவ உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துக் காட்டும் நூல் எது ? அதுதான்

பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் (மூன்று பாகம்) என்ற நூலை இன்றே வாங்கி வாசியுங்கள்." தனித்தனி 2—8—0 3-பாகமும் ரூபா 5

இல்லற வாழ்க்கையில் (சதி) மனையாளுடன் கூடி வாழும் வாழ்க்கையினால், இம்மையில்சகல சுகத்தையும் அநுபவிப்பதுடன், மறுமையில் பேரின்பத்தையும் அடையலாமென்று, நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவ்வாறு நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. எவ்வாறாயினும், சிலர், குடும்பப் பாதுகாப்பாக்காகத் திரவியமில்லையே என்று வருத்த முறுவார்கள். சிலர் குடும்பங்களில் எல்லா வகைச் சுகமு மிருக்கச் சந்தானமில்லையே யென்று துன்புறுவார்கள். சிலர், குடும்பங்களில் புருஷன் துர்க்குண மடைந்து, மனைவியிடத்து சண்டை சச்சர விட்டுக் கொண்டிருப்பார்கள். சில குடும்பங்களில், மனைவிபுருஷனது சொல்லுக் கடங்காமல், குடும்பத்தைத் தாறுமாறாக்குவார்கள். சில குடும்பங்களில் புத்திரர்கள் தாய் தந்தை சொல்லுக்கு அடங்காமல், தான்றோன்றிகளாய்த்திரிந்து வருவதால், தாய் தந்தைகள் மனக்கவலை அடைவார்கள். இவ்

---

"வீட்டைக் கோயிலாக வைத்துக் கொள். மனைவியை காம யந்திரமாக நினைக்காமல் பராசக்தி அம்சமாக நினை. குழந்தைகளை அன்பாய்ப் போற்றிவா? இதுவே இல்வாழ்க்கையில் நல்லறம்."

வாறு குடும்பங்களில் கவலையும் துக்கங்களும் நேரிடுவது சகஜம். இவ்வாறு மனக்கவலை யுறும் அக் குடும்பத்தினர், கடவுளைப் பிரார்த்திப்பது உலக இயற்கை. கடவுள் விருப்பு வெறுப்பற்றவர்; சுக துக்கமில்லாதவர். சதா ஆநந்த சொரூபி. அப்படிப்பட்ட கடவுளைப் பிரார்த்தனை செய்வோர்கள், பரிசுத்தமான ஹிருதயத்தை யுடையவர்களாயிருக்க வேண்டும். பரிசுத்த ஹிருதயமுடையவர்களுக்கு எக்காலத்தும் கவலையாவது துக்கமாவது உண்டாவதற்குக் காரணமில்லை. அத்தகைய பரிசுத்த ஹிருதய முடையவர்களது இல்வாழ்க்கையானது, எப்போதும் பேரின்ப நிலையினையுடையதாகவே யிருக்கும். சதிபதிகள் இருவரும் பரி

---

“இது என்ன புத்தகம்? தமிழ் நாட்டில் எத்தனை புதிய புதிய பெயர்களுடன் புத்தகங்கள் படாடோப விளம்பரங்களால் வெளி வருகின்றன! ஆனால், அவற்றை பார்த்த பின், ஐயோ! இது என்ன புத்தகம்? விளம்பரத்திலுள்ள விஷயங்கள் இல்லை என்று அவற்றில் மனம் சலித்து கஷ்ட நஷ்டம் அடைகின்றனர்.”

சுத்த ஹிருதயத்தை யுடையவர்களாயிருந்தால், அக் குடும்பத்தில் கவலையும் துக்கமும் உண்டாவதற்குக் காரணமில்லை. இத்தகைய பெரிய குணத்தை, சதிபதிகள் அநுஷ்டிக்காத பக்ஷத்தில், அக் குடும்பம் சதா துக்கத்திலேயே ஆழ்ந்திருக்கும் இதைத்திருத்துவதற்கு மார்க்கம் என்ன வென்றால், சதிபதிகள் (கணவனும் மனைவியும்) தியாக சக்தியை அநுஷ்டிக்க வேண்டும். தியாக சக்தியாவது "எல்லாம் கடவுள் செயல். அவரவர் கருமத்துக் கீடாகவே மனைவி-வீடு-சொத்து - சுதந்தரம் - புத்திரப்பேறு நமக்குக் கிடைத்திருக்கிறது. அவற்றை நாம் சாக்ஷி பூதமாய் நின்று

---

அசல் கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் (மூன்று பாகம்)பண்டிட். S. R. நமசிவாய ராஜாராயோகி எழுதியவை; பார்த்து எல்லோரும் அளவிலா மகிழ்ச்சியடைக்கின்றனர். வாழ்க்கையில் இன்பம் பெறுகின்றனர். ஒற்றுமையாக வாழ்கிறார்கள் இதில் அசல் (கொக்கோ) நூல்களினின்று விஷயங்கள் எழுதப்பெற்றது. சுமார் 115 - அத்தியாயம்.

அநுபவிக்க வேண்டும். கவலை புறுவதில் யாதொரு பயனுமில்லை என்று மனதைத்திடம் செய்து கொண்டு, சாந்தம் - சமத்துவம் - சமாதானம் முதலிய மூவகை உத்தம குணங்களை யுடைத்தாயிருக்க வேண்டும்.

தியாகம் செய்வது அல்லது துறவு நிலையை அவலம் பிப்பதென்றால், ஹிமாசலப் பிரதேசங்களிலுள்ள நீண்ட குகைகளிற் சென்று, வசிக்க வேண்டுமென்பதல்ல. உடைகளை அவிழ்த்தெறிந்து விட்டுக் கோவணாண்டியாய்ச்சிலரும் காவியுடுத்திச்சடைமுடிதரித்துச்சிலரும் திரிய வேண்டு மென்பதல்ல. ஆங்காங்கு சென்று சோற்றுக்கு அலைய வேண்டுமென்பதல்ல.

---

“ இலக்கண - இலக்கியாவேதாந்த - சித்தாந்த - புராண இதிகாசம் - நவீனநாவல்கள் சங்கநூல்கள் - அரசியல்- சமுகம் பொருளாதாரம் தேசியநூல்கள், அறிவை விருத்தியாக்கும் புத்தகங்கள் யாவும் கோர்வையாக எங்களிடம் கிடைக்கும். பல லைப்ரரிகளுக்குப் புத்தகங்கள் பெற்று வருகிறார்கள். ஜாபிதாவிற்கு எழுதுங்கள்.”

ஸ்ரீராம கிருஷ்ணா நிலயம், P. T. மதராஸ்.

ஸ்ரீ அருணகிரிப் பெருந்தகையார், போலித்துறவைப்பற்றி

"காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காய மொறுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சிவ னொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காணவெனக் குன்
சிதள பத்மந் தருவாயே."

பரமசிவம் பார்வதி தேவியாருடன் சேர்ந்து, தம் குடும்பத்தோடு உட்கார்ந்து கொண்டு, பக்த கோடிகளை அநுக்கிரகம் செய்து வருகிறாரென்றும், அந்தப் பரமசிவமே துறவு நிலையினைப் போதிக்கிறாரென்றும், இந்து சாஸ்திரம் கூறுகின்றது. துறவு நிலை என்பது ஜன சமூகத்தை விட்டு காட்டுக்குப்போ என்கிற

---

" உலக வாழ்க்கையினைப்பற்றிய உறவு முறைகள் என்ன ? இவைகளெல்லாம் வெறுங்கனவு அன்றோ "

— ஸ்ரீ சாரதா தேவியார் வாக்கு.

பொருளல்ல. ஒருவன், தன் குடும்ப வாழ்க்கையிலும் துறவு நிலையைக் காட்ட வேண்டும் என்பது தான், உண்மையான இந்து சாஸ்திரத்தின் கொள்கை.

ஒரு காரியத்தைச் சாதிக்க வேண்டுபவன், மற்றெல்லாப் பற்றையும் விட்டு விட்டால் தான், எடுத்த காரியம் சித்தியாகும். அது போலவே, குடும்ப வாழ்க்கையை இன்பமுற நடத்துவதற்கு, இடையிலே வரும் இடையூறுகளை யெல்லாம் லக்ஷியம் செய்யப்படாது. இது, சதிபதிகள் இருவரும் சேர்ந்து செய்ய வேண்டிய விஷயம். இல்வாழ்க்கையில் துறவு நிலை அதாவது சாந்தம் - சமத்துவம் - பொறுமை முதலிய குணங்களை அநுஷ்டித்து வெற்றிபெற்றால், ஞானத்துறவு அல்லது அகத்துறவில், ஒவ்வொரு சதிபதிகளும் போய்ச் சேரலாம்.

ஞானிகளாவதற்கும் முத்தி பெறுதற்கும், இல்வாழ்க்கையினின்று விடுபடுதற்கும், இந்தப் பெரிய

"ஆத்மா நித்திய வஸ்து" என்னும் உணர்ச்சி சதிபதிகளுக்குத் தோன்றுமாயின், இப்பாரத நாடு செழிப்புறும்"

உலகமே சொர்க்கமாவதற்கும், தெய்வீக அறிவை அடைய வேண்டும். இந்த அறிவினால் தான், பரம் பொருளாகிய கடவுளை நாம் என்று, அநுபவத்தால் உணர வேண்டும். " இந்த அறிவைப் புத்தியின் மூலமாக அடைவது மாத்திரம் போதாது. உணர்ச்சி சொரூபத்தில் அறிவு வந்து விடவேண்டும். காரிய ரூபத்தில் நமது இரத்தத்துடன் ஊடுருவிப் பாய்ந்து, நாடிகளின் வழியே ஓடி, தாதுவிலும் கூடவே துடித்து, சொரூபத்துடன் கலந்து பிரவேசித்து, உள்ளே செலுத்தப் படுமானால், இந்த அறிவு, ஜீவன் முக்தர்களாக்கி விடும். இந்த அறிவுதான் அகத்துற

" தேகஸௌகம் உங்களது பிறப்பு உரிமையல்லவா ? உங்களுடைய 72,000 நரம்புகளையும் மூளையையும் மனதையும் வலிவுப்படுத்தி, மதன இன்பம் தரும் வாத்யாயனர் மதன லீலா லேகியம் சாப்பிடுங்கள். அபூர்வ மூலிகைகளால் தயார்செய்யப்பட்டது"

1-பவுன் புட்டி விலை ரூபா 5—0—0

மதனா அண்டு கம்பெனி,
3 - பீட், பார்க் டவுன், மதராஸ்.

வென்று வேதாந்தம் போதிக்கிறது. இந்தத்துறவு சிறந்த நிலையில் வைத்து விடும். சக்திகளை அதிகப் படுத்தும். ஆன்ம பலத்தை விருத்திசெய்யும். துக்கங் களையெல்லாம் பறக்கடிக்கும். கவலையும் பயமும் இருந் தவிடம் தெரியாமல் ஓடிவிடும். தெய்வ சொரூபியாக்கி விடும். இதுதான் உண்மையான ஞானத்துறவு.

உண்மையான ஞானத்துறவிகளை இக்காலத்தில் காண்பது வெகு கஷ்டம்; எல்லோரும் வேஷதாரிகள். ஆஷாடபூதிகள் மலிந்திருக்கிறபடியால், உண்மையான துறவு நிலையினை அநுஷ்டிக்கும் உத்தமர்களைக் காண்பதரிதாகி விடுகிறது.

உண்மையான துறவு நிலையை,கிருகஸ்தன் அடை யுமார்க்கம் யாதெனில், சதிபதிகள் சேர்ந்து, ஒருவருக் கொருவர் சுகம் கொடுக்கவேண்டு மென்று தீர்மானித் துக்கொண்டால், விஷயம் மிக இலகுவாகி விடுகிறது.

---

“ சத்தியம் தான் என்னுடைய மதம்; அதை அடைவதற்கு அஹிம்சை ஒன்று தான் வழி, கத்தி யின் தத்துவத்தை நான் முடிவாக நிராகரித்து விட் டேன் ” — மகாத்மா காந்தி யடிகள்.

அன்றைக்கே பேரானந்தத்தை அடையலாம். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் காப்பாற்றிக் கொள்கிற தாகப் பரிசுத்த மனதோடு தீர்மானித்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு (சதி) ஸ்திரீயும், தன் (பதி) புருஷனது ஆத்ம ரக்ஷணையைக் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு (பதி) புருஷனும் தன் மனைவி (சதி) யின் ஆத்மாவை ரக்ஷிக்கவேண்டிய நிலையில் உதவி செய்ய வேண்டும். உன்னிடம் எனக்கு அன்பு உண்டு, அன்பைச் செலுத்துகிறேன் என்று வாயினால் சொல்வதிற் பிரயோசனமில்லை. ஒரு (சதி) மனைவி தன் புருஷனது சரீர சம்பந்தமான காமத்தையும், புருஷன் (பதி) தன் (சதி) மனைவியின் காம இச்சையைப் பூர்த்திசெய்து வைப்பதுமே இல்லற வாழ்க்கையினாலடையும் சுகம் என்று அநேகர் எண்ணுகிறார்கள். மிருக இச்சைகளைத் திருப்தி செய்து விடுவது மாத்திரம், சுகத்தை விருத்தி செய்துவிடும் என்று எண்ணுகிறவர்கள், விஷய சுகத்

---

"நல்லகாலம் வரும்பொழுது, அதிருஷ்டம் கூரையைப் பிரித்துக்கொண்டு, உள்ளே நுழைந்து, பணத்தை நமது வீட்டில் குவிக்கும்" — பழமொழி.

தை உள்ளபடி அறியச் சக்தியற்றவர்களென்றே சொல்லவேண்டும்.

உலக சம்பந்தமான விஷயங்களிடம் பற்று வைப்பவன், ஒரு விஷயத்தினிடம் விஷய சுகத்துக்காகவே அன்பு செலுத்துகிறவன், அந்த வஸ்துவினிடம் சுகத்தை அடையப் பிரயத்தினப் பட்டால், அவன் நிச்சயம் ஏமாந்துபோவான். அவன் இந்திரியங்களால் நிச்சயம் ஏமாற்றப்படுவான். உலக வஸ்துக்களிடம் ஒட்டிக்கொள்வதில் சுகத்தை அடைய முடியாது. உலகப்பற்றுக்களெல்லாம், முடிவில் ஹிருதயத்தைப் பிளந்து விடும்.

ஓர் புருஷன் ஒரு ஸ்திரீயினிடம் காதல் கொள்ளுகிறான். அல்லது ஒரு ஸ்திரீ ஒரு புருஷனிடம் காதல் கொள்ளுகிறாள். இவர்கள் எதைக்கண்டு காதல் கொள்ளுகிறார்கள் என்று உற்று நோக்கினால், அவர்கள் ஆடையாபரணாதிகளைக் கண்டும், ஒரு காலத்தில் அழிந்துபோகும் சரீர அழகைக்கண்டும், காதல்

“ ஆத்மவத் சர்வ பூதாணும்ய: பஸ்யதி ஸ பண்டித:”

கொள்ளுகிறார்கள். ஆடையாபரணங்களைக் களைந்து பார்த்தால், ஊத்தைச்சரீரம் தான் தோன்றும். இவ்வளவையும் ஆட்டிவைப்பது யார்? உள்ளேயிருக்கும் தெய்வத்தன்மை பொருந்திய ஆத்மா அல்லது ஜீவன். அவ்வாத்மாவானது வெளிச்சென்று, சரீரம் பிரேதமாகும் போது, அவயவாதிகளின் அழகு எங்குற்றது? ஒவ்வொரு புருஷனும் மனைவியும் அழிந்து போகும்படியான வஸ்துக்களில் காதல் கொள்ளுவதாலும், உண்மையான ஜோதி சொரூபமான ஆத்மாவிடத்தில் காதல் கொள்ளாமையாலும், அவர்களது இல்வாழ்க்கை துன்பந் தருகிறது.

மனைவியானவள் நரகத்துக்குப்போவதற்கு ஏற்பட்ட பெரிய வாசற்படியாக ஆகாமல், கடவுளைப் பார்க்கும் கண்ணாடிபோல் புருஷனுக்கிருக்கவேண்டும். புருஷனும், தன்னிடம் தன் மனைவி கடவுளையே பார்க்கின்ற கண்ணாடியாக வேண்டும். இவ்வாறுள்ள குடும்

---

"தன்னைப்போல் சகல ஜீவர்களின் நன்மையைப் எண்ணுபவனே பண்டிதன்"

பம் எந்நாளும் பேரின்பமாயிருக்கும். துக்கமும் கவலையும் இந்த இடத்திற்கு வருவதற்கு மார்க்கமில்லை. ஒவ்வொரு கிருகஸ்த தர்மத்திலும், ஒரு ஸ்திரீயானவள் புருஷனுக்கு உண்மையான நன்மையைச் செய்யவேண்டும். புருஷனும் தன் மனைவியின் க்ஷேமாபி விருத்திக்குரியவற்றைச் செய்யவேண்டும். அப்போது தான், அவ் வில்லறம் நல்லறமாக விளங்கும்.

ஒரு ஸ்திரீயானவள் ஒரு புருஷனிடம் காதல் கொண்டாலும் சரி, ஒரு புருஷன் ஒரு ஸ்திரீயிடம் காதல் கொண்டாலும் சரி. அவர்கள் அநித்தியமான சரீரத்திடம் பற்று வைக்காமல், அவர்களிடம் அந்தர்க்கதமாயுள்ள ஆத்மாவிடம் காதலைக்கொள்ளவேண்டும். எல்லோரும் கடவுளிடம் பக்தி செலுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த பக்தியை தம் மனைவி மக்களிடம்செலுத்தினால், அக்குடும்பவாழ்க்கை சிறப்புற்று விளங்கும். நாம் ஒரு பறவையைப்போலிருப்போம். அந்தப் பறவை ஆடிக் கொண்டே

“ மாதர்களுக்கு சென்னை பிரதம மந்திரி ஸ்ரீ. வி. ஆர். உபதேசம். சாத்தியமான வரையில் உங்கள் குழந்தைகளுக்கு நீங்களே எழுதப்படிக்க சொல்லிக் கொடுங்கள் ”

யிருக்கும் ஒரு மரக்கிளையில் ஒரு நிமிஷ நேரம் உட்காருகிறது. உட்காரும் போது, கிளை வளைந்து கொடுக்கிறது. ஆயினும், அது பயமின்றிப் பாடுகிறது. ஏனென்றால், அது தனக்கு இறக்கை இருக்கிற தென்கிற தைரியத்தினால்; கிளையோ காற்றின் அசைவினால். மேலும் கீழுமாக ஆடுகின்றன. அப்போதும், அப்பறவை பயப் படவில்லை. ஏன்? அது கிளையில் உட்கார்ந்திருந்தாலும், அந்தக் கிளையை நம்பாமல், தன் இறக்கைகளையே நம்பியிருப்பதினால்; அம்மாதிரியே இல்வாழ்க்கையிலுள்ளவர்கள் எங்கே யிருந்தாலும்சரி, தம் மனைவி மக்களிடம் பற்றுள்ளவர்களா யிருந்தாலும் சரி, அவர்கள் ஹிருதயம் தெய்வத் தன்மையில் அமர்ந்து நிற்கும் பக்ஷத்தில், சர்வமும் ஆநந்தமா யிருக்கும். இவ்வுண்மையை தம் மனைவி மக்களுக்கும் உபதேசித்து, அவர்களும் இந்த வழியை அநுஷ்டிக்கும்படிச் செய்ய வேண்டும். அப்போதுதான் புருஷனுக்கும் மனைவிக்குமுள்ள அடிமைத் தனம் நீங்கும்.

---

"தொட்டிலைத் தாலாட்டும் கைகளே உலகை ஆள்கிறது" — ஆங்கில பழமொழி.

"The Hand that Rocks the Cradle, rules the World."

இருவரும் சுதந்திரமோடு வாழலாம். பிரகிருதியின் தன்மை சுதந்தரமே யாகும்.

ஸ்திரீகளைக் காம யந்திரமாகவும், அடிமைகளாகவும்நடத்தும் இல்வாழ்க்கை, சதா துக்கத்தைத்தரும். தற்கால நாகரீகத்தின்படி, பெண்களுக்குச் சுதந்தரம் கொடுக்கு முறைகள் அவ தாறையும் அவமதிப்பையும் உண்டாக்கும் என்பதில் ஆக்ஷேபணையில்லை. நமது புராதன இந்து தர்ம சாஸ்திரங்களில் மஹா ஞானிகளாய் விளங்கும் ரிஷிகள் எழுதி வைத்துள்ள பார்யா தர்மம் என்னும் முறையானது, எல்லோருக்கும் கவுரவத்தையும் கொடுக்கும். பேரின்ப சுகத்துக்கு மார்க்கமுமாகும்.

" பெற்ற சிற்றின்பமே பேரின்ப மா யங்கே
முற்றவரும் பரிசுந் தீபற
மூளையா து மாயை யென்றுந் தீபற."

— திருவுந்தியார்.

---

" தன்னைப் போல் பிறரை நேசி"

— ஏசுகிறிஸ்து.

## இருபத்தொன்றும் அத்தியாயம்.

# இல்லறவாழ்க்கையில் சதியானவள் (மனைவி) அநுசரிக்க வேண்டிய விதிகள்.

நமது இந்து தர்ம சாஸ்திரங்களில் பெண்களிருக்க வேண்டிய ஒழுக்க முறைகளை இங்கு சுருக்கிக் கூறுவோம்.

1. ஸ்திரீகள் எப்போதும் மலர்ந்த முகத்தினளாய், குடும்பக் காரியங்களில் தேர்ச்சி பெற்றவளாய், வீட்டில் செய்யும் பதார்த்தங்களைப் பேணிப் பரிமளிக்கச் செய்பவளாய், குடும்பச் செலவில்சிக்கன முறையை அநுஷ்டிப்ப வளாய் இருத்தல் வேண்டும்.

---

"உலகத்தில் எத்தனையோ சுவைகள் உளவென்று கூறுவார் கூறுக; சிற்றின்பமாகிய (பேரின்ப முக்தி, காமச் சுவையே உயரிய சுவையாய் வாழ்க்கையில் திகழ்ந்திருக்கின்றது."

— போஜராஜ்.

2. லாகிரி வஸ்துக்களைச் சாப்பிடுதல், துஷ்டர்களோடு சிநேகம் செய்தல், கணவனது உத்திரவின்றி, அவனைப் பிரிந்து வேற்றூர் போதல், காரணமின்றி அங்குமிங்கும் அலைதல், அந்நியர் வீட்டில் தங்குதல், விருப்பங் கொண்ட விடத்தில் படுத்துறங்கல், இவ்வாறும் பெண்களுக்குக் கூடாது.

3. பிக்ஷைக்காரி - சந்நியாசினி - கற்பு நிலை தவறியவள் - மோசம் செய்பவள் - குறி சொல்பவள் மருந்திடுபவள், இவர்களோடு மனைவி சேருதல் கூடாது.

4. மனைவியானவள், தன் புருஷன் வரவுக்கு மிஞ்சிச்செலவு செய்யும் விஷயத்திலும், கெட்ட நடவடிக்கைகளை உத்தேசித்துச் செய்யும் விஷயத்திலும், அவன் தனியே யிருக்கும்போது, தான் செய்யும் செய்கை

---

"ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பன்னிரண்டாண்டுகள் (யுக்த வயது வந்தபின்) பிரம சரியத்தை உறுதியாக அநுஷ்டித்தால் தான், மேதை என்னும் நரம்பு எழும், என்றருளியுள்ளார்."

— ஸ்ரீமதி பண்டிதை. அசலாம்பிகை அம்மையார்.

(ஆ - போதினி)

அழகல்ல. குடும்பத்துக்குக் கெடுதி உண்டாகும் என்னும் விஷயத்தை அன்போடும் - பணிவோடும் - ஹிதமாயும் சொல்லி, அவன் மனதைத் திருத்தி, நன் மார்க்கத்தில் கொண்டு வர வேண்டும்.

4. உத்தம ஸ்திரீயானவள் அந்நியர் வீடுகளுக்குச் சென்றால், சந்தேகம் உண்டாகும். கற்பு நிறைந்த தோழியர்களுடன் சம்பாஷித்தல்-தேவாலய தரிசனத்துக்குப்போதல், இவற்றை நாயகன் கட்டளைப்படி நடத்தல் வேண்டும்.

ஆகையால், கணவனும் மனைவியும் ஈருடலாயினும் ஓருயிராய், இல்வாழ்க்கைத் தருமத்தை அன்போடும் அறத்தோடும் செய்யும் பக்ஷத்தில், அவ் வில்லறத்தாலேயே பேரின்ப சுகத்தை அடையலாம் என்பது ஆன்றோர்களது கட்டளை. தற்காலத்தில் பெண்களுக்குச்

---

"தாது (விந்து) சத்துகள் குறைந்ததனாலேதான், உன் தேகத்தளர்ச்சி - மனத் தளர்ச்சி - வாழ்க்கையில் வெறுப்பு இத்தியாதி பல வியாதிகள் உங்கள் தேகத்தில் உண்டாகும் பல விதமான ரோகங்களையும் நீக்கத் தக்க அமிர்தம்." -மதன விநோத சிந்தாமணி லேகியம்.

சுதந்தரம் முன்னேற்றம் என்று பலர் பலவிதமாகப் பேசி வருகின்றார்கள். பெண்மணிகளுக்குச் சுதந்தரம் சர்வ சுதந்தரமும் முன்னமேயே கொடுத் திருக்கிறார் கள் ஆன்றோர். அந்தச் சுதந்திரமானது இம்மை மறு மை இருமையிலும், ஸ்திரீ புருஷர்கள் இருவருக்கும் சுகத்தையும் மேன்மையையும் கொடுக்கும்.

---

## இருபத்தி இரண்டாவது அத்தியாயம்.

# ஆத்ம (பேரின்ப) ஞானமும் சதிபதிகள் இல்லற வாழ்க்கையும்

> "உடம்புடைய யோகிகள்தாம் உற்ற சிற்றின்பம்
> அடங்கத் தம் பேரின்பத் தாக்கில் தொடங்கி
> முளைப்பது மொன்றில்லை முடிவதும் ஒன்றில்லை
> இளைப்பதும் ஒன்றில்லை யிவர்."
>
> — திருக்களிற்றுப்படியார்.

---

"மனிதன் ஜனிக்கும்போது சுதந்தர முடையவனாக ஜனிக்கின்றான்; ஆனால், பின்னர் அநேக பந்தங்கள் என்கிற சங்கிலிகளினால் கட்டுண்டு அவன் தனது யதார்த்த சுதந்தரத்தை இழந்து விடுகிறான்."

— பிரெஞ்சு ஞானி.

" பாவனுதீதம் பதியாவிடத்தேக
பாவனே பற்றி நின்றுந் தீபற
பழுத்தா லொழித்தி டென்றுந் தீபற "

"நேற்றிராவங்கொருவன் நித்திரையிற்கைப்பிடித்தான்
வேற்றாரா னென்று விடாயென்றேன் ஆற்றியே
கஞ்சி குடியென்றான் களித் தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து."

— ஒரு புலவர்.

இல்லற வாழ்க்கை யென்றால் கணவனும் மனைவியும் அன்பு பொருந்தி வாழ்தல். கணவன் மனைவி யென்பதை ஸ்திரப் படித்துவதற்கு விவாகச் சடங்கு முக்கியம். இந்த விவாகச் சடங்கு ஹிந்து வேதங்

சுமார் 30-வருடங்கட்கு மேலாக ஸ்ரீ ஸதானந்த யோகீஸ்வரர் அநுபவத்தில் கையாடி வந்த வேகியத்தினுல் மேக சம்பந்தமான ரோகங்கள் நீங்கி இரத்த விருத்தி - தாது விருத்தி சிடுசிடுப்பு - மனத்தளர்ச்சி நரம்பு தளர்ச்சி நீங்கி என்றும் இன்ப வாழ்க்கையில் மனம் லயிக்க செய்யும்."

அயச் செந்தூரத்துடன் 1-பவுன் புட்டி ரூ 4.

களில் மத சம்பந்த சடங்காக நியமித்திருக்கிறது அதனால், கணவனாவது மனைவியாவது விவாகத்தை ரத்து செய்ய வேண்டு மென்று கேட்பதற்கு ஆதார மில்லை. விதந்துவாய் விட்ட ஸ்திரீகளுக்குப் புனர் விவாகம் செய்ய அதிகாரம் கொடுக்கவில்லை. அந்நிய மதத்தில் விவாகத்தை காம வெறியைத் தீர்ப்பதற் குரிய ஒற்றுமைப் பத்திரமாகச் செய்து கொள்ளு கிறார்கள். அதனால், அம் மதத்தவர்கள் விவாக ரத்து செய்து கொண்டு, ஸ்திரீகளும் புருஷர்களும் தத்தம் மனம்போனபடி பல விவாகம் செய்து கொள்ளலா மென்கிற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

இந்து விவாகச் சடங்குகளில் ஆத்ம சம்பந்த மான பல விஷயங்கள் கணவனையும் மனைவியையும் கட்டுப்படுத்துகிறது. விவாகமானது முதல் அவர்கள்

---

"உலக மெல்லாம் மூன்று தத்துவங்களில் அடங்குவதாக ஆன்றோர் கூறுகின்றனர். சத் சித் ஆனந்தம்; பதி, பசு, பாசம், சத்துவம், ரஜஸ், தமஸ்; உடல், பொருள், ஆவி; மண், பெண், பொன்; பிரம்மா, விஷ்ணு, சிவன் இது போல் மூன்று பிரிவாக ஆக்கப் பட்டிருக்கிறது."

மரண பரியந்தம் செய்யும் ஒவ்வொரு கர்மங்களும், ஆத்ம ஞானத்துக்கு வழி காட்டியாக இருக்கும்.

உலக சிருட்டியிலடங்கிய சர்வப் பிராணிகளுக்கும் ஞானம் உண்டு. ஓர் அறிவு முதல் ஆறறிவு படைத்த மனிதர் வரையும், பகுத்தறிவு இருக்கிறது, மனித ஜென்மம் கிடைப்பது துர்லபமென்றும். அதிலும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் விசேஷமென்றும், நன் மார்க்கத்தில் ஒழுக்கமுடையோராயிருத்தல் அதிலும் விசேஷமென்றும், அதனோடு கடவுளது திருவருட் செல்வமும், பொருளும் சேர்ந்திருத்தல், எல்லாவற்றுள்ளும் பெருமை பொருந்தியதென்றும், ஆன்றோர் கூறியிருக்கின்றனர். மனிதப் பிறவி எந்த வகையில் மேலானதென்று முதலாவது ஆராய வேண்டும். மனிதனுக்கு நல்லது - கெட்டது, சுகம் - துக்கம், பாவம் - புண்ணியம் முதலியவற்றைப் பகுத்தறிந்து, எது நன்மை பயக்கக்கூடியதோ, அதையே செய்ய வேண்டும். இது, சாதாரணமாய் வரத்

---

“கோபத்திலும் வசையே, நட்டபின் பெரும் பகைவன்” — ஹெச். ஏ.

தக்கதல்ல; நன் மார்க்கத்தாலும் பெரியோரை வழி படுவதாலும் உண்டாக வேண்டும். பின்னர், கணவனும் மனைவியும் கூடி, இல்லற வாழ்க்கையை நடத்தி வரும் காலத்தில், லோகாநுபவ முதிர்ச்சி பெற்று, "புனாபி ஜெனனம்; புனாபி மரணம்"; ஜீவர்கள் பிறக்கிறார்கள் - இறக்கிறார்கள்-மறுபடி பிறக்கிறார்கள். இக் கூற்று என்ன? நாம் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கு போகிறோம், என்கிற விசாரம உண்டாகிறது. நாம் யார்? என்கிற விசாரம் உண்டாகி ஆராயும் போது, தேகத்தையே நாம் என்று நம்புகிறோம். -மேலும் ஆராய்ச்சி செய்யும் போது,

"பாராதி பூதம் நீ இல்லை; உன்னிப்பார், இந்திரியங் கரணம் நீ இல்லை; ஆராயுமுணர்வு நீ என்றான் ஐயன்"

— தாயுமானவர்.

சரீரத்திலுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனிப் பெயர் இருந்து வருவதால், தேகம் நாம் அல்ல; ஆராய்கின்ற அறிவே யென்று உணர்த்துகின்றது.

---

"அரும் பெரும் பிரயாணங்களிலே அற்புதங்கள் பிறக்கும்"

— லாபுரூயர்.

இவ்வுண்மை சற்குருவால் உணர்த்தப் படவேண்டும். வேறு வழியால் விளங்காது.

மரணத்தைப் பற்றி ஆராயுங்கால், மரணம் என்கிற சொல், சகல ஜீவர்களையும் நடுங்கச் செய்கிறது.

"யானேதும் பிறப்பஞ்சேன்; இறப்பதற்கு
என் கடவேன்"

"சாதல் சாதல் பொல்லாமை"

— திருவாசகம்.

பிறக்கிற சமயத்து முற்றிலும் அறியாமை. இறக்கும் போது தெளிந்த அறிவு. ஆயினும், மண் பெண்-பொன் இம்மூன்றிலும் ஆசையுடையோர், உலகத்தில் தாங்கள் சம்பாதித்த புகழ்-கீர்த்தி-செல்வம்-புத்திர மித்திராதிகள் இவர்களை விட்டுப்போகிறோமே என்கிற பயம், மரணகாலத்தில் அதிகரிக்கிறது. எங்கிருந்து வந்தோமென்பதை விசாரிக்க அவகாசமில்லாததால், எங்கே போகிறோமென்கிற கவலை உண்டாகிறது.

"பிறன் ஒருவனை அவன் விரும்பும் வண்ணம் மதித்தல் கடினமான காரியம்" — வாவனர் கூஸ்.

மனித ஜன்மமெடுத்து, நன்மார்க்கத்தில் பழகி, இல்லறவாழ்க்கையை நல் வாழ்க்கையாய் அநுஷ்டித்து, உண்மை நெறியி னின்றோர், மரணத்தைக்கண்டு பயப்பட மாட்டார்கள். அவர்களைத்தான் மஹான் என்றும், மஹாத்மா என்றும் உலகம் புகழும்.

பண்டைக் காலத்தில் ஐந்து வயதுக்கு மேல் குருகுலவாசத்தில், குரு சிசுருஷை செய்தும், அவரால் கற்பிக்கப்பட்ட சாஸ்திரங்களைப் படித்துத் தேர்ச்சி பெற்ற பின்னர், 20, வயதுக்குமேல், மைதுன இச்சை உண்டானால், விவாகம் செய்து கொண்டு, கணவனும் மனைவியும்; ஈருடலும் ஒருயிருமாயிருந்து, இல்வாழ்க்கை அதாவது கிருகஸ்தாஸ்ரம தருமத்தை நடத்தவேண்டும். இந்த ஆஸ்ரமத்தில், சாது சங்கப் பழக்கம், குருவினால் கற்பிக்கப்பட்ட சாஸ்திரங்களை ஆராய்தல், நித்யா நித்ய வஸ்துக்களை அறிதல், இகபர சுகத்தில் விராகபுத்தி, சமம் - தமம் - விடல்-சகித்தல் முதலிய சமாதிஷட்க சம்பத்து, இவைகளை அநுபவத்

" கேலி செய்தல் தன் அறிவை விளக்கும். ஆனால் நற்குணத்தை விளக்காது " —மாண்டெய்லே·

தில் கொண்டுவந்து, மோக்ஷ இச்சையுடையவராயிருத்தல் வேண்டும். இந்த சாதனப் பயிற்சி, அவரவர் கருமாநுசாரப் படியே அமையும். "தாரமும் குருவும் தன் தலைவிதிப்படியே" என்பார்கள்.

---

## இருபத்து மூன்றும் அத்தியாயம்.

# சதிபதிகள் சர்வமும் நானே என்பது பேரின்ப மாகும்.

" கல்வி யறிவு தரும் கற்பை நிலை நிறுத்தும்
இல் வாழ்க்கைக்கேற்ற இசைவெல்லாஞ்-சொல்லிக்கும்
இந்நிலத்து மேன்மை எல்லாம் மெய்துவலிக்கும்
மூக்தி என்னும் அந்நிலத்துக்குற்ற துணையாம்"

என்று நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் கூறிய அமுதவாக்கினை உணராத சிலர்,

---

" ஒழுக்கமின்றி, நட்பு இருக்க இயலாது "
— லாபுரூயர்.

“ மாயை யென்றொருத்தி தன்பால்
　　மனமெனும் மைந்தன் றோன்றித்
தூய நல்லறிவன் தன்னைத்
　　தோற்ற முண்டாக்கி வைத்தான்
தாயோடு தந்தை மக்கள் தார
　　மென்றிவர்பால் வைத்த
நேயமு மவன்றனாலே நிகழ்ந்த தோர்
　　நினைவு கண்டாய்.”

இவ்வித ஆத்ம விசாரம், சாத்வீக குணத்தினல் தான், உண்டாகவேண்டும். ரஜோ - தமோ குணங்களி ருந்தால், அவ் விசாரத்துக் கிடமிராது.

தமிழில் தாயுமானவர்-பட்டினத்தார்-பத்திரகிரி யார் பாடல்கள் எங்கும் உண்டு. அவற்றுள், தமக் கிஷ்டமான சில பாடல்களையாவது மனப்பாடம் செய் யாதார் ஒருவருமிரார். சிலருக்குத் திடீரென ஞானம் பிறந்து விட்டது போல், இவ்வுலகைத் திரணமாய்

“ மனோ தைரியத்தை யிழந்தவன், எல்லாவற்றை யும் இழந்தவனாவான். அவன் பிறவாதிருந்தாலே நல் லது ” — கதே.

மதிப்பர். ஆறிலும் சாவு - நூறிலும் சாவு உண்டென்று, தம் உடலையும் அலக்ஷியம் செய்வர். இல்வாழ்க்கையில் இடையூறு-சண்டை - சச்சரவு நேர்ந்தால், உடனே மொட்டையடித்து, காவி உடுத்தி, விபூதி ருத்ராக்ஷம் அணிந்து, ஆத்ம விசாரணையில் இறங்கி விடுவர். எவ்வளவுதான் சாஸ்திரங்களை ஆராய்ந்து ஆத்ம விசாரணை செய்த போதிலும், கர்ம சம்பந்தமான தேகம் தோற்றும் வரையும் வருணாஸ்ரம தர்மங்களின்படி, அவரவர் கடமைகளைச் செய்தே தீர வேண்டும். பற்றற்ற தன்மையுடையோர்க்கே ஆத்ம ஞானம் சித்திக்கும் என்பார் பெரியோர்.

"உலகத்தோடொட்ட வொழுகல் பல கற்றுங்
கல்லார் அறிவிலாதார்." (திருக்குறள்.)

எத்தனை சாஸ்திரங்கள் படித்தும், எவ்வகை விசாரணை செய்தும், ஞான மார்க்கத்திற் பயின்று, இல்லற வாழ்க்கையி; லீடுபட்டோர் செய்ய வேண்டிய பக்தி யோகம் - கர்ம யோகம் - லோகாசாரமான சம்

"வாழ்வு யோசிப்பவனுக்கு இன்பநாடகம்; உணர்பவனுக்குத் துன்ப நாடகம்" — வால்போல்.

பிரதாயங்கள், இவைகட்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

"எப்பொருள் எத் தன்மைத் தாயினுமப் பொருண்
மெய்ப்பொருள் காண்பதறிவு." (திருக்குறள்)

இப்போது நாமரூபத்தோடு தோன்றும் பொருளை அறிகிற அறிவு (மயக்கமுளது) பொய் யென்றும், உண்மையான வஸ்து வேறொன்றுள தென்றும், அறிய வேண்டும். பொய்யாகிய தத்துவங்களைப் பகுத்தறிந்து, நீங்கி நின்ற அறிவு, தானென்று, தன்னை அருளால் கண்டு தெளிய வேண்டும்.

"உன்னை நீ அறிந்தாயானல், உனக்கொரு
கேடு மில்லை." — கைவல்ய நவநீதம்.

தன்னைத் தானறிய முடியாதிருப்பது ஆணவ இருளென்பர். ஆணவம் - காமியம் - மாயை என்னும் மும்மலங்களை நீக்கினல், தத்துவ ஞானம் பிரகாசிக்கும். இது சற்குருவின் அருளால் கிடைக்க வேண்டும்.

---

"நான் அதிகமாவது அஞ்சுவது அச்சத்தையே. துன்பப்பட அஞ்சுபவன், துன்பப் பட்டாய் விட்டது, அவன் அஞ்சுவதே காரணம்" — மாண்டேய்ன்.

கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கையி லிருக்கிற போதே, இவ்வித உணர்ச்சி, பூர்வ புண் ணிய பரிபாகத்தால் உண்டாக வேண்டும்.

இன்பமென்றால் சுகம் அந்த சுகம் சிற்றின்பம் பேரின்பமென இருவகையாகும். சிற்றின்பம் என்பது இல்வாழ்க்கையிலிருந்து பெண்டு பிள்ளைகளோடு கூடி வாழ்ந்து, தருமசாஸ்திர விதிப்படி நடந்து; ஈஸ்வர பக்தி - அடியார் பக்தி - குருபக்தி - அன்பு - அடக்கம். பொறுமை - காருண்யம் முதலிய குணங்கள் அமைந்து, மனைவியும் புருஷனும் ஈருடலாயினும் ஓருயிராய் வாழ் வது. இது அழியக்கூடியதாதலால் சிறு இன்பம் என் றார். பேரின்பம் என்பது, மாயையினால் தோன்றும் அகில பிரபஞ்சங்கள், கானல் ஜலம் - ஆகாயத்தில் நீல நிறம் - பழுதையிற் பாம்பு - கிளிஞ்சளில் வெள்ளி -

---

“ ஒருவார வேலையை விட, ஒரு நாள் சஞ்சலமே சரீரத்துக்கு அதிக தளர்ச்சியைக் கொடுக்கும் சஞ்ச லம் நமது சரீரம் முழுவதையும் தளர கிழாக்கி விடும். வேலை சரீரத்தை ஆரோக்கியமாகவும் ஒழுங்காகவும் செய்யும் ”

— ஆவ்மரி.

கட்டையிற் கள்வன் - தங்கத்தில் ஆபரணம் போல், அதிருஷ்டான உலகம் பிர்ம்மத்திலும் வேறில்லை என்பதை அறிந்து, ஆகாஸ ஸமானமாய்-காரணகாரிய மற்றதாய்-பாவாதீதமாய்-ஜன்ம ஸராமரணசூன்யமாய்-சாஸ்வத-சாந்த ஸமரஸமாய்- நிஸ்தரங்க சமுத்திரம்போல் நிறைந்து, ஸதா 'அஹம்' என்னும் அநுபவஸ்வரூபமாய்-ஏக பரிபூரண பிர்ம்மமே நான் என்னும் அகண்ட பிரம்மாத்மைக்ய விருத்தி ஞானத்தை அடைந்து பிரகாசிக்கும் இன்பம். இத்தகைய மேலான பேரின்ப சுகத்தை சிற்றின்பமாகப் பெறலாமென்று தரும சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இது, இயற்கைக்கு விரோதமானதும், சிறிதும் பொருத்தமில்லாததுமாய்த் தோன்றும். ஆனால், உற்று நோக்குவோர்க்கு உண்மை புலப்படாமல் போகாது. சூரியன் கீழ்த்திசையில் தோன்றியதும், உலக வியவகாரங்கள் நடை பெறவும், மேற்றிசையில் மறையும் போது, சர்வ வியவகாரங்களும் ஒடுங்குவதும், நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கி

" ஆடம்பரத்துக்கு அதிக செலவு தேவை. ஒரு தீயவழக்கத்துக்குச் செலவு செய்வது, இரு குழந்தைகளைக் காப்பாற்றலாம் " — பிராங்க்லீன்.

றேம். அவ்வாறே, பிரமசந்நிதானத்தில் உலகம்தோன்றி அவருடைய சந்நிதானத்திலே மறைகின்றது. அதனால், கடவுளைத்தவிர வேறு பிரபஞ்சமில்லையாகையால், பிரபஞ்சம் அநித்யம் - தோற்றமாத்திரமாய் உள்ளதென்று, நாம் திடமாய் நினைத்தல் வேண்டும்.

பிராந்தி கல்பித மித்யா ஜகத்தை மெய்யென்று நம்பியும், பஞ்சபூத பௌதிகமான சாயா சரீரம் அநித்தியமென்றெண்ணும்ல்சாஸ்வதமாகக்கருதியும், தம்மைச் சூழ்ந்துள்ள மனைவி மக்கள் உற்றார் பெற்றார் உறவினர் முதலியவர்களை நமக்குற்றவர்களென்று நம்பியும் சத்து சித்தானந்த ஏக ரஸ பிர்ம்மமாகிய தன்னை மறந்தும், அஞ்ஞானத்தால் ஏமாந்தோம். அதன் பலன் யாதெனில், மஹத்தானகஷ்டமே கைகண்டது. இவ்வளவும் சித்த விருத்தியால் விளைந்தனவே யாகும். புத்தி தோஷத்தாலுண்டாகும் இச் சற்பனவிகற்பங்கள் ஸதா ஸமாதி நிஷ்டனாயிருப்பவனுக்குத் தோன்றுவதில்லை.

---

"நேரில் குணங்களைப் பேசாமலும், புறத்தில் குற்றங்களைப் பேசாமலும் உள்ள வழியை அனுஷ்டித்தால், அவதூறும்முகஸ்துதியும் ஒருங்கே உலகினின்று ஒழியும்"

— ஹார்ன்.

அவன் பிர்ம்மாநுசந்தான பலத்தால், சர்வ உபாதிகளை யுங் கடந்து, பிர்ம்ம சொரூபனுகிறான்.

இந்நாமரூபப் பிரபஞ்சத்தில் தோன்றும் எல்லா வஸ்துக்களும் மறையும்; மறுபடியும் தோன்றும், பிறப் பும் இறப்பும் சர்வ வஸ்துக்களுக்கும் மாறி மாறி வரும். அமைப்பு அழிவற்ற பொருள் ஆத்மா ஒன்றே. தங்கத் தால் செய்த பலவித ஆபரணங்கள், நாம ரூபங்களால் பேதப்பட்டாலும், தங்கத்தைத் தவிர வேறில்லாதது போல, பிர்ம்மத்தினிடத் துதித்த சர்வமும் நாம ரூபங் களால் வேறு பாடடைந்தாலும், கடைசியில் பிர்ம்மத் தைத் தவிர வேறில்லை. சூரியக்கிரணகளால் உண்டா கும் மேகக் கூட்டங்கள், அச்சூரியனையே மறைத்துப் படர்ந்து பெருகுவது போல, சச்சிதாநந்த மூர்த்தியா கிய பிர்ம்மத்தை, தனது ஆவரண விக்ஷேப சத்திகளால் மயங்கச் செய்து, ஒன்றைப் பலவாகக் காட்டி, அநித்ய தேகத்திலாசையை யூட்டி, பழமையைப் பாம்பாகக் கரு

" மனைவியோடு இன்ப சுகம் அநுபவித்து, அரை டஜன் பெண்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவர் கள் மனம் கோணுமல் நடக்கக் கற்கவேண்டும் "

துவது போல், பிராந்தி மோகத்தில் மாட்டி வைத்திருப்பது, ஆச்சரியத்திலும் ஆச்சரியமே.

ஆத்மாவாகிய தன்னைத் தவிர வேறொன்றுமில்லையென்பதை அறிய, பிர்ம்மஞானம், வேண்டுவதில்லை. சிற்றறிவாலும் அறியலாம். திருஸ்யமாகக் காணும் சர்வமும் நினைவிலன்றித் தோன்றுவதில்லை. திருஸ்ய ஜகத்முதலியவற்றை நீக்கி, நினைவைப் பார்த்தால், நினைவென்பது தனிப்பொருளாகக் காணவில்லை. ஆதலால், கள்ளனாய் தோன்றியது கட்டையாய் முடிந்தது போலும், பாம்பாய்த் தோன்றியது பழுதையாய் முடிந்தது போலும், உண்மைபோல் தோன்றும் நாமரூப உலகம் தன்னுடைய நினைவே யாகின்றது. தன்னை நீக்கி, நினைவு யாதென்று பார்த்தால், நினைவு என்கிற ஒருபொருளைக் காணவில்லை. நினைவை நீக்கி, தன்னை யாதென்று பார்த்தால் "நான்" பிரகாசியா நிற்கின்றேன். ஆதலால், சர்வமும் நானே என்று ஏற்படுகிறது. மாயா கற்பிதமான

---

"சொந்தக் காரியம் பொதுக்காரியம் எல்லாவற்றையும் நியாயமாயும், பெருந்தன்மையாயும் கற்றுக் கொடுப்பதே பரிபூர்ண கல்வியாகும்"

— மில்டன்.

பிரபஞ்சத்தை தன்னிலும் வேறாகக் கருதுவதால், ஜனன மரணாதி துக்கங்கள், உண்மைபோல் தோன்றி வருகின்றன. இந்த ரகஸ்யத்தை அநுபவத்தால் அறியவேண்டும். "சிவோகம்" என்றும், "அகம் பிர்ம்மாஸ்மி" என்றும் தத்துவமசி என்றும் அயமாத் மப்பிரஹ்மம் என்றும் பிரஞ்ஞானம் பிரஹ்மம் என்றும் வாக்கால்மாத்திரம் கூறுகிறவர்களுக்கு; ஆத்மஞானம் ஒருபோதும் கிட்டாது.

தன்னுடைய ஈஸ்வரத் தன்மையை மறக்கும்படிசெய்யும் மஹா மாயையின் முக்கியப் பிரதானியாகிய பணப்பேயை, மஹாத்மாக்கள் பலரும் தூஷித்திருக்கக் காண்கிறோம். "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும் நுழையும்; பணக்காரன் பரகதி அடைதல் அரிதினும் அரிது என்றார் ஏசு கிறிஸ்துநாதர். "குபேர சம்பத்தைக் கொடுத்து, உன்னருளை மறக்கச் செய்வாயோ ஓ! கிருஷ்ணா!" என்று குசேலர் கதறினார். பிரகலாதாழ்வார், "சுகங்களைக் கொடுத்து, ஆதிமூலத்தை மறக்கச்

---

" ஒரு பொழுதும் தவறு செய்யாதவன், ஒன்றும் செய்யமாட்டான்" — ஆவ்வரி.

செய்யும் திரவியாதிகளை நான் வேண்டேன்" என்றார். பத்துகோடிக் கதிபதியான பட்டினத்தடிகள்-நாசிகேது, அத்தனையும் துறந்து, கோவணாண்டியானார். நித்திரையிலிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது சரீரத்தில் ஓர் காசை வைத்தால், அக்காசு பட்டவிடம் விறவிறத்துப் போகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பணப்பேயை விட பெண் பேயைப்பற்றி சிவப்பிரகாச சுவாமிகள் "நாறு வயதாமளவும் பேய் கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ளலாகாது" என்றார்.

மண்ணாசைபிடித்த மாந்தர்கள் பலர், மஹத்தான கஷ்டங்களை அனுபவித்து, உயிரையுமிழந்தார்கள். ஆதலால், எல்லாருக்கும் மண்-பெண்-பொன் இம் மூன்றினிடத்து வைக்கும் ஆசை துன்பந் தரும்.

"பைந்தொடியாராசை நோய் கம்பீர
மனிதரையும் பதுமந்தன்றன்
முந்திரவிக் கதிர் போலு மிளிர்விக்குங்
கனவிடியில் முனைகூர்வாளும்"

---

"வறிஞர் என்பவர் கொஞ்சமாக உடையவர் அல்லர். அதிகமாக விரும்புவரே யாவர்" — ஆவ்பரி.

“ வெந்த விருப்புப் பொறியு மெனக்
கொடிய மனவேட்கை மேரு வொத்தோர்
சுந்தரர் ஞானியர் தீரர் சூரரை யெல்லா
மிமைப்பின் துரும்பு செய்யும் ”
“ பின்னுறு பக்கத்திருள்போல்
பேராண்மைத் தீரரையும் பீதிசெய்யும்
நன்னயங் குரு டாக்கும் உபசாந்தத்
தோர்தமையும் நடுக்கஞ் செய்யும்
சின்னமுறு காதலெனும் கிழமடந்தை
ஒரு பொருளுங் கிட்டாதேனும்
இந்திரியம் நயந்தெவர்க்கும் பின் தொடரும்
மனோரதமும் எய்தா தாகும் ”

— ஞானவாசிட்டம்.

ஆசையாகிற கொடிய வியாதியினால் உலகமே கட்டுப்பட்டிருக்கிறது. அதனாலே பல கருமங்கள்

---

“ கடன் கொடுத்தவர்கள் வந்து கேட்கும்போது நமக்குண்டாகும் கோபத்துக்கும் கஷ்டத்துக்கும் அளவே கிடையாது. பின்னும் கடன் வாங்காமலாவது, இருக்க முடிகிறதா ? அதுவுமில்லை ”

உண்டாகும். சிந்தனைகள் அநேகம் தோன்றுகின்றன. ஆகலால், இத்தகைய கொடிய வியாதியாகிற ஆசையை விட்டொழிக்க வழி தேடவேண்டும். இதற்கு ஔஷதம் யாதென்னில், சிந்தாத்தியாகமே உத்தமமானது. இது இல்வாழ்க்கைத் தருமத்தை அநுஷ்டித்து, மனைவி மக்களோடு வாழ்பவனுக்கு, சிந்தாத்தியாகமே, சகல சம்பத்தையும் கொடுக்கும்.

" சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே."

சிந்தாத்தியாகத்துக்கு மன அடக்கம் அவசியம் வேண்டும். மன அடக்கத்துக்கு சாது சங்கப் பழக்கம் இருக்கவேண்டும்.

" சத்சங்கத்வே நிர்ச்சங்கத்வம், நிர்ச்சங்கத்வே நிர்ம் மோகத்வம், நிர்ம்மோகத்வே நிர்ஜ்ஜல தத்வம், நிர்ஜ்ஜல தத்வே ஜீவன்முக்தம்-பஜகோவிந்தம் "

---

" செல்வம் சன்மார்க்கத்தில் அடையப்படுவதில்லை யென்று, அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆதலால், உண்மை யாதெனில், வறுமையும் சன்மார்க்கத்தில் அடையப் படுவது அபூர்வம் என்பதே "

— ஆஸ்வரி.

“ அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத்தாக்கும்
ஆபத்தைச் சுபமாக்கும் அசுபந்தன்னைச்
சிறந்த உயர்ந்தவர் கூட்டமென்னுங் கங்கைச்
சிதநீராடினர்க்குச் செந்தீ வேள்வி பிறக்கரிய தவந்
தானந் தீர்த்தம் வேண்டாம்
இடர் பந்த மறுத்தெவர்க்கு மினியோராகிப்
பிறப்பெனும் வேலைப்புனையா முணர்வுசான்ற
பெரியோரை எவ்வகையும் பேணல் வேண்டும்.”
— ஞானவாசிட்டம்.

இல்வாழ்க்கைத் தருமத்தை அநுஷ்டிக்கும் ஒருவன், தன் மனைவி மக்களைக் காப்பதற்கு, நல்ல வழியில் பொருளைச் சம்பாதித்து, துறந்தார்க்கும்-துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் செய்யவேண்டிய உபசாராதிகளைச் செய்யவேண்டும். சாது சங்கப் பழக்கம் வேண்டும். சாதுக்கள்நேசமிருந்தால், மனமானது துர்விஷயங்களிற் செல்லாது, ஒரு வழிப் பட்டு நிற்கும்போது, உலகமானது துச்சமாகத் தோன்றும். உலகம் துச்சமாகத்

“ சுரையாப் பொறுமை—சந்தர்ப்பங்களைச் சீர்தூக்கும் சிந்தை—தவறான செய்கைகளைப் பலமாகக் கண்டிக்கும் தன்மை. தவறு செய்தவர்களிடம் தயவு காட்டும் பான்மை, இவை மேலான குணங்கள் ”
— மாமதியூ அர்னால்ட்

தோன்றும்போது, சர்வஜீவர்களும், கடவுளது அம்சமே யாகும் என்கிற திடபுத்தி உண்டாகும். அப்போது, தம்மைச் சூழ்ந்துள்ள மனைவி மக்கள் யாவரும் பிராரத்த கருமத்தால், வேறு வேறு என்று நினைக்கலாமே தவிர, உள்ளபடி பார்க்கும் போது, நம்மைத்தவிர அவர்கள் வேறு இல்லையென்றும், அவர்களைத்தவிர நாம் வேறில்லை என்றும் தோன்றும். ஆதலால், சர்வமும் நானே என்கிற சித்த சுத்தி உண்டாகும். அந்நிலையே பேரின்ப நிலை என்னப்படும்.

மனைவி மக்களோடு வாழும் இல்லறத்தார் ஒவ்வொருவரும் இந்நிலையை அநுஷ்டிக்கும் பக்ஷத்தில், கட்டாயம் இல்லறத்திலேயே பேரின்ப சுகத்தை அடையக் கூடும். இல்லறவாழ்க்கையிலேயே பேரின்ப சுகத்தை அடைவதற்காக, நமது தர்ம சாஸ்திரங்களில் இல்லறவொழுக்கங்களில் பலப்பல விதி நிஷேதங்கள் சொல்லியிருக்கின்றன. காலமாறுபாட்டால், தரும சாஸ்திரங்களும், அதிற்கூறியுள்ள விதி நிஷேதங்களும், கட்டுக்கதை

"தம் சக்தி எவ்வளவு உயர்ந்ததாயும், எவ்வளவு அளவற்றதாயும், அபிவிருத்தி அடைய முடியுமோ, அவ்வளவு அபிவிருத்தி அடைவதை, ஒவ்வொருவருடைய லட்சியமாயிருக்கவேண்டும்"

— ஹம்போல்ட்

யென்றும், வீண் வேலையென்றும் சொல்லி, அலக்ஷியம் செய்கிறவர்கள், இம்மையில் இல்வாழ்க்கையில் பலவித கஷ்டங்களை அநுபவித்து, மறுமையில் மீளா நரகத்துக் காளாகிறார்கள். அந்தோ! பரிதாபம்!

அக்கினி சாக்ஷியாய் விவாகம் செய்துகொண்ட மனைவியைத் தம் வீட்டுக் குல தெய்வமாகப் பாவிக்க வேண்டும். அம்மனைவியும் தம் புருஷனைத் தம் தெய்வமாகப் பாவித்துக் குடும்பத்தை ரக்ஷிக்கவேண்டும். அப்போது தான், அக்குடும்பம் அஷ்டவிஸ்வரிய சம்பத்தோடு விளங்கும். இவ்வளவுக்கும் காரணம், மனமே யாகும். மனத்தின் உருவத்தைப் பற்றி,

"மெத்துகின்ற வாதனையை விட்டால்
மேலான நலமுளதாம்
சத்தின சத்தினிடைநின்று சைதன்னி
யத்தில் சாக்ஷியத்தில்
ஒத்து நடுநின் றலைவதுவே உள்ள
பாடு மிவ்வுள்ளம்
சித்தின் முயல்வாற் சித்தாகும்
செடத்தின் முயல்வால் ஜெகமாகும்"

---

"சாதகம் செய்தலே ஓதலின் ஒழுக்கமும்-பயனு மாகும்"

என்று ஞானவாசிட்டம் கூறுகிறது. நாம் அநுபவிக்கும் கஷ்ட நஷ்டங்கள் எல்லாம், இல்லறத்திலும் சரி துறவறத்திலும் சரி, மனத்தின் சங்கற்ப விகற்பங்களாலே தவிர, மற்றொன்றினுலில்லை. மனதைக் குரங்கு என்றும், பேயென்றும், நாய் என்றும் பெரியோர் கூறுவர். அத்தகைய அலேயு மனத்தை அடக்குபவனே தீரன்-வீரன்-ஞானி என்பார்கள். இல்வாழ்க்கையிலுள்ளவன் மனதை ஒருவழிப் படுத்தி நிறுத்தினுல், அவனது வாழ்க்கை நல்வாழ்க்கையாக விருக்கும். அம்மனத்தை அடக்கும் உபாயத்தைப்பற்றி ஞானவாசிட்டம்,

" எந்த வெந்த வாசனை களிதயத்
தெழுந்த அவை யெல்லாம்
அந்த அந்த இடத்தழிக்கிற அதுவே
மாயைக் கழிவாகும்
முந்து போக பேதமென மொழிந்த
இருவாதனை விட்டு

---

" நீ அடைந்துள்ள பாக்கியங்கள் அனைத்தினையும் அநுபவிக்க முயலவேண்டும். அப்போது ஒரு சமயம் நீ நினைத்ததை விட, அவை அதிகமாக இருக்கத் தெரிந்து கொள்வாய் " — ஆப்பர்.

வந்த பாவா பாவங்கள் மாற்றி
விகற்ப மற வாழ்வாய் ''

கூறுவதைக் கவனிக்கவேண்டும். தவிர, பெரியோர்கள் ஆசிர்வதிக்கும் போது "மனம் போல வாழ்வு" என்று கூறுவார்கள். மனமானது சங்கற்ப விகற்பங்களின்றிப்பரிசுத்தமாயிருந்தால், அவனது வாழ்க்கைநிலையும் பரிசுத்தமாகவும், கஷ்டநஷ்டங்களின்றியும், சந்தோஷமாகவுமிருக்கும். இது சதிபதிகள் (கணவன் மனைவி) இருவருக்கும் அவசியம்.

" கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் "

---

" முகத்துக் கண்கொடு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்
மகட்குத் தாய் தன்மணாளனோடாடிய
சுகத்தைக் கூறெனக் கூறுமா றெங்ஙனே? "

" எப்பொருளெத் தன்மைத்தாயினுமப் பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு '' — திருக்குறள்.

"பொங்கும்மங்களம் எங்கும் தங்குக"

ஓம் ஸாந்தி ! ஸாந்தி !! ஸாந்தி !!!

சதிபதிகள் மதன லீலா இன்ப தத்துவம்

முற்றுப் பெற்றது.

# வனப்பும்—வாலிபமும் பெறும் வழி.

[இந்நூலின் 16-அத்தியாயத்தில் 203-பக்கம் தொடர்ச்சியாக வாசிக்கவும்.]

## (சூரிய நமஸ்கார பலன்.)

### பத்து நிலைகள்.

" ஒளி தருவது யாது? தீராத இளமை யுடையது யாது?
வெய்யவன் யாவன்? இன்பம் எவனுடையது?
மழை எவன் தருகிறான்? கண் எவனுடையது?
உயிர் எவன் தருகிறான்?
புகழ் எவன் தருகிறான்? புகழ் எவனுக்குரியது?
அறிவு எதுபோல் சுடரும்?
அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?
ஞாயிறு.
அது நன்று."

---

" உய்யும் நெறிக்கு உயர்குண மனைவி வேண்டும் "

வான வீதியில் ஒளி வீசிச் செல்லும் சூரியனை, பாரதியார் இவ்வாறு புகழ்ந்தார். நம் முன்னோர்களும் அவனை 'சூரியபகவான்' என்றே வழிபட்டு வந்தனர்.

சூரியனைத் தினந்தோறும் வழிபடுவதனால் விளையக் கூடிய நன்மையை, அநாதி காலந் தொட்டு அறிந்த நம் நாட்டுப் பெரியோர்கள், சூரியநமஸ்கார முறையை மக்களுக்குப் போதித்தார்கள்.

சூரிய நமஸ்காரத்தைச் செய்கையில், ஒவ்வொரு நிலைக்கும் ஒரு மந்திரத்தையும் உண்டாக்கியிருக்கின்றனர். அதனால், சூரிய நமஸ்காரம் செய்கையில் உடல் கட்டுப்படுவதோடு உள்ளமும் கட்டுப்படுகிறது. உடல் உறுதியோடு, உள்ள உறுதியும் ஏற்படுகிறது.

சூரிய நமஸ்கார முறை அநாதிகாலம் தொட்டு இருந்தபோதிலும், சமீப காலத்தில் மக்கள் அதை மறந்து விட்டதாகவே சொல்லலாம். இப்படி பலரால் மறந்து போகப்பட்ட ஓர் உன்னத உடல், உள்ளப் பயிற்சி தத்துவத்தைப் புத்துயிரளித்துப் புதுப்பித்தார் ஆந்த் சமஸ்தான மன்னர்.

இம் மன்னர் சூரிய நமஸ்காரத்தைப்பற்றி வாயளவில் பிறர்க்குபதேசம் செய்யவில்லை. தாமே

---

" ஐம்பொறி அவிப்போன் அரும்பெரும் புலவன் "

தினசரி சூரிய நமஸ்காரம் செய்கிறார், தம் மகன், மகள், பேரன், பேத்திகளுக்கும் அதில் பயிற்சி செய்வித்து வருகிறார்.

மேனாட்டு உடல் பயிற்சி முறைகளைப்போல், சூரிய நமஸ்காரம் உடல் தசைகளை வெளிக்குப் பகட்டாகப் பெருக்கிக் காட்டுவதில்லை. ஆனால் அவைகளை நயப்படுத்தி, அழகுற வளர்த்து, உடலை உள்ளும் புறமும் உறுதியாக்குகிறது. சிலமேனாட்டு உடற் பயிற்சி முறைகளைப்போல், ஒரு குறிப்பிட்ட அங்கம் அல்லது அங்கங்கள் மட்டும், மிகைப்பட வளர்ச்சியும் உறுதியும் அடையும்படி, சூரிய நமஸ்கார முறை செய்வதில்லை. எல்லா அவயவங்களையும், நரம்புகளையும் சமமாகச் சம வேகத்தில் ஊானுறச் செய்கிறது இப் பயிற்சி.

இவ்வளவு நன்மைதரும் இத்திட்டத்திற்குப் பல மேனாட்டு முறைகளைப்போல், எவ்வித இயந்திர சாதனங்களும் தேவையில்லை. ஏழைகளும் செய்து பலம்

"பலவீனர் பாதையில் தடையாயிருந்த கல், பலமுடையார் பாதையில் படிக்கல்லாக இருக்கும்" - கார்லைல்.

பெறும் வகையில், இது அமைந்திருக்கிறது. இதற்குத் திறந்த வெளி, காற்று வீசும் இடம், சாதாரணமான தரை — இவை இருந்தால்போதும். காலைக் கதிரவனைக் கண்குளிரக் காணக்கூடிய இடம் இருப்பது மிக உத்தமம்.

சூரிய நமஸ்காரத்துக்குப்பத்து நிலைகள் அல்லது ஆசனங்கள் உண்டு. ஆனால், இவை எவற்றிலும் ஓரே மடியாக நீடித்து நிற்கவேண்டிய அவசியமில்லை. நிலைகள் வருமாறு.

1. முதன் முதலாக, சூரியோதய காலத்தில், கிழக்கு நோக்கி, மாரில் கைகூப்பி, விறைப்பாக நிற்கவும், பாதங்களும் முழங்கால்களும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கவேண்டும். கூப்பின கைகளின் கட்டை விரல்கள், மார்மீது இடித்துக்கொண்டிருக்க வேண்டும். இடுப்பை நிமிர்த்தி, நேராகச் சூரியனைப் பார்க்கவும்; உதடுகளை அழுத்தமாக மூடி, உள்ளே மூச்சு இழுக்கவும். இது முதல் நிலை.

---

"மடையனுக்கு மறுமொழி கூறினால், விபரீதம் விளையும்"

2. சுவாசத்தைப் பிடித்துக்கொண்டே, காலை மடக்காமல், முன்னால் குனிந்து, உள்ளங் கைகளைப்பூமிமீது படிய வைக்க முயற்சிக்கவும். கைவிரல்கள் சேர்ந்தாற் போலும், கட்டைவிரல் மட்டும் தனியாகவும் இருக்க வேண்டும். எடுத்த எடுப்பிலேயே எல்லாராலும் இப்படி பூமியைத் தொட முடியாது. பழகப்பழகச் சரியாக வந்துவிடும்.

குனிந்து, பூமியைத் தொட்டபடியே, காலை மடக்காமல், மூக்கு அல்லது நெற்றியால் முழங்காலைத் தொட முயற்சிக்கவும். மனதுக்குள், ஆரோக்கியம், மனோ தைரியம், நீண்ட ஆயுள், எல்லா மேற்படும் என்று மனப்பூர்வமாக நம்புங்கள். முதல் நிலையில் பிடித்த சுவாசத்தைப் பூரணமாக வெளியே விட்டு விடவும். இது இரண்டாம் நிலை.

3. சுவாசத்தை நன்றாக இழுத்துக்கொண்டு, வலது காலைப் பின்னால் நன்றாக நீட்டவும். கால் விரல்களும் முழங்காலும் தரையில் இடிக்கவேண்டும். இப்போது இடக்காலை மடக்கி உட்காரவும். மேலே எவ்வளவு

'மனோதைரியம் வறுமையின் விளக்கு"- வாவனார்கூஸ்.

முடியுமோ, அவ்வளவு அண்ணாந்து பார்க்கவும். இந்த நிலை பூராவும் சுவாசத்தை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும். இது மூன்றாம் நிலை.

4. நாலாவது நிலைக்கு, சுவாசத்தை விடாமல், இடது காலையும் பின்னால் நீட்டி, உடலை உயர்த்தி, தலை, தோள், இடுப்பு, கால்கள் எல்லாம், ஒரே நேர் கோடாக இருக்கும்படி விரைப்பா யிருக்கவும், உடம்பை, இப்போது கைகளும் கால் விரல்களுமே தாங்கி நிற்கும். இப்போது மூச்சை விடக்கூடாது.

5. மூச்சைப் பிடித்துக்கொண்டே, கால் விரல்களை நகர்த்தாமல், முழங்கால்களைத் தரைமேல் வைத்து, 'சாஷ்டாங்கமாக' நமஸ்கரிக்கவும். இப்போது, கால் விரல்கள், முழங்கால்கள், கீழ் மார்பு, தோள்கள் நெற்றி இவைமட்டுமே தரைமீது பட்டிருக்கவேண்டும். மேல் மார்பும், வயிறும் உள்ளிழுத்தபடி தரைக்கு மேலிருக்கும்; இடுப்பை எவ்வளவு உயரம் தூக்க முடியுமோ, அவ்வளவு தாக்கவேண்டும். சுவாசத்தைப் பூராவாக வெளியே விட்டு விடுக. இது ஐந்தாம் நிலை.

---

"அறிவை விட அந்தரங்க விஸ்வாசமே, சம்பாஷணையை அதிக சோபிதமாக்கும்"-லாரோஷி போக்கஸ்ட்.

6. முழங்கால்கள், உள்ளங்கைகளை ஐந்தாம் நிலையில் உள்ளபடியே வைத்துக் கொண்டு, காற்றை நன்றாக உள்ளே சுவாசிக்கவும். இப்போது மார்பை முன்னே தள்ளி, கைகளை நீட்டி, உடலைப் பின்னால் வளைத்து; நன்றாக நிமிர்ந்து, தலையை எவ்வளவுக் கெவ்வளவு பின்னால் தள்ள முடியுமோ, அவ்வளவுக் கவ்வளவு தள்ளி, நேரே பார்க்கவும். பூராவும் சுவாசம் இழுத்த பின், மூச்சைப் பிடித்துக் கொள்ளவும். இது ஆறாம் நிலை.

7. மூச்சை விடாமல், நாலாவது நிலைபோல விரைப்பாக உடலைத் தூக்கவும். பின்னர், உள்ளங்கைகளை அசைக்காமல், கைகளை, சற்று வளைத்து, இடுப்பை மடக்கி, மேலே தூக்கி, குதிக் கால்களால் பூமியைத் தொடவும். கைகளும், கால்களும் பூராவாக பூமியைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். இப்போது தலையை முன்னால் நன்றாக வளைக்கவும். மூச்சைப்பிடித்துக் கொண்டே இருக்கவேண்டும். இது ஏழாம் நிலை.

---

" எவனிடம் வெட்க உணர்ச்சி இல்லையோ, அவனை இறந்தவனாகவே மதிக்கவேண்டும் "— ப்ளாட்டஸ்.

8. சுவாசத்தைப் பிடித்துக்கொண்டே, வலது காலை மடக்கி, முன்னால் கொண்டுவந்து இரண்டு கைகளுக்கும் நடுவே (மூன்றும் நிலையைப்போல்—ஆனால் கால் மட்டும் மாறி) வைக்கவும். காலை முன்னால் வைக்க வைக்க நன்மையும் அதிகம். இடது காலை முழு நீளத்துக்கு நீட்டி, விரல்களும் முழங்காலும் தரையைத் தொட்டுக்கொண்டே, நிலையை நன்றாக நிமிர்த்தி, உயரப் பார்க்கவும் மூச்சு இன்னும் விடப்படாம லிருக்கவேண்டும். இது எட்டாம் நிலை.

9. மூச்சை விடாது, கைகளை எடுக்காமல், இடுப்பை மேலே தூக்கி, இரண்டாம் நிலை போலவே, முன்னால் வளைந்து, பூமியைத் தொட்டவண்ணம் நிற்கவும். சுவாசத்தை மெதுவாக வெளிவிட்டு, தலையால் கால்களைத் தொடவும். இது ஒன்பதாம் நிலை.

10. கடைசி நிலையில், மூச்சை நன்றாக உள்ளே யிழுத்து, முதல் நிலையைப்போலவே, நேராக நிற்கவும். உடல் பூராவும் நேராக நிற்கும் வரை, முழங்கால்களை மடக்கக்கூடாது.

இந்தப்பத்தாவது நிலையோடு சூரிய நமஸ்காரத்தில், ஒரு 'வட்டம்' பூர்த்தியாகி விடுகிறது. இரண்

---

"எருமைவாக்கு முன்னே நெய்விலை கூறுபவன் முழுமுட்டாள்"

டாவது 'வட்டம்' ஆரம்பிக்க, முன் போல் வாயை இறுக மூடி, மூக்கு மூலம் சுவாசம் பிடித்து, பழைய படி, பத்து நிலைகளைச் செய்யவேண்டும்.

இந்தச் சூரிய நமஸ்கார நிலைகளைச் செய்கையில், கீழ்வரும் விஷயங்களைக் கவனித்தல் அவசியம்.

இரண்டாம் நிலை ஆரம்பத்தில், கீழே தரையில் வைக்கப்படும் கைகள், பத்தாம் நிலை வரையில் தரையி லிருந்து நகர்த்தவோ எடுபடவோ கூடாது. முதல் நிலையில், மூடிய வாயும் கடைசிவரை மூடியே இருக்க வேண்டும்.

சுவாசங்கள் உள்ளிழுப்பதும், வெளி விடுவதும் எல்லாம் மூக்கு மூலமாகவே நடைபெறவேண்டும். வாய் திறந்து மூச்சு விடுதல் கூடாது.

சூரிய நமஸ்காரத்தை முதல் முதலாகப் பயில் பவர்கள், சுவாசத்தைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. முதலில் அங்கங்களைச் சரியாக, சிறு தவறுமின்றி, தானுக வைக்கப் பழகிக்கொண்டு, பிறகு சுவாசத்தைக் கட்டுப்படுத்தலாம். சுவாசமும் கட் டுண்ட பின்னர், மனதை அடக்கி, வாழ்வின் நோக்க மாகிய ஓரே சிந்தனையில் அதைச் செலுத்த முயற்சிக்க வேண்டும்.

---

" உற்ற சிநேகன் உயிருக்கு அமிர்தம் போல்வான் "

ஆரம்பத்தில், தினம் 24 தடவைகள் சூரிய நமஸ்காரம் செய்யலாம். இதை நாளாவட்டத்தில் அதிகரித்துக்கொண்டே போகலாம். ஆனால், சிறுவர்கள் 24 முதல் 48 வரையிலும், பெரியவர்கள் 100 முதல் 300 வரையிலும் இவைகளைச் செய்வது சகஜம். தினம் 1000 தடவைகள் செய்வோரும் உண்டு.

— ஹிந்துஸ்தான்.



அந்நிய நாட்டு நாகரீகம் பரவி வரும் இக்காலத்தில், குருகுல வாசம் கடற்கரை வாசமாகவும், குருகுலக் கல்வி இழிகுலக்கல்வியாகவும், சாதி சமயாசார அநுஷ்டானங்கள், அகோத்ர அசூத்ர அநாமதேயப் பெயர் வழிகளால் மறைபட்டும் வருவதால், இவ்வியாசம் சிலருக்கு அருவருப் புண்டாகுமானாலும், இந்நூலுக்கு அவசியமான இத்தகையான விஷயங்களை எழுதாமலிருக்க முடியவில்லை.

Selvarangan Press, Madras.

"இப்புத்தக விலைப்பட்டியை தங்கள் பந்து-மித்திரர் கட்கு காண்பித்து பத்திரப்படுத்தல் நன்று"

# CATALOGUE OF TAMIL BOOKS.



மஹான், சை. இரத்ன செட்டியார் மதராஸ் ரிப்பன் பிரஸ் ஸ்தாப கர். வடலூர் ஸ்ரீராம லிங்க சுவாமிகளுடன் பலநாள் பழகியவர்

*சை. ந. பாலசுந்தரன்*, Proprietor.
(Grandson of Mahan Sai. Rathna Chettiar.)

*ஸ்ரீசாது இரத்தின் சற்குரு புத்தகசாலை*

Sri Sadhu Rathna Sarguru Book Depot. Part Town Post Madras.
[Established 1916]

*புக்செல்லர்ஸ், பப்ளிஷர்ஸ்*
47, நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க்டவுன், மதராஸ்

*ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தகசாலையார்*
வெளியிட்டவையும் இதர - கம்பனிகளில் வெளியிடப் பட்டதுமான சுத்தப்பதிப்புள்ளதும், தமிழ்நாடு எங்கும் புகழ்ப்பெற்ற புத்தகங்கள்.

☞ லலிதா கஸ்தூரி மாத்திரை, புட்டி அணா 6.

# உயர் தரமான தமிழ் புத்தகபட்டி

☞ லைபரேரிகளுக்கும், வாசகசாலைகளுக்கும், மொத்த மாகவாங்கும், வியாபாரிகளுக்கும் மிகவும் குறைந்த விலைக்கு எமது சொந்தப்பதிப்பு புத்தகங்களும் இதர பதிப்புப் புத்தகங்களும் தரப்படும்:—

[தபால் வி. பி. சார்ஜ் வேறு]

## சற்குரு தமிழ் பிரசுரங்கள்

| | | விலை விபரம். | |
|---|---|---|---|
| வால்மீகி மஹரிஷி அருளிச்செய்த. | | ரூ. | அ. |
| ஆனந்த ராமாயண வசனம் | ... | 6 | 0 |
| சோதிட ஆசிரியன் 4-பாகம் வசனம் | ... | 4 | 0 |
| மோக்ஷசாதனரகசியம் ” | ... | 4 | 0 |
| சச்சிதானந்த சிவம் சம்பாஷணை ,, | ... | 1 | 2 |
| இராமதீர்த்த விஜயம் 1-2-பாகங்கள் | ... | 5 | 0 |

## விவேகானந்த ஸ்வாமிகள் தமிழ் நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| இராஜயோகமும், பதஞ்சலியோகசூத்ரம் வியாக்யானத்துடன் | ... | 2 | 0 |
| தனியோகசூத்ரம் (இராஜயோகம்) | ... | 1 | 4 |
| அருள்மொழிகள் (அமெரிக்கா உபதேசம்) | ... | 1 | 8 |
| கர்மயோகம் விரிவானது | ... | 1 | 0 |

"கற்க கசடறக் கற்பவை கற்றபினிற்க வதற்குத்தக"

| புத்தகம் | | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|---|
| பக்தியோகம் விரிவானது | ... | 0 | 12 |
| ஞானயோகம் வேதாந்த ரகசியம் 1-பாகம் | ... | 2 | 0 |
| ஞானயோக ரகசியம் 2-ம் பாகம் | ... | 2 | 4 |
| ஞானாத்துவனி 1-பாகம் 1-8-0; ,, 2 ,, 1-8-0; ,, 3 ,, 1-10-0 | வசனம்... | 4 | 10 |
| ஞானோதயம் ,, | ... | 1 | 0 |
| அத்வைத சம்பாஷணைகள் ,, | ... | 0 | 8 |
| தற்கால இந்தியா 0-10-0 எதிரொளிகள் ,, | ... | 0 | 8 |
| ராமாயண ரகசியம்; பாரத ரகசியம் | ... | 0 | 8 |
| கிழக்கும் மேற்கும் | ... | 0 | 8 |
| வேதாந்த தத்துவம் | ... | 0 | 8 |
| கடிதங்கள் 1-2-பாகம் | ... | 1 | 0 |
| எனது குருநாதர் | ... | 0 | 8 |
| சிகாகோபிரசங்கம் | ... | 0 | 6 |
| வேதாந்த நிலைமை | ... | 0 | 6 |
| பந்தமும் மோட்சமும் | ... | 0 | 2 |

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழுமுயிர்க்கு"

47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

| | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|
| இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிரஹ்மானந்த சம்பாஷணை ... | 3 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (ஆநந்த வைபவம்)... | 1 | 4 |
| நளவெண்பா மூலமும் அகல உரையும் ... | 2 | 0 |
| நீதிநெறி விளக்கம் விருத்தி உரையுடன் (சுப்பராய செட்டியார் பதிப்பு) ... | 0 | 12 |
| ஷை பெரிது ஆங்கிலமொழிபெயர்ப்புடன் ... | 1 | 8 |
| முதுமொழி காஞ்சி மூலமும் T. K. பாவலர் விருத்தியுரை ... | 0 | 6 |
| திரிகடுகம் மூலமும் சுப்பராய செட்டியார் விருத்தியுரையுடன் ... | 0 | 6 |

## நூதன முறையில் முருகன் புகழ் நூல்கள்

| | | |
|---|---|---|
| கந்தர் அநுபூதி மூலமும் ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் விருத்தியுரையும் ... | 0 | 12 |
| கந்தர் அலங்காரம் மூலமும் மெய் பொருள்விளக்க விருத்தியுரையும் ... | 0 | 12 |
| கந்தர் சஷ்டி மூலமும் மெய்பொருள் விளக்கம் விருத்தி யுரையும் ... | 0 | 8 |

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்"

# ஸ்ரீசாது இரத்தின சற்குரு புக்டிபோ 5

47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

| | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|
| கந்தர் அந்தாதி மூலமும் வில்லி புத்தூர் ஆழ்வார் உரையுடன் ... | 0 | 8 |
| திருமுருகாற்றுப்படை மூலமும் பரிமேலழகர் உரையுடன் ... | 0 | 12 |
| கந்தர் கலிவெண்பா மூலமும் விருத்தியுரை ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் பார்வையிட்டது ... | 0 | 3 |
| விநாயகர் மாலை சுப்பிரமண்யர் பரம்பரா பதிகம் முருகர் அந்தாதி ... | 0 | 8 |
| வள்ளுவரும் மகளிரும் வித்வான் T. P. மீனாக்ஷி சுந்தரனார் எழுதிய ஆராய்ச்சிநூல்... | 1 | 6 |
| மாதர் நீதி (3-பர்வம்) ... | 1 | 0 |
| ஒரு பெண்ணரசியின் பிரமஞானோப தேசம் வசனம் கோ. வடிவேலு செட்டியார் இயற்றியது ... | 0 | 8 |
| பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதியது ஆயுர்வேத ஆசான்வசனம் 179-விஷயம் ... | 2 | 0 |
| மேற்படியார்சிவராஜயோகி பாக்கட் டாக்டர் 245-முறை ... | 0 | 6 |

"உவப்பத்தலைக் கூடியுள்ளப் பிரிதலைத்தே புலவர் தொழில்"

47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

| | | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|---|
| அகஸ்தியர் ரணவைத்யம் 136-முறை | ... | 0 | 12 |
| அகஸ்தியர் நயனவிதி 500-மூலமும் உரையும் நாகமுனிவர் 200-ம் 2-ம் பதிப்பு அகஸ்தியர் படத்துடன் | ... | 1 | 4 |
| லலிதா ஸஹஸ்ரநாமம் 15-தேவி ஸ்தோத்ரம் ஸ்ரீசக்கரத்துடன் | ... | 0 | 8 |
| பரமார்த்தபோத வசனம் | ... | 0 | 2 |
| மநுநீதி சதகம் | ... | 0 | 8 |
| நவக்கிரக ஸ்தோத்ரம் சாந்திசக்கரய்யுட்பட | ... | 0 | 8 |
| தர்மவாசகம் (32-ப்) | ... | 0 | 3 |
| விநாயகர் ஸஹஸ்ரநாமாவளி | ... | 0 | 4 |
| சுப்பிரமண்ய ஸஹஸ்ரநாமாவளி | ... | 0 | 3 |
| விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் | ... | 0 | 2 |
| விஷ்ணு ஸஹஸ்ரநாமாவளி 10-அஷ்டோத்ர நாமாவளி (நாமாவளி கதம்பம்) | ... | 0 | 8 |
| யஜுர்த்திரிகால சந்தியாவந்தனமந்திரம் டஞ்ஞோபவீததாரண மந்திரம் | ... | 0 | 3 |
| ஆதித்ய ஹிருதயம்உரை | ... | 0 | 2 |

"உடையார் முனில்லார் போலேக் கற்றுங்கற்றார்
கடையரே கல்லாதவர்"

47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

| | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|
| திசாபுக்தி அந்தரபலன் ... | 0 | 12 |
| ஜாதக பாரிசாதம் ... | 0 | 8 |
| ஞானோதய ஸ்தோத்ரதிரட்டு ... | 1 | 8 |
| சங்கீத ஸுர ஞானவிளக்கம் ஸுரத்துடன்... | 1 | 4 |
| ஸங்கீதாம்ருத கீர்த்தனை (த்யாகராஜ கீர்த்தனைகள் ... | 1 | 4 |
| „ „ (தெலுங்கு) ... | 1 | 4 |
| ஹிந்திய சங்கீத பாட்டு 320-ம் ... | 1 | 8 |
| திருக்கழுக்குன்றம் பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியார் எழுதிய மூன்று (1-2-3) பாகங்கள் இன்ப சாஸ்திரங்கள். ... | 7 | 8 |
| ☞ (1) கொக்கோக வைபவம் என்னும் மன்மதன் திருவிளையாடல் ... | 2 | 8 |
| ☞ (2) கணவன் மனைவி காமகலா ரகசியம் ஷை 2-ம் பாகம் ... | 2 | 8 |
| ☞ (3) ஷை 3-ம் பாகம் சதிபதிகள் மதனலீலா இன்பதத்துவம் ... | 2 | 8 |
| பிரதோஷ மகிமை ... | 0 | 4 |

"தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

| | விலை விபரம் ரூ. | அ. |
|---|---|---|
| விபூதி உருத்திராக்க மகிமை ... | 0 | 6 |
| சுயமரியாதை கண்டனதிரட்டு ... | 0 | 8 |
| மீனாக்ஷி கலிவெண்பா ... | 0 | 1 |
| அபிராமி யந்தாதி ... | 0 | 1 |
| சுப்பிரமண்ய விஞ்சை ... | 0 | 1 |
| ஸ்யாமளா தண்டகம் ... | 0 | 1 |
| மீனாக்ஷி அகவல் ... | 0 | 1 |
| பீஜாக்ஷரமாலிகை ... | 0 | 2 |
| கைவல்யம் மூலம் ... | 0 | 4 |
| ராமரட்சையின் மகிமை ... | 0 | 2 |
| ஸீதாராம தத்துவமகிமை ... | 0 | 2 |
| சீதாராம கிருஷ்ண மகிமை ... | 0 | 2 |
| லகு ராமாயணம் ... | 0 | 2 |
| நக்கீரர் விநாயகர் அகவல் 5-ம் ... | 0 | 2 |
| நீதிவாக்ய மஞ்சரி 208-மழமை மகாலிங்க ஐயர் எழுதியது ... | 0 | 4 |

"யாதானு நாடாமாலூ ராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு"

| | விலை விபரம் | ரூ. | அ. |
|---|---|---|---|
| ராமர்பாதுகா பட்டாபிஷேகம் | ... | 0 | 12 |
| ஸதி அநுஸூயா, 0-6-0 கபீர்தாஸ் | ... | 0 | 10 |
| பெண்கள் ருதுவான மாதவார திதி பலாபலன் அதற்குரிய பரிகாரங்கள் | ... | 0 | 3 |
| சங்கரர் அத்வைத உபதேச பஞ்சரத்னம் | ... | 0 | 6 |
| பூஜைக்குரித்தான ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் படம் | ... | 0 | 1 |

இன்னும பல நூல்கள் உள்ளன. கேட்லாக் இனும்.

## சற்குரு பிரசுரவிரிவின் சுருக்கம்

நீங்கள் கர்மம் பக்தி - ராஜ - ஞானயோக
இரகசியத்தை அடையவேண்டுமானல்?

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் கர்மயோகம்

(வாசிக்கச் சிறந்தது)

இதில் (1) குணம் உண்டாகும் விதம், (2) சுதர்மம் மகத்தான சக்தி பொருந்தியது. (3) வேலை செய்வதன் இரஹஸ்யம், (4) கடமை என்பது யாது? (5) நாம் நமக்குத்தான் உதவிக்கொள்கிறோம்; உலகத்

திற்கு உதவுவதில்லை, (6) தன்னைய மறுப்பின் பூர்த்தியே பற்றின்மையாம், (7) முத்தினிலை, (8) கர்மயோகத்தின் பூர்த்தி. உயர்ந்த பைண்டுடன் ஸ்வாமிகள் படமும் கூடியது விரிவான வசனம் விலை ரூ. 1.

## ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் பக்தி யோகம்

இதில் அடங்கிய விஷயங்கள்: முகவுரை. (1) பக்தி என்பது என்ன? (2) ஈசுவரன் யார்? (3) ஆத்மாநுபவமே லட்சணங்கள். (4) குரு-சிஷ்ய லட்சணங்கள். (5) அவதார புருஷர்கள். (6) 'ஓம்' என்ற மந்திரமும் அதன் உட் பொருள்களும். (7) பக்தியின் மூன்று அம்சங்களும் கடவுளும். (8) அன்பின் சொரூபமே கடவுள். (9) விக்ரகாராதனையும் மற்றுமுள்ள பாவனைகளும். (10) குறிப்பிட்ட லட்சியங்கள். (11) வழியும் சாதனப் பொருள்களும். (12) ஆரம்ப சாதனமாகிய தியாகம், (13) உயர்ந்த அன்பின் மூலமாகவே தியாகம் ஏற்படுகிறது, (14) பக்தியோகத்தின் முக்கிய தத்துவம், (15) பக்தனது பல நிலைகள், (16) ஜகத்தினிடம்

"ஒருமைக் கட்டான் கற்றகல்வி யொருவற்
கெழுமையு மேமாப்புடைத்து".

செலுத்தப்படும் அன்பும் தன்னல மறுப்பும், (17) அன்பும் ஞானமும் ஒன்றே? (18) பக்தி என்ற திவ்ய லட்சியத்தை சில பிரதிகள், (19) ஏகத்துவமே முடிவு.

இதன் விலை அணு 12-

ஷை இராஜயோகம், பகவான் ஸ்ரீ பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த யோகசூத்ர வியாக்கியாநம், ஆகிய இவ் விரண்டும் ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிச் செய்த நூல்களாகும். விலை ரூபா 2—4—0

(1) இராஜயோகத்தில் அடங்கிய விஷயங்கள்:—மொழி பெயர்ப்பு ஆசிரியரின் முகவுரை, (2) நூலாசிரியரின் முகவுரை. (3) இராஜயோகம். (4) ஆரம்ப நிலைகள். (5) பிராணன், (6) சூட்சும பிராண சக்தி. (7) சூட்சும பிராண சக்தியை அடக்கி யாளுவது. (8) பிரத்தியாகார தாரணை என்னும் இரண்டு அப்பியாசங்கள். (9) தியானமும் சமாதியும். (10) இராஜயோகம்.

(11) ஷை யோகசூத்ர வியாக்கியானம் இது ஹடயோகம் அல்ல இராஜயோகம் இது காறும் எவர்களாலும் வெளிபடுத்தப்பட்டதில்லை.

(1) சமாதி அதன் உபயோகங்கள், (2) அப்பிய சிக்கும் முறை. (3) விபூதி பாத சக்திகள். (4) சுதந்தர நிலை. யோக தத்துவத்தைப் பற்றிய குறிப்புகள்; ஆதாரங்கள். இவை நான்கு பாதங்களாக பிரிக்கப்பெற்றிருக்கின்றது தனியோக சூத்ரம். விலை ரூ 1—4—0

## ஸ்வாமி விவேகாநந்தர் ஞானயோகம்
## வேதாந்த இரகசியம் 1-பாகம்

இதிலடங்கிய விஷயங்கள்:—(1) அநுபவ வேதாந்தம் நான்கு பாகமும், (2) யாக்ஞவல்கியரும் மைத்திரேயியும், (3) சிருஷ்டி சாஸ்திரம், (4) சிருஷ்டி, அண்டம், (5) சிருஷ்டி பிண்டம், (6) ஜீவ ஈசுவர ஜகத், (7) ஜீவனும், ஈசுவரனும், (8) அவ்யக்தமும், வியக்தமும், (ஜகத்) காலம் தேசம் காரண கார்யம் என்னும் சக்கரமும், (9) சாங்கிய சாஸ்திர ஆராய்ச்சி, (10) சாங்கியமும் வேதாந்தமும், (11) ஸ்வாமிகள் சரித்திரம், ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தராலே மதிக்கப்பெற்றவரும், உப

காரச் சம்பளம் பெற்றுவரும் மாஜி ஜஸ்டிஸ் திருமயிலை பாரத பூஷணம் டாக்டர் சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் எழுதிய நான்முகத்துடன் கூடியது. இதில் ஸ்வாமிகள் படமும், டாக்டரவர்கள் படமும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இதன் விலை ரூபா 2—0—0

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

## ஞானயோக இரஹஸ்யம் 2-ம் பாகம்

இதில் அடங்கிய விஷயங்கள்: (1) மாயையும், மயக்கமும் (2) மாயாதத்துவமும், ஈஸ்வரனை பற்றிய அறிவும், (3) மாயையும் மோட்சமும், (4) உண்மை மனிதனும், போலி மனிதனும், லண்டன்மா நகரில் செய்த உபந்யாசம்), ஷை உபந்யாசமே (நியூ யார்க்கில் செய்தது, (5) நித்யத்வம், (6) நாநாத்வத்தில் ஏகத்துவம், (7) எல்லாவற்றிலும் ஈஸ்வரன் வியாபகர். (8) ஆத்மாநுபவம், (9) ஆத்மாவின் சுதந்திரத்தன்மை, இதன் விலை ஸ்வாமிகள் படத்துடன் விலை ரூ 2-4-0

"கேடில் விழுச் செல்வங்கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றையவை"

14 ஸ்ரீசாது இரத்தின சற்குரு புக்டிபோ
47, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் சென்னை.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்
1004 உபதேச மொழிகளடங்கிய

# ஆத்மஞான ரத்தினம்

ஜட நாகரீகத்திலே நிர்த்தனம் செய்துகொண்டிருந்த மேனாட்டாருக்கும், அம் மேனாட்டாருடைய மினுமினுப்பு மாயையிலே விழுந்து தங்களுடைய ஆர்ய தர்மங்களை மறந்து அநாசாரங்களிலே மூழ்க ஆரம்பித்த இப் பாதகண்டத்தவர்க்கும் அநாதிவேத உபதேசங்களை யெல்லாம் அழுக்கற எடுத்துப் போதித்த அவதார புருஷராகிய ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளுடைய பேச்சுக்களும் எழுத்துக்களுமாகிய விலைமதிப்பிட முடியாத சுரங்கத்திலிருந்து முக்கியமான விஷயங்களை யெல்லாம் ஆங்காங்கு ஒருங்கே திரட்டியெடுத்து, ஸ்ரீ ஸ்வாமிகளின் கருத்திற்கு ஒரு சிறிதும் மாறுபாடில்லாமல் "ஆத்மஞான இரத்தினம்" (1004 உபதேசமொழி) என்னும் நூல் உலகுக்கு அளிக்கப்படுகின்றது. இந்நூல் இதுகாறும் தமிழ் நாட்டில் வெளிவந்ததில்லை. உத்தம தேசபக்த சிரோமணி, ஸ்ரீயுத சுப்பிரமணியசிவம் (ஸ்வதந்திராநந்தர்) அவர்களால் இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டது.
உயர்ந்த பயிண்டுடன் விலை ரூபா 2—0—0

## ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் அருள் மொழிகள்.

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்தகாலை அவ்வப்பொழுது வெளியிட்ட அரிய கருத்துக்கள், நூல் வடிவாக வெளி வந்திருக்கின்றன. இதில் காணப்படும் அரிய உரைகள் யாவருடைய உள்ளத்தையும் கவரும். தமிழ் நாட்டார் இந்நூலைப் பொன்னேபோற் போற்றல்வேண்டும். [நவசக்தி மதிப்புரை-22-9-1922] ஸ்வாமிகள்படத்துடன் உயர்ந்தபயிண்டு விலை ரூ 1-8-0

### இந்தியாவின் இணையிலா மஹான் யார்!

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரது வாழ்க்கை சரித்திரமும் உபதேசங்களும் - சம்பாஷணைகளும் அடங்கிய இராம கிருஷ்ண விஜயம் (வைபவம், ரூபா 1—4—0) இராமகிருஷ்ண பிராஹ்மானந்த சம்பாஷணைகள் விலை ரூபா 3—0—0.

### எனது குருநாதர்

[ஸ்ரீபகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் அவதார அற்புதம் விலை அணா 8]

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் மேல் நாட்டில் யாத்திரை செய்து அமெரிக்கா நியூயார்க் பட்டணத்தில் வாசஞ்செய்திருந்தபோது ஸ்ரீபகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார அற்புதத்தை ['My Master'] என்று ஆங்கிலத்தில் செய்த அரிய உபந்நியாசமாம். இது தற்சமயம் தமிழில் வெளிவந்துள்ளது.

# ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்

(ப்ரமாணத்திரட்டு ஸஹிதம்)

[விலை ரூபா 2—8—0]

☞ இந்த க்ரந்தத்திலுள்ள விஷயங்கள்:—

(1) தேவப்பெருமாள் அபராவதாரமான ஸ்ரீம பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசன பூஷணம் மூலம். (2) விஶதவாக்சிகாமணியான ஸ்ரீம மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யாந (3) வ்யாக்யானத்திலுள்ள கஷ்டமான பதங்களுக் அர்த்தம். (4) வ்யாக்யாநத்திலுள்ள ஸம்ஸ்க்ரு ஶ்லோக ப்ரமாணத்திரட்டுக்கு பதவுரை. (5) வ்யாக்ய நத்திலுள்ள தமிழ் பாசுர ப்ரமாணத்திரட்டுக்கு ப வுரை. (6) ப்ரகரணவிபாக ஸூசிகா. (7) விஷயவிபா ஸூசிகா. (8) ப்ரமாணத்திரட்டிலுள்ள ஶ்லோக அ ராதி. (9) ப்ரமாணத்திரட்டிலுள்ள செய்யுளகரா

தனித்தனி க்ரந்தங்கள்:—

ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்

[விலை ரூ 1—12—0]

ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு

(ஸம்ஸ்க்ருத ஶ்லோக தமிழ் பாசுரங்களுக் பதவுரை அகராதிகள் உள்பட) [விலை ரூபா 1—4—

---

☞ ஸ்ரீராமகிருஷ்ண நிலயம்

புக்ஷாப் - 3 பீட், பார்க்டவுன், மதராஸ்.